نور النور

நூருன் னூரி

இறை ஞானப் பாட நூல்

கன்ஜுல் இர்பான் ஹஜ்ரத் மௌலானா

கௌஸி ஷாஹ் சிஷ்தி காதிரி (ரஹ்)

தமிழில் :

மௌல்வி, அல்ஹாஜ் ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானிஷாஹ் நூரி)

நூருன்னூர்

(இறை ஞானப் பாட நூல்)

கன்ஜுல் இர்பான் ஹஜ்ரத் மௌலானா

கௌஸி ஷாஹ் சிஷ்தி காதிரி

ஹைதராபாத்

தமிழாக்கம் :

மௌலவி, அல்ஹாஜ்

A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானீ ஷாஹ் நூரி)

வெளியீடு :

காதிரிய்யா பதிப்பகம்

'பைதுன் நூர்'

37, ஆஜாத் நகர் - சூரமங்கலம்

சேலம் - 5. Cell : 98942 90086

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2006
ஹிஜ்ரி 1427 ரஜப் 20

விலை ரூ. 60.00

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

மௌலவி A.S. ஜுபைர் அஹமத் பாகவி
(ஷுஹுதீ ஷாஹ் பைஜி)
பேராசிரியர், ஜாமிஆ அரபிய்யா
பைஜுல் ஹஸனாத் அரபிக் கல்லூரி
பொரவச்சேரி, சிக்கல் (P.O) நாகை
Cell : 98942 90089

மௌலவி, ஹாபிழ் A.S. அஸ்அத் அஹமத் பையாஜி
(ஸஹ்வீ ஷாஹ் பைஜி)
இமாம், ஜாமிஆ மஸ்ஜித், காட்டுத் தலைவாசல்
காரைக்குடி, சிவகங்கை Dt.
Cell : 98943 98867

மௌலவி A.S. அபுல் ஹஸன் பாகவி பைஜி
அரபித்துறை, கிரஸன்ட் ஸ்கூல்,
வண்டலூர், சென்னை-48
Cell : 98949 94481

மௌலவி A.S. முஹம்மது பாகவி பைஜி
பேராசிரியர், நூருல் ஹிதாயா அரபிக் கல்லூரி,
பனையூர், சென்னை-119.
Cell : 98949 04461

பஷாரத் பப்ளிஷர்ஸ்
83, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை-1. போன் : 2522 5028

ஒளி அச்சுக்கோர்வை :
குளோபல் கிராஃபிக்ஸ்
2, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-1.
போன் : 4216 1189

சமர்ப்பணம்

எங்கள் உயிரினும் மேலான ஷைகு நாயகம் ஷம்சுல் ஆரிபீன் அல்லாமா ஆரிபுபில்லாஹ்

சர்கார் பைஜீ ஷாஹ் நூரீ ஹஜ்ரத் கிப்லா

(ரஹ்)

அவர்களின் திருச் சமூகத்திற்கு இந்த எளிய சேவையை சமர்ப்பிக்கின்றோம். அவர்களின் முதல் வருட நினைவு நாளில் இன்னூலை வெளியிட்ட இறைவனுக்கு நன்றி செலுத்து கிறோம்.

பொருளடக்கம்

	பக்கம்
ஆசிரியர் வாழ்க்கை குறிப்பு	05
மதிப்புரை	12
பதிப்புரை	13
வாழ்த்துரை	14
ஆசிரியரின் ஞான வழித்தொடர்	15
முன்னுரை	27
1. வஹ்ததுல் உஜூத் என்றால் என்ன?	33
2. இஃதிபாராத்தே உலூஹிய்யத்	38
3. நான்கு இஃதிபார்களின் விளக்கம்	40
4. ஹகீகத்தே ஆலம்	45
5. குர்ஆனின் விளக்கம்	48
6. எப்படிக் கொடுத்தான்?	54
7. தஜல்லீ - தமஸ்ஸுல்	57
8. ஆயத்தே நூர்	62
9. சில உதாரணங்கள்	65
10. எச்சரிக்கை	70
11. தவ்ஹீதே பிஃலீ	73
12. உதாரணங்கள்	77
13. இக்திஜா	84
14. ஹக்கின் விளக்கம்	95
15. இஸ்திலாஹாத்	99
16. உஜூதிய்யாக்களின் இஸ்திலாஹ்	102
17. ஷுஹூதிய்யாக்களின் இஸ்திலாஹ்	106
18. மெஞ்ஞானிகளின் கருத்துக்கள்	110
19. சிருஷ்டிகள் ஹக்காக முடியாது	115
20. ஷதஹிய்யாத்	122
21. அவசியம் என்ன?	124
22. ஞான முத்துக்கள்	128

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

ஆசிரியர் வாழ்க்கை குறிப்பு

அல்லாஹ்வின் அருமைத் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த புனித தீனைப் பாதுகாக்க அல்லாஹ் உலகெங்கும் தன் நேசர்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறான். குர்ஆனுடைய ஓதும் முறையை ஏழு காரிகள் மூலமாகவும், ஃபிக்ஹ் சட்ட திட்டங்களை நான்கு இமாம்கள் மூலமாகவும், ஹதீஸ்களை ஸிஹாஹ் சித்தாவின் ஆசிரியர்களான ஆறு இமாம்கள் மற்றும் முஹத்திஸ்கள் மூலமாகவும் அல்லாஹ் இன்று வரை பாதுகாத்து வருகிறான்.

அதுபோல் அண்ணலாரின் புனித இதயத்தில் பொதிந்திருந்த இறை ஞானத்தை அலி (ரலி) அவர்களைக் கொண்டும், அவர்களின் மாணவர் ஹஸன் பசரீ (ரலி) அவர்களைக் கொண்டும் வெளிப்படுத்திய அல்லாஹ் வரிசையாக நூற்றுக்கணக்கான வலிமார்களைக் கொண்டு இதுவரை பாதுகாத்து வருகிறான். கற்பிக்கும் முறைகளைப் பொறுத்து இந்த இறை ஞானத் தொடர் காதிரிய்யா, சிஷ்திய்யா, சுஹ்ரவர்திய்யா, நக்ஷபந்திய்யா என்று பல வகைகளாகப் பிரிந்து நிற்கின்றன. அவற்றுள் குறிப்பாக சைய்யிதினா குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் காதிரிய்யா சில்சிலாவும், காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரலி) அவர்களின் சிஷ்திய்யா சில்சிலாவும் மிகவும் பிரபலமானவை.

ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரஹ்) அவர்கள் மூலம் ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவிய சிஷ்திய்யா சில்சிலா பின்னர் அவர்களின் ஞான வாரிசான குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்) அவர்கள் மூலமும் அவர்களின் வாரிசான காஜா பரீதுத்தீன் கஞ்சே ஷக்கர் (ரஹ்) அவர்கள் மூலமும் நன்கு வேரூன்றியது. பரீது நாயகத்தின் பிரபல கலீபாக்களான நிஜாமுத்தீன் மஹ்பூப் இலாஹி (ரஹ்) காஜா அலாவுத்தீன் கல்யரீ சாபிரீ (ரஹ்) இருவரும் இந்த இறை ஞானத்தை மக்களுக்கு எடுத்தோதி நேர்வழிப்படுத்தினார்கள். இவ்விருவரின் பெயர் கொண்டு நிஜாமிய்யா என்று ஒரு தொடரும் சாபிரிய்யா என்று ஒரு தொடரும் வளர்ந்து வந்தன. நிஜாமிய்யாவில் பூத்த பூக்களான நசீருத்தீன் சிராஹ் தஹ்லவீ (ரஹ்), காஜா பந்தே நவாஜ் கேசூ தராஜீ (ரஹ்) ஆகியோர் மிகவும் பிரபலமான இறைநேசர்களாவார்கள்.

குல்பர்காவில் அடங்கியுள்ள காஜா சையத் முஹம்மத் பந்தே நவாஜ் கேசூ தராஜ் (ரஹ்) அவர்கள் 'ஜவாமிவுல் கலிம்' முதலிய பல நூற்களை எழுதியுள்ளார்கள். அவை அனைத்தும் தீனுடைய உலமாக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட நூற்களாகத் திகழ்ந்து வருகின்றன.

பின்னர் இதே தொடரில் தோன்றிய ஷாஹ் கமால் (ரஹ்) அவர்கள் 'மக்ஜனுல் இர்பான்', 'கலிமாத்தே கமாலிய்யா' போன்ற ஞான நூற்களை எழுதியுள்ளார்கள். அவர்களின் கலீபா ஹஜ்ரத் சையத் அலாவுத்தீன் (ரஹ்) அவர்கள் ஆவார்கள். இவர்களின் அருமைத் திருமகனார் ஹஜ்ரத் சையத் புர்ஹானுத்தீன் ஹக்கானீ ஹக்நுமா (ரஹ்) அவர்கள் தங்கள் தந்தையின் ஞான வாரிசாகவும், ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகனாகவும் இருந்தார்கள்.

இவர்களின் பிரதான கலீபாவான ஹஜ்ரத் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் (ரஹ்) அவர்கள் மூலம் தான் சிஷ்திய்யா சில்சிலா ஹைதராபாத்தில் வளர ஆரம் பித்தது. ஹஜ்ரத் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் (ரஹ்) அவர்கள் மிகச் சிறந்த ஆலிமாக இருந்தார்கள். பதினான்கு ஷைகுமார்களிடம் ஊழியம் செய்து அருள் பெற்றிருந் தார்கள். பதினான்காவதாக ஹஜ்ரத் புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்களிடம் வந்து ஊழியம் புரிந்து பைஅத்தும் கிலாபத்தும் பெற்றார்கள். நீங்கள் ஹைதராபாத் சென்று தவ்ஹீதைப் பரப்புங்கள் என்று அவர்களின் ஷைகு உத்தரவிட்டதன் பேரில் ஹைதராபாத் நகர் வந்து அங்கு ஈமானின் ஜோதியை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஹிஜ்ரி 1311 துல்ஹஜ் பிறை 7ல் உலகைப் பிரிந்த இவர்களின் புனித மண்ணறை ஹைதராபாத்தில் அப்ஜல் கன்ஜ் எனுமிடத்தில் உஸ்மானிய்யா தவா கானாவுக்குப் பின்புறம் அமைந்துள்ளது.

இவர்களின் பேரப்பிள்ளை முரீது ஒருவர் இவர்களின் மண்ணறை மீது மணி மண்டபம் எழுப்ப நாடியபோது அவர் கனவில் தோன்றி 'மாடீ மிலே கோ மட்டீ மே ஹீ ரஹ்னே தோ' – 'இந்த தாழ்ந்த அடியானை மண்ணிலேயே இருக்க விட்டுவிடுங்கள்' என்று கூறினார்கள். எனவே இன்று வரை இவர்களின் புனித மண்ணறை நீல வானத்தைப் பார்த்ததாகவே காட்சியளிக்கிறது. என்னே அவர்களின் பணிவு! ஹஜ்ரத் அவர்கள் சிஷ்தி, காதிரீ, நக்ஷபந்தீ, சுஹ்ரவர்தீ, தபகாத்தீ முதலிய பல சில்சிலாக்களை தங்களில் ஒன்று சேர்த்திருந்தார்கள். இவர்களின் கலீபாக்களில் 'மச்லீ வாலே' என்று அழைக்கப்படும் சையத் கமாலுல்லாஹ் ஷாஹ் அவர்கள் முக்கியமானவர்கள்.

கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீ வாலே (ரஹ்)

இவர்களின் திருப்பெயர் முஹம்மத் ஜமாலுத்தீன் என்பதாகும். கமாலுல்லாஹ் ஷாஹ் என்பது பட்டப் பெயராகும். இவர்கள் சிகந்தராபாத்தில் ஒரு மீன் கருவாட்டுக் கடையும், தானியக் கடையும் வைத்திருந்தார்கள். எனவே இவர்களை மச்லீ வாலே என்று அழைத்து வந்தனர். இவர்கள் அரபி, உர்து, பார்சி மூன்று மொழிகளிலும் நன்கு திறமை பெற்றிருந்தார்கள். ஒரு சில கவிதைகளும் எழுதியிருக்கிறார்கள். அதிகமாக சூபியாக்களுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஒரு நாள் இவர்கள் தங்கள் கடையை சாத்திவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். எதிரே ஷாஹ்ஜீ என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படும் ஹஜ்ரத் சையத் சுல்தான் மஹ்மூதுல்லாஹ்ஷாஹ் அவர்கள் அந்தக் கடை வழியாக 'ஹு ஹக்' என்று கூறியவண்ணம் சென்று கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்டவுடன் அருகிலே அழைத்து கையைப் பிடித்து அங்கேயே பைஅத் கொடுத்து,

پاک کی شرک جلی سے تن کمال
اور خفی اخفی سے اپنا جان و من

"கமாலே! ஷிர்க்கே ஜலீ எனும் வெளிப்படையான இணை வைத்தலை விட்டும் உன் உடலைப் பரிசுத்தப்படுத்துவாயாக! இன்னும் ஷிர்க்கே கபீ – அக்பா எனும் மறைவான இன்னும் மிக மறைவான இணை வைத்தலை விட்டும் உள்ளத்தையும் ரூஹையும் பரிசுத்தப்படுத்துவாயாக!" என்று கூறினார்கள். பின்னர் 'ஹு ஹக்' என்று கூறிய வண்ணம் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

அந்த வினாடியிலிருந்து ஹஜ்ரத் அவர்களின் நிலை மாறிவிட்டது. 'ஷாஹ்ஜீ' அவர்களின் சபைக்குத் தொடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு ஞானப் பயிற்சி அளித்து 'கமாலுல்லாஹ் ஷாஹ்' என்று பட்டப் பெயரையும் அளித்து மகிழ்ந்தார்கள் ஷாஹ்ஜீ (ரஹ்) அவர்கள்.

அதற்குப் பின் இவர்களின் புகழ் பரவ ஆரம்பித்தது. நடெங்கிலும் இருந்து பெரும் பெரும் உலமாக்களும், சூபியாக்களும், இறைக் காதலர்களும் அவர்களைத் தேடி வர ஆரம்பித்தார்கள். பெரும் பெரும் செல்வந்தர்களும், அரசு உயர் பதவியில் இருந்தவர்களும் தங்கள் செல்வத்தையும், பதவியையும் மறந்து ஹஜ்ரத் அவர்களின் காலடியில் அமர்ந்து ஞானத்தேன் அருந்தினார்கள். நவாப் மஹ்தியார் ஜங்க், நவாப் சயீத் ஜங்க், ஹைதராபாத் ஜாமியா நிஜாமிய்யா பல்கலை கழகத்தின் ஸ்தாபகர் மவ்லானா அன்வாருல்லாஹ் கான், மவ்லானா பரகாத் அஹ்மத் டோங்கி, மவ்லானா மளாஹிர் அஹ்ஸன் கீலானி, மவ்லானா ஷாஹ் அப்துல் கதீர் ஹஸ்ரத் இன்னும் எண்ணற்ற பெரும் பெரும் தீனுடைய உலமாக்களும் இவர்களின் மாணவர்களாக விளங்கினார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் மிகவும் கராமத் விளங்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். இவர்கள் தெருவில் மீன் விற்றுக் கொண்டு செல்லும்போது இவர்களின் தலைக்கும் மீன் கூடைக்கும் ஒரு ஜான் இடைவெளி இருக்குமாம்.

ஒரு நாள் ஒருவர் ஒரு பெரிய பாத்திரத்தில் சர்க்கரை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். 'அது என்ன?' என்று ஹஜ்ரத் அவர்கள் கேட்டார்கள். அவரோ விளையாட்டாக 'மண் அள்ளிச் செல்கிறேன்' என்றார். 'அப்படியே ஆகட்டும்!' என்று ஹஜ்ரத் அவர்கள் கூறினார்கள். என்ன ஆச்சரியம்! அவர் தனது இடத்திற்குச் சென்று பாத்திரத்தை இறக்கிப் பார்த்தார். முழுவதும்

மண்ணாகவே இருந்தது. அப்போதுதான் இவர்களின் சிறப்பை விளங்கிய அவர் ஓடோடி வந்து மன்னிப்புக் கேட்டு அழுதார். உடனே ஹஜ்ரத் அவர்கள் அதில் என்ன இருந்தது? என்று கேட்டார்கள். 'சர்க்கரை' என்றார் அவர். 'சரி அப்படியே ஆகட்டும்!' என்றார்கள். அந்த மண் முழுவதும் மீண்டும் சர்க்கரை ஆகிவிட்டது.

ஒரு நாள் இவர்கள் கருவாட்டை எடை போட்டு விற்பனை செய்தபோது, வாங்க வந்த மனிதர் 'இந்த கருவாடு நன்றாக இல்லையே' என்று கூறினார். அதற்கு இவர்கள் 'ஏன்! இதற்கு என்ன?' என்று கூறி அதைத் தூக்கி போட்டபோது அது உயிர் பெற்று துள்ளி விழுந்தது.

இவர்கள் ஞானப் பயிற்சிகளையும் கடுமையாகச் செய்து வந்தார்கள். வெளியில் சென்று வரும்போது காட்டில் இருக்கும் பல வகைப்பட்ட மரங்களின் இலைகளை எல்லாம் பறித்து வருவார்கள். வந்து வீட்டில் அமர்ந்து ஒவ்வொரு இலையாகக் கையில் எடுத்து 'ஹக் ஜாஹிர் பசூரத்தே ஷை' – 'இந்த தோற்றத்திலும் ஹக்குடைய உஜூதுதான் காட்சியளிக்கிறது' என்று ஒவ்வொன்றாக ரசித்துக் கொண்டிருப்பார்கள். நாடெங்கிலும் தவ்ஹீதின் ஞானத்தையும், திருக் கலிமாவின் அஸ்ரார்களையும் மணம் பரப்பிய ஷைகுனா ஹஜ்ரத் கிப்லா அவர்கள் ஹிஜ்ரி 1351 ரபீவுல் ஆகிர் பிறை 29 (கி.பி. 1932 டிசம்பர் 8 ஆம் நாள்) வியாழக் கிழமை அன்று தங்கள் இக வாழ்வை முடித்துக் கொண்டு ரபீகுல் அஃலாவின் பக்கம் பயணம் சென்றனர். இவர்களின் புனித அடக்கஸ்தலம் ஹைதராபாத்தில் காசீ கோடா எனும் இடத்தில் அமைந்துள்ளது. இன்றளவும் மக்கள் அவர்களின் தர்பாருக்குச் சென்று நல்லாசி பெற்று வருகிறார்கள். இவர்களின் பல கலீபாக் களில் பிரதானமானவர்களாக கௌஸீ ஷாஹ் சாஹிப் அவர்கள் திகழ்ந்தார்கள்.

கன்ஜுல் இர்பான் ஹஜ்ரத் கௌஸீ ஷாஹ் அக்பரீ (ரஹ்)

ஹிஜ்ரி 1311 துல்ஹஜ் 16, கி.பி. 1893 ஜூலை 1 சனிக்கிழமை ஹைதராபாத் பேகம் பஜார் மஹல்லாவில் பிறந்த ஹஜ்ரத் அவர்களுக்கு பெற்றோர் கௌஸ் அலி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

இவர்களின் தகப்பனார் ஹஜ்ரத் கரீமுல்லாஹ் ஷாஹ் நக்ஷபந்தீ அவர்கள் நக்ஷபந்தீ சில்சிலாவின் ஷைகாக விளங்கினார்கள். தந்தையின் மூலமே மார்க்கக் கல்விகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்ற ஹஜ்ரத் அவர்கள் இளமையிலேயே இறைக் காதல் மிக்கவர்களாக விளங்கினர்.

தகப்பனார் ஹிஜ்ரி 1331 ஜமாதுல் அவ்வல் பிறை 7ல் மறைந்தார்கள். அதன்பின் இவர்கள் மச்லீ வாலே ஷாஹ் என்றழைக்கப்பட்ட ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் அவர்களிடம் பைஅத்துப் பெற்றார்கள். இறை ஞானங்களைக் கசடறக் கற்றுத் தெளிந்த ஹஜ்ரத் அவர்களுக்கு கிலாபத் வழங்கி 'கௌஸீ ஷாஹ்' என்ற பெயரையும் வழங்கினார்கள் அவர்களின் ஷைகு அவர்கள்.

அரபி, பார்சி, உர்து ஆகிய மூன்று மொழிகளிலும் பெரும் புலமை பெற்றிருந்த ஹஜ்ரத் அவர்கள் மூன்று மொழிகளிலும் ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளார்கள். தாங்கள் இறைவன் மேல் கொண்ட அளவற்ற காதலை அப்படியே கவிதையாக வடித்துள்ளார்கள். இவர்களின் கவிதைத் தொகுப்பான "தைய்யிபாத்தே கௌஸி" எனும் நூல் இறை ஞானப் பொக்கிஷமாக இன்று வரை விளங்கி வருகிறது.

கௌஸி ஷாஹ் (ரஹ்) அவர்களுக்கு ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ஆன்மீக முறையில் திருக்காட்சி தந்து கிலாபத்தும் வழங்கி தங்களின் ஞானங்களை வெளிப்படுத்துவதற்கு அனுமதியும் கொடுத்தார்கள். எனவே இவர்கள் மூலமாக உவைஸிய்யா முறையில் அக்பரிய்யா சில்சிலாவும் தொடர்ந்தது.

ஒரு முறை இவர்கள் உடல் நலம் குன்றியிருந்தபோது ரசூல் (ஸல்) அவர்கள் கனவில் தோன்றி 'பூரண நலம் பெறுவீர்கள்!' என்று நற்செய்தி கூறிச் சென்றார்கள். அவ்வாறே நலம் பெற்று எழுந்து தீன் சேவை செய்து வந்தனர்.

ஹஜ்ரத் அவர்கள் எழுதிய நூருன்னூர் எனும் நூல் மிகவும் புகழ் வாய்ந்தது. குறிப்பாக 'ஜப்ர் வ கத்ர்' மஸ்அலாவை இதில் நன்கு விளக்கி யுள்ளார்கள். இந்நூலை இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல உலமாக்கள் எல்லாம் புகழ்ந்து எழுதினார்கள். குறிப்பாக நூற்றுக்கணக்கான கிதாப்களின் ஆசிரியராக இருந்த மௌலானா அஷ்ரப் அலி தானவி (ரஹ்) அவர்கள் இந்நூலைப் பற்றி எழுதும்போது "நூருன்னூர்' கிதாபிலே எந்த அளவு விளக்கமாக ஜப்ர், கத்ர் மஸ்அலாவை விளக்கியுள்ளார்களோ அப்படி வேறு கிதாப்களில் காண்பது அரிது! இந்த மஸ்அலா என்னை தடுமாற வைத்து விட்டது. இது விஷயத்தில் நான் எனது வழிமுறையை –" اَبْهِمُوْا مَا اَبْهَمَ اللّٰهُ –அல்லாஹ் மூடலாக்கிய விஷயத்தை நீங்களும் மூடலாக்குங்கள் என்று வைத்திருந்தேன். இந்நூல் அதை அழகிய முறையில் விளக்கியுள்ளது" என்று கூறியுள்ளார்கள்.

இது தவிர 'மக்ஸதே பைஅத்', கன்ஜே மக்தூம், மஇய்யத்தே இலாஹிய்யா, பலாஹே முஸ்லிம் போன்ற நூற்களும் தைய்யிபாத்தே கௌஸி என்ற கவிதைத் தொகுப்பும் இவர்களது ஆக்கங்களாகும்.

ஹிஜ்ரி 1373 ஷவ்வால் பிறை 4ல் (கி.பி. 1954 ஜூன் 6) ஞாயிற்றுக்கிழமை இன்னுலகை நீத்த ஷைகு அவர்களின் புனித மண்ணறை ஹைதராபாத்தில் உள்ள பேகம் பஜாரில் மஸ்ஜிதே கரீமுல்லாஹ் ஷாஹ்வில் உள்ளது. இவர்களின் மகனார் ஸஹ்வீ ஷாஹ் என்பவர்களும் பிற்காலத்தில் தரீக்கத் சம்பந்தமான நிறைய நூல்கள் எழுதியுள்ளார்கள்.

ஹஜ்ரத் அவர்களுக்கு ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட கலீபாக்கள் இந்தியா முழுவதும் இருந்தார்கள். அவர்களுள் சைய்யத் நூரி ஷாஹ் கிபுலா அவர்கள் மிகவும் புகழ் பெற்று விளங்கினார்கள்.

நூருல் மஷாயிக் ஹஜ்ரத் சையத் நூரீ ஷாஹ் கிப்லா (ரஹ்)

தங்கள் பெயருக்கு ஏற்ற வண்ணம் உலகெங்கும் பேரொளியை வீசிய சர்கார் நூரி நாயகத்தின் இயற்பெயர் அஹ்மத் முஹ்யித்தீன் என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குல வழியில் குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் பேரப்பிள்ளையாக ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28ல் ஹஜ்ரத் அவர்கள் உலகில் உதித்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் தந்தைப் பெயர் 'சையத் கௌஸுத்தீன்' என்பதாகும்.

தங்கள் இளம் வயதிலேயே ஷைகு கௌஸீ ஷாஹ் சர்காரிடம் பைஅத் பெற்று அவர்களின் பணிவிடையிலேயே பல்லாண்டுகள் கழித்தார்கள். ஷைகு அவர்கள் கிலாபத் கொடுத்து 'நூரீ ஷாஹ்' எனும் பெயரையும் கொடுத்தார்கள்.

கேட்பவர்களை எல்லாம் தன் வசப்படுத்தும் மிக அற்புதமான பேச்சாற்றலை அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்திருந்தான். ஷைகு கௌஸீ ஷாஹ் அவர்கள் தன் முரீது நூரீஷாஹ் அவர்களை சில இடங்களுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே தன் முரீதைப் பேசச் செய்து அவர்களின் பேச்சை ஷைகும் கேட்டு ரசித்துப் பாராட்டுவார்கள்.

பிற்காலத்தில் நூரி நாயகத்தின் புகழ் உலகெங்கும் பரவியது. குறிப்பாக தமிழகம், கேரளா எங்கும் அவர்களின் பெயரை அறியாதவர்கள் யாரும் இல்லை எனும் அளவுக்கு அவர்களின் முரீதுகள் எங்கும் இருந்தனர். எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஓய்வின்றி ஊர் ஊராக பயணம் செய்து இறை ஞானங்களை போதித்து வந்தார்கள். தங்கள் கலீபாக்களைப் பார்த்து 'நான் சிரமம் பாராது ஊர் ஊராக சுற்றியதால் அல்லாஹ் உங்களுக்கு இறை ஞானத்தை வழங்கியுள்ளான். இல்லை என்றால் தமிழகம் இருண்டு கிடந்திருக்கும். நீங்களும் சிரமம் பாராது ஊர் ஊராகச் செல்லுங்கள். "ஆரிப் தேங்கிக் கிடக்கும் குளம் போன்றவர் அல்ல! ஊர் ஊராகச் சென்று மக்கள் தாகம் தீர்க்கும் நதி போன்றவர்" என்று கூறுவார்கள்.

ஆரம்பத்தில் குடிசை வீட்டில் வறுமையில் வாடியபோது சேவை செய்தது போலவே முதுமையில் பெரும் வசதி வாய்ப்புகள் வந்த போதும் இரவு பகலாக சலிப்படையாமல் இறை ஞானத்தை போதித்து வந்தார்கள். 'தர்ஜுமான்' என்ற உர்து மாத இதழும் நடத்தினார்கள். அஸ்ராரே லாயிலாஹ இல்லல்லாஹ், தப்சீரே நூரி (சூரா பாத்திஹா), அஹமிய்யத்தே தரீகத், அஸ்ராரே இலாஹி, ஜுஹூரே முஹம்மத் (ஸல்) ஆகிய பல நூற்கள் எழுதியுள்ளார்கள்.

கேரளாவில் ஜாமியா அரபிய்யா நூரிய்யா என்ற அரபிக் கலா சாலையைத் தோற்றுவித்தார்கள். ஹைதராபாத்தில் ஜாமியா இலாஹிய்யா நூரிய்யா எனும் அரபிக் கல்லூரியும், நூரி இண்டஸ்டிரீஸ், நூரிய்யா ஜூனியர் காலேஜ், அரபிக் ஓரியண்டல் ஹைஸ்கூல் போன்ற பல கல்வி நிறுவனங்களைத் துவக்கினார்கள்.

ஹைதராபாத்தில் பண்டல்குடாவில் மஸ்ஜிதும், மத்ரஸா கட்டிடங்களும், கான்காஹ்வும் கட்டினார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு 4 ஆண் மக்களும், 7 பெண் மக்களும் வாரிசுகளாவர். எனினும் தனது அனைத்து சொத்துக் களையும் மத்ரஸாவுக்கு வக்பு செய்து விட்டார்கள்.

ஹிஜ்ரி 1411 ரபீவுல் ஆகிர் 14 சனிக்கிழமை உலகைப் பிரிந்த ஹஜ்ரத் அவர்களின் மண்ணறை ஹைதராபாத்தில் உள்ளது. ஹஜ்ரத் அவர்களுக்கு தமிழகம், கேரளா மற்றும் பல இடங்களில் நூற்றுக்கணக்கான கலீபாக்கள் உள்ளனர். தமிழகத்தில் குறிப்பாக ஹஜ்ரத் ஜுஹுரீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் ஆமிர் கலீமீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் பைஜீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் ஜமாலீ ஷாஹ் கிப்லா ஆகியோர் பிரபலமானவர்கள்.

ஷம்சுல் ஆரிபீன் பைஜி ஷாஹ் நூரி ஹஜ்ரத் கிப்லா (ரஹ்)

தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் 'திருப்பந்துருத்தி' எனும் சிற்றூரில் 1926 ஜூன் 26 ஆம் தேதி ஹிஜ்ரி 1344 துல்ஹஜ் 16 ஆம் தேதி தோன்றிய பைஜி எனும் திருவிளக்கிற்கு அவர்களின் பெற்றோர் அப்துற்றஹீம்-காத்தூன் பீவி இருவரும் 'அப்துல் பஷீர்' எனும் அழகு நாமம் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆரம்பத்தில் திருச்சி ஜமால் முஹம்மத் யதீம் கானாவில் பள்ளிக்கூடம் பயின்ற ஷைகுனா அவர்கள் பின்னர் கிளியனூர் அரபிக் கல்லூரியில் சில காலம் அரபி பயின்றார்கள். பின்னர் ரெயில்வே மெயில் சர்வீஸ் RMSல் சேர்ந்து பணி புரிந்தார்கள். தப்லீக் இயக்கத்தில் சேர்ந்து 19 வருடங்கள் சேவை செய்தார்கள். பின்னர் தென்னிந்தியாவின் ஞான சூரியன் நூரி நாயகத்திடம் பைஅத் பெற்று கிலாபத்தும் பெற்றார்கள்.

ஷைகின் அறிவுரைப்படி அரசுப் பணியைத் துறந்து இறைப் பணியில் ஈடுபட்டார்கள். தமிழகத்தின் கிராமம் கிராமமாக – ஊர் ஊராக சென்று தவ்ஹீதின் சேவை செய்தார்கள். அவர்களின் புனித பாதம் படாத ஊர்கள் தமிழகத்தில் மிகவும் குறைவு. சென்னை முதல் கன்னியாகுமரி வரை அவர்களின் முரீதுகள் பரவியுள்ளனர். ஷைகுனா அவர்களுக்கு நான்கு புதல்வர்களும் ஒரு புதல்வியும் வாரிசாக உள்ளனர். 25 கலீபாக்கள் அவர்களின் சேவையைத் தொடர்கின்றனர்.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உடல் நலக்குறைவு ஏற்பட்டு சென்னை மாநகரில் சிகிச்சை பெற்று வந்தனர். 2005 ஆகஸ்ட் 26 அன்று ஹிஜ்ரி 1426 ரஜப் 20ல் உலகைப் பிரிந்தார்கள்.

ஆரம்பத்தில் சென்னையில் வாழ்ந்த ஷைகு நாயகம் பின்னர் லால்பேட்டைக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கேயே ஏறத்தாழ 50 ஆண்டு காலம் வாழ்ந்து தங்கள் 80 ஆம் வயதில் மறைந்து அவ்வூரிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அல்லாஹ் அவர்களின் சேவையை கியாமத் வரைத் தொடரச் செய்வானாக!

(இன்ஷா அல்லாஹ் ஷைகுனா அவர்களின் விரிவான வாழ்க்கை வரலாறு விரைவில் வெளிவர உள்ளது.)

மதிப்புரை

کوئی اک کو سب ہی سمجھتا تھا کوئی سب کو سب اسے چھوڑ کر

وہی وہ ہے سب میں، یہ سب نہیں، وہ سمجھوں میں ایسا بتا گیا

நமது ஷைகு நாயகம் ஷம்சுல் ஆரிபீன் சர்கார் பைஜி ஷாஹ் நூரி (ரலி) அவர்களின் தாதா பீர் கன்ஜுல் இர்பான் கௌஸி ஷாஹ் அக்பரீ (ரலி) அவர்கள் தனது ஷைகு தனக்குச் செய்த பேருதவியைப் பற்றிக் கூறும்போது -

''சிலரோ 'அந்த ஒரு இறைவன் தான் இந்த எல்லாமாக இருக்கிறான்' என்று விளங்கியிருந்தார்கள். (இது குப்ரான விளக்கமாகும்.)

'இன்னும் சிலரோ எல்லா வஸ்துக்களும் தனியாக இக்கின்றன. அவன் தனியாக எங்கோ இருக்கிறான்' என்று விளங்கியிருந்தார்கள். (இது ஷிர்க்கான விளக்கமாகும்.)

ஆனால் எனதருமை ஷைகு நாயகமோ 'இந்த அனைத்து வஸ்துக்களிலும் அவன் இருந்தாலும் அவன் அவனாகவே இருக்கிறான். அவன் இந்த வஸ்துவாக மாறவில்லை' என்று கூறி அனைத்து வஸ்துக்களிலும் அவனைக் காட்டிக் கொடுத்துச் சென்றார்கள்'' என்று கூறுகிறார்கள்.

குப்ருக்கும், ஷிர்க்குக்கும் மத்தியில் உள்ள நேரான பாதையில் தான் முஸ்லிம் நடக்க வேண்டியுள்ளது. கௌஸி நாயகம் அவர்களின் 'நூருன்னூர்' எனும் இன்னூல் அந்த நேரான பாதையை நமக்கு நன்கு தெளிவாக்குகிறது.

நமதுஷைகு நாயகம் ஷம்சுல் ஆரிபீன் பைஜி ஷாஹ் நூரி (ரஹ்) அவர்கள் 'சேலம் ஹஜ்ரத்' என்று அன்போடு அழைத்து வந்த சச்சா பீர் 'மௌலவி ஷேக் அப்துல் காதிர் இர்பானீ ஷாஹ் நூரி மன்பஈ' அவர்கள் ''நூருன்னூர்'' எனும் இந்த மாபெரும் பொக்கிஷத்தை அழகு தமிழில் தந்துள்ளார்கள். அவர்களுக்கு அல்லாஹ் ஈருலக நற்பாக்கியங்களைத் தந்தருள்வானாக. அவர்களின் இந்த சேவையை அல்லாஹ் மக்பூலாக்குவானாக!

ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

அன்புடன்

மௌலவி A.B.F. **அப்துல்லாஹ் பைஜானுல்லாஹ் ஷாஹ் பைஜி**

மௌலவி A.B.F. **ரஹ்மதுல்லாஹ் இர்பானுல்லாஹ் ஷாஹ் பைஜி பையாஜி**

மௌலவி A.B.F. **நூருல்லாஹ் நூரானீ ஷாஹ் பைஜி பையாஜி**

மௌலவி A.B.F. **உபைதுல்லாஹ் ஷாஹ் பைஜி**

பதிப்புரை

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரசூலிஹில் கரீம்

கன்ஜுல் இர்பான் கௌஸி ஷாஹ் அக்பரீ சிஷ்தி காதிரி அவர்களால் எழுதப்பட்டு சென்ற நூற்றாண்டில் வெளியாகி இந்தியா மட்டுமின்றி உலகளாவிய அளவில் உலமாக்களால் போற்றப்பட்ட ஞானப் பொக்கிஷம் தான் "நூருன்னூர்" எனும் இன்னூல்!

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

என்ற குர்ஆனின் வசனத்திற்கு விளக்கம் கூறும் போது "இபாதத் என்பதே இறைவனை அறிந்து கொள்ளும் இர்பான் எனும் ஞானம் தான். அதை அறிந்து கொள்வதற்காகத்தான் அல்லாஹ் மனிதர்களையும் ஜின்களையும் படைத்தான்" என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

இறை ஞானத்தைப் பெற விரும்பும் மக்களுக்கு இந்நூல் ஒரு பாடநூலாகும்! சிக்கலான பிரச்சனைகளையும் மிக இலகுவாக இதில் விளக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இந்நூலை மக்களுக்கு பயன்மிக்க நூலாக ஆக்கி அருள்வானாக!

இந்நூலை மொழி பெயர்த்து வெளியிடுவதில் எனக்கு உதவியாக இருந்த பிள்ளைகள் ஜுபைர் அஹ்மத் பைஜி, மற்றும் அபுல் ஹஸன் பைஜி ஆகியோருக்கு அல்லாஹ் நல்லருள் செய்வானாக!

அன்புடன்

இர்பானீ ஷாஹ் நூரி

(மௌலவி A.A. ஷேக் அப்துல் காதிர் மன்பஈ)

சூரமங்கலம், சேலம்-5.

வாழ்த்துரை

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரசூலிஹில் கரீம்

படைப்புகளையும், படைத்தவனையும் அறியும் ஞானத்தின் பெயர் தான் தஸவ்வுப் ஆகும். படைத்தவனின் ஞானம் இல்லா விட்டால் அவனுக்குரிய ஹக்கை நிறைவேற்ற முடியாது. படைப்புகளைப் பற்றிய ஞானம் இல்லாவிட்டால் படைப்புகளின் ஹக்கையும் நிறைவேற்ற முடியாது. இந்த இறை ஞானம் இல்லாத தால்தான் மக்களிடையே ஈவு இரக்கமற்ற சண்டைகள், சச்சரவுகள், குழப்பங்கள், போர்கள் ஏற்படுகின்றன. மனித நேயம் மறைந்து விடுகிறது. எதுவரை இறை ஞான மும், சிருஷ்டிகளின் ஞானமும் மக்களிடம் இருந்ததோ அது வரை உலகெங்கும் சுபிட்சமும், சந்தோஷமும் இருந்தது. இறை ஞானம் எனப்படும் ஆன்மீகமும், சிருஷ்டிகளின் ஞானமும் குறைந்த பிறகு உலகெங்கிலும் குழப்பங்களும், மனித உரிமைகளும் மீறப்படுகின்றன. நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ ارْزُقْنَا عِلْمَ التَّوْحِيْدِ وَعَمَلَ الْاِخْلَاصِ وَحُسْنَ الْخَاتِمَةَ

இந்த துஆவின் கருத்துப்படி ஹக்குடைய, கல்குடைய ஞானம் வந்த பிறகுதான் ஆண்டவனுக்காக ஒவ்வொரு காரியமும் செய்வோம். ஒவ்வொரு முடிவும் இன்பமாகவும், சுகமாகவும் அமையும். ஒவ்வொரு வினாடியும் நிம்மதியும், சுகமும் பெற்றுக் கொண்டே இருக்கலாம். எல்லாப் படைப்புகளும் நிம்மதியாகவும், சுகமாகவும் இருக்க முடியும். காரணம்

اَلْخَلْقُ عِيَالُ اللّٰهِ

படைப்பினங்கள் அடங்களும் அல்லாஹ்வுடைய குடும்பமாகும். குடும்பம் என்று சொன்னால், கணவன்-மனைவி சேர்ந்து வாழும் குடும்பம் அல்ல. எல்லாம் அவனுடைய ஞானப் பூங்காவிலிருந்த வஸ்துகளாகும் என்ற பொருளாகும். ஒரு குடும்பம் நிம்மதியாக இருப்பதற்கு அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எனவே அனைவரையும் நேசிப்பது நம் மீது கடமையாகும். அனைத்து சிருஷ்டி களின் ஞானங்களும் அதைப் படைத்த ஆண்டவனின் ஞானமும் (ஆன்மீகம்) அறிந்த மனிதர்கள்தான் ஆன்மீகவாதிகள். அவர்களின் நோக்கமே எல்லோரும் நலமாக இருக்க வேண்டும். காரணம் எல்லோரும் அவன் படைப்புகள். இத்தகைய உயர்ந்த ஞானத்தை உலக மக்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிந்து நேச, பாசத்தோடு வாழ்வதற்கு அருள் பாலிப்பானாக! இந்த கருத்தின் அடிப்படையில் தான் இந்த புத்தகத்தை வெளியாக்குகிறார்கள். இந்த சேவையை அல்லாஹ் கபூல் செய்வானாக!

இப்படிக்கு
ஆன்மீக குருமார்களின் பாதரட்சை
அல்ஹாஜ், மௌலானா சுபூரிஷாஹ் பைஜி
பொரவச்சேரி.

ஆசிரியரின் ஞான வழித் தொடர்

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்-தேதி	அடக்கஸ்தலம்
1.	**இருலோக ரட்சகர் ரஹ்மத்துல்லில் ஆலமீன் முஹம்மது நபி (ஸல்)**	11	ரபீவுல் அவ்வல் 12 திங்கள்கிழமை	மதீனா முனவ்வரா
2.	பாபுல் இல்ம் சையிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு	40	ரமலான் 21	நஜப்
3.	ஹஜ்ரத் காஜா ஹஸன் பஸரீ (ரஹ்)	111	முஹர்ரம்-4 செவ்வாய்	பஸரா
4.	ஹஜ்ரத் ஷைகு ஹபீப் அஜமீ (ரஹ்)	120	ரமலான் 9	பஸரா
5.	ஹஜ்ரத் அபூ சுலைமான் தாவூத் இப்னு நஸீர் தாயீ (ரஹ்)	162	ரமலான் 9	பக்தாத்
6.	ஹஜ்ரத் அபூ மஹ்பூஜ் மஃரூப் இப்னு பைரோஸ் கர்கீ (ரஹ்)	200	முஹர்ரம் 2 ஞாயிறு	பக்தாத்
7.	ஹஜ்ரத் அபுல் ஹஸன் சிர்ரீ இப்னு முஃப்லிஸ் ஸிக்தீ (ரஹ்)	250	ரமலான் 3 செவ்வாய்	பக்தாத்
8.	(அவர்களின் சகோதரியின் மகன்) ஹஜ்ரத் அபுல்காசிம் ஜுனைத் இப்னு முஹம்மத் சுஜாஜ் பக்தாதி (ரஹ்)	297	ரஜப் 27 சனிக்கிழமை	பக்தாத்
9.	ஹஜ்ரத் அபூபக்கர் ஷிப்லி (ரஹ்)	334	துல்ஹஜ் 27 ஜும்ஆ	பக்தாத்
10.	ஹஜ்ரத் அப்துல் அஜீஸ் ஸுஹைல் யமனீ (ரஹ்)	336	துல்ஹஜ் 11 வியாழன்	யமன்
11.	ஹஜ்ரத் அபுல் பள்ல் அப்துல் வாஹித் யமனீ (ரஹ்)	425	ஜமாதுஸ்ஸானீ 9 ஜும்ஆ	பக்தாத்(இமாம் ஹன்பல் அவர் களின் மக்பரா)
12.	ஹஜ்ரத் அபுல் ஃபரஹ் யூசுப் தர்தூஸி (ரஹ்)	447	முஹர்ரம் 5 சனி	தர்தூஸி
13.	ஹஜ்ரத் அபுல் ஹஸன் அலிய்யுல் குரஷிய்யுல் ஹன்காரீ (ரஹ்)	486	-------- --------	ஹன்கார்
14.	ஹஜ்ரத் அபூ சயீத் இப்னு முபாரக் மக்ஸூமீ (ரஹ்)	513	ரபீவுஸ்ஸானீ 11 திங்கள்	பக்தாது (வாசிதா)
15.	ஹஜ்ரத் குத்புல் அக்தாப் ஷைகு முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)	561	ரபீவுஸ்ஸானி 11	பக்தாத்
16.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் ஷைகு அப்துர்ரஜ்ஜாக் (ரஹ்)	595	ஷவ்வால் 6	பக்தாத் (பாபுல் ஹரப்)
17.	(அவர்களின் சகோதரர்) ஹஜ்ரத் சையித் அபூநசீர் பீர் (ரஹ்)	618	ஜமாதுஸ்ஸானி1	திமிஷ்க்
18.	ஹஜ்ரத் சையித் அபூசாலிஹ் இப்னு அப்துர் ரஜ்ஜாக் (ரஹ்)	699	ஷஃபான் 18	மதீனா முனவ்வரா

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
19.	ஹஜ்ரத் சையத் ஷைகு அஹ்மத் (ரஹ்)	-----------	----------	மதீனா முனவ்வரா
20.	ஹஜ்ரத் சையித் முஹம்மத் இப்னு அஹ்மத் (ரஹ்)	________	----------	மதீனா முனவ்வரா
21.	ஹஜ்ரத் சைய்யித் நசீருத்தீன் (ரஹ்)	------------	----------	---------
22.	ஹஜ்ரத் சைய்யித் நூருத்தீன் (ரஹ்)	851	----------	---------
23.	ஹஜ்ரத் சைய்யித் ஷாஹ் இனாயத்துல்லாஹ் (ரஹ்)	----------	----------	----------
24.	ஹஜ்ரத் சைய்யித் ஷுஜாஃ (ரஹ்)	-------------	----------	---------
25.	ஹஜ்ரத் ஹாஜி சைய்யித் இஸ்ஹாக் சிஷ்தி பாபா ஷாஹ் காதிரி (ரஹ்)	982	----------	காலகீ (குல்பர்கா)
26.	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் (ரஹ்)	1090	ஜமாதுல்ஆகிர்3	நாகூர் (குல்பர்கா)
27.	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷுஹரவர்தீ தபகாதீ (ரஹ்)	985	----------	பீஜப்பூர்
28.	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத்துல்லாஹ் அய்னீ (ரஹ்)	1018	---------	ஜஹ்ராபூர்
29.	ஹஜ்ரத் சைய்யித் கமாலுத்தீன் (அவ்வல்) புகாரீ (ரஹ்)	-------------	---------	தாலாப்குரம் குண்டா சித்தூர்
30.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் ஜமாலுத்தீன் (ரஹ்)	1162	---------	ஜமால் யக்கா (ராய் சுட்டி)
31.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் (ரஹ்)	1186	ஜமாதுல்ஆகிர்1	கத்ரீ (அனந்தப்பூர்)
32.	(அவர்களின் சகோதரர்) சைய்யித் ஷாஹ் கமாலுத்தீன் (ஸானீ) ஷம்ஃ கான் தானே சிஷ்த், ஷாஹ் கமால் (ரஹ்)	1224	ஸபர் 11	தாலாப்–குரம் குண்டா
33.	ஹஜ்ரத் சைய்யித் அலாவுத்தீன் (ரஹ்)	1251	---------	டிரங்ரோடு ராய்சுட்டி (கடப்பா)
34.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் சைய்யித் புர்ஹானுத்தீன் ஹக்கானி ஹக்நுமா (ரஹ்) (ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகன்)	1290	ரமலான் 29	டிரங்ரோடு ராய்சுட்டி
35.	ஹஜ்ரத் சைய்யித் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஷாஹ் ஜீ நக்ஷ பந்தீ	1311	துல்ஹஜ் 7	ஹைதராபாத் அப்ஜல் கன்ஜ் (தவாகானா உஸ்மானிய்யா பின்புறம்)

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
36.	ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீவாலே ஷாஹ் (ரஹ்)	1351	ரபீவுஸ்ஸானி 29 வியாழன்	ஹைதராபாத் காசீகோடா
37.	**ஹஜ்ரத் கன்சுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி (ரஹ்)**	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீமுல்லாஷாஹ் பேகம் பஜார் ஹைதராபாத்
38.	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சைய்யித் நூரி ஷாஹ் (ரஹ்)	(பிறப்பு ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28) 1411	ரபீவுல் ஆகிர்14 சனிக்கிழமை	ஹைதராபாத்
39.	ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் ஷைகுல் அரபி வல் அஜம் அப்துல் பஷீர் பைஜி ஷாஹ் நூரி வஸிஅத் பைஜானுஹு (ரஹ்)	(பிறப்பு 26.6.1926) 1426	(ஹிஜ்ரி 1344 துல்ஹஜ் 16 திருப்பந்துருத்தி) ரஜப் 20 வெள்ளி 26.8.2005	லால்பேட்டை

குறிப்பு : 6 எண்ணில் உள்ள சையிதினா மஃரூப் கர்கீ (ரஹ்) அவர்களுக்கு பெருமானாரிடமிருந்து இன்னொரு முறையிலும் சில்சிலா ஆன்மீகத் தொடர் இருக்கிறது. அதுவாகிறது :

நபி முஹம்மத் (ஸல்) – சையிதினா அலீ (ரலி) – இமாம் ஹுஸைன் (ரலி)– இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) – இமாம் முஹம்மத் பாகிர் (ரலி) – இமாம் ஜஃபர் சாதிக் (ரலி) – இமாம் மூஸா காழிம் (ரலி) – இமாம் அலி மூஸா ரிழா (ரலி) – ஷைகு மஃரூபுல் கர்கீ (ரலி) இவ்வாறு தொடர் வருகிறது.

	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
1.	இருலோக ரட்சகர் சைய்யதுல் முர்ஸலீன் முஹம்மத் நபி (ஸல்)	11	ரபீவுல் அவ்வல் 12 திங்கள்கிழமை	மதீனா முனவ்வரா
2.	சையிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு	40	ரமலான் 21	நஜப் ஷரீப்
3.	சையிதுனா காஜா ஹஸன் பஸரீ (ரலி)	111	முஹர்ரம்–4 செவ்வாய்	பஸரா
4.	ஹஜ்ரத் அப்துல் வாஹித் இப்னு ஜைது (ரஹ்)	177	ஸபர் 27 புதன்	பஸரா
5.	ஹஜ்ரத் அபூஅலி புளைல் இப்னு இயாழ் (ரஹ்)	187	ரபீவுல் அவ்வல் 3, ஜும்ஆ	மக்கா முகர்ரமா
6.	ஹஜ்ரத் சுல்தான் இப்றாஹீம் இப்னு அத்ஹம் பல்கீ (ரஹ்)	261	ஜமாதுல்அவ்வல் 28, ஜும்ஆ	மர்அஷ் கோஹே ஷாம்
7.	ஹஜ்ரத் சதீதுத்தீன் ஹுதைபதுல் மர்அஷிய்யி (ரஹ்)	277	ஷவ்வால் 24 ஞாயிறு	மர்அஷ் (ஷாம்)
8.	ஹஜ்ரத் காஜா அமீனுத்தீன் அபூஹுபைரா பஸரீ (ரஹ்)	277	ஷவ்வால் 7	பஸரா
9.	ஹஜ்ரத் மிம்ஷாத் அலி தைனூரி (ரஹ்)	298	முஹர்ரம் 14 புதன்	தைனூர்
10.	காஜா இப்றாஹீம் அபூ இஸ்ஹாக் ஷாமீ (ரஹ்)	329	ரபீவுஸ்ஸானீ 14	அக்கா (ஷாம்)
11.	ஹஜ்ரத் குத்வதுத்தீன் அபீஅஹ்மத் (ரஹ்)	355	ஜமாதுஸ்ஸானீ 1 திங்கள்	சிஷ்த் (குராசான்)
12.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் காஜா அபூ முஹம்மத் (ரஹ்)	411	ரஜப் 1 செவ்வாய்	சிஷ்த்
13.	(அவர்களின் சகோதரரின் மகன்) ஹஜ்ரத் நாசிருத்தீன் அபூ யூசுப் (ரஹ்)	459	ரஜப் 3 திங்கள்	சிஷ்த்
14.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் காஜா குதுபுத்தீன் மவ்தூத் (ரஹ்)	527	ரஜப் 1 ஜும்ஆ	சிஷ்த்
15.	ஹஜ்ரத் ஹாஜீ ஷரீஃப் சிந்தனீ (ரஹ்)	612	ரஜப் 10 புதன்	புகாரா
16.	ஹஜ்ரத் காஜா உஸ்மான் ஹாரூனீ (ரலி)	617	ஷவ்வால் 5 திங்கள்	கஃபாவுக்கு எதிரில்
17.	பானியே சில்சிலா ஹஜ்ரத் குதுபுல் ஹிந்த் காஜா முயீனுத்தீன் ஹஸன் ஸன்ஜரீ அஜ்மீரீ (ரஹ்)	627	ரஜப் 6 திங்கள்	அஜ்மீர்
18.	ஹஜ்ரத் குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்)	633	ரபீவுல் அவ்வல் 14, திங்கள்	டில்லி
19.	ஹஜ்ரத் பரீதுத்தீன் கன்ஜஷகர் (ரஹ்)	664	முஹர்ரம் 5 செவ்வாய்	பாக்பட்டன்

	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
20.	ஹஜ்ரத் நிஜாமுத்தீன் மஹ்பூப் இலாஹி (ரஹ்)	725	ரபீவுஸ்ஸானீ 18	டில்லி
21.	ஹஜ்ரத் நசீருத்தீன் மஹ்மூத் சிராஹ் தஹ்லவி (ரஹ்)	757	ரமலான் 18	டில்லி
22.	ஹஜ்ரத் சையத் மஹ்மூத் பந்தே நவாஜ் கேசுதராஸி (ரஹ்)	825	துல்கஃதா 18	குல்பர்கா
23.	ஹஜ்ரத் சையத் ஜமாலுல்லாஹ் ஷாஹ் மக்ரிபீ (ரஹ்)	827	ரஜப் 10 ஜும்ஆ	குல்பர்கா
24.	ஹஜ்ரத் கமாலுத்தீன் வாஹிதுல் அஸ்ரார் பயாபானீ (ரஹ்)	867	————————	குல்பர்கா
25.	ஹஜ்ரத் சையத் மீரான்ஜீ ஷம்சுல் உஷ்ஷாக் (ரஹ்)	904	ஷவ்வால் 25	பீஜப்பூர்
26.	ஹஜ்ரத் சையத் புர்ஹானுத்தீன் ஜானம் (ரஹ்)	992	ஜமாதுல் ஆகிர் 15	பீஜப்பூர்
27.	ஹஜ்ரத் ஹாஜி சையத் இஸ்ஹாக் சிஷ்தி (ரஹ்)	982	————————	காலகீ குல்பர்கா
28.	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் (ரஹ்)	1090	ஜமாதுல் ஆகிர் 3	நாகூர் குல்பர்கா
29.	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷுஹரவர்தீ தபகாதீ (ரஹ்)	985	————————	பீஜப்பூர்
30.	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத்துல்லாஹ் அய்னீ (ரஹ்)	1018	————————	ஜஹ்ராபூர்
31.	ஹஜ்ரத் சைய்யித் கமாலுத்தீன் (அவ்வல்) புகாரீ (ரஹ்)	————————	————————	தாலாப்குரம் குண்டா சித்தூர்
32.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் ஜமாலுத்தீன் (ரஹ்)	1162	————————	ஜமால் யக்கா (ராய் கட்டி)
33.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் (ரஹ்)	1186	ஜமாதுல்ஆகிர்1	கத்ரீ (அனந்தப்பூர்)
34.	(அவர்களின் சகோதரர்) சைய்யித் ஷாஹ் கமாலுத்தீன் (ஸானீ) ஷம்ஃ கான் தானே சிஷ்த், ஷாஹ் கமால் (ரஹ்)	1224	ஸபர் 11	தாலாப்–குரம் குண்டா
35.	ஹஜ்ரத் சைய்யித் அலாவுத்தீன் (ரஹ்)	1251	————————	டிரங்ரோடு ராய்கட்டி (கடப்பா)

	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
36.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் சைய்யித் புர்ஹானுத்தீன் ஹக்கானி ஹக்நுமா (ரஹ்) (ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகன்)	1290	ரமலான் 29	டிராங்ரோடு ராய்சுட்டி
37.	ஹஜ்ரத் சைய்யித் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஷாஹ் ஜீ நக்ஷ பந்தீ	1311	துல்ஹஜ் 7	ஹைதராபாத் அப்ஜல் கன்ஜ் (தவாகானா உஸ்மானிய்யா பின்புறம்)
38.	ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீவாலே ஷாஹ் (ரஹ்)	1351	ரபீவுஸ்ஸானி 29 வியாழன்	ஹைதராபாத் காசீகோடா
39.	**ஹஜ்ரத் கன்சுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி (ரஹ்)**	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீமுல்லாஷாஹ் பேகம் பஜார் ஹைதராபாத்
40.	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சைய்யித் நூரி ஷாஹ் (ரஹ்)	(பிறப்பு ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28) 1411	ரபீவுல் ஆகிர்14 சனிக்கிழமை	ஹைதராபாத்
41.	ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் ஷைகுல் அரபி வல் அஜம் அப்துல் பஷீர் பைஜி ஷாஹ் நூரி வஸிஅத் பைஜானுஹு (ரஹ்)	(பிறப்பு 26.6.1926) 1426	(ஹிஜ்ரி 1344 துல்ஹஜ் 16 திருப்பந்துருத்தி) ரஜப் 20 வெள்ளி 26.8.2005	லால்பேட்டை

குறிப்பு : 27 எண் ஹாஜி சையத் இஸ்ஹாக் சிஷ்தி (ரஹ்) அவர்கள் சிஷ்திய்யா தரீக்காவில் சையத் புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்களிடமும் காதிரிய்யா தரீக்காவில் ஹஜ்ரத் சைய்யத் ஷுஜாஃ அவர்களிடமும் கிலாபத் பெற்றிருந்தார்கள்.

''சிருஷ்டிகள் ஒருபோதும் அல்லாஹ் ஆக முடியாது

அல்லாஹ் ஒருபோதும் சிருஷ்டியாக முடியாது

ஆனால் அல்லாஹ் இல்லாமல் இந்த

சிருஷ்டிகள் இருக்க முடியாது''.

மனிதன் தன் செயல்களில் முழுமையான

நிர்பந்தமுடையவனும் அல்ல! முழுமையான

இஷ்டம் உடையவனும் அல்ல!

செயல்களை உண்டாக்குவதில் நிர்பந்தமானவனாக

செயல்களை சம்பாதிப்பதில்

இஷ்டம் உடையவனாக இருக்கிறான்.

مَجْبُوْرٌ فِيْ خَلْقِ الْاَفْعَالِ

مُخْتَارٌ فِيْ كَسْبِ الْاَفْعَالِ

இறைவா உன்னிடம் உனது நெருக்கத்தையும்

உலகிலே அகக்கண்ணால் உன்னைக் காண்பதையும்

மறுமையில் புறக் கண்ணால் உன்னைக் காண்பதையும்

உன்னிடம் வேண்டுகிறேன்!

اَللّٰهُمَّ اِنِّىْ اَسْئَلُكَ الْقُرْبَ مِنْكَ وَالنَّظَرُ اِلَيْكَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ
فِي الدُّنْيَا بِقُلُوْبِنَا وَفِي الْآخِرَةِ بِاَعْيُنِنَا اَبَدًا اَبَدًا يَا اَللّٰهُ

— غوث الاعظم

எதுவரை நீ சிருஷ்டிகளில் சிருஷ்டித்தவனைக் காணவில்லையோ நீ அவைகளுக்கு கட்டுப்பட்டவனாகவே இருப்பாய்! எப்போது நீ அவைகளில் அவனைக் காண்பாயோ அவைகள் உனக்குக் கட்டுப்பட்டதாக ஆகிவிடும்!

كَانَ اللّٰهُ وَلَمْ يَكُنْ مَعَهُ شَيْئًا

هُوَ الْآنَ كَمَا كَانَ

அல்லாஹுத் தஆலா எப்போதும் இருந்தான்!

எந்த வஸ்துவும் அவனோடு இருக்கவில்லை!

அவன் முன்பு எப்படி இருந்தானோ அப்படித்தான்

இப்போதும் இருக்கிறான்!

அல்லாஹ் இவை அனைத்தை விட்டும் பரிசுத்தமானவன்.

ضِدٌّ (எதிரானது)

نِدٌّ (இணையானது)

حُلُوْل (ஒன்றில் இறங்குவது)

اِتِّحَاد (ஒன்றில் கலந்து விடுவது)

كَمِّيَّة (பலதாகுதல்)

كَيْفِيَّة (அமைப்பு)

تَغَيُّر (தன்மைகள் மாறுதல்)

تَبَدُّل (தாத் மாறுதல்)

تَجْزِيَة (உறுப்புகளாக பிரிதல்)

تَقْسِيْم (பங்குகளாக பிரிதல்)

تَأَثُّر (விளைவுகளை ஏற்குதல்)

முன்னுரை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نحمده ونصل على رسوله الكريم

அன்பர்களே! இந்த எளிய அடிமை இப்பூவுலகில் கண்கள் திறந்து உணர்வுகள் திறக்கும் முன்பே அந்தப் பேரிறைவனை நேசிக்கும் பைத்தியமாக ஆகிவிட்டேன். ஏனென்றால் இறைவனின் பெரும் அருட்கொடை என் வீட்டிலேயே இருந்தது. (ஹஜ்ரத் அவர்களின் தந்தை கரீமுல்லாஹ் ஷாஹ் அவர்கள் பெரும் இறைநேசராகவும் இருந்தார்கள்.) எப்போதும் வீட்டிலே இறைவனின் பேச்சுகளைத் தவிர வேறு பேச்சுக்களே இல்லை. ஹக்கின் திக்ரைத் தவிர வேறு எதுவும் காதில் விழ வாய்ப்பே இல்லை. குழந்தைப் பருவத்திலிருந்து கேட்டு கேட்டு நெஞ்சில் பதிந்து அவன் மீது பெருங்காதல் கொண்டவனாக ஆகிவிட்டேன்.

வளர வளர வயதின் தேட்டமும் உலகத்தின் சூழ்நிலையும் நாலாப் பக்கமும் சிந்தனையை திருப்பினாலும் இறைக் காதல் அனைத்தையும் மிகைத்து விட்டது. அந்த நிறம் மற்ற நிறங்களை மறைத்து விட்டது.

صِبْغَةَ اللّٰهِ ۚ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً

வாலிபத்தின் உச்சகட்டமான 20 வயதிலோ என் சிந்தனைகள் உலகை விட்டும் கதவை மூடிக் கொண்டன. உள்ளத்திலும் கண்களிலும் இறைவனைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. இவ்வுலகில் வாழும் வேற்றுலக பயணி போல் என் நிலைமை இருந்தது. அன்பு தகப்பனாரின் ஆன்மீக அருள் என்னில் ஊடுருவி இருந்தது.

அந்த நேரத்தில்தான் தகப்பனார் இவ்வுலகைப் பிரிந்தார்கள். புயலில் சிக்கிய கப்பலைப் போல் என் நிலைமை ஆனது. வழிகாட்டுதல் தேவைப்பட்டது. தகப்பனாரின் ஆன்மீக ரூஹானிய்யத் தொடர்பால் சற்று நிதானமடைந்தேன். அந்த நேரத்தில்தான் ஷைகுல் அக்பர் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் தஜல்லீ - ஆன்மீக வெளிப்பாடு என்னில் உண்டானது. அவர்களின் வழிகாட்டுதல் கிடைத்தது. அந்த ஞானக்கடல் என் தாகங்களுக்கு தண்ணீர் கொடுத்தது.

இந்த நேரத்தில் இன்னொரு தஜல்லீ ஏற்பட்டு என்னை வடக்கு நோக்கி சென்று ஸராயே இலாஹீ என்னுமிடத்திற்கு போகச் சொன்னது. சென்றேன். அந்த இடத்தை அடைந்தேன். அங்குதான் ஞானத்தின் பேரொளி ஷாஹ் கமால்

(ரஹ்) அவர்களை தரிசித்தேன். அவர்களில் நான் கண்ட ஒளிமயமான காட்சியை எப்படி வர்ணிப்பேன். கண்கள் அவர்கள் முன் மண்டியிட்டன. உள்ளமோ சரணடைந்து விட்டது. உயிரே "லப்பைக்" என்று சொன்னது.

அவர்களின் திரு முகத்திலே இறைவனின் நூர் காட்சி அளித்தது. கண் களிலே மின்னல் இருந்தது. சொற்களிலே அற்புதம் தெரிந்தது. பூவிதழ்களிலே புன்னகை குடி கொண்டிருந்தது. தலைப்பாகையோ சாதாரணமாக இருந்தது. குண ஒழுக்கங்களோ உள்ளத்தை கவர்ந்தது. உலகமோ அவர்களை ஆச்சரியத் தோடு பார்த்தது. காதலர்களோ உணர்விழந்து நின்றார்கள். அவர்களோ இறை நேசர்களின் தலைவராக இருந்தார்கள்.

சிஷ்திய்யா தலைமுறையின் திரு விளக்காக ஜொலித்த அவர்களை "மச்லீ வாலே" - மீன் காரர் என்று மக்கள் அழைத்தார்கள். ஸைய்யிதினா யூனுஸ் நபி (அலை) அவர்களையன்றோ மக்கள் "துன்னூன்" - மீனுடையவர் என்று அழைத்தார்கள். இவர்களுக்கு எப்படி அந்தப் பெயர்! என்று யோசித்தேன். ஆம்! சரிதான்! இவர்கள் சாதாரண மீன்காரர் அல்ல. திரு நபி (ஸல்) அவர்களின் ஞானக்கடலில் மூழ்கி மீன் பிடிக்கும் மீன்காரர். தன்னைத் தேடி வரும் மக்களுக்கெல்லாம் ஞானக்கடலிலே நீந்திச் சென்று மீன் பிடிக்கக் கற்றுத் தருபவர். அவர்களின் வாசலில் சென்றவர்கள் யாரும் வெறுங்கையுடன் திரும்பியதில்லை.

அவர்கள் என்னைக் கண்டவுடன் தங்கள் அடிமையாக என்னையும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களில்தான் நான் என் தகப்பனாரைப் பெற்றுக் கொண்டேன். ஷைகுல் அக்பரைப் பார்த்தேன். காஜா நாயகத்தையும், குத்பு நாயகத்தையும் கண்டேன். திரு நபியின் திருக்காட்சியையும் இறைவனின் நூரையும் அங்கே உணர்ந்து கொண்டேன்.

எனக்கு எதுவெல்லாம் கிடைத்ததோ அந்த வாசலில் இருந்துதான் கிடைத்தது. அதைத்தான் உங்களிடம் சொல்கிறேன். அந்தத் திருவாசலுக்குப் பின் எனக்கு வேறு வாசல் தேவையில்லை. எதைப் பார்க்க வேண்டுமோ பார்த்துக் கொண்டேன். யாரைப் பார்க்க வேண்டுமோ பார்த்துக் கொண்டேன். இனிமேல் எதைப் பார்ப்பது? யாரைப் பார்ப்பது? எப்படிப் பார்ப்பது? இன்னொரு வாசக்கு எப்படிப் போவது? உங்கள் வாசல் மட்டும் இல்லையென்றால் என்ன ஆவது? நான் எங்கு போவது?.

இப்படிக்கு

غوثی شاہ کان اللہ لہ

இறைப் புகழும் நபி வாழ்த்தும்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

அனைத்து புகழும் அந்த பரிசுத்த ஜாத்தான இறைவனுக்கே உரியது. அவனுடைய நூரினால்தான், பிரகாசத்தினால்தான் வானங்கள், பூமி இன்னும் அதிலுள்ள அனைத்துப் பொருட்களும் வெளியானது.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

அதே நேரத்தில் அந்த பரிசுத்த ஜாத் அனைத்து விதமான குறைகளை விட்டும் மிகத் தூய்மையானது. سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ

அந்த நூரே வாஹித் எனும் இணையற்ற பேரொளிக்கு நாம் அர்ப்பணம் ஆவதாக! அது எல்லாவற்றையும் வெளியே கொண்டு வந்து விட்டு தன்னை எல்லோருக்கும் மறைத்துக் கொண்டது. அந்த மறைந்திருக்கும் நிலையிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ

எல்லாம் அவனுக்கு உரியன. அவனிடமிருந்தே அனைத்தும் வந்தன. அவனில்லை எனில் அனைத்தும் 'ஏதுமில்லை' என்றாகிவிடும். அவனிருந்தால் எல்லாமிருக்கும்!

لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى

அவனை என்னவென்று புகழ முடியும்! அவனைப் புகழ்வதற்கு அவன் நாவுதான் வேண்டும்! கற்றுக் கொடுக்கப்பட்ட கிளிகள் என்ன புகழ்ந்துவிட முடியும்!

لَهُ الْحَمْدُ فِى الْاُوْلٰى وَالْاٰخِرَةِ

இறைவனின் பேரருள் அந்த பரிசுத்த ஜோதியாம் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உண்டாகட்டுமாக! அவர்கள் இறைவனின் முதற் பேரொளியாவார்கள்! இறை வெளிப்பாட்டின் மூலமாவார்கள்.

قَدْ جَآءَكُمْ مِّنَ اللّٰهِ نُوْرٌ وَّكِتٰبٌ مُّبِيْنٌ

اَوَّلُ مَا خَلَقَ اللّٰهُ نُوْرِىْ

அவர்களை என்னவென்று நாம் பாராட்ட இயலும்! அவர்களோ அகிலங்களின் பேரரசனின் நேசராகவன்றோ இருக்கிறார்கள்! அவர்களைப் படைத்தவனுமன்றோ அவர்கள் மீது காதல் கொண்டு நிற்கிறான்!

ஆம்! அவர்களின் அருமைகளை அவன் மட்டுமே அறிவான்! முழுமையான பெருமையுடன் சொல்லிக் காட்டுகிறான்.

وَمَآ اَرۡسَلۡنٰكَ اِلَّا رَحۡمَةً لِّلۡعٰلَمِيۡنَ

அகிலத்தார் அனைவருக்கும் அருட்கொடையாகவே அன்றி நீர் அனுப்பப்படவில்லை. (21 : 107)

ஆஹா! எப்பேர்ப்பட்ட புகழுக்குரியவர்கள் அவர்கள். யாரால் புகழப் படுகிறார்கள்?

எவனை எல்லோரும் புகழ்கிறார்களோ – அவனால் புகழப்பட்டவர்களல்லவா இவர்கள்!

எவனை எல்லோரும் வர்ணிக்கிறார்களோ அவனால் வர்ணிக்கப்பட்ட வர்களல்லவா இவர்கள்!

எவனை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்களோ அவனால் ஒப்புக் கொள்ளப் பட்டவர்களல்லவா இவர்கள்!

எவன் எல்லோருக்கும் நோக்கமாக இருக்கிறானோ அவன் வெளிப்பாட்டின் நோக்கமல்லவா இவர்கள்!

இறைவனையும் அவன் படைப்புகளையும் சேர்த்தவர்கள் இவர்கள் தானே! தோற்றுவித்தவனுடன் தோன்றியவைகளை தொடர்புபடுத்தியவர்கள் இவர்கள் தானே!

தலை முதல் கால்வரை முழுக்க முழுக்க ஓர் உதாரணம் கூறமுடியாத உயர்வுடையவர்கள் இவர்கள்தானே!

மனிதர் தான்! ஆனால், இவர்களைப்போல் இன்னொரு மனிதரை யாரும் காட்ட முடியுமா?

எவரின் வஹி எனும் இறை வார்த்தைகள் அணுவளவும் பிசகாமல் இறுதி நாள்வரை நிலைத்திருக்குமோ அப்படி இன்னொருவர் இருக்கிறாரா?

புனிதமிகு பற்களை எதிரிகள் சேதப்படுத்திய போதும்

اِهۡدِ قَوۡمِىۡ فَاِنَّهُمۡ لَا يَعۡلَمُوۡنَ

“இறைவா என் மக்களுக்கு நேர்வழி காட்டு. அவர்கள் அறியாதவர்கள்” என்று கூறிய இன்னொரு மனிதப் புனிதரை யாரும் காட்ட முடியுமா?

அவர்களின் நற்குணங்களைப் பற்றி என்ன கூற முடியும்?

நீங்கள் உயர்ந்த நற்குணத்தில் இருக்கிறீர்கள். وَ اِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيۡمٍ

அவர்களின் வார்த்தைகளை எப்படி வர்ணிப்பது.

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰى ۝ اِنْ هُوَ اِلَّا وَحْيٌ يُّوْحٰى ۝

'(ஒரு வார்த்தைகூட) தங்கள் சுய இஷ்டப்படி பேசுவதில்லை. அவை இறைவனின் வசனங்களே அன்றி வேறில்லை. (53 : 3, 4)

அவர்களின் பார்வையை எப்படிப் புகழ்வது ? مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغٰى

'அந்தப் பார்வை தடுமாறவும் இல்லை. கடந்து செல்லவும் இல்லை.' (53 : 17)

அவர்களின் திருமுகத்தை என்னவென்று கூறுவது ?

وَالْفَجْرِ *காலையிலோ அதிகாலை வெளிச்சம் போல் ஜொலிக்கிறது.* (89 : 1)

وَالضُّحٰى *மாலையிலோ நண்பகல் சூரியன் போல் பிரகாசிக்கிறது.* (93 : 1)

அவர்களின் தலைக் கேசத்தை எப்படிப் புகழ்வது? அலை அலைகளாய் பரவிக் கிடந்தால்

وَلَيَالٍ عَشْرٍ *'பத்து இரவுகளின் மீது சத்தியமாக'.* (89 : 2)

என்று இறைவன் புகழ்கிறான். அவை சேர்ந்திருந்தால்

وَالَّيْلِ اِذَا سَجٰى *'சூழும் இரவின் மீது சத்தியமாக'* (93 : 2)

என்கிறான். அவர்களின் கையைப் பற்றி என்ன கேட்க முடியும் ?

يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ *அதைத் தனது கை என்கிறான்.* (48 : 10)

அவர்களின் புனித நெஞ்சத்தை என்னவென்பது ?

اَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ *அதை விரிவாக்கி வைத்தோம் என்கிறான்.* (94 : 1)

அவர்களின் புனித முதுகை எப்படி வர்ணிப்பது ?

وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ الَّذِيْٓ اَنْقَضَ ظَهْرَكَ

அதன் சுமைகளை நாமே இறக்கி வைத்தோம் என்கிறான். (94 : 2, 3)

அவர்களின் குரலைப்பற்றிக் கேட்டாலோ

لَا تَرْفَعُوْٓا اَصْوَاتَكُمْ فَوْقَ صَوْتِ النَّبِيِّ

'நபியின் புனிதக் குரலுக்கு மேல் உங்கள் சத்தங்களை உயர்த்தாதீர்கள்' (49 : 2) *என்கிறான்.*

அவர்களின் அழகிய நடையோ, لَا تُقَدِّمُوْا بَيْنَ يَدَيِ اللّٰهِ وَ رَسُوْلِهٖ

"நபியின் முன்னால் நீங்கள் முந்த வேண்டாம்" (49 : 1) என்கிறான்.

அவர்களின் ஒளிமயமான ஆடைகளைப் பற்றியோ... அது இரவு என்றால்

يَآيُّهَا الْمُزَّمِّلُ என்றும் (73 : 1), பகல் என்றால்

يَآيُّهَا الْمُدَّثِّرُ என்றும் (74 : 1) வர்ணிக்கிறான்.

அல்லாஹ்! அல்லாஹ்! அவர்களின் உயர்வுதான் என்னே!

ஹஜ்ரத் ஜாமீ அவர்கள் படிக்கிறார்கள் :

"அந்த ஒரு போரொளியில் இருந்துதான் எல்லா ஒளிகளும் பிறந்தன. பூமியும் அவர்கள் நேசத்தில்தான் நிலை பெற்றிருக்கிறது. வானங்களும் அவர்களின் காதலில்தான் தன்னை அர்ப்பணமாக்கிக் கொண்டுள்ளன! அவர்கள் மீது அல்லாஹ்வின் பேரருள் உண்டாகட்டும்!"

பேரிறைவனின் நேசரைப் புகழ்வதற்கு இந்த அழுக்கு நிறைந்த அடிமைக்கு ஏது தைரியம்?

எந்த இருலோக சக்ரவர்த்தியின் நூரினால்– பேரொளியால் இந்த உலகம் உண்டாக்கப்பட்டுள்ளதோ.

எவர்களின் நூரினால் தான் அனைத்து வானவர்களும், நபிமார்களும் தோன்றினார்களோ அவர்களைப் புகழ்வதற்கு இந்த உம்மத்துக்கு என்ன வலிமை இருக்கிறது.

எவர்களின் அருள் இல்லை என்றால் நாம் காட்சியளிக்கவும் முடியாதோ அவர்களின் திருத் தோற்றத்தை புகழுவதும் நம்மால் முடியுமா?

அவர்களின் புகழை அவர்களிடத்திலேதான் ஒப்படைக்க முடியும்! அல்லது அவர்களைப் படைத்தவனிடம் ஒப்படைத்து விடலாம்!

நம் மன ஆறுதலுக்காக நாம் என்ன செய்வது? நம்மால் முடியாது என்று ஒத்துக் கொள்ளலாம்!

அல்லது தன் பேரொளியால் அவர்களின் பேரொளியை உண்டாக்கினானே அந்த இறைவனின் வார்த்தைகளையே திரும்பக் கூறிவிடலாம்.

ஆம்! அப்படித் திருப்பிச் சொல்வதற்கும் அவர்களின் அருள் ஜோதி தான் தேவை! எனினும் என்ன செய்வது? நம்மிடத்திலே நமக்குச் சொந்தமாக என்ன இருக்கிறது? அதைத் தவிர வேறு வழியும் இல்லையே!

ان الله وملائكته يصلون على النبیّ یاایها الذین آمنوا صلوا علیه وسلموا تسلیما

اللهم صل على سيدنا محمد وعلى ال سيدنا محمد وبارك وسلم الف الف مرة

وحدة الوجود

1. வஹ்ததுல் உஜூத் என்றால் என்ன?

நண்பர்கள் இதைப் பற்றிய விளக்கங்களைக் கேட்டதாலும், தற்காலத்தில் இதைப்பற்றி தவறான கண்ணோட்டங்கள் ஏற்பட்டுள்ளதாலும் உண்மையை வெளிப்படுத்துவதற்காக நான் இதை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆயினும் உள்ளத்தில் உதிப்பும் இறைவனின் உதவியும் வருவதற்காக எதிர்பார்த்திருந்தேன். பின்னர் அந்த இறைவனின் பேரருளே இதை எழுத காரணமாக அமைந்தது. இந்த எளியோனுக்கு இதை எழுத எந்தத் திறனும் தகுதியும் இல்லை. எனினும் அனைத்து காரியங்களையும் நடத்துபவன் அவனாகவே இருக்கிறான்.

இங்கே என் புறத்திலிருந்து இந்த பகீர் எதையும் கூறமாட்டேன். அவன் வார்த்தைகளை எழுதுகிறோம். அதுவும் அவனது ஆற்றலைக் கொண்டு.

வஹ்ததுல் உஜூது : இந்த வார்த்தையின் நேரடி மொழி பெயர்ப்பு 'ஒரே உஜூது' என்பதாகும்.

'உஜூது' என்பதற்கு பழக்க பாஷையிலே இரண்டு அர்த்தங்கள் உள்ளன.

ஒன்று : தத்துவக் கலையின் பரிபாஷையில் 'உஜூது' என்றால் 'இருக்குதல்' 'தரிபடுதல்' என்று பொருள்படும். இது அறிவால் விளங்கப்படும் ஒரு கருத்தாகும். அதாவது இது வெளியில் இல்லை. இதற்கு معقولات ثانوية (மஃகூலாத்தே ஸானிவிய்யா) என்பார்கள்.

இரண்டாவது : சூபியாக்கள் இறை ஞானிகளின் பரிபாஷையில் உஜூது என்றால் 'இருக்கக் கூடியது'. 'ஹஸ்த்' எதைக் கொண்டு தரிபாடு இருக்கிறதோ அந்த வஸ்து என்று பொருள் கொள்கிறார்கள். அதாவது ஒன்றுதான் இருக்கிறது. மற்ற அனைத்து படைப்புகளும் அந்த ஒன்றின் வெளிப்பாடுகள் தான் என்று அவர்கள் அறிகிறார்கள்.

இந்த இரண்டாவது அர்த்தம்தான் மக்களின் பழக்கத்தில் உள்ளதாகும். எனவே இங்கே இந்த இரண்டாவது அர்த்தத்தை வைத்துத்தான் நாம் பேசுவோம்.

சங்கைமிகு சூபியாக்கள், இறை ஞானிகள் உஜூது என்பதற்கு ஹஸ்த் – ஹஸ்தீ அதாவது 'இருப்பது – தரிபட்டு இருக்கக் கூடியது' என்று பொருள் கொள்கிறார்கள்.

இன்னும் அந்த உஜூதுக்குத் தான், அதாவது எது இருக்கிறதோ அதற்குத் தான் அல்லாஹ் – இறைவன் – ஹக் என்று கூறுகிறார்கள்.

அந்த ஹஸ்தே ஹகீகீ – உஜூதே ஹகீகீ – உண்மையில் இருக்கும் மெய்ப்பொருள் ஒன்றுதான். அந்த உஜூது எனும் உள்ளமை ஒன்றுக்குமேற்பட்டு இருப்பது அறிவு அடிப்படையிலும் – ஆதாரங்களின் அடிப்படையிலும் முஹால் – சாத்தியமற்றதாகும்.

ஏனெனில் அந்த ஒரு உள்ளமைக்கு முடிவு ஏற்பட்டால் அல்லது அது அழிந்துவிட்டால் இன்னொன்று வருவதற்கு வாய்ப்பு இருக்கலாம். ஆனால் அந்த உள்ளமையோ என்றென்றும் இருப்பது – பாகீயானது – எல்லையற்றது ஆகும்.

وحده لا شـــريك لـــه அவன் ஒருவன் ஈடுஇணையற்றவன் என்பதன் கருத்தாகவே 'வஹ்தத்துல் உஜூது' என்று கூறுகிறார்கள். இதையே குர்ஆனுடைய இஸ்திலாஹில் – பழக்க பாஷையில் 'ஹுவிய்யத்' என்று கூறப்படும்.

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

'அவனே துவக்கமானவன் முடிவானவன் வெளியானவன் மறைந்தவனாக இருக்கிறான். அவனே அனைத்து வஸ்துக்களையும் அறிகிறான்.' (57 : 3)

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்த ஆயத்திற்கு இவ்வாறு விளக்கம் கூறுகிறார்கள்.

اللهم انت الاول فليس قبلك شيء وانت الآخر فليس بعدك شيء ۰
وانت الظاهر فليس فوقك شيء وانت الباطن فليس دونك شيء
(مسلم عن ابى هريرة ﵁)

இறைவா!

நீயே முதலானவன் உனக்கு முன் எந்த வஸ்துவும் இல்லை.

நீயே இறுதியானவன். உனக்குப்பின் எந்த வஸ்துவும் இல்லை.

நீயே வெளியானவன் உனக்கு மேல் எந்த வஸ்துவும் இல்லை.

நீயே மறைவானவன். உன்னையன்றி எந்த வஸ்துவும் இல்லை.

(முஸ்லிம் ஷரீப்)

இந்த வஹ்ததுல் உஜூதுடைய விளக்கம் என்ன ? என்பதை இப்போது அறிய வேண்டும். ஒட்டுமொத்தமான இதன் வெளிக் கருத்தை யாரும் மறுப்பதில்லை. தன் சுய அறிவைக் கொண்டு இதை விளங்க முற்பட்டதால் தான் இதில் கருத்து வேறுபாடுகள் தோன்றின !

யாரெல்லாம் இறைவனின் அருளால் உள்ளத்தில் உதித்த 'கஷ்ப்' எனும் ஞானத்தால் இதை விளங்கினார்களோ அவர்கள் தங்கள் நிலைகளை தாங்கள் பெற்ற விளக்கங்களை எழுதி வைத்தும் சென்றிருக்கிறார்கள். இதில் உண்மை வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். அவர்களிடம் இந்த வஹ்ததுல் உஜூதுடைய மஸ்அலா நிதர்சன உண்மையாகவும், உணரக்கூடியதாகவும் அனுபவிக்கக் கூடியதாகவும் இருந்தது.

ஆனால் யாரெல்லாம் தன் அறிவைக் கொண்டு மட்டும் விளங்க முற்பட்டார்களோ அல்லது தான் விளங்காமல் முன்னோர்களின் சொற்களை மட்டும் பின் தொடர்ந்தார்களோ அவர்கள் இதில் மாறுபட்டு நிற்கிறார்கள்.

சிலரோ இது வெறும் 'கற்பனை உணர்வு' என்றார்கள்.

சிலரோ இது வெறும் 'வெற்றுச் சொற்களே'யன்றி வேறில்லை என்றார்கள்.

சிலரோ இது தர்க்க சாஸ்திரம் எனும் 'மன்திக்' கலையுடன் சம்பந்தப்பட்டது. வேறு அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை என்றார்கள்.

சிலரோ 'மார்க்கத்திற்கு முரணானது' என்றார்கள்.

சிலரோ 'வழிகேடு' என்றார்கள்.

இன்னும் சிலரோ இப்படி ஒன்று இருப்பது உண்மைதான். ஆனால் இதை சொல்லி விளக்க முடியாது. அவரவர் தன் அறிவாலும் மூளையாலும் யோசித்துக் கொள்ள வேண்டியது தான் என்றார்கள்.

وَمِنَ النَّاسِ مَنْ يُّجَادِلُ فِى اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَّلَا هُدًى وَّلَا كِتٰبٍ مُّنِيْرٍ

"மக்களில் சிலர் இப்படியும் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வுடைய விஷயத்தில் எந்தவித சரியான ஞானமும் இல்லாமல் - நேர்வழியும் இல்லாமல் - தெளிவான ஒளிமிக்க வேதமும் இல்லாமல் வீண் தர்க்கம் செய்கிறார்கள்".

(22 : 8)

உண்மை என்னவென்றால் இந்த மஸ்அலா நிதர்சனமானதாக – யதார்த் தத்தில் உள்ளதாக வெளிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவே இருக்கிறது.

இதை சரியான அளவு கோலில் நிறுத்துப் பார்ப்பது அவசியமாக இருக்கிறது. நம்மிடத்திலே அத்தகைய சரியான அளவுகோல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதனோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் தான் சிலருக்குச் சற்று சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல.

அந்த அளவு கோல் என்ன ?

"கிதாபுல்லாஹ் வ சுன்னது ரசூலில்லாஹ்"

இறைவேதமும் – இறைத் தூதரின் வழியுமேயாகும்.

குர்ஆன் ஹதீஸ் தான் நமது சரியான வழிகாட்டி என்பது நபி (ஸல்) அவர்களின் கட்டளையாகவும், அனைத்து பெரியோர்களின் ஏகோபித்த கருத்தாகவும் இருக்கிறது.

ஹஜ்ரத் சைய்யிதுனா குதுபு நாயகம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள் :

"எந்த ஹகீகத்தை ஞான அகமியங்களை ஷரீஅத் உண்மைப்படுத்த வில்லையோ அது வழிகேடுதான்".

இன்னும் இதையே சைய்யிதுனா குதுபுல் ஹிந்த் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் கூறுகிறார்கள்.

இன்னும் ஷைகுல் அக்பர் சைய்யிதுனா முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் இதையே கூறுகிறார்கள். அவர்கள்தான் முதலில் இந்த வஹ்ததுல் உஜூது பாடத்தை பெருமானார் (ஸல்) அவர்களின் உத்தரவுபடி கோர்வை செய்து வெளியிட்டார்கள்.

விஷயம் இப்படியிருக்க எவர்கள் தன் சொந்த அறிவு – சுயநிலை – தன் விருப்பு வெறுப்புகளுக்கு தோதுவாக இதை அலசினார்களோ, நிச்சயம் கருத்து வேறுபாடும் வழிகேடுமே அடைவார்கள்.

எனவே பகீர் இந்த மஸ்அலாவை குர்ஆன் ஹதீஸ் அடிப்படையிலேயே தங்கள் முன் வைக்கிறேன். மேலும் அந்த குர்ஆன் ஹதீஸை ஸஹாபாக்களும், தாபியீன்களும், மார்க்க அறிஞர்களும் எப்படி விளங்கினார்களோ அந்த விளக்கப்படியேதான் அணுக வேண்டும்.

وَاللّٰهُ يَقُوْلُ الْحَقَّ وَهُوَ يَهْدِى السَّبِيْلَ

'அல்லாஹ்வே உண்மை உரைப்பவன் அவனே நேர்வழி காட்டுபவன்.' **(33 : 4)**

சிலரோ வஹ்ததுல் உஜூதுடைய மஸ்அலா என்பது வெறும் 'ஹாலீ–உணர்வு சம்பந்தப்பட்டது என்று கூறுகிறார்கள். அப்படியிருக்குமானால் அதைப்பற்றி சொல்லுவது வீணானது என்றாகிவிடும். உண்மையில் எந்த 'நிலை'யும் 'சொல்' இல்லாமல் உண்டாவது இல்லை. அதுமட்டுமின்றி தீனுடைய பெரியோர்கள் அதைப்பற்றி எவ்வளவோ பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். அப்படியிருக்க பேச்சுக்கு சம்பந்தமில்லை என்று எவ்வாறு கூறமுடியும் ?

வேறு சிலரோ இவையெல்லாம் வெறும் 'வெற்றுப் பேச்சுக்களே' தவிர வேறில்லை என்கிறார்கள்.

ஆம்! இது வெறும் பெரியோர்கள் சூபியாக்களின் பேச்சாக மட்டும் இருக்குமானால் 'அது அவர்களுக்கு மட்டும்தான். நமக்கு அது ஆதாரமாகாது' என்று கூறிவிடலாம்.

அவர்களின் உள்ளுணர்வுகளாக – ஹாலாக மட்டும் இருக்குமானால் 'அதுவும் அவர்களுக்குத்தான். நமக்கு சரிப்பட்டு வராது' என்று கூறிவிடலாம்.

ஆனால், அதுவே அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களின் சொல்லாக இருக்குமானால் அதையே பெரியோர்களும் கூறியிருப்பார்களானால் அதுவே நமது அசல் ஈமானாக – இறை நம்பிக்கையாக இருக்கிறது.

அதுவே அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளுணர்வாக இருக்குமானால் அதையே பெரியோர்களும் அடைந்திருப்பார்களானால் அதுவே நமக்குப் பெரும் ஆதாரமாக இருக்கிறது. அதைப் பின்பற்றுவது நம்மீது கடமையாகவும் இருக்கிறது.

எச்சரிக்கையாக இருங்கள்! ஆய்ந்தறிந்த மார்க்க வல்லுனர்களிடத்தில் இந்த பாடங்கள் வெறும் வெற்று அனுபவங்களோ, உள்ளுணர்வுகளோ, நிலைகளோ அல்ல. மாறாக இது உண்மையானதாக முற்றிலும் நிதர்சனமான யதார்த்தத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மெய்யான செய்தியாக உள்ளது.

இதனுடைய பிரதிபலிப்புகள் நமது உள்ளுணர்வுகள், அனுபவங்கள், உள் நிலைகள் இவற்றிலே உண்டாகிறது என்பதே உண்மையாகும்.

பகீர் கூறுகிறேன் : இது 'ஈமானீ'யாகும். அதாவது நமது ஈமானோடு சம்பந்தப்பட்ட விஷயமாகும். இதை ஈமானுடைய பார்வை கொண்டு கவனிப்பதே ஏற்றமானதாகும்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ ءَامِنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ

ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும் ரசூலின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். **(4 : 136)**

அதாவது தக்லீதியான ஈமானிலிருந்து தஹ்கீகியான ஈமானுக்கு வாருங்கள். கேள்விப்பட்டு நம்பிக்கை கொண்ட நிலையில் இருந்து ஆய்ந்து அறிந்து உண்மையை உணர்ந்து நம்பிக்கைக் கொண்ட நிலைக்கு வாருங்கள் என்று அழைக்கிறான்.

இனி நாம் அசல் விஷயத்திற்கு வருவோம்.

2. இஃதிபாராத்தே உலூஹிய்யத்

அல்லாஹுத் தஆலாவிற்கு 4 இஃதிபார்கள் இருக்கின்றன. அதாவது 4 வித கவனிப்புகளில் அல்லாஹ்வை நாம் அறியலாம்.

دوعالم میں نہی موجود ومشہود : بجز ذات وصفات افعال وآیات

ஹஜ்ரத் ஷாஹ் கமால் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : அல்லாஹ்வின் ஜாத் – சிபாத் – அப்ஆல் – ஆயாத் இவைகளைத் தவிர ஈருலகிலும் வேறு எதுவும் இருக்கவும் இல்லை – காட்சியளிக்கவும் இல்லை.

அந்த நான்கு இஃதிபார்கள் :

1. ஜாத்தி இஃதிபார் : அவன் தன் தானே நிலைத்தவனாகவும் தன் தானே இருப்பவனாகவும் இருக்கிறான்.

قائم بنفسه موجود بذاتـــه

அவனைத் தன் தானே இருப்பவனாக – நிலை பெற்றவனாக ஏற்கவில்லையெனில் 'மஃதூம்' – இல்லாதவனாக ஏற்க வேண்டிவரும். இது குப்ர் – இறை மறுப்பாக இருக்கிறது.

மேலும் இது முஹால் – சாத்தியமற்றதாக இருக்கிறது.

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَۚ اَلْحَیُّ الْقَیُّوْمُ

அல்லாஹுவைத் தவிர வேறு இலாஹ் (உண்மையில் வணக்கத்திற்கு உரியவன் - தேவைகளை நிறைவேற்றுபவன்) யாரும் இல்லை. அவனே ஜீவித்மானவன் சுயமாய் இருப்பவன். (2 : 255)

هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَیْءٍ عَلِیْمٌ

அவனே முதலானவன்-முடிவானவன்-வெளியானவன்-மறைவானவன் அவனே அனைத்து வஸ்துக்களையும் அறிந்தவன். (57 : 3)

2. *சிபாத்தி இஃதிபார்* : அவனே முத்தஸிப்–ப–ஸிபாத்தே கமால்– பரிபூரணமான தன்மைகளைக் கொண்டு வர்ணிக்கப்பட்டவன். அவனைப் பரிபூரண சிபாத்கள் தன்மைகளை உடையவன் என்று ஏற்க மறுத்தால் அவனை முஅத்தல் – தன்மைகள் ஏதுமற்றவனாக சொல்ல வேண்டி ஏற்படும். தன்மைகள் இல்லாத வஸ்து – சிபாத்துகள் இல்லாத ஜாத்து "அதமே மஹஜ்" இருக்க முடியாததாகும். இவ்வாறு கூறினால் இப்போது அதே குப்ர் – இறை மறுப்பு ஏற்பட்டுவிடும்.

لَهُ الْأَسْمَآءُ الْحُسْنٰى

அவனுக்கே அழகிய திருநாமங்கள் உள்ளன. (20 : 8, 59 : 24)

அதாவது பரிபூரணமான பண்புப் பெயர்கள் உள்ளன.

وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

அவனே கேட்கிறவன். பார்க்கிறவன். (42 : 11, 40 : 20)

3. அஃப்ஆலி இஃதிபார் : அவனே பாஇலே ஹகீகி உண்மையில் செயல்பாடு உள்ளவனாக இருக்கிறான். அவன் உண்மையில் செயல்பாடு உள்ளவன் என்று ஏற்க மறுத்தால் மஜ்பூர் – "செயல்களற்றவன் – இயலாதவன்" என்ற கூறவேண்டி ஏற்படும். இதுவும் குப்ர் . இன்னும் முஹாலாக இருக்கிறது.

وَ يَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ

அல்லாஹ் தான் நாடியதை செய்கிறான். (14 : 27)

لَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ

அவனுக்கே தவிர வேறு யாருக்கும் சுயசக்தி என்பது இல்லை. (18 : 39)

4. ஆஸாரி இஃதிபார் : அவனே மஃபூதாக மாலிகே ஹகீகியாக இருக்கிறான். அதாவது வணக்கத்திற்கு உரியவனாக அனைத்துக்கும் உரிமையாளனாக இருக்கிறான். அவனே அனைத்தும் உரிமையாளனான எஜமான் என்று ஏற்க மறுத்தால் அவனை மம்லூக் – இன்னொருவனுக்கு உரிமையானவன் – அடிமை என்று ஏற்க வேண்டிவரும்.

وَ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ

உங்கள் எஜமான் இலாஹ் அவன் ஒருவன் மட்டும் தான். (2 : 163)

لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى

வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் இரண்டுக்கும் இடையில் உள்ளவையும் பூமிக்கு கீழே உள்ளவையும் அவனுக்கே சொந்தமானதாகும். *(20 : 6)*

3. நான்கு இஃதிபார்களின் விளக்கம்

இந்த இஃதிபார்களை எல்லோரும் அறிகிறார்கள். ஆனால் இஜ்மாலாக சுருக்கமாக அறிகிறார்கள். விரிவான விளக்கத்தின் அடிப்படையில் அல்லாஹ் மஃபூத் – வணக்கத்திற்குரியவன் என்பதைத் தவிர வேறு எதையும் அறிவதில்லை.

ஆய்ந்தறிந்த ஆய்வாளர்கள் முஹக்கிக்கள் ஞானிகள் இதன் விளக்கங்களை தப்சீலாக (விரிவாக) நன்கு அறிகிறார்கள்.

இதனால் தான் சாமானியர்களுக்கும் அறிஞர்களுக்கும் இடையில் வானம் பூமிக்கு மத்தியிலுள்ள வித்தியாசம் இருக்கிறது.

ஏனெனில் தக்லீதியான ஆழ்ந்து அறியாது முன்னோர்களை பின்பற்றுகின்ற ஈமானிலே மறைவான ஷிர்க்குகள் இணை வைத்தலின் வகைகள் இன்னும் ஒட்டிக் கொண்டு இருக்கின்றன. எனவே,

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْئًا

"அல்லாஹ்வை வணங்குங்கள் அவனோடு எதையும் இணையாக்காதீர்கள்" (4 : 36)

என்ற இறைக் கட்டளைக்கு முழுமையான முறையில் வழிப்பட இயலாமல் இருக்கிறார்கள்.

இதனால் பெரும் பெரும் அந்தஸ்துகள் – பதவிகளை அடையாது நிற்கிறார்கள். எனவேதான்,

قُلْ هَلْ يَسْتَوِى الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ؕ

நபியே! நீங்கள் கூறுங்கள். அறிகின்றவர்களும் அறியாதிருப்பவர்களும் சமமாவார்களா? (ஒருபோதும் ஆக முடியாது). **(39 : 9)**

உதாரணமாக,

மாலிகிய்யத் – உடைமையாளன் ஆகுதல் என்ற தன்மையை எடுத்துக் கொள்ளுங்கள்.

'முகல்லித்'தானவன் அல்லாஹ் ஒருவனே உண்மையில் அனைத்துக்கும் உடைமையாளன் – உரிமையாளன் என்று அறிகிறான். ஆனால் தன்னையும் மற்றவர்களையும் சில வஸ்துக்களுக்கு உரிமையாளனாக கருதுகிறான்.

தற்காலிகமான – மஜாஜான – முறையில் என்று அவன் விளங்கினாலும் தன்னையும் ஒரு மாலிக் என்று நம்புகிறான். இல்லையெனில் தன் சொத்துக்களை விட்டும் விலகவேண்டியது ஏற்படும் என்று நினைக்கிறான். அல்லாஹ்வும்,

هُوَ الَّذِىْ خَلَقَ لَكُمْ مَّا فِى الْاَرْضِ جَمِيْعًا

"அவனே உங்களுக்காக பூமியில் உள்ள அனைத்தையும் படைத்தவன்". (2 : 29) என்று கூறுகிறான்.

எனவே தன்னையும் பிறரையும் 'மாலிக்' உடைமையாளன் என்று கருதுகிறான்.

இன்னும் இதனுடைய உள்ளர்த்தங்களை உண்மை விளக்கங்களை அறியாதிருக்கிறான்.

இதே நிலைதான் **(அஃப்ஆல்)–செயல்களிலும்** இருக்கிறது. அதாவது

அல்லாஹ்வை (ஃபாஇல்) செயல்படுவனாகக் கருதுகிறான். தன்னையும் செயல்படுவனாகக் கருதுகிறான்.

அப்படியில்லை எனில் தன்னை மஜ்பூரே மஹ்ஜ் 'செயலற்றவன்' என்று கூற வேண்டி ஏற்படுமே என்ற எண்ணுகிறான். உண்மையில் அவன் செயலற்ற மஜ்பூரே மஹ்ஜ்–ம் அல்ல.

لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ

அவனுக்கு நன்மையாக வருவதும் அவன் சம்பாதித்ததே. (2 : 286)

அவனுக்கு தீமையாக வருவதும் அவன் சம்பாதித்ததே.

كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ رَهِيْنَةٌ

ஒவ்வொரு ஆத்மாவும் தான் சம்பாதித்தவைகளைக் கொண்டு பொறுப்புதாரியாக இருக்கிறது. (74 : 38)

ஒவ்வொரு ஆத்மாவும் அவைகள் சம்பாதித்தவைகளைக் கொண்டு பொறுப்பாளியாக இருக்கின்றன என்று அல்லாஹ் கூறுகிறான். ஆகவே வேறு வழியின்றி தன்னையும் செயல்பாடு உள்ளவனாகவே அறிகிறான்.

இன்னும் இதன் உண்மை விளக்கங்களை தெளிவுகளை அறியாமல் இருக்கிறான்.

இதே நிலைதான் **சிபாத்–தன்மைகள்** விஷயத்திலும் இருக்கின்றது. அல்லாஹ்வை பரிபூரண தன்மைகள் சிபாத்தே காமிலா உடையனாக ஒப்புக் கொள்கிறான். ஆனால் தன்னையும் அந்தத் தன்மைகளை உடையவனாகக் கருதி இணை வைக்கிறான். ஜீவிதம் – அறிவு – நாட்டம் – ஆற்றல் – பார்வை – கேள்வி – பேச்சு போன்ற தன்மைகள் அல்லாஹ்வுக்கு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு எனக்கு இல்லை என்றாலும் எனக்கும் குறைந்த அளவு இவை அனைத்தும் இருக்கிறது என்று எண்ணுகிறான். அதாவது மிஸ்லிய்யத் – முற்றிலும் ஒப்பாகுதல் என்ற முறையில் இல்லாவிட்டாலும் முஷாபஹத் (ஓரளவு ஒப்பாகுதல்) என்ற முறையில் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறான்.

அப்படியில்லை எனில் தான் முஅத்தலே மஹஜ் 'தன்மைகளேயற்றவனாக' ஆகிவிடுமே என்று எண்ணுகிறான்.

ஆனால் உண்மையில் அவன் எந்தத் தன்மைகளும் இல்லாத முஅத்தலே மஹஜ் ஆகவும் இல்லை. ஏனெனில்,

فَجَعَلْنٰهُ سَمِيْعًاۢ بَصِيْرًا

அவனை கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் நாம் ஆக்கினோம் (76 : 2) என்பது உண்மையான விஷயமாகும்.

எனவே வேறு வழியின்றி ஷிர்க்கே முஷாபஹத் செய்கிறான். இன்னும் இதன் உண்மை விளக்கங்களை – தெளிவுகளை அறியாமல் இருக்கிறான்.

இதே நிலைதான் **ஜாத்–உள்ளமை** விஷயத்திலும் செய்கிறான்.

அதாவது அல்லாஹ்வையும் நிலைபெற்றவனாக – தரிபட்டிருப்பவனாக அறிகிறான். தானும் இருப்பதாக விளங்குகிறான். அப்படியில்லை எனில் தன்னை 'அதமே மஹஜ்' முற்றிலும் இல்லாதவனாக கூற வேண்டி ஏற்படுமே என்று எண்ணுகிறான்.

உண்மையில் அவன் 'அதமே மஹஜ்' அல்ல. وَكُنْتُمْ اَمْوَاتًا فَاَحْيَاكُمْ ۚ

நீங்கள் மரணித்தவர்களாக (அதாவது அதமே இளாபியாக) இருந்தீர்கள். நாமே உங்களை உயிர்ப்பித்தோம். (2 : 28)
அதாவது தரிபாடாக்கினோம் என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுடன் தானும் இருப்பதாக விளங்கி மவ்ஜூதிய்யத்தில் இணை வைக்கிறான்.

இதன் உண்மை நிலையை அறியாதிருக்கிறான் – விளக்கங்களை புரியாதிருக்கிறான்.

هُوَ الَّذِىْ خَلَقَ لَكُمْ مَّا فِى الْاَرْضِ جَمِيْعًا ۗ

"*பூமியில் உள்ள அனைத்தையும் உங்களுக்காகவே படைத்தான்*" (2 : 29)

என்ற ஆயத்தின் மூலம் மனிதனும் உரிமையாளனாக – உடைமையாளனாக ஆகின்ற அதே நேரத்தில் மாலிக்கே ஹகீகி உண்மையான உடைமையாளனாக அல்லாஹ்வே இருக்கிறான்.

لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى

வானங்களிலே உள்ளவையும், பூமியிலே உள்ளவையும், அவற்றிற்கு மத்தியிலே உள்ளவையும், பூமிக்கு கீழே உள்ளவையும் அவனுக்கே சொந்தமானதாகும்.

இது எப்படி என்பதைத் தான் விளங்க வேண்டியிருக்கிறது.

كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ رَهِينَةٌ

"ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்தவைகளுக்கு தானே பொறுப்பாளியாக இருக்கிறான்" என்ற ஆயத்தின் மூலம் மனிதனின் செயல்படும் தன்மை உறுதியானாலும் 'ஃபாஇலே ஹகீகி' உண்மையில் செயல்படுபவன் அல்லாஹ்வாகவே இருக்கிறான்.

அல்லாஹ் தான் நாடியதை செய்கிறான். (14 : 27) وَيَفْعَلُ اللَّهُ مَا يَشَاءُ

அல்லாஹ்வைக் கொண்டே தவிர சக்தி எதுவுமில்லை. (18 : 39) لَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

"அவனை கேட்பவனாக பார்ப்பவனாக நாமே ஆக்கினோம்" என்பதின் மூலம் மனிதனுக்கும் தன்மைகள் – சிபாத்துகள் இருப்பது போல் தெரிந்தாலும் அவன் மட்டுமே சிபாத்துகளை உடையவனாக இருக்கிறான்.

அவனே கேட்பவனாகவும்,
பார்ப்பவனாகவும் இருக்கிறான். (42 : 11) وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ

அழகிய திருநாமங்கள் அவனுக்கே உரியது. (20 : 8) لَهُ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ

அதே போல, وَقَدْ خَلَقْتُكَ مِنْ قَبْلُ وَلَمْ تَكُ شَيْئًا

"இல்லாதிருந்த உங்களை நாமே உண்டாக்கினோம்" என்பதன் மூலம் தானும் இருப்பதாகத் தெரிந்தாலும் அவன் மட்டுமே இருக்கிறான் – அவன் மட்டுமே தரிபட்டுள்ளான்.

اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ

அல்லாஹ்வாகிறவன் அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் நித்திய ஜீவனாகவும், தரிபடுத்தக்கூடியவனாகவும் இருக்கிறான். (2 : 255)

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

அவனே ஆரம்பமானவனாகவும், முடிவானவனாகவும், வெளிரங்கமான வனாகவும், உள்ரங்கமானவனாகவும் இருக்கிறான். (57 : 3)

இவற்றின் விளக்கங்களைத் தான் நாம் அறிய வேண்டியிருக்கிறது.

மேற்கூறிய வசனங்களில் இருந்து மனிதனுடைய தாத்துக்கு உஜூது – சிபாத் – அப்ஆல் – ஆஸார் அனைத்தும் இருப்பதாக நாம் அறிந்தாலும் அனைத்தும் இழாபி (اضافى) யாகும் இவனுக்குச் சொந்தமில்லாததாகும்.

மனிதனுக்கு ஜாத் (உள்ளமை) இருப்பது போலவே அனைத்து வஸ்துக் களுக்கும் உள்ளமை (ஜாத்) இருக்கிறது.

اَللّٰهُ خَالِقُ كُلِّ شَىْءٍ وَّهُوَ عَلٰى كُلِّ شَىْءٍ وَّكِيْلٌ

அல்லாஹ்வே அனைத்து வஸ்துக்களையும் படைக்ககூடியவன். அவனே அனைத்து வஸ்துக்களுக்கும் பொறுப்பாளியாக இருக்கிறான். (39 : 62)

இங்கே இந்த விஷயம் தெளிவாகிறது.

இரண்டு உலகங்களின் ஜாத்தும் அது உண்மையில் இருப்பதுடன் அவை இழாபியாக – சுயமே இல்லாததாக இருக்கிறது.

ஆனாலும் இந்த அகிலங்களின் ஹகீகத் உண்மை நிலை என்ன ? இவைகள் வெளியானதன் ரகசியம் என்ன ? என்பதை அறிய வேண்டி இருக்கிறது. இந்த “படைப்பின் ரகசியத்தை” அறிவதிலே நாம் தவறிழைக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

எனினும் இறைவனின் சொல்லையும் திருத்தூதரின் சொல்லையும் வழிகாட்டியாக ஆக்கிக் கொண்டால் அங்கே தவறுவதற்கு வழியில்லை.

وَاللّٰهُ يَقُوْلُ الْحَقَّ وَهُوَ يَهْدِى السَّبِيْلَ

அல்லாஹ்வே உண்மை உரைக்கிறான். அவனே நேர்வழி காட்டுகிறான். (33 : 4)

4. ஹகீகத்தே ஆலம்-உலகின் உண்மை நிலை

சூபியாக்களின் இஸ்திலாஹ் – பழக்க பாஷைப்படி உலகின் ஹகீகத் உண்மை நிலை 'அஃயானே ஸாபிதா' அல்லது 'சுவரே இல்மிய்யா' எனப்படும். அதாவது அல்லாஹ்வின் இல்ம் ஞானத்திலே என்றென்றும் தரிபட்டிருந்த தோற்றங்களாகும். கிதாபுல்லாஹ்வின் பாஷையில் அதற்குப் பெயர் 'மஃலூமாத்தே இலாஹிய்யா'வாகும்.

وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

அவன் ஒவ்வொரு வஸ்துவையும் அறிந்தவனாக இருக்கிறான். (57 : 3)

وَهُوَ الْخَلَّاقُ الْعَلِيمُ

அவனே மிகச் சிறந்த படைப்பாளனும் அறிந்தவனுமாக இருக்கிறான். (15 : 86, 36, 81)

وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيمٌ

அவனே ஒவ்வொரு சிருஷ்டியையும் அறிந்தவனாக இருக்கிறான். (36 : 79)

எச்சரிக்கை! ஒரு சிலர் உலகின் ஹகீகத்தும் அல்லாஹ்வின் ஹகீகத்தும் ஜாத் இன்னும் மாஹியத் அடிப்படையில் ஒன்றுதான் என்று கூறுகிறார்கள். அதாவது அல்லாஹ்வின் ஜாத் எதுவோ அதுவே சிருஷ்டிகளின் ஜாத் என்று கூறுகிறார்கள். இது மிகப் பெரும் சருகுதலும் – வழிகேடுமாகும்.

ஆம்! ஜுஹூருடைய அடிப்படையில் அல்லாஹ்வின் உஜூதும் சிருஷ்டி களின் உஜூதும் ஒன்று என்று கூறுவார்களானால் அது சரியானதே. அதாவது ஹக்குடைய உஜூது தான் சிருஷ்டிகளுக்கும் உஜூதாக இருக்கிறது. இதுவே முஹக்கிக்களின், இறை ஞானிகளின் கருத்துமாகும்.

மாறாக ஜாத்திலும் இரண்டும் ஒன்றுதான். அதாவது ஹக்குடைய ஜாத் எதுவோ அதுவே சிருஷ்டிகளின் ஜாத் என்று கூறினால் அது மிகப் பெரும் குற்றமாகும். ஏனெனில் ஹக் தஆலாவின் ஹகீகத் உஜூதே மஹஜ் ஆகும். சிருஷ்டிகளின் ஹகீகத் அஃயானே ஸாபிதா இன்னும் அதமே இழாபியாகும்.

ஹக் தஆலாவோ தன் சுய உஜூதைக் கொண்டு நிலைத்திருப்பவன். சிருஷ்டியோ ஹக்கின் உஜூதின் பக்கம் தேவையானதாயிருக்கிறது. இரண்டும் எப்படி ஒன்றாக முடியும்?

سُبْحَانَ اللَّهِ عَمَّا يَصِفُونَ

இவர்கள் வர்ணிப்பதை விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன். (37 : 159)

இப்போது இங்கே கேள்வி என்னவென்றால் அல்லாஹ்வின் இல்மில் இருந்த தோற்றங்கள் எப்படி வெளியானது ? இதுதான் ஒரு மிகப் பெரும் செய்தியாக இறை ஞானப் பொக்கிஷமாக இருக்கிறது. இறைவனின் பாடங்களை அறிய உண்மையான தேட்டமுள்ளவர்கள் காமிலான–முஹக்கிகான – ஷைகிடம் சென்று குர்ஆன் ஹதீஸ் உடைய அடிப்படையில் எந்த (தஃவீல்) மாற்றுக் கருத்துக்கும் இடமில்லாமல் அறிந்து கொள்வது கடமையாக இருக்கிறது. ஏனெனில் பெரும்பாலானவர்களுக்கு இந்த இடத்தில்தான் சருகுதல் ஏற்பட்டுள்ளது.

இந்த சுருக்கமான கிதாபிலே நாம் குர்ஆன் ஹதீஸுடைய அடிப்படையில் அதை விளக்கினாலும் விரிவான – முழுமையான விளக்கங்களை ஷைகிடத்தில்தான் பெற முடியுமேயன்றி நூல்கள் வாயிலாக அறிய முடியாது.

ஏனெனில் இது ஒரு நுட்பமான விஷயமாகும். சிருஷ்டிகளின் அசல் ‘மஃலூமாத்தே இலாஹிய்யா’ ‘அதமே இழாபி’ என்றால் அது எப்படி வெளிப்பட்டது ? எப்படி மவ்ஜூதானது ? சிருஷ்டிகள் மவ்ஜூதாக இல்லை என்றால் நபிமார்கள் யாருக்கு வந்தார்கள் ? வேதங்கள் யாருக்கு இறக்கப்பட்டன ?

هُوَالَّذِىٓ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَ دِيْنِ الْحَقِّ
لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ وَلَوْكَرِهَ الْمُشْرِكُوْنَ

அவன்தான் நேர்வழி இன்னும் சத்திய மார்க்கத்தைக் கொண்டு தன் ரசூலை அனுப்பி வைத்தான். அந்த மார்க்கம் எல்லா மார்க்கங்களைவிட மிகைக்க வேண்டும் என்பதற்காக அனுப்பி வைத்தான். இணை வைப்பவர்கள் அதை வெறுத்தாலும் சரியே! என்று இறைவன் கூறுகிறான். (61 : 9)

சிருஷ்டிகள் வெளியாகவே இல்லை என்று சொன்னால் அப்போது இருப்பதெல்லாம் அல்லாஹ் தான் என்று கூற வேண்டிவரும். நவூதுபில்லாஹ்! இப்படி ஏற்பட்டால் இன்கிலாபே ஹகீகத். ஒரு வஸ்து இன்னொரு வஸ்துவாக மாறுதல் ஏற்பட்டு விடும். சிருஷ்டிகள் ஹக்காகிவிடும். இது முஹாலாகவும் குப்ராகவும் இருக்கிறது.

اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنٰكُمْ عَبَثًا وَّ اَنَّكُمْ اِلَيْنَا لَا تُرْجَعُوْنَ

உங்களை நாம் வீணாகப் படைத்திருக்கிறோம் என்றும் நீங்கள் என் பக்கம் திருப்பப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா? (23 : 115)

ஆகவே இங்கே சிருஷ்டிகள் மஃதூமாக இருக்கும் அதே நேரத்தில் மவ்ஜூதாகவும் இருப்பது எப்படி என்ற விஷயத்தை தெளிவாக விளங்கியாக வேண்டும்.

وَمَا خَلَقْنَا السَّمَآءَ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا بَاطِلًا

நாம் வானம் பூமி இன்னும் எதுவெல்லாம் அதற்கிடையில் இருக்கின்றதோ அவற்றை வீணாகப் படைக்கவில்லை. (38 : 27)

அதே நேரத்தில் சிருஷ்டிகளின் வெளிப்பாட்டினால் அல்லாஹ்வுடைய உஜூதில் எந்த மாற்றமும் ஏற்படவும் இல்லை.

اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ شَهِيْدٌ

நிச்சயமாக அனைத்து வஸ்துக்களிலும் அல்லாஹ்வே பிரசன்னமாக (மவ்ஜூதாக) இருக்கிறான். (22 : 17)

ஹக் தஆலா தன் உஜூதைக் கொண்டு தான் மவ்ஜூதாக இருப்பது போல் சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் உஜூதைக் கொண்டே மவ்ஜூதாக இருக்கின்றன.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

அல்லாஹ் வானம் பூமிகளின் நூராக இருக்கிறான். (24 : 35)

அதாவது தானும் வெளிப்பட்டு பிறவற்றையும் வெளிப்படுத்துபவனாக இருக்கிறான்.

சிருஷ்டிகளாகிய அந்த அதமே இழாபி உஜூதில் காட்சியளிப்பதினால் அந்த மஃதூம் மவ்ஜூதாகி விடவும் இல்லை. மவ்ஜூது மஃதூமாகி விடவும் இல்லை.

وَهُوَ اللّٰهُ فِى السَّمٰوٰتِ وَفِى الْاَرْضِ

அவனே வானத்திலும் இருக்கிறான் பூமியிலும் இருக்கிறான். (6 : 3)

ஆக இந்த எல்லா விஷயங்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் 'சிர்ரே ஜுஹூர்' (படைப்பின் ரகசியத்தை) நாம் அறிய முயல வேண்டும். அப்போதுதான் உண்மை சற்றும் பிரளாமல் சிந்தனையில் பதிய முடியும். சிர்ரே ஜுஹூர் பற்றி முஹக்கிக்களான சூபியாக்கள் தங்கள் பழக்க பாஷையில் சுருக்கமாக இப்படிக் கூறுகிறார்கள். "அனைத்து சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் நப்ஸே ரஹ்மானியின் தஜல்லியால் தான் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அதாவது அனைத்து சிருஷ்டிகளின் தோற்றங்களிலும் அவனே வெளியாகி இருக்கிறான். மஃதூமே இழாபியாக இருந்த அனைத்தையும் தானே வெளியாக்கி மவ்ஜூதே இழாபியாக காட்டிக் கொண்டே இருக்கிறான். இப்படி அவன் வெளியாவதால் அவனுடைய தன்ஜீஹிலே (பரிசுத்த ஜாத்தின் தன்மையிலே) எந்த வேறுபாடும் ஏற்படுவதில்லை".

இந்த சுருக்கத்துக்கு பெரிய விளக்கமெல்லாம் எழுதியிருக்கிறார்கள். விரும்பியவர்கள் அவர்களின் புத்தகங்களைக் காணலாம்.

5. குர்ஆனின் விளக்கம்

குர்ஆன்படி "சிருஷ்டிகளின் மூலம் இறைவனின் இல்ம் ஞானம்" என்று அறிந்தோம். 'மஃலூமாத்தே இலாஹிய்யா' தான் சிருஷ்டிகளின் அசல் ஆகும்.

மேலும் அந்த சிருஷ்டிகள் முற்றிலும் தேவையுடையதாகவே இருக்கிறது. முஹ்தாஜ் ஆக பகீராக இருக்கிறது என்றும் அறிகிறோம்.

يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ أَنتُمُ ٱلْفُقَرَآءُ إِلَى ٱللَّهِ ۖ وَٱللَّهُ هُوَ ٱلْغَنِىُّ ٱلْحَمِيدُ

மக்களே நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் தேவையுடையவர்கள் அல்லாஹ்வோ தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும் இருக்கிறான். (35 : 15)

'உஜூது இல்லாமை'–'அதம்' என்பதைவிட மிகப் பெரிய ஃபக்ர் (இல்லாமை) எதுவுமில்லை. இந்த அதம் உஜூதின் பக்கம் தேவையாகிறது. எப்போது உஜூது கொடுக்கப்படுகிறதோ அது மக்லூக் என்ற பெயரைப் பெறுகிறது.

அல்லாஹ் ஒரு பொருளை எவ்வாறு படைக்கிறான்?

إِنَّمَا قَوْلُنَا لِشَىْءٍ إِذَآ أَرَدْنَٰهُ أَن نَّقُولَ لَهُۥ كُن فَيَكُونُ

ஒரு பொருளை நாம் படைக்க நாடினால் அந்தப் பொருளைப் பார்த்து நாம் சொல்வதெல்லாம் 'நீ ஆகுக' என்றுதான். உடன் அது ஆகிவிடும். (16 : 40)

இங்கு பல விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். ஒரு வஸ்து இருக்கிறது. அதற்கு மஃலூம் என்று சொல்லப்படும். அதைப் படைப்பவன் இருக்கிறான். அவன்தான் நாடுகிறான். படைப்பாளன் அதைப் பார்த்து 'நீ ஆகு' என்கிறான். அது உண்டாகி விடுகிறது.

அதாவது இல்ம் ஞானத்திலே இருந்த தோற்றம் கட்டளை பிறந்தவுடன் வெளியே மக்லூக்காக காட்சியளிக்க ஆரம்பித்தது.

ஆனால், எப்படி உண்டானது? எந்த வஸ்துவால் உண்டானது? என்ற கேள்விகள் எழுகின்றன!

இந்த இடத்தில் 'குன்' ஆகு என்பது இல்லாததை உண்டாக்குவதற்கு, வெளிப்படுத்துவதற்கான கட்டளை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

"உலமாயே ளாஹிர்" எனப்படும் வெளிரங்க உலமாக்களோ 'அல்லாஹ்வின் குத்ரத்தால் (வல்லமையால்) உண்டானது' என்று மட்டும் சொல்லி விடுகிறார்கள்.

ஆனால் இது மிக நுட்பமானதொரு விஷயமாகும்! உண்மையான தேட்டம் – ஆர்வம் உடையவர்கள் அல்லாது மற்றவர் இதை விளங்க முடியாது.

இந்த ஞானங்களை அறிந்தவரும் உள்ளனரா? என்று கேட்கப்படலாம். ஏன் இல்லை?

ஸஹாபாக்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தீவிரமாக ஆழ்ந்தறிந்து கொள்பவர்களாக இருந்தார்கள். நபியிடத்திலே கேட்டு விளங்கிக் கொண்டார்கள். தேட்டம் உடையவர்களுக்கு கற்றும் கொடுத்தார்கள். இன்று வரையில் இந்த ஞானம் மறைவாக மாறி மாறி வந்து கொண்டுதான் இருக்கிறது.

இன்னொரு ஆயத்தை கவனிப்போம்.

مَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَآ اِلَّا بِالْحَقِّ وَاَجَلٍ مُّسَمًّى ط

நாம் வானம் பூமியில் உள்ள இன்னும் இரண்டுக்கும் இடையில் உள்ள எந்தப் பொருளையும் ஹக்குடனே தவிர படைக்கவில்லை. இன்னும் ஒரு குறிப்பிட்ட கால தவணையுடன் தான் படைத்தோம். (46 : 2)

இங்கே கவனித்தால் ஒரு முக்கிய விஷயம் விளங்குகிறது. உலகம் ஹக்குடன் சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால், உலகம் ஹக்காக ஆகிவிடவில்லை. அப்படியிருக்குமானால் الا الحق உலகம் ஹக்கேயன்றி வேறில்லை என்று ஆயத் வந்திருக்கும்.

அதே சமயம் உலகம் ஹக்கை விட்டும் முற்றிலும் பிரிந்ததாகவும் இல்லை! அப்படியிருக்குமானால் بغير الحقّ ஹக் இல்லாமல் படைத்தோம் என்று ஆயத் வந்திருக்கும்!

ஆனால் இங்கேயோ الا بالحق ஹக்குடனே படைத்துள்ளதாக வருகிறது. அதாவது ஹக்கும் இருக்கிறது. கல்கும் இருக்கிறது என்று தெரிய வருகிறது.

வெளிரங்க அறிஞர்களோ 'பில் ஹக்' என்றால் பில் ஹிக்மத். அதாவது ஒரு நோக்கத்திற்காகவே படைத்திருக்கிறோம் என்று பொருள் கூறுகின்றனர். இப்போது அதே கேள்விவரும்! அந்த நோக்கம் தான் என்ன?

இங்கு நாம் எந்த தஃவீல் – மாற்றுக் கருத்தும் கூறாமல் நேரடியாகப் பொருள் கூறுகிறோம். இன்னும் குர்ஆனுடைய கொள்கைகளுக்குப் பொருத்தமாகவும் கூறுகிறோம்.

இங்கு நாம் இன்னும் நன்கு விளங்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. ஹக் என்றால் என்ன? சிருஷ்டிகளுடன் எந்த விதத்தில் அவன் இருக்கிறான்? சிருஷ்டி ஹக்காகவில்லை. ஹக்கும் சிருஷ்டியாக மாறவில்லை. ஆனால் இரண்டும் ஒன்றை ஒன்று பிரிந்து இல்லை! இது எப்படி?

இதை அறிந்து கொள்ள வழி என்ன?

இறைவன் கட்டளையிடுகிறான்.

اَلرَّحْمٰنُ فَسْئَلْ بِهٖ خَبِيْرًا

ரஹ்மான் (ஆகிய அல்லாஹ்வைப்) பற்றி அவனை அறிந்த ஞானிகளிடம் சென்று கேளுங்கள்! (25 : 59)

எப்போது அல்லாஹ்வைப்பற்றி தெரிந்து கொள்வீர்களோ அவன் எப்படி சிருஷ்டிகளுடன் இருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்வீர்கள்! சிருஷ்டிகள் எப்படி படைக்கப்பட்டன ? என்பதையும் அறிந்து கொள்வீர்கள்.

ஸஹாபா பெருமக்களில் யார் யார் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இதைப் பற்றிக் கேட்டார்களோ அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களிடம் யார் யார் கேட்டார்களோ அவர்களும் அறிந்து கொண்டார்கள். இப்படித்தான் இந்த இல்ம் தொடர்ந்து வருகிறது. இனியும் இப்படித்தான் தொடரும்.

وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللهِ تَبْدِيلًا

அல்லாஹ்வின் வழிமுறை ஒருபோதும் மாறுவதாக நீங்கள் பெற்றுக் கொள்ளமாட்டீர்கள். (33 : 62)

இன்னும் பல ஹதீஸ்களில் நபி (ஸல்) அவர்களிடம் ஸஹாபாக்கள் அல்லாஹ்வைப் பற்றி கேட்டதாக வருகிறது. ஒரு ஸஹாபி பெருமானாரிடம் கேட்கிறார்கள் :

اين كان ربنا قبل ان يخلق الخلق

சிருஷ்டிகளைப் படைக்கும் முன் நம் இறைவன் எங்கிருந்தான் ?
நபி (ஸல்) பதில் கூறுகிறார்கள் :

في عماء ما فوقه هواء وما تحته هواء

“அமா” எனும் நுட்பமான மேகத்தில் இருந்தான். அதற்கு மேலும் காற்று இல்லை. அதற்கு கீழும் காற்று இல்லை.

இன்னொரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் :

كان الله ولم يكن معه شيء

அல்லாஹ் மட்டுமே இருந்தான். அவனுடன் இன்னொரு பொருள் எதுவும் இருக்கவில்லை.

இன்னொரு ஹதீஸில் நபி (ஸல்) இறைவனை முன்னோக்கி இவ்வாறு கூறுகிறார்கள் :

اللهم انت نور السموات والارض ومن فيهن ولك الحمد، اللهم
انت قيم السموات والارض ومن فيهن ولك الحمد، اللهم انت
ملك السموات والارض ومن فيهن ولك الحمد

யா அல்லாஹ்! நீயே வானங்கள் பூமி இன்னும் அதிலுள்ள அனைத்து வஸ்துக்களின் நூராக இருக்கிறாய். உனக்கே சர்வ புகழும். யா அல்லாஹ்! நீயே வானங்கள், பூமி இன்னும் அதிலுள்ள அனைத்து வஸ்துக்களையும் (உஜூதைக் கொடுத்து) நிலை பெறச் செய்யக்கூடியவனாக இருக்கிறாய். உனக்கே சர்வ புகழும். இறைவா! நீயே வானங்கள், பூமி அவற்றிலுள்ள அனைத்து வஸ்துக் களுக்கும் எஜமானாக இருக்கிறாய். உனக்கே சர்வ புகழும்.

மேற்கூறப்பட்ட ஆயத் ஹதீஸ்களில் இருந்து "அல்லாஹ்வைப்பற்றி தெரிந்த வர்களிடம் கேட்க வேண்டும். அதற்குரிய பதிலும் உண்டு" என்று நமக்கு தெரிய வருகிறது.

இன்னும் இறை ஞானப் பாடங்களில் சில மூடலான பரிபாஷை – இஸ்திலாஹ் – சூசக வார்த்தைகள் புழங்கப்படுவதற்கான ஆதாரமும் கிடைக்கிறது. ஏனெனில் 'அமாஃ' என்பது என்ன? என்று இன்று வரை வெளிரங்க அறிஞர்களுக்கு விளங்காததாகவே இருக்கிறது! அதாவது மேலும் கீழும் காற்றே இல்லாத ஒரு நுட்பமான மேகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலையைச் சுட்டிக் காட்டும் இஷாரா வான (சூசகமான) வார்த்தையாகும்.

அதே போல் மேற்கூறிய ஹதீஸில் இருந்து வானங்கள் பூமி அனைத்தும் அல்லாஹ்வின் 'நூர்' எனும் சிபத்திலிருந்துதான் வந்தன. ஆனால் அவைகள் 'நூர்' ஆக மாறவில்லை என்பதும் தெரிகிறது.

இன்னொரு ஹதீஸ் இவ்வாறு வருகிறது :

انا من نور الله والخلق كلّهم من نورى (رواه طبرانى)

நான் அல்லாஹ்வின் நூரிலிருந்தும் உள்ளவனாவேன். சிருஷ்டிகள் அனைத்தும் எனது நூரிலிருந்தும் உள்ளவையே.

இதே கருத்துடைய வேறு பல ஸஹீஹான ஹதீஸ்களும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒரு ஹதீஸை கவனித்தாலே நாம் சிருஷ்டிகளின் படைப்பை நன்கு அறியலாம்!

'நூர்' என்பதற்கு இரண்டு பொருள்கள் உள்ளன. அதாவது அது சிபத்துடைய அர்த்தத்திலும் ஜாத்துடைய அர்த்தத்திலும் அந்தந்த இடத்திற்கு தகுந்தபடி பொருள் கொள்ளப்படுகிறது.

"நான் அல்லாஹ்வின் நூரிலிருந்தும் உள்ளவன்" என்ற ஹதீஸில் சிபத்தையும், "அல்லாஹ் வானம் பூமிகளின் நூராக இருக்கிறான்" என்ற ஆயத்தில் ஜாத்தையும் நாடப்படுகிறது.

இதற்கு மேலும் யாரும் இந்த ஆயத்துகள் ஹதீஸ்கள் அனைத்தையும் தஃவீல் செய்து மாற்றுக் கருத்துக் கூறிக் கொண்டிருந்தால் நாம் என்ன செய்ய முடியும்! தேர்ச்சி பெற்ற முஹக்கிக்கள் – ஆய்வாளர்கள் – ஞானிகளின் வழிமுறை தஃவீல் செய்வது அல்ல. விளங்க முடியாவிட்டால் தெரிந்தவர்களிடம் போய்

கேட்டுக் கொள்ளுங்கள். எச்சரிக்கை! இவ்வாறு தஃவீல் செய்து கொண்டு "அறிந்தவர்கள் யாரும் இல்லை" என்று மறுத்துவிட வேண்டாம். ஏனெனில் அறிந்தவர்களிடம் போய் கேளுங்கள் என்ற ஆயத்தையே மறுத்தது போலாகிவிடும்.

ஆக இந்த அனைத்துக் கருத்துக்களாலும் நமக்கு தெளிவாவது என்னவெனில், சிருஷ்டிகளின் ஹகீகத் அசல் 'மஃலூமிய்யத்' ஆகும். உஜூதைப் பொருத்தவரையில் சிருஷ்டியின் அசல் 'லுல்மத்' எனும் இருள் ஆகும். லுள்மதே மஹஜ் அல்ல. மாறாக அந்த லுல்மத்திற்கு நூரை ஏற்றுக் கொள்ளும் தகுதி இருந்தது. அதாவது இல்மிலிருந்த சிருஷ்டிகள் அதமாக உஜூது இல்லாமல் இருக்கின்றன. ஆனால் உஜூதை ஏற்றுக் கொள்ளும் தன்மை அவைகளில் இருந்தது. அல்லாஹ் தன் உஜூதைக் கொடுத்தபோது அவைகள் வெளியில் காட்சியளித்தன.

பாதினில் தான் இருப்பதற்கு அல்லாஹ்வின் இல்மின் பக்கம் தேவையானதாக இருந்தன. லாஹிரில் தான் இருப்பதற்கு அல்லாஹ்வின் உஜூதின் பக்கம் தேவையானதாக இருக்கின்றன!

இல்மிலே இருப்பதற்கு 'சுபூத்' என்றும் வெளியிலே இருப்பதற்கு உஜூத் என்றும் கூறப்படும். உஜூதைத்தான் 'நூர்' எனப்படுகிறது.

பாதினிலே ஆலிமுடைய இல்ம் இல்லாமல் மஃலூம்கள் சுபூத் ஆக முடியாது. அதே போல் லாஹிரில் நூர் எனும் உஜூது இல்லாமல் சிருஷ்டிகள் ஜூஹூராக முடியாது–வெளிப்பட முடியாது. மஃலூமாக இருந்தவைகள் உஜூதைப் பெற்றவுடன் மக்லூக்காக ஆகிவிட்டன. அதே நேரத்தில் அல்லாஹ்வுடைய இல்மிலேயும் இருக்கின்றன. இல்மை விட்டும் மறைந்து விடவும் இல்லை.

இப்போது இங்கு ஆழ்ந்து கவனிக்கவேண்டும். இல்மிலிருந்த மஃலூம் இப்போது வெளியே தெரிகிறதே. அது இப்போது எங்கே இருக்கிறது? அதில் என்னென்ன தன்மைகள் இருக்கின்றன? அதில் அந்த மஃலூமிற்கு சொந்தமானவை என்னென்ன? அதற்கு சொந்தமில்லாதவை என்ன?

மஃலூமாக இருந்தது இப்போது மக்லூக்காகிவிட்டது. அதனுடைய ஜாத்திலே இப்போது எத்தனையோ வஸ்துக்கள் இருக்கின்றன. எத்தனையோ வஸ்துக்களைக் காட்டும் கண்ணாடியாக அது விளங்குகிறது.

ஆம்! ஒன்று அதிலே 'மில்கிய்யத்'தும் இருக்கிறது. பல வஸ்துக்களுக்கு உரிமையாளனாக இருக்கிறது! இரண்டாவதாக 'பிஃலிய்யத்'தும் இருக்கிறது. பல வேலைகளை செய்யும் சக்தியும் அதிலே இருக்கிறது. மூன்றாவதாக 'வஸ்பிய்யத்'தும் இருக்கிறது. அதாவது இறைவனின் தன்மைகளில் பல அதிலே காட்சியளிக்கிறது. உயிருடன் வாழ்கிறது. அறிவு இருக்கிறது. நாட்டம் இருக்கிறது. ஆற்றல் இருக்கிறது. பார்க்கிறது, கேட்கிறது, பேசுகிறது. நான்காவதாக 'மவ்ஜூதிய்யத்'தும், 'அனிய்யத்'தும் இருக்கிறது. அதாவது உள்ளமை இருக்கிறது. தான் இருப்பதாக உணர்வும் இருக்கிறது.

இந்த தன்மைகள் எல்லாம் இதற்கு எங்கிருந்து வந்தன? மஃலூம் அது இல்மிலே மஃலூமாக இருந்தவரை இவற்றில் ஒன்றுகூட அதில் இல்லையே! ஆம்! இந்தத் தன்மைகள் எல்லாம் அவைகளுக்குச் சொந்தமில்லை. வேறு யாருக்கோ சொந்தமான தன்மைகளை அவை இரவலாகப் பெற்றிருக்கின்றன என்று தெரிகிறது.

அவைகளுக்கே சொந்தமான தன்மைகளாக இருக்குமானால் அது அஜலாக என்றென்றும் இருந்திருக்க வேண்டும். அதிலே எந்த மாற்றங்களும் (துபத்துல் தகய்யுர்) ஏற்பட்டிருக்கக் கூடாது. இன்னும் அது புதிதாகத் தோன்றியிருக்கவும் கூடாது. ஆனால் அப்படி இல்லையே. இந்த தன்மைகள் இடையில் தானே வந்தன.

இப்போது நன்றாக விளங்க முடிகிறது. இவை அனைத்தும் அல்லாஹ்விட மிருந்து இரவலாக வாங்கப்பட்டவைதான்!

اَللّٰهُ خَالِقُ كُلِّ شَىْءٍ وَّهُوَ عَلٰى كُلِّ شَىْءٍ وَّكِيْلٌ

"அல்லாஹ் தான் ஒவ்வொரு வஸ்துக்களையும் படைக்கிறான். ஒவ்வொரு வஸ்துவின் வேலைகளையும் செய்யும் வகீலாகவும் அவனே இருக் கிறான். (39 : 62)

இந்த இஃதிபாராத்துகள் தன்மைகள் அவன் ஒருவனிடம் தான் சுயமானதாகவும் பரிபூரணமானதாகவும் இருக்கிறது.

وَمَنْ اَصْدَقُ مِنَ اللّٰهِ قِيْلًا

அவனைவிட உண்மை உரைப்பவன் வேறு யார்? (4 : 122)

6. எப்படிக் கொடுத்தான்?

இப்போது இன்னொரு கேள்வி எழுகிறது.

அவனுக்கு சொந்தமான இவற்றை தன் மஃலூமுக்கு எப்படி வழங்கினான்? ஏனெனில் அவன் ரஹ்மானாக இருக்கிறான். பேரருளாளன் அவன். அந்த ரஹ்மானிய்யத்தின் தன்மையால் தான் இவற்றை வழங்கினான். என்னென்ன வெல்லாம் கொடுத்தான்? பூமியில் உள்ளவை யாவும் உங்களுக்கே படைத்தேன் என்று கூறி 'மில்கிய்யத்தையும்' வழங்கினான். உங்களையும் உங்கள் செயல்களை யும் படைத்தேன் என்று கூறி செயல்களையும் வழங்கினான். கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் ஆக்கினேன் என்று கூறி 'சிபாத்'களையும் வழங்கினான். மய்யித்தாக அதமே இழாபியாக இருந்த உங்களை உஜூதை கொடுத்து ஹயாத் தாக்கினேன் என்று கூறி உஜூதையும் வழங்கினான்.

மாஷா அல்லாஹ்! என்ன ஆச்சரியம். முழுக்க முழுக்க அவனுக்குச் சொந்தமான சாமான்களை வைத்துக் கொண்டல்லவா இந்த மஃலூம் உலவுகிறது. உடலைப் பாருங்கள். அதுவும் அவன் கொடுத்தது.

هُوَ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ تُرَابٍ ثُمَّ مِنْ نُّطْفَةٍ

மண்ணிலிருந்தும் பின்னர் விந்திலிருந்தும் உங்களைப் படைத்தான். (40 : 67)

உள்ளத்தைப் பாருங்கள். அதுவும் அவன் கொடுத்தது.

وَجَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْئِدَةَ

உங்களுக்கு காதுகளையும் கண்களையும் உள்ளத்தையும் அவனே ஆக்கினான். (16 : 78)

உயிரைப் பாருங்கள். அதுவும் அவன் கொடுத்தது.

وَنَفَخْتُ فِيْهِ مِنْ رُّوْحِىْ

எனது ரூஹை மனிதனில் நான் ஊதினேன். (15 : 29, 38, 72)

பாருங்கள்! பெயர் இந்த மனிதனுக்கு. ஆனால் எல்லா சாமான்களும் அவனுடையது. சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி.

இங்கே நன்றாக கவனிக்க வேண்டும். இந்த எல்லாவற்றையும் கொடுத்து விட்டு அவன் வேறு எங்கும் உட்கார்ந்து கொண்டானா? இல்லை! இல்லவே இல்லை!

وَهُوَ مَعَكُمْ اَيْنَ مَا كُنْتُمْ ط

நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடனே இருக்கிறான். (57 : 4)

சரி இவற்றையெல்லாம் கோடானு கோடி சிருஷ்டிகளுக்குக் கொடுத்ததினால் அவனிடத்தில் குறைந்து விடாதா? ஒருபோதும் இல்லை!

تَبٰرَكَ الَّذِىْ بِيَدِهِ الْمُلْكُ وَهُوَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرُ

எவனுடைய கையில் தான் அனைத்து அதிகாரங்களும் உரிமைகளும் இருக்கின்றனவோ அவன் மிக உயர்ந்தவன். அவனே அனைத்து வஸ்துக்களின் மீதும் சக்தி பெற்றவன். (67 : 1)

சூரியனைப் பார்க்கவில்லையா? அதுவே அல்லாஹ்வின் நூரிலிருந்து அருளைப் பெரும் ஒரு படைப்பு. அது எப்படி முழு உலகையும் ஒளிமயமாக்குகிறது. பின்னரும் அதனுடைய ஒளியில் சிறு குறைவும் ஏற்படவில்லை!

الآن كما كان அன்றிருந்தது போன்றே இன்றும் இருக்கிறது.

இப்போது உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழலாம். கடைசியில் அந்த மஃலூம் என்னவானது? என்ன அதுவும் அல்லாஹ் ஆகிவிட்டதா? அஸ்தஃபிருல்லாஹ்! அப்படி ஒருபோதும் ஆக முடியாது. சூரிய ஒளியால் ஒவ்வொரு அணுவும் வெளிச்சமடைகிறது! இவையெல்லாம் சூரியனாக மாறிவிட்டனவா? இல்லை! சூரியனைக் காட்டக்கூடியதாக ஆகிவிட்டன! சூரியனை பிரதிபலிக்கக் கூடியதாக ஆகி விட்டன! அந்த ஒளி அவற்றுக்குச் சொந்தமில்லை. விஷயம் இதுதான்!

அவன் தன்னுடைய ஜாத்–சிபாத்–அப்ஆல்–ஆஸாருடைய தஜல்லியினால் சுடரினால் மஃலூமுடைய ஜாத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான்! மஃலூமில் இருக்கும்

உஜூது அவனுடைய உஜூதுடைய சுடர்தான்!

இதனுடைய சிபாத் அவனுடைய சிபாத்களின் சுடர்தான்!

இதனுடைய அப்ஆல் அவனுடைய அப்ஆல்களின் சுடர்தான்!

இதனுடைய ஆஸார் அவனுடைய ஆஸார்களின் சுடர்தான்!

அதாவது மஃலூமுடைய ஜாத்தின் தோற்றங்களிலே நூரின் வாயிலாக மஃலூமுடைய இக்திழாவுக்கு தகுந்தபடி அவனே முதஜல்லியாக முதமஸ்ஸிலாக காட்சியளிக்கிறான்! ஆனால் அவ்வாறு காட்சியளிப்பதனால் மஃலூமுடைய ஜாத் ஹக்குடைய ஜாத்தாகவோ, ஹக்குடைய ஜாத் மஃலூமுடைய ஜாத்தாகவோ மாறுவதில்லை. அந்த ஹக்குடைய ஜாத் இல்லாமல் மஃலூமுடைய ஜாத் வெளியாகுதல் சாத்தியமற்றதாக முஹாலாக இருக்கிறது.

இங்கே தன்ஜீஹ் தஷ்பீஹ்வுடைய மஸ்அலாவையும் கவனிக்க வேண்டும்.

மஃலூமுடைய இக்திழாவுக்கு தகுந்தபடி அந்த மஃலூமிலே ஜாத்தே ஹக்காகிறது தமஸ்ஸுல் ஆனது–வெளியானது. அதையே தஷ்பீஹ் என்கிறோம். ஆனால் இப்படி தஷ்பீஹில் காட்சியளிப்பதனால் அவனுடைய, அவன் ஜாத்துடைய தன்ஜீஹிய்யத்தில் (பரிசுத்த தன்மையில்) எந்த மாற்றமும் வருவதில்லை.

தன்ஜீஹ் அய்னே தஷ்பீஹ் – தஷ்பீஹ் அய்னே தன்ஜீஹ். அதாவது அவன் முனஜ்ஜஹ் ஆக இருக்கும் அதே நேரத்தில் முஷப்பஹாக இருக்கிறான். முஷப்பஹாக இருக்கும் அதே நேரத்தில் முனஜ்ஜஹாக இருக்கிறான்!

ஏனென்றால் முஷப்பஹ் பிஹி அதாவது மஃலூமுடைய இக்திழாவை – இஃதிபாராத்துகளை அவன் வெளிப்படுத்துகிறானேயன்றி அவன் மஃலூமாக ஆகிவிடவில்லை. சிபத்தே தஷ்பீஹ் என்பது அவன் மஃலூமை காட்டுகிற தன்மைக்குத் தான் பெயரே தவிர அவனுடைய தன்ஜீஹ் தன்மையில் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை.

எப்போது நாம் இந்த உலகையும் அதிலுள்ள வஸ்துக்களையும் பார்க் கிறோமோ அப்போது என்ன பார்க்கிறோம்? எதைப் பெறுகிறோம்? உஜூதையும் சிபாத்தையும் அஃப்ஆலையும் ஆஸாரையும் தான் பெற்றுக் கொள்கிறோம்.

உதாரணமாக நமக்கு வெளியில் ஆபாக்கில்–எல்லா வஸ்த்துவிலும் உஜூது–பில்–பிஅல்–வெளிப்படையாகவே இருக்கிறது. மற்ற இஃதிபார்கள் சிலவற்றை வெளிப்படையாகவும் வேறு சிலவற்றில் பில்குவ்வாவாக–மறைந்துள்ள தாகவும் இருக்கிறது. செடி கொடிகளில் பார்க்கிறோம். வளர்ச்சியும்–தஅஸ்ஸுராத் மாற்றங்களும் விளைவுகளும் தென்படுகின்றன! மிருகங்களில் பார்க்கிறோம் அசைவுகளும் செயல்பாடுகளும் மற்ற பார்வை ஆற்றல் போன்ற தன்மைகளும் தெரிகின்றன!

நமக்குள்ளே அன் புசிலே பார்த்தால் எல்லாமே வெளிப்பட்டுத் தெரிகிறது. நம்மிலே உள்ளமையும் – அனிய்யத் தான் என்ற உணர்வும், ஹயாத் இல்ம் முதலான சிபத்துகளும், ஹரகாத்கள் செயல்பாடுகளும் தெரிகின்றன! ஹுகூமத் மாலிகிய்யத் – சொத்துபத்துகளையும் வைத்திருக்கிறோம் இவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியன! இவை அல்லாஹ்வை விட்டும் பிரியவும் முடியாது. ஏனெனில் இவை அவனுக்கு ஜாத்தீயானதாக–ஜாத்துக்கே சொந்த மானவைகளாக இருக்கின்றன!

ஆனால் இவை அனைத்தையும் நாமும் பெற்று முற்றிலும் அவனுக்கு ஒப்பானவர்களைப் போல் காட்சியளிக்கிறோம். இவைகளை நாம் 'இழாபியாக' தற்காலிகமாகப் பெற்றுள்ளோமே தவிர நமக்கும் சொந்தமாகிவிடவில்லை. நாமும் அவனாகி விடவில்லை! "தஷ்பீஹே சுவரீ"யாக முற்றிலும் அவனே நம்மில் காட்சியளிக்கிறான்! ஏன் அப்படி காட்சியளிக்கிறான்? அப்படி இல்லை என்றால் இந்த உலகம் வெளிப்பட்டிருக்கவே முடியாது! இந்த விஷயத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். வேறு வழியில்லை!

அதே நேரத்தில் இங்கே ஹுலூல், இத்திஹாத் ஏற்பட்டு விடவும் இல்லை. அதாவது பாத்திரத்தில் தண்ணீரைப் போல சிருஷ்டிக்குள் அல்லாஹ் இறங்கி விடவும் இல்லை. பாலும் சீனியும் போல சிருஷ்டியும் அல்லாஹ்வும் கலந்து விடவும் இல்லை. இந்த விஷயங்களை நாம் விளங்கிவிட்டால் ஹக் கல்காகவும் கல்க் ஹக்காகவும் மாறியது என்று கற்பனைகூட செய்து பார்க்க முடியாது!

7. தஜல்லீ - தமஸ்ஸுல்

இந்த தஜல்லீ–தமஸ்ஸுல் உடைய விளக்கத்தை சிருஷ்டிகளின் தோற்றத்தில் ஹக் காட்சியளிப்பதைக் குர்ஆனிலும் காணலாம். மூஸா (அலை) அவர்களுக்கு நெருப்பின் தோற்றத்தில் அல்லாஹ் காட்சியளித்தான்!

நெருப்பைக் கண்டு அதன் அருகில் அவர்கள் சென்றபோது,

يٰمُوْسٰٓى اِنَّهٗٓ اَنَا اللّٰهُ الْعَزِيْزُ الْحَكِيْمُ

"மூஸாவே! யாவற்றையும் மிகைத்தவனும் ஞானமுள்ளவனுமாகிய அல்லாஹ் நானேதான்" என்ற குரல் ஒலித்தது. (27 : 9)

நெருப்போ ஒரு சிருஷ்டி! அது எப்படி 'நான்' என்று கூறும். அதற்கு 'அனிய்யத்' ஏது ? வேறு என்ன கூற முடியும் ? நெருப்பின் தோற்றத்திலே அல்லாஹ் தான் காட்சியளித்தான்!

மூஸா (அலை) அவர்களும் ஆரம்பத்தில் அதை நெருப்பு என்றுதான் கருதினார்கள்! அருகில் சென்றவுடன் நுபுவ்வத்தின் பேரொளி அவர்களில் இருந்ததினால் நெருப்புடைய தோற்றத்தில் அவனே காட்சியளிக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

இந்த சம்பவத்தின் மூலமாக உலகில் ஹாதிஸான சிருஷ்டிகளின் தோற்றத்தில் ஹக் தஆலா காட்சியளிப்பது சாத்தியமானது தான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது! இப்படி காட்சியளிப்பதற்குப் பெயர் "தஜல்லியே தஷ்பீஹீ ஜுஹூரி" ஆகும். இதைப் பார்த்து மூஸா (அலை) மயக்கமடையவில்லை. அவர்கள் பார்த்து மயக்கமடைந்தார்களே அந்தக் காட்சிக்குப் பெயர் "தஜல்லியே தன்ஜீஹி நூரி" எனப்படும். அதுவும் ஒரு வகையில் தஷ்பீஹீ தஜல்லிதான் என்றாலும் 'நூர்' எனும் தன்மை மூலம் வெளிப்பட்டதால் தன்ஜீஹி நூரி என்கிறோம்! ஏனெனில் அந்தக் காட்சி எந்த சிருஷ்டிகளின் தோற்றத்திலும் தன்மையிலும் வெளிப்பட வில்லை. எனவேதான் அதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தஷ்பீஹீ தோற்றத்தில் காட்சியளித்தபோது அவர்களுக்கு ஒன்றும் ஆகவில்லை! அவர்கள் நபியாக இல்லாதிருந்தால் நெருப்பிலிருந்து இறைவன் பேசியதைக் கண்டு குழப்பம் அடைந்து நம்பாமல் அங்கிருந்து சென்றிருப்பார்கள். நபியாக இருந்ததால் இறைவன்தான் நெருப்புடைய தோற்றத்தில் காட்சியளிக்கிறான் என்று உணர்ந்து கொண்டார்கள்.

கதீமான தாத் ஹாதிஸின் தோற்றத்திலே காட்சியளிப்பதை ஹதீஸ்களைக் கொண்டும் உறுதிப்படுத்தலாம்.

இந்த ஹதீஸ்களை ஹஜ்ரத் மௌலானா அஷ்ரப் அலி தானவி (ரஹ்) அவர்கள் தங்கள் தகஷ்ஷுப் என்ற கிதாபிலே 'ஹகீகதுத் தரீகத்' என்ற பாடத்தின் கீழ் கொண்டு வருகிறார்கள். அதை அப்படியே அவர்கள் எழுதிய குறிப்புடன் சேர்த்து கீழே தருகிறோம்.

عن ابى هريرة ﷺ قال النبى صلى الله عليه وسلم اذا قضى الله تعالى الامر في السماء ضربت الملائكة عليهم السلام باجنحتها خضعانا لقوله كانّه على سلسلة على الصفوان (رواه البخارى)

அபூஹுறைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ் வானத்தில் ஒரு உத்தரவு பிறப்பித்தால் மலக்குகள் அதைக் கேட்டு பணிவுடன் தங்கள் புஜங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்கள். ஒரு கல்லின் மீது சங்கிலியைத் தேய்த்தால் எப்படி சத்தம் வருமோ அதுபோல் அந்த உத்தரவின் சத்தம் இருக்கும். (புகாரீ ஷரீப்)

குறிப்பு :- ஹாதிஸுடைய தோற்றத்தில் கதீம் காட்சியளிக்கும் மஸ்அலா இதிலிருந்து தெளிவாகிறது. அல்லாஹ்வுடைய கலாம் கதீமாகும். சங்கிலி ஓசை ஹாதிஸ் ஆகும். ஆக கதீமான கலாம் ஹாதிஸுடைய தோற்றத்தில் வெளியா கிறது. இதிலிருந்து கதீமான அல்லாஹ்வின் ஜாத்து ஹாதிஸான சிருஷ்டிகளில் காட்சியளிக்கிறது–வெளிப்படுகிறது என்ற சூபியாக்களின் கருத்து உறுதிப் படுகிறது.

இதற்கு தஜல்லியே மிஸாலீ என்றும் கூறப்படும். இதில் ஹுலூல் இத்திஹாத் எதுவும் கிடையாது! ஏனெனில் இவை இரண்டும் அறிவு இன்னும் ஆதார அடிப்படையில் முஹால் சாத்தியமற்றதாகும். கதீமான ஜாத் தன் தன்மைகளில் எந்த மாற்றமும் இல்லாமல் ஹாதிஸான சிருஷ்டிகளையும் அதன் தன்மைகளையும் தன்னில் வெளிப்படுத்துகிறது. "என்னுடைய ரப்பை நான் அழகிய தோற்றத்தில் பார்த்தேன்" என்ற ஹதீஸின் மூலமும் இந்த கருத்து தெளிவாகிறது.

"ஆயத்தே நூர்" எனப்படும் (அல்லாஹ் வானம் பூமியின் நூராக இருக்கிறான். அவனுடைய நூருக்கு உதாரணம் விளக்கு வைக்கப்பட்டுள்ள மாடக்குழியாகும்.... என்ற) ஆயத்தின் மூலமும் அல்லாஹ்வின் தஷ்பீஹ்வுடைய நிலை உறுதிப்படுகிறது. (தகஷ்ஷுப்)

عن ابن عباس ﷺ قال قال رسول الله صل الله عليه وسلم اتانى الليلة آت من ربى وفي رواية اتانى ربى في احسن صورة الحديث اخرجه الترمذى

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் உரைத்தார்கள் "இன்றிரவு என்னிடத்தில் என் ரப்பிடமிருந்து வரக்கூடியவர் வந்தார்" இன்னொரு அறிவிப்பில் "என்னுடைய ரப்பு என்னிடத்தில் ஓர் அழகிய தோற்றத்திலே வந்தான்" என்று கூறினார்கள்! (திர்மிதி ஷரீப்)

குறிப்பு :- ஹுலூல் இத்திஹாத் இல்லாமல் கல்குடைய தோற்றத்தில் ஹக்கு காட்சியளிப்பதைப் பற்றிய விளக்கம். இங்கே இரண்டு விஷயங்கள் தெரிய வருகிறது. ஒன்று, அல்லாஹ் தன் ஜாத் சிபாத்துகளுடன் ஹுலூல் இல்லாமல் சிருஷ்டிகளில் தானே ஜாஹிராகிறான். ஹக்கு ஜாஹிராகவும் கல்க் மஜ்ஹராகவும் (வெளியாகுமிடமாகவும்) இருக்கிறது. எழுதியவன் தன் எழுத்தின் மூலமும், பேசுபவன் தன் பேச்சின் மூலமும் வெளிப்படுவது போல. இன்னொரு விஷயம் எழுதியவனையும் எழுத்தையும் போல ஹக்கும் கல்கும் பிரிந்தும் இல்லை. ஜாஹிரும் மஜ்ஹரும் பிரிந்திருப்பது சாத்தியமே இல்லாத முஹால் ஆகும்.

இந்த இரண்டு விஷயங்களும் அறிவால் ஏற்றுக் கொள்ளப்படும் விஷயம் தான். எனினும் சிலர் சூபியாக்களின் சில வாசகங்களுக்கு தவறான பொருள் கொண்டு விடுகிறார்கள். (அதாவது எல்லாமே அல்லாஹ்தான். சிருஷ்டியே இல்லை என்று விளங்கிக் கொள்கிறார்கள். இது தவறான கருத்தாகும்)

'அழகிய தோற்றத்திலே' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதிலிருந்து உருவமற்ற இறைவன் எல்லா உருவங்களிலும் காட்சியளிப்பதால் அவனது உருவமற்ற தன்மையில் எந்த மாறுதலும் ஏற்படாது என்று அறியலாம். விஷயம் இவ்வாறு இருக்க, தஜல்லி–வெளியாகுதல் போன்ற இஸ்திலாஹி வார்த்தை களுக்கு சில அறிவு ஞானமில்லாத மக்கள் நேரடியான அகராதிப் பொருள் வைத்துக் கொண்டு தங்கள் அகீதாவை கொள்கையை கெடுத்துக் கொள் கிறார்கள். (துகஷ்ஷுபின் சுருக்க மொழிபெயர்ப்பு)

குர்ஆன் விரிவுரையாளர்களின் தலைவர் என்று அழைக்கப்படும் சைய்யிதுனா இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் இந்த கருத்துக்களை வலியுறுத்திக் கூறுகிறார்கள். அதுவும் நமக்குப் பெரும் ஆதாரமாக இருக்கிறது.

وَسَخَّرَ لَكُمْ مَّا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ جَمِيْعًا مِّنْهُ

வானங்களிலேயும், பூமியிலேயும் உள்ள அனைத்தையும் உங்களுக்கு வசப்படுத்தி கொடுத்தான். (45 : 13)

எனும் ஆயத்துடைய விரிவுரையில் அவர்கள் இதைக் கூறுகிறார்கள். அதை **சைய்யுதுனா குதுபுல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி** (ரஹ்) அவர்கள் தங்கள் **'புதூஹுல் கைப்'** கிதாபிலே எடுத்து எழுதுகிறார்கள். **ஹஜ்ரத் மௌலானா அப்துல் ஹக் முஹத்திஸ் தஹ்லவி** (ரஹ்) அவர்களும் எடுத்து எழுதி விளக்கமும் அளித்துள்ளார்கள். இவர்கள் இருவரும் எடுத்து எழுதியிருப்பதும் நமக்கு வலுவூட்டக்கூடியதாக இருக்கிறது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :

"ஒவ்வொரு பொருளிலும் அல்லாஹ்வுடைய திருப்பெயர்களில் இருந்தும் ஒரு பெயர் இருக்கிறது. (அதாவது ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வுடைய திருநாமங்களின்–அஸ்மாக்களின் வெளிப்பாடாக இருக்கிறது) ஒவ்வொரு பொருளின் பெயரும் அவனுடைய பெயரின் விளைவேயாகும். நீ அவனுடைய

அஸ்மாக்கள், சிபாத்துகள், அப்ஆல்களுக்கு மத்தியில் தோன்றிய அஸராக விளைவாகத்தான் இருக்கிறாய்.

(மர்தபயே இம்கான் இன்னும் மாஹியத்திலே) அவனுடைய குத்ரத்தைக் கொண்டு மறைக்கப்பட்டவனாக இருக்கிறாய். (மர்தபயே பிஃல் இன்னும் உஜூதில்) அவனுடைய ஹிக்மத்தைக் கொண்டு வெளிப்பட்டவனாக இருக்கிறாய். அல்லாஹ் தன் ஸிபாத்தைக் கொண்டு லாஹிராகவும் தன் ஜாத்துடைய மர்தபாவிலே பாதினாகவும் இருக்கிறான். எனவே தன் ஜாத்தை தன் ஸிபாத்திலே மறைத்தான். (ஏனெனில் சிபத் ஜாத்துடைய திரையாக இருக்கிறது. இன்னும் ஸிபாத் இல்லாமல் ஜாத்தைப் பெற்றுக் கொள்வது முடியாததாகும். சிபத் தான் முத்ரக்காக (அறியப்படக்கூடியதாக) இருக்கிறது. சிபாத்தின் லிம்னிலேதான் அதாவது சிபாத்துகளின் வழியேதான் மூடலான ஜாத்தை ஷுஹூது செய்கிறோம்–பார்த்துக் கொள்கிறோம்!

உதாரணமாக குத்ரத் உடையவன் காதிர் ஆக இருக்கிறான். இல்மை உடையவன் ஆலிமாக இருக்கிறான். மற்ற சிபத்துகளும் இவ்வாறு தான் இருக்கிறது. அதாவது சிபத்துகளை வைத்துத்தான் ஜாத்தை சுட்டிக் காட்ட முடியும். ஸிபாத்துகள் பலதாக இருந்தாலும் ஜாத் ஒன்றுதான். நாம் எந்த வஸ்துக்களைப் பார்த்தாலும் அதில் பல தன்மைகளைப் பார்க்கிறோம் கருப்பு அல்லது வெள்ளை, உயரம் அல்லது குட்டை, கடினம் அல்லது மென்மை இவ்வாறு பல சிபத்துகள் அந்த ஒரே பொருளில் இருக்கும். ஒரே ஜாத்தில் எத்தனையோ சிபத்துகள் வெளிப்படுகின்றன.

ஒரு சிலரோ தங்கள் அகப் பார்வை மூலம் அனைத்தையும் கடந்து ஜாத்தை விளங்கி அதன் மீது காதல் கொள்கின் றார்கள்! இந்த கஸ்ரத், அதாவது எண்ணற்ற ஸிபாத்துகள் அவர்களை ஜாத்தை ஷுஹூது செய்வதை விட்டும் தடுப்பதில்லை. கஸ்ரத்தை அவர்கள் காணுவதே இல்லை. அப்படியே கண்டாலும் அது ஜாத்துடைய அருளில் ஜாத்தைப் பின்பற்றியே இருப்பதாகக் காண்கிறார்கள்.

வேறு சிலரோ இந்த கஸ்ரத்திலே சிக்கிக் கொண்டார்கள். இந்த எண்ணற்ற சிபாத்களைப் பின்பற்றி ஜாத்தை விளங்குகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இந்த அனைத்து சிபாத்துகளும் ஒரே ஜாத்துடைய சிபாத்துகள்தான் என்ற இல்ம் ஏற்கனவே இல்லையென்றால் ஜாத்தையும் பலதாக விளங்கிக் கொள்கிறார்கள்.

ஆக இரண்டு முறையிலும் சிபத்துதான் ஜாத்துடைய திரையாக இருக்கிறது. வித்தியாசம் என்னவென்றால் ஒருவனுடைய பார்வை திரையோடு நின்று விடுகிறது. இன்னொருவனின் பார்வை திரையைக் கடந்து திரையை உடையவன் மீது இருக்கிறது. இந்த வேறுபாடு மிகவும் தெளிவானதே.

இதே போல் தன் சிபத்துக்களைத் தன் அப்ஆல்களில் மறைத்தான். அதாவது அப்ஆல்களை சிபத்துகளின் திரையாக ஆக்கினான். எப்படி சிபத்துகளைக் கொண்டு ஜாத்து தெரிய வருகிறதோ அதே போன்று சிபத்துக்கள் அப்ஆல்களின் மூலம் வெளியாகின்றன.

அதேபோல் தன்னுடைய இல்மைத் தன்னுடைய இராதாவின் மூலம் வெளியாக்கினான். (ஏனெனில் அவனுடைய இல்மு மறைந்திருக்கிறது. அவனுடைய இல்மில் என்ன இருக்கிறதென்று யாரும் அறிய முடியாது. எனவே எப்போது ஒரு வஸ்து அவனுடைய இராதா என்னும் நாட்டத்தின் மூலம் உஜூதிலே வருகிறதோ அப்போதுதான் அறிகிறோம் இது அவனுடைய இல்மிலே இருந்ததென்று)

இன்னும் இராதாவை ஹரகாத்துக்களின் மூலம் வெளியாக்குகிறான். (அதாவது அடியார்களின் செயல்களின் மூலம் அவனுடைய நாட்டம் வெளியாகிறது. சிருஷ்டிகளின் செயல்பாடு இல்லையென்றால் அவனுடைய நாட்டம் என்னவென்று யாரும் அறிய முடியாது. இன்னும் இந்த இடத்தில் ஹரகத் என்பதற்கு சிருஷ்டிகள் உஜூதில் உண்டாவதையும் நாடலாம். அதாவது பில் குவ்வாவிலிருந்து பில் பிஃலுக்கு வருவதையும் நாடலாம்).

தன்னுடைய வேலைகளையும் வேலை செய்தலையும் மறைத்தான். இன்னும் சிபத்துக்களை வெளிப்படுத்தினான். (அதாவது தன் இராதாவின் மூலம் தன் சிபத்துகளை வெளிப்படுத்துகிறான். ஏனென்றால் உஜூதில் வருவதற்கும் அப்ஆல்களுக்கும் காரணம் இராதாதான்).

ஹக்கு தஆலா தன்னுடைய மறைவான ஜாத்துடைய அடிப்படையில் பாத்தினாகவும் தன்னுடைய ஆஸார், ஹிக்மத், குத்ரத்துடைய அடிப்படையில் ஜாஹிராகவும் இருக்கிறான்.

அவனைப் போன்று எந்த வஸ்துவும் இல்லை. (இதன் மூலம் அவனுடைய ஜாத்தின் தன்ஜீஹு தன்மையைக் குறிக்கப்படுகிறது) அவனே கேட்கிறான். பார்க்கிறான்.(இதன் மூலம் அவனது தஷ்பீஹு தன்மை வெளியாகிறது. அதாவது வெளி உலகில் அவனது சிபாத்துகளின் ஆஸார்கள் வெளிப்படுவதைக் குறிக்கிறது.)

இந்த பேச்சுக்களிலே ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மஃரிபத்தின் அஸ்ரார்களை ஞான ரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். "யாருடைய உள்ளம் ஒளிமயமாக இருக்கிறதோ அவர்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு இது விளங்காது".

இதை ஆயதே நூரிலே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.

يَهْدِى اللّٰهُ لِنُوْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ

அல்லாஹ் தன் நூரைக் கொண்டு யாருக்கு நாடுகிறானோ நேர்வழி காட்டுகிறான். (24 : 35)

8. ஆயத்தே நூர்

இப்போது நாம் ஆயத்தே நூரைப் பார்ப்போம்.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ مَثَلُ نُوْرِهٖ كَمِشْكٰوةٍ فِيْهَا مِصْبَاحٌ ؕ اَلْمِصْبَاحُ فِىْ زُجَاجَةٍ ؕ اَلزُّجَاجَةُ كَاَنَّهَا كَوْكَبٌ دُرِّىٌّ يُّوْقَدُ مِنْ شَجَرَةٍ مُّبٰرَكَةٍ زَيْتُوْنَةٍ لَّا شَرْقِيَّةٍ وَّلَا غَرْبِيَّةٍ ۙ يَّكَادُ زَيْتُهَا يُضِىْٓءُ وَلَوْ لَمْ تَمْسَسْهُ نَارٌ ؕ نُوْرٌ عَلٰى نُوْرٍ ؕ يَهْدِى اللّٰهُ لِنُوْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ وَيَضْرِبُ اللّٰهُ الْاَمْثَالَ لِلنَّاسِ ؕ وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ

அல்லாஹ் வானம் இன்னும் பூமியின் நூராக இருக்கிறான். அவனுடைய நூருக்கு உதாரணம் என்னவெனில் ஒரு மாடக் குழியில் ஒரு விளக்கு இருக்கிறது. அந்த விளக்கு கண்ணாடிக் கோளத்திலே இருக்கிறது. அந்த கண்ணாடி நிச்சயமாக பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரத்தைப் போன்றதாகும். அது பாக்கியம் பெற்ற ஜைத்தூன் மரத்தின் எண்ணையால் ஒளியூட்டப்படுகிறது. அது கீழ் திசையைச் சேர்ந்ததுமன்று. மேல் திசையைச் சேர்ந்ததுமன்று. அதன் எண்ணெய் அதை நெருப்புத் தொடாவிடினும் தானே பிரகாசிக்க முற்படும். ஒளிமேல் ஒளியாகும். அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன் பிரகாசத்தின் பால் செலுத்துகிறான். மேலும் மனிதர்களுக்கு அல்லாஹ் இத்தகைய உதாரணங்களைக் கூறுகிறான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கு அறிந்தவன். **(24 : 35)**

இந்த ஆயத்துடைய விளக்கத்தை இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் மிகவும் ஆராய்ச்சிப் பூர்வமாக எழுதியிருக்கிறார்கள். அதிலிருந்து எடுத்து மௌலானா அபூ முஹம்மத் அப்துல் ஹக் தஹ்லவி (ரஹ்) அவர்கள் தங்கள் தப்ஸீர் ஹக்கானியிலே கூறியிருப்பதை அப்படியே கீழே தருகிறோம்.

“இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் இந்த ஆயத்துடைய தப்சீரிலே ஒரு கிதாபும் எழுதியிருக்கிறார்கள். அதற்கு ‘மிஷ்காதுல் அன்வார்’ என்று பெயரிட்டுள்ளார்கள்.

அதிலே இமாம் அவர்கள் தெளிவாக்குகிறார்கள் : ஹகீகத்தில் அல்லாஹ் தான் வானங்கள் இன்னும் பூமியின் நூராக இருக்கிறான். அல்லாஹ்வை நூர் என்று கூறுவது ஹகீகத்தான். மஜாஜ் அல்ல. இதற்குப்பின் நிறைய ஆதாரங்களைக் கூறிவிட்டு பின்னர் கூறுகிறார்கள். பார்த்து அறிவதைவிட அறிவால் விளங்குவது ஏற்றமானது. (இத்ராக்கே பசரீயைவிட இத்ராக்கே அகலீ உயர்ந்தது.) இரண்டுமே ஜுஹுர் வெளியாவதைத் தான் தேடுகின்றன. ஒளியின் தன்மையோ வெளிப் படுவதுதான். எனவே இரண்டு அறிவாலும் நூர் அறியப்படுகிறது.

இதற்குப் பின் அவர்கள் கூறுகிறார்கள் : “மும்கின் பீ ஹத்தி ஜாதிஹி மஃதூம் ஆகும். அதாவது சிருஷ்டிகளின் அசல் மஃதூம் (இல்லாமை) ஆகும். அதற்கு உஜூது வேறு ஒருவரிடமிருந்து வழங்கப்படுகிறது. உஜூதுதான் நூராகவும் அதம் லுல்மத் (,ருள) ஆகவும் இருக்கிறது. ஆக அனைத்து சிருஷ்டிகளும் தனது ஜாத்துடைய அடிப்படையில் இருளாக அதமாக இருக்கிறது. யாருடைய உஜூது சுயமாக இருக்கிறதோ அவனே நூர் ஆவான். மும்கினாத்கள் எனும் சிருஷ்டிகளின் உஜூது இன்னும் அவைகளின் ஸிபாத்து இன்னும் அவைகளின் அனைத்து ஞானங்களும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வழங்கப்பட்டவைதான். இப்போது நமக்குத் தெளிவாகிறது ‘நூரே முத்லக் – எல்லையில்லாப் பேரொளி’ அல்லாஹ்தான். அவன் அல்லாத வஸ்துக்களுக்கு இந்தப் பெயரைச் சொல்வது மஜாஜாகத்தான். அதாவது அசலாக அல்ல. ஏனெனில் அவனைத் தவிர வேறு எதுவெல்லாம் இருக்கிறதோ அவையெல்லாம் தன் அசல் தன்மையிலே “லுல்மத்தே மஹஜ்’ இருளாக மட்டுமே இருக்கின்றன. ஏனெனில் அவைகளின் அசல் அதமாக–இல்லாமையாக இருக்கிறது. நாம் பார்க்கும் இந்த ஒளிகளும் வெளிச்சங்களும்கூட அசலில் இருள்தான். ஏனெனில் இதனுடைய அசலும் இல்லாமைதான். சுருக்கமாகச் சொல்வதானால் அவனே “நூரே ஹகீகியாக” உண்மை நூராக இருக்கிறான். மற்ற அனைத்து நூர்களும் அவனது நூரின் சுடர்தான். அல்லாஹ்வே நன்கு அறிபவன்.

(துப்சீர் பத்ஹுல் மன்னான். இந்த தப்ஸீர் தப்சீரே ஹக்கானீ என்ற பெயரில் பிரபலமானது.)

இதற்கு மேலும் யாரும் தஃவீல் செய்து உண்மையைப் புறக்கணித்தால் புறக்கணிக்கட்டும் இவர்கள் இங்கே மட்டுமல்ல–மஹ்ஷரிலும் இவ்வாறே புறக்கணிப்பார்கள். அல்லாஹுத் தஆலா அவர்கள் அறிந்திராத தோற்றங்களில் அவர்கள் முன் ஹாலிராகி நான்தான் அல்லாஹ் என்று கூறும்போது அங்கேயும் இவர்கள் மறுப்பார்கள். (நவூது பில்லாஹி மின்க) உன்னை விட்டும் அல்லாஹ்விடம் நாங்கள் பாதுகாப்புத் தேடுகிறோம். நீ எங்கள் இறைவன் இல்லை என்று கூறுவார்கள். இந்த விஷயம் ஹதீஸ் ஷரீபில் வருகிறது. புகாரி, முஸ்லிமில் அபூ ஹுரைரா (ரலி), அபூ ஸஈது (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படும் நீண்ட ஹதீஸுக்கு இடையில் இந்த செய்தியும் வருகிறது.

இப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் என்ன கூறமுடியும். அல்லாஹ்விடமே பொறுப்பை ஒப்படைத்துவிட வேண்டியதுதான். அவனே சொல்லுகிறான்.

إِنَّ فِي ذَٰلِكَ لَذِكْرَىٰ لِمَن كَانَ لَهُۥ قَلْبٌ أَوْ أَلْقَى ٱلسَّمْعَ وَهُوَ شَهِيدٌ

நிச்சயமாக இதிலே படிப்பினை இருக்கிறது. யாருக்கு உள்ளம் (சிந்தனை) இருக்கிறதோ அவர்களுக்கும் இன்னும் உள்ளம் ஒன்றி கேட்கிறார்களோ அவர்களுக்கும். (50 : 37)

சுருங்கச் சொன்னால் மேற்கூறிய அனைத்து விளக்கங்களின் அடிப்படையில் நமக்கு தெரிவது யாதெனில் மஃலூம் தன்னுடைய ஆலிமின் அனைத்து சாமான்களுடன் மவ்ஜூதாகக் காட்சியளிக்கிறது.

அவ்வாறெனில் இப்போது அவனுடைய ஆஸார்களை இவற்றில் கண்டு அவனை அறியாவிட்டால் வேறு யாரை அறிவது ?

அவனுடைய அப்ஆல்களை இவைகளில் கண்டு அவனை அறியாவிட்டால் வேறு யாரை அறிவது ?

அவனுடைய சிபாத்களை இவற்றில் கண்டு அவனை அறியாவிட்டால் வேறு யாரை அறிவது ?

அவனுடைய ஜாத்தை இவற்றிலே கண்டு அவனை அறியாவிட்டால் வேறு யாரை அறிவது ?

அவனை விட்டுவிட்டு இன்னொன்றை அறியவும் முடியுமா ? அவனுடைய ஞானமும் அகப்பார்வையும் வந்த பின்பு இந்த உள்ளம் எப்படி மற்றதைக் காணும் ?

இந்தக் கண்களில் அவனுடைய நூரும், திருக்காட்சியும் வந்த பின்னால் எப்படி மற்றவை தெரியும் ?

இவை எல்லாவற்றையும்விட

فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ وَجْهُ اللَّهِ

நீங்கள் எங்கே திரும்பினாலும் அல்லாஹ்வின் ஜாத்தான் இருக்கிறது (2 : 115) என்ற ஆயத்தை எந்த திரையிட்டு மறைக்க முடியும் ?

கண்களைத்தான் மறைக்கலாம். உள்ளத்தை மறைக்க முடியுமா ? சரி! உள்ளத்தையும் உடைத்து துண்டாக்கினாலும் உள்ளத்தில் வாழும் அவனை என்ன செய்ய முடியும் ? யார் மறைக்க முடியும் ?

போதும்! போதும்! நமக்கு யாருடைய தேவையும் இல்லை! அவனிருந்தால் எல்லாம் இருக்கிறது! அவனல்லாதவை இல்லாமல் போனால் போகட்டும். அவை இல்லாமல் இருப்பதே நல்லது! ஆனால் அவனில்லாவிட்டாலோ எதுவும் இருக்காது. அனைத்தும் அவன் உஜூதுடைய பிச்சை. அனைத்தும் அவனுடைய நூருடைய ஜுஹூர். இனியும் அவனைக் காணாதவர்கள் காண முடியாதவர்கள் கண்களை உடைத்துக் கொள்ளட்டும்! உள்ளத்தை கிழித்துப் போடட்டும்! கழுத்தை முறித்துக் கொள்ளட்டும்! உயிரை விட்டு விடட்டும்!

நமக்கென்ன ? நாமோ அவனில்லாமல் இருக்கவும் முடியாது. இருக்கவும் மாட்டோம்.

9. சில உதாரணங்கள்

இப்போது நாம் சில உதாரணங்கள் மூலமாகவும் இந்தப் பாடங்களை விளக்கலாம்.

கவனத்தில் வையுங்கள். 'ஆலிமானவன் தன்னுடைய இல்ம் ஞானத்தில் தரிபட்டிருந்த மஃலூம்களை தன்னுடைய ளாஹிரிய்யத் எனும் சிபத்தின் காரணமாக நூருடைய அடிப்படையில் வெளியாக்கினான்.'

'சுபூத்' எனும் இல்மிலே தரிபடுதல் எனும் நிலையில் இருந்த மஃலூம்களை ஜாஹிர், மக்லூக் எனும் நிலைக்குக் கொண்டு வந்தான். இவ்வாறு கொண்டு வந்ததால் அவனுடைய ஜாத்-சிபாத்தில் எந்த மாற்றமும் வந்துவிடவில்லை.

அல்லாஹ்வுக்கு உதாரணம் கூறமுடியாது. எனினும் விஷயம் நம் சிந்தனையில் விளங்குவதற்காக சில உதாரணங்களைப் பார்க்கலாம். இந்த உதாரணங்களை அப்படிக்கு அப்படியே முழுமையாக அல்லாஹ்வுக்குப் பொருத்தக்கூடாது.

பாருங்கள்! நமது சிந்தனையில் நாம் நினைக்கும் கருத்துக்களை நமது வாயின் ஓசைகள் மூலம் வெளிப்படுத்துகிறோம். மனதில் இருந்த கருத்துக் களுக்கு ஓசைகள் மூலம் உஜூதைக் கொடுத்தோம். அதனால் நம்முடைய ஜாத்து-சிபாத்தில் எந்த மாற்றமும் நிகழவில்லை. நமது சத்தம் நம் உள்ளிருந்த வார்த்தைகளை வெளிப்படுத்தியது. அவ்வளவுதான்!

மனதில் வார்த்தைகள் எப்படி எப்படியெல்லாம் இருந்ததோ அதை அப்படியே அதன் தன்மைகளுடன் நமது ஓசை வெளிப்படுத்தியது. அத்துடனே மனதின் வார்த்தைகள் ஓசைகளாக மாறிவிடவில்லை. ஓசைகள் மனதில் வார்த்தைகளாக மாறிவிடவில்லை.

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி!

இதைத்தான் தஜல்லீ என்றும் தமஸ்ஸுல் என்றும் வெளிப்படுதல் என்றும் கூறுகிறோம். அதாவது ஓசை மனதில் வார்த்தைகளைப் போல் வடிவமெடுத் துள்ளது. ஓசை வார்த்தையாகவில்லை. வார்த்தை ஓசையாகவில்லை.

இன்னொரு உதாரணத்தையும் கவனியுங்கள்!

சினிமாப் படச் சுருளிலே – பிலிமிலே பல உருவங்கள் பதிந்துள்ளன. காட்சியைக் காணவிரும்பும்போது அதன் மீது ஒளியைப் பாய்ச்சுகிறோம். அப்போது அந்த ஒளி அந்த உருவங்களின் வடிவங்களைப் போல் தான் உருவெடுத்து திரையிலே அதை வெளிப்படுத்துகிறது. பில்மில் இருந்த உருவங்கள் அதனதன் காபிலிய்யத்–தகுதிகள் தன்மைகளின்படி நூரின் காரணமாக வெளிப்பட்டு விட்டன. ஆனால் அந்த ஒளி உருவமாக மாறிவிடவில்லை. உருவம் ஒளியாக மாறிவிடவில்லை. எந்த மாற்றமும் இன்றி ஒன்று இன்னொன்றுடன் இருக்கிறது.

இது இதுவாகவும் அது அதுவாகவும் இருக்கவே இரண்டும் ஒன்றாகிவிடுகின்றன. பார்த்தால் அது இதுவாகத் தெரிகிறது. இது அதுவாகத் தெரிகிறது. ஆனாலும் அது அப்படியே இருக்கிறது. இது இப்படியே இருக்கிறது. எவ்வளவு காலம் அந்த ஒளி உருவங்களைக் காட்டினாலும் ஒளி உருவமாகாது. உருவம் ஒளியாகாது.

ஆம்! அல்லாஹ் நம்மைக் காட்டுகிறான். நாம் அல்லாவைக் காட்டுகிறோம். நாம் அவனாகவோ அவன் நாமாகவோ மாறிவிடவில்லை. சிருஷ்டிகளை அல்லாஹ் படைத்தது வீணுக்காக இல்லை.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَٰكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ

"நாம் என்ன உங்களை வீணாகவா படைத்தோம்? நீங்கள் நம் பக்கம் திரும்ப மாட்டீர்கள் என்று எண்ணிக் கொண்டீர்களோ?" (23 : 115) என்று அல்லாஹ் கேட்கிறான்.

இதுவோ இன்னும் விரிவாகப் பேச வேண்டிய விஷயம். ஆனால் இந்த சுருக்கமான ஏட்டிலே அதற்கு இடமில்லை. இதை மட்டும் விளங்கிக் கொள்ளவேண்டும். "குன்" நீ ஆகு என்ற இறை கட்டளையின் அகமியமே இந்த தஜல்லி தமஸ்ஸுல் வெளிப்பாடுதான்.

இறைவனின் தஜல்லி ஆனவுடன் சிருஷ்டிகள் இல்மில் இருந்தபடியே வெளியில் காட்சியளிப்பதுதான் فيكون பயகூனுவுடைய ரகசியமாகும்.

படைப்பின் ரகசியத்தை விளங்கிக் கொள்வதன் மூலம் சிருஷ்டிகள் பில்ஹக்காக இருப்பதை—ஹக்குடன் சேர்ந்து இருப்பதை அறியலாம்.

இந்த ஹகீகத்துகளையெல்லாம் முறைப்படி கவனிக்காவிட்டால் வழிகேடு தான் நிகழும். அப்படித்தான் நிகழ்ந்தது. இன்னும் நிகழ்ந்து கொண்டும் இருக்கிறது.

வெறும் ஹக்குடைய ஜுஹுரை மட்டும் கவனித்தவர்கள் 'எல்லாம் அவன் தான்' என்று கூறிவிட்டார்கள். நவூதுபில்லாஹ். இப்படிச் சொல்லக்கூடியவர்கள் சிருஷ்டிகளின் தாத் என்று எதுவும் இல்லை என்று கருதியிருப்பார்களேயானால் திட்டமாக அது இல்ஹாத் வழிகேடுதான்.

அதேபோல் சிருஷ்டிகளின் தாத்துக்கு தனியாக ஒரு உஜூது கொடுத்து சிருஷ்டிகளை விட்டும் ஹக் பிரிந்ததுதான் என்று யாரும் கருதுவார்களானால் சந்தேகமின்றி அவர்கள் ஷிர்க்கே கபீ—ஷிர்கே அக்பா—மறைவான இணை வைத்தலிலே மாட்டிக் கொண்டார்கள். இன்னும் அல்லாஹ்வை விட்டும் தூரமாகவே இருப்பார்கள்.

அன்பர்களே! இதுவோ மிக நுணுக்கமான ஆழமான பிரச்சனை. நூலைவிட மெல்லிய பாதை. மிகவும் எச்சரிக்கையுடன் ஒவ்வொரு விஷயத்தையும் விளங்க வேண்டும். உதாரணம் காட்டுவதில்கூட பெரிய தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. பெரும்பாலும் இந்த உதாரணங்கள் மூலமே பலர் குப்ரிலும் இல்ஹாதிலும் விழுந்து விடுகிறார்கள்.

ஞாபகம் வையுங்கள்! அல்லாஹ்வுக்கு 'கஅன்னஹூ ஹூவ' திட்டமாக இது போலவே அவன் என்று எந்த உதாரணமும் காட்டமுடியாது. நாமோ நிறைய பேர் இருக்கிறோம். நமக்கோ ஆயிரம் உதாரணங்கள் இருக்கின்றன. அவன் தனித்தவன். ஒப்பு உவமையற்றவன். எனவே ஹூபஹூ நேருக்கு நேர்-உவமை காட்டவே முடியாது. பாடங்களை விளக்குவதற்காக சில உதாரணங்களை காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே நாம் காட்டிய உதாரணங்களும் முழுமையாக அல்லாஹ்வுக்குப் பொருந்தாது.

பாருங்கள்! உள்ளத்தின் வார்த்தைகள் சப்தம் வழியாக வெளிப்படுவதை உதாரணமாகக் காட்டினோம். இதுவும் குறைபாடு உள்ள உதாரணமே. ஏனெனில் அந்த வார்த்தைகள் வெளிப்பட்டது என்னவோ உண்மை. ஆனால் அதிலே நாட்டமோ செயல்பாடுகளோ இல்லை. மேலும் அவை வந்தவுடன் மறைந்துவிட்டன.-தரிபடவில்லை. சிருஷ்டிகள் வெளிப்படுவது இவ்வாறு இல்லை என்பது தெளிவானதே.

சினிமாவுடைய உதாரணத்திலும் சினிமாவின் ஒளி தனியாகவும், படக் கருவிகள் தனியாகவும், படம் காட்டுபவன் தனியாகவும், திரை தனியாகவும் இருக்கிறது. ஹக்குக்கும் சிருஷ்டிக்கும் உள்ள தொடர்பு இப்படிப் பிரிந்தது இல்லை.

எனவே இப்படி விளங்குங்கள். அதாவது அல்லாஹ்தான் ஆலிமாக இருக்கிறான். தன் சுய உஜூதைக் கொண்டு மவ்ஜூதாக இருக்கிறான். அவனுடைய இல்மில்தான் இந்த சிருஷ்டிகளின் தோற்றங்கள் இருக்கின்றன. அந்தத் தோற்றங்களை அதனதன் தன்மைகளுக்கு ஏற்ப அது எப்படி இல்மிலே இருந்ததோ அப்படியே தன்னிலேயே வெளியாக்குகிறான். அவன் பேராற்றல் பொருந்தியவன். எனவே தன் இல்மில் இருந்த தோற்றங்களுக்கு தன்னுடைய உஜூதையே கொடுத்தான். தனக்கு ஒப்பு என்று கூற முடியாத ஒரு ஒப்பாகவே அவைகளை ஆக்கினான். அவர்களை நாட்டம், செயல்பாடு, சுய இஷ்டம், அறிவு அனைத்தும் உடையவர்களாக ஆக்கினான். ஒரேயொரு வித்தியாசம். அவனுக்கு இவைகள் எல்லாம் ஜாத்தீயானது. சுயமானது. இவர்களுக்கோ சுயமானதல்ல, இரவலானது.

அதுவும் எப்படிக் கொடுத்தான்? கொடுத்ததால் அவனிடத்தில் குறைந்து போய் விடவும் இல்லை. அவனை விட்டு பிரிந்து விடவும் இல்லை.

நீங்கள் தூங்கும்போது உங்கள் கனவிலே, சிந்தனையிலே ஒரு வேறொரு உலகம் தெரிகிறது. அது முற்றிலும் இந்த உலகத்தைப் போன்றே இருக்கிறது. எத்தனையோ பல வஸ்துக்கள் (கஸ்ரத்) தெரிகிறது. நாம் தூங்கும் வரை அந்த உலகம் நடைபெறுகிறது. அதில் உள்ள ஒவ்வொருவரும் சுய இஷ்டத்துடனும் சுய செயல்பாடுகளுடனும் இருப்பதும், செயல்படுவதும் தெரிகிறது. அந்தக் கனவுலகிலும் நாம் காணும் பிற மனிதர்களை நாம் அல்லாத மற்றவர்கள் அவர்கள் என்றும் கனவிலேயே உணர்கிறோம். அந்த சம்பவங்கள் நிகழ்வதாகவே அறிகிறோம். எப்படி அந்த நேரத்தில் அந்த உலகை உண்மை உலகமாகவே

கருதுகிறோமோ அதே போல்தான் இந்த உலகையும் இப்போது நாம் உண்மையாகவே கருதுகிறோம்.

இப்போது பாருங்கள்! அந்தக் கனவுலகம் நமக்குள்தான் நிகழ்கிறது. அதில் பலரைக் காண்பதால் நாம் பலதாகிவிடவில்லை. அவர்களின் தனித்தனி நாட்டங்களினால் நம் நாட்டம் அழிந்துவிடவில்லை. அவர்கள் ஹயாத்தாக இருப்பதினால் உனது ஹயாத்தில் குறை ஏற்படவில்லை. அவர்கள் மரணிப்பதால் நீ மரணிப்பதில்லை. அவர்களின் எந்த தீய தன்மைகளும் உன்னில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அவை அனைத்தும் உன்னுடைய ஜாத்தில் ஏற்பட்ட சிந்தனைகள்தான். கனவுலகில் கண்ட சிருஷ்டிகள் எல்லாம் உனது கியால் எனும் எண்ணத்தின் வடிவங்கள்தான்.

நன்றாக கவனி! கனவு காணும் நேரத்திலும் நீ உயிருள்ளவனாகத்தான் இருந்தாய். மேலும் அறிவுள்ளவன், நாட்டமுள்ளவன், ஆற்றலுள்ளவன், கேட்பவன், பார்ப்பவன், பேசுபவன் எல்லாமாகவே இருந்தாய். கனவில் பார்த்தவர்களுக்கும் இவை எல்லாம் இருந்தன. ஆனால் கனவு காண்பதற்கு முன்பும் கனவு கலைந்த பின்பும் அவர்களும் இல்லை. அவர்களின் இந்த தன்மைகளும் இல்லை. உயிருமில்லை. அறிவு, நாட்டம், ஆற்றல், பார்த்தல், கேட்குதல், பேசுதல் எதுவும் இல்லை. சிந்தனையிருந்தவரை எல்லாமே இருந்தன. சிந்தனை மாறியபோது எல்லாம் அதமாகி விட்டன. இல்லாது போய்விட்டன.

இப்படித்தான் இந்த உலகம் இதிலுள்ளவைகளும். விழித்த நிலையில் ஒருவன் காணும் கனவுதான் நாம்.

இந்த உதாரணத்திலும் குறை இருக்கத்தான் செய்கிறது. ஏனெனில் கனவு காணும்போது நாம் தூங்குகிறோம். இது நாம் காணும் கனவு. இவைகளெல்லாம் நம் சிந்தனையின் தோற்றங்கள் என்று நாம் உணர்வதில்லை. அதே போல் அந்த சிந்தனைத் தோற்றங்களை நீடிக்கச் செய்யவும் நம்மால் முடியாது. நாமே சுயமாக நிலைத்திருக்க முடியாது. நம் சிந்தனையை எவ்வாறு நிலைத்திருக்கச் செய்வது ?

இந்த வித்தியாசங்களை எல்லாம் மனதில் கொண்டு ஒரு கருத்தை விளக்கும் உதாரணமாக வேண்டுமானால் இதை ஏற்றுக் கொள்ளலாம். எப்படி நமது கனவுலகில் சிந்தனைத் தோற்றங்கள் இருக்கின்றனவோ அதுபோல் இறைவன் சிந்தனையில் நாம் இருக்கின்றோம். வேறுபாடு என்னவென்றால் நாம் இஷ்டப்படி நமது சிந்தனையில் அவற்றை கொண்டு வரமுடியாது. அவனோ சுய இஷ்டமுள்ளவன். தன் இஷ்டப்படியே சிருஷ்டிகளை வெளியே சிருஷ்டிக்கிறான். கனவிலே இது நம்முடைய சிந்தனைதான் என்ற இல்ம் நமக்கு இல்லை. அவனோ எப்போதும் தன் சிந்தனைகளை அறிகிறான்.

நாம் சுயமாகவும் இல்லை. நிலையாகவும் இல்லை. எனவே நம் சிந்தனைகளையும் நிலைக்கச் செய்ய முடியாது.

அவனோ சுயமானவன்! நிலையானவன்! தன் சிந்தனைகளை நிலைக்கச் செய்கிறான்.

நமது சிந்தனைத் தோற்றங்களின் மீது நமக்கு எவ்வித அதிகாரமோ, ஆதிக்கமோ இல்லை. அவனோ அனைத்தின் மீதும் அதிகாரம் உள்ளவன். ஆதிக்கம் செலுத்துபவன்!

நமது சிந்தனை உருவங்களுக்கு நாம் நாட்டமோ, இக்தியார் எனும் இஷ்டமோ வழங்க முடியாது. அவனோ வழங்குகிறான்.

நாம் நமது சிந்தனை உருவங்களுக்கு நம்மைப் பற்றிய ஞானத்தை வழங்க முடியாது. அவனோ வழங்குகிறான்.

நாம் அவைகளுக்கு நம்மை காட்ட முடியாது. அவனோ காட்டுகிறான். நாம் அவைகளுக்கு அறிவையும் விளக்கங்களையும் தரமுடியாது. அவன் தருகிறான்.

நாம் அந்தத் தோற்றங்களை முற்றிலும் நம்மை விட்டும் வேறானதாகக் கருதுகிறோம். அவனோ அவைகள் ஜாத்திலே வேறானவை. உஜூதிலே ஒன்றானவை என்று அறிகிறான்.

ஆக நம்மைப் போன்று அவனை விளங்காமல் உதாரணத்தை அறியவேண்டும்.

இதே போல் எல்லா உதாரணங்களிலும் உள்ள குறைபாடுகளை மனதில் கொண்டு அவன் ஒப்பு உவமையற்றவன் என்பதையும் ஏற்றுக் கொண்டு உதாரணம் காட்டுவதில் தவறில்லை.

சினிமாவின் உதாரணமும் அவ்வாறுதான். உஜூது தான் "மன்பவுல் கமாலாத்"தாக அனைத்துக்கும் மூலமாக பிறப்பிடமாக இருக்கிறது. அர்ஷிலிருந்து பூமி வரை அகிலங்கள் அனைத்தும் அவன் சிந்தனையில் இருந்து வெளிப்பட்ட ஒரு சினிமாதான். அதன் தோற்றங்கள் அவனது இல்ம் எனும் பில்மிலே இருக்கின்றன. அவனுடைய உஜூது எனும் நூர் அந்த உருவங்களில் தானே வெளியாகி அவற்றைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அந்த உருவங்களோ உஜூதே இழாபியைப் பெற்று வெளியே தெரிந்து கொண்டிருக்கின்றன! பில்மிலே அதாவது இல்மிலே எப்படி இருந்ததோ அப்படியே தெரிகிறது. அப்படி அந்த உஜூது வெளியானதால் இந்த உருவங்களுக்கு ஹயாத்தும் கிடைத்தது. அறிவு, நாட்டம், சுய இஷ்டம், செயல்பாடுகள் அனைத்தும் கிடைத்தது. இது அவனுடைய பேராற்றலாலும் 'பைஜானே உஜூது' உஜூதுடைய அருளாலும் கிடைத்ததாகும்.

10. எச்சரிக்கை

எச்சரிக்கை! சில பெரியோர்கள். 'எல்லாம் அவனே' என்று கூறியிருப்பது 'உஜூதே இழாபீ 'யின் அடிப்படையில் தானேயன்றி வேறு இல்லை. அந்த உஜூது தன் அஸ்மாக்கள் சிபாத்களை மஜ்ஹர்களான அதாவது வெளியாகும் ஸ்தானமான சிருஷ்டிகளின் தோற்றத்தில் அதனதன் தன்மைகளுடன் வெளியே கொண்டு வந்தது.

அதாவது இவையெல்லாம் அவனையே காட்டக் கூடியதாக இருக்கின்றன. இதன் அடிப்படையில் 'எல்லாம் அவனே' என்று கூறியிருக்கிறார்கள். மற்றபடி எந்த வஸ்துவும் அவனாக முடியாது. அவன் எந்த வஸ்துவாகவும் ஆக முடியாது.

அதேபோல் சிலர் உஜூதை கதீமிலே கதீம் என்றும் ஹாதிஸிலே ஹாதிஸ் என்றும் கூறுவதும் இதன் அடிப்படையில்தான். அதாவது அல்லாஹ்வுடைய உஜூது கதீம் என்றென்றும் உள்ளது. நம்முடைய உஜூது ஹாதிஸ்–புதிதானது என்று கூறுகிறார்கள். இதனால் உஜூது இரண்டு இருக்கிறது என்று பொருளல்ல. உஜூது ஒன்றுதான் அதற்கு இரண்டு நிஸ்பத்துகள் தொடர்புகள் இருக்கின்றன. ஒன்று, அது கதீமானது. இன்னொன்று அது ஹாதிஸைக் காட்டுவது. கதீமாக இருப்பது என்பது அதன் 'நிஸ்பதே தாத்திய்யா' அசல் தன்மையாகும். அது எப்போதும் இருக்கும். ஹாதிஸ்களைக் காட்டுவது என்பது 'நிஸ்பத்தே இழாபிய்யா'வாகும். அதாவது எப்போதும் இருக்க வேண்டியதில்லை. அது ஹாதிஸ்களைக் காட்டாமல் தான் மட்டும் இருப்பினும் இருக்கும். இது அதனுடைய தனிச் சிறப்புத் தன்மையாகும்.

அப்படி உஜூது ஹாதிஸ்களைக் காட்டினாலும் அதனால் ஹாதிஸ்கள் அதில் எந்த விளைவையும்–அஸரையும் ஏற்படுத்த முடியாது. அதாவது உஜூது 'முதஅஸ்ஸிர்' அல்ல! ஏனெனில் விளைவுகளை உண்டாக்குவதற்கு இன்னொன்று அவசியம். அவனையன்றி வேறு எதுவும் மவ்ஜூதாக இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் ஆயிற்றே!

ஆகவே உஜூது "முஅஸ்ஸிர்" ஆகவும், "முதஅஸ்ஸிர் நுமா"வாகவும் இருக்கிறது. அதாவது உஜூது தான் விளைவுகளை உண்டாக்கக் கூடியதாகவும் சிருஷ்டிகளின் விளைவுகளை காட்டக்கூடியதாகவும் இருக்கிறது.

இன்னும் சிலரோ மதிமயங்கிய நிலையில் இப்படிக் கூறுகிறார்கள். "உஜூதே முத்லக் தான் தன் அந்தஸ்துகளை கவனித்து ரப்பாகவும் இருக்கிறது. அப்தாகவும் இருக்கிறது" நவூதுபில்லாஹ். (அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக.) ஒருபோதும் அவ்வாறு இல்லை. எனினும் அந்த வாசகங்களுக்கு அர்த்தம் "உஜூதே முத்லக் தான் ரப்புடைய ஜாத்து. அது தானல்லாத இன்னொரு ஜாத்தான அப்துடைய ஜாத்தைத் தன்னிலே காட்டுகிறது" என்று கூறினால் அது சரிதான்.

மாறாக ரப்புடைய ஜாத்தும் அப்துடைய ஜாத்தும் ஒன்றுதான் என்று கூறினால் நவூதுபில்லாஹ். அது குப்ரும், பகிரங்க வழிகேடுமாகும்.

சில பேர் தவறாக விளங்கி உஜூது ஹக்காக இருக்கும்போது தன்ஜீஹ் என்றும் அது கல்காக இருக்கும்போதும் தஷ்பீஹ் என்றும் பெயர் சொல்வதாக நினைக்கிறார்கள். நவூதுபில்லாஹ். ஒரு கற்பனைக்காக அவ்வாறு வைத்தாலும் எண்ணற்ற குறைபாடுகளும் பசி, தாகம், தூக்கம், மரணம் போன்ற ஹாதிஸ்களின் தன்மைகளும் அந்த உஜூதுக்குத்தான் சொந்தம் என்று ஆகிவிடும். பின்பு அது எப்படி ஹக்காக இருக்க முடியும். அவனை எப்படி இறைவன் என்று கூற முடியும். சுப்ஹானல்லாஹி அம்மா யசிபூன்–அவர்களின் வர்ணனைகளை விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன்.

எச்சரிக்கை! இவ்வாறெல்லாம் யார் இந்தக் கருத்துக்களையும் உதாரணங்களையும் தவறாக விளங்கிக் கொண்டார்களோ அவர்கள் ஷரீஅத்திற்கு–பரிசுத்த சன்மார்க்கத்திற்கு விரோதமாகிவிட்டார்கள்.

“வஹ்ததுல் உஜூது” என்பதை தவறாகப் பொருள் கொண்டு “இனி மேல் ஷரீஅத் நமக்குத் தேவையில்லை. அல்லாஹ்வும் அடியானும் ஒன்றுதான். அல்லாஹ் அடியானாகவும் அடியான் அல்லாஹ்வாகவும் ஆன பின்னால் யாருக்கு யார் வணக்கம் புரிவது? ஏவல் விலக்கல்களை செய்வது யார்? அதைப் பின்பற்றுவது யார்?” என்று கூறிவிடுகிறார்கள்.

இதே எண்ணத்தில் ‘தவ்ஹீதே பிஃலீ ’யையும் தவறாக விளங்கி தன்னை ‘மஜ்பூரே மஹஜ்’ என்று எண்ணிக் கொண்டார்கள். “பாவங்களை நம் சுய இஷ்டப்படி நாம் செய்வதில்லை” என்ற கூறுகிறார்கள்.

இவ்வாறே ‘அதாபு, ஸவாபு, சுவனம், நரகம், கியாமத் எல்லாவற்றையும் வெறும் விளையாட்டு என்று எண்ணிக் கொண்டார்கள். அதற்கு ஆதாரமாக வஹ்ததுல் உஜூதை முன் வைக்கிறார்கள்.

உண்மையில் இவர்கள் கூறுவது வஹ்ததுல் உஜூதே கிடையாது. அது அவர்களின் வழிகேடும் இல்ஹாதும் குப்ருமேயன்றி வேறில்லை. தங்களின் வீண் கற்பனையில் அதை வஹ்ததுல் உஜூது என்று எண்ணிக் கொண்டார்கள்.

وَإِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا

வெறும் கற்பனைகள் எந்த உண்மையின் சிறிதளவையும் பயனளிக்காது.

(53 : 28)

இங்கே ஒரு விளக்கத்தைக் கூற அவசியம் ஏற்படுகிறது. ஏனெனில் தவ்ஹீதே அப்ஆலியைப் பற்றிய பேச்சு வந்துவிட்டது. இதுவோ ஒரு மிகப் பெரும்

விஷயம். பெரும்பாலானவர்கள் இங்குதான் சருகி விடுகிறார்கள். இங்கே விழுந்தவன் எழுந்து நிற்கவே முடியாது. இங்கே சமாளித்துக் கொண்டவன் இந்தப் பாதையின் கடைசிவரை சென்று 'ஜன்னதுஜ் ஜாத்' அளவில் சேர்ந்து விடுகிறான். வழியில் வேறு பெரிய பிரச்சனைகள் வருவதில்லை. ஆகவே இது கவனத்துடன் கால் வைக்க வேண்டிய இடமாக இருக்கிறது.

இங்கே வழி தவறுவதற்குக் காரணம் 'வஹ்தத்துல் உஜூது' மஸ்அலாவை சரியாக விளங்காததுதான். சில பெரியோர்களின் கவிதைகளையும் கருத்துக் களையும் சிலர் தன் இஷ்டப்படி விளங்கிக் கொண்டு நாம் 'மஜ்பூரே மஹஜ்' முற்றிலும் சுய இஷ்டம் இல்லாதவர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள். இன்னும் அந்தப் பெரியோர்களின் கருத்தும் அதுவே என்று வீண் பழி சுமத்துகிறார்கள். நவூதுபில்லாஹ்.

11. தவ்ஹீதே பிஃலீ

இந்த மஸ்அலாவில் நமது ஈமானுடைய அடிப்படையில் குர்ஆனில் பல இடங்களில் இரண்டு விஷயங்கள் வந்திருக்கின்றன. ஒன்று, கஸ்பே பிஅல். இரண்டாவது முத்லக் பிஅல். நமது அகீதா கொள்கையின்படி அல்லாஹ்வை காலிகே அப்ஆல் என்றும், அடியானை காசிபே அஃமால் என்றும் கூறுகிறோம். இதைப்பற்றி சில விளக்கங்கள் மேலே சென்றிருந்தாலும் இங்கே சற்று விரிவாக அறிய வேண்டிய அவசியம் இருக்கிறது.

இங்கே நாம் சற்று ஆழ்ந்து யோசித்தால் இரண்டு கேள்விகள் எழுகின்றன ?

அடியான் 'காஸிபே அப்ஆலாக' செயல்களைச் சம்பாதிப்பவனாக இருக்கிறானா ? அல்லது இல்லையா ?

இல்லை என்று கூறினால் இவனை 'மஜ்பூரே மஹ்ஜ்' 'சுய இஷ்டமோ செயல்பாடோ இல்லாத நிர்பந்த நிலையில் உள்ளவன்' என்று கூறவேண்டிவரும். அப்படியானால் தீய செயல்களை யார் பக்கம் சம்பந்தப்படுத்துவது? தீய செயல்களை தீய செயல்களே அல்ல என்று கூறினால் புனித ஷரீஅத்தை பொய்யாக்க வேண்டிவரும். ஷரீஅத்தோ நிதர்சனமான உண்மையாகும். அதை மறுப்பது சாத்தியமற்றதாகும்.

ஆயிரம் அறிவாளிகள் ஆயிரம் மாற்றுக் கருத்துக்களையும் தஃவீல்களையும் கூறினாலும் ஷரீஅத்தை மார்க்கத்தை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் அறிவாளிகளும் அவர்களின் அறிவும் மக்லூக்–படைக்கப்பட்டவை தான். படைப்பினங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவோ மிகச் சொற்பமானதேயன்றி வேறில்லை. (இல்லா கலீலா). அதிலும் மிகுதமானவை ' ளன்னீ ' எனும் சந்தேகமான அறிவுதான். அதனால் தான் ரசூல்மார்கள் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லையெனில் ஒவ்வொரு சிந்தனை வாதியும் அல்லாஹ்வை அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ வெறும் கற்பனைக் கோட்பாடுகள். சாத்தியமற்ற சிந்தனைகளுக்குப் பின்னால் தடுமாறி நிற்கிறார்கள். ஆகவே அந்த சிந்தனை வாதிகளைப் பற்றி நமக்கு எந்தப் பேச்சும் இல்லை.

قُتِلَ الْخَرّٰصُوْنَ

வீண் கற்பனைக்காரர்கள் நாசமாகட்டும். (51 : 10)

அடுத்தபடி அடியானை காஸிபே அப்ஆலாக இருக்கிறான் என்று கூறினால் அவனிடத்திலும் செயல்பாடு இருப்பதாகக் கூறவேண்டும். எனவே இரண்டு பாஇல்களை ஒப்புக் கொள்ள வேண்டி ஏற்படுகிறது. இதுவும் சரியல்ல!

அல்லது அடியானுடைய கஸ்பில் செயல்பாடே (பிஅலிய்யத்) இல்லை என்று கூறினால் கஸ்புடைய அர்த்தம்தான் என்ன ?

இதற்கெல்லாம் பதில் முதலில் நமது ஈமானின்படி அல்லாஹ்வை காலிகே அப்ஆல் என்றும் அடியானை காசிபே அப்ஆல் என்றும் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்குப்பின் அதை ஆராய்ச்சி செய்யுங்கள். அந்த ஆராய்ச்சி கொள்கைக்கு நேர்பட்டிருந்தால் அல்ஹம்து லில்லாஹ் மிகவும் சிறப்பு. ஆனால் மாறுபட்டிருந்தால் அந்த ஆராய்ச்சியைப் புறக்கணியுங்கள்.

கேள்வி என்ன? அந்த ஆராய்ச்சி கொள்கைக்கு நேரானதாக ஆக முடியுமா? நிச்சயமாக முடியும். எப்படி முடியும்? அதை அறிந்த ஞானிகள் மூலம். ஏனெனில் இது சிர்ரே கதர்–விதியின் ரகசியம். அஸ்ராரே இலாஹிய்யா இறை ஞான ரகசியங்கள் சம்பந்தப்பட்ட மிக நுணுக்கமான மஸ்அலா. இதை அவர்கள் தான் தீர்த்து வைக்க முடியும். அதுவும் குர்ஆன் ஹதீஸுடைய அடிப்படையில் தீர்க்க வேண்டும்.

நாம் அதை இங்கு என்னதான் எழுதினாலும் புரிய வைக்க முடியாது. அவர்களிடம் சென்றுதான் அறிந்து கொள்ள முடியும். எனினும் நாம் இங்கே சிறிதளவு எழுதுகிறோம். இதேபோதும் என்று இருந்துவிடக் கூடாது.

“கஸ்ப்” என்றால் என்ன என்பதை நாம் முதலில் அறிய வேண்டும். அல்லாஹுத் தஆலா குர்ஆனில் எந்த இடத்திலும் கஸ்புடைய தொடர்பை தன் பக்கம் சேர்க்கவில்லை. அதை சிருஷ்டிகளின் பக்கமே சேர்ந்துள்ளான். உதாரணமாக,

كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ رَهِينَةٌ

ஒவ்வொரு ஆத்மாவும் தான் சம்பாதித்தவைகளைக் கொண்டே ஈடுவைக்கப் பட்டிருக்கின்றது. **(74 : 38)**

ஆனால் பிஅலுடைய தொடர்பை தன் பக்கம் சேர்த்திருக்கிறான்.

அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான். (14 :27) وَيَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ

தான் நாடியதை செயலாற்றுபவன். (85 : 16) فَعَّالٌ لِّمَا يُرِيْدُ

இதுவே மார்க்க சட்டமாக இருக்கிறது. அதாவது கஸ்புடைய தொடர்பை ஒருபோதும் ஹக்கின் பக்கம் சேர்க்காதே. அப்படி சேர்த்தால் அது வழிகேடுதான்.

அதே போல் கல்கே பிஅலை–பிஅலை உண்டாக்குவதை சிருஷ்டிகள் பக்கம் சேர்த்தால் அது ஷிர்க்கும் குப்ருமாகும். ஏனெனில்,

وَاللّٰهُ خَلَقَكُمْ وَمَا تَعْمَلُوْنَ

அல்லாஹ் உங்களையும் உங்கள் செயல்களையும் படைத்தான். **(37 : 96)**

அடியார்களின் பக்கம் செயல்களை இழாபத் (சுயமானது அல்ல) என்ற முறையில் சேர்த்தால் அது தவறில்லை.

இதனுடைய உண்மை என்ன ?

பிஅலே முத்லக் எனும் முழுமையான சுதந்திரமான சுய இஷ்டமான செயல்களும் அடியார்களுக்கு இல்லை.

ஜப்ரே முத்லக் எனும் முழுமையான நிர்பந்த நிலையும் அடியார்களுக்கு இல்லை.

இரண்டுக்கும் இடையில் இருக்கிறார்கள். செயலும் இருக்கிறது. செயலின்மையும் இருக்கிறது. இஷ்டமும் இருக்கிறது. இஷ்டமின்மையும் இருக்கிறது.

சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

'கஸ்ப்' என்பதற்கு அகராதிப்படி ஒரு பொருளும், குர்ஆனுடைய பரிபாஷை யில் ஒரு பொருளும் இருக்கிறது.

அகராதிப்படி 'கஸ்ப்' சம்பாதிக்குதல் என்றால் 'ஒரு செயலை ஒரு கருவியின் மூலம் நிகழ்த்தப் பெறுதல்' என்பதாகும். உதாரணமாக 'தச்சனின் சம்பாத்தியம்', கொல்லனின் சம்பாத்தியம்' என்பதைப் போல.

குர்ஆனுடைய பரிபாஷையில் "சுயமே செயல்படுவதற்கு சக்தி குவ்வத் இல்லாத ஆனால் குவ்வத்தை ஏற்றுக் கொள்ளுகிற தகுதியுடைய ஒரு பொருளுக்கு ஒருவன் குவ்வத்தைக் கொடுக்கும்போது அந்தப் பொருள் தனது தகுதிக்கு ஏற்ப அந்த குவ்வத்தை ஏற்றுக் கொள்வதற்கு 'கஸ்ப்' எனப்படும்.

அதற்கு ஆதாரம் قُلْ كُلٌّ يَعْمَلُ عَلَىٰ شَاكِلَتِهِ

நபியே! நீங்கள் சொல்லி விடுங்கள். ஒவ்வொருவரும் அவரவர்களின் இஸ்திஃதாத் - காபிலிய்யத்தே தாத்தி - ஷாகிலத்தின்படியே - சுய அமைப்பின் படியே செயல்படுவார்கள். (17 : 84)

குவ்வத்தைப் பொறுத்த வரை لَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

அல்லாஹ்வையன்றி யாருக்கும் சுயமே குவ்வத்-சக்தி கிடையாது. (18 : 39) இருப்பதெல்லாம் அல்லாஹ்வைக் கொண்டு தான் இருக்கிறது!

ஹதீஸ் ஷரீபிலே இதற்கு விளக்கம் இவ்வாறு வருகிறது.

لا حول بـــمعصية ولا قوّة بطاعة الا بالله

எந்த ஒரு பாவத்தைக் கொண்டும் ஆற்றலோ-நன்மையைக் கொண்டும் சக்தியோ அல்லாஹ்வைக் கொண்டே தவிர இல்லை.

இதன் மூலம் தெரிவது மனிதனுக்கு சக்தி இல்லை. இன்னும் சக்தி இருக்கிறது என்பதாகும். அதாவது சுயமாக சக்தியில்லை. அல்லாஹ்வைக் கொண்டு இருக்கிறது.

எப்படி உஜூது இழாபியானதாகவும் ஜாத் சுயமானதாகவும் இருக்கிறதோ அதே போல் குவ்வத் இழாபியானதாகவும் அதனுடைய நிஸ்பத்–செயல்படும் தகுதி சுயமானதாகவும் இருக்கிறது.

சூபியாக்கள் – முஹக்கிகீன்களின் வழக்குச் சொல்படி அந்த தகுதிக்கு 'இக்திழா' என்று கூறுவார்கள். அதாவது தனது ஜாத்தீ இக்திழாவின்படி மழ்ஹர் அல்லது மும்கினுக்கு இக்தியார் கிடைத்துள்ளது. (இக்திழா என்றால் மஃலூம் அல்லாஹ்வுடைய இல்மிலே இருந்த போதே என்னென்ன கோரிக்கைகள் தேட்டங்களுடன் இருந்ததோ அந்த தன்மைகளுக்குச் சொல்லப்படும்) இன்னும் 'சுய செயல்பாடு' என்ற முறையில் சக்தியற்ற மஜ்பூராகவே மும்கின் இருக்கிறது.

எப்படி உஜூதே ஹக் இல்லாமல் சிருஷ்டியின் ஜாத் வெளிப்பட முடியாதோ அதே போல் 'பாஇலிய்யத்தே இலாஹிய்யா' இல்லாமல்–அல்லாஹ்வின் குவ்வத் இல்லாமல் சிருஷ்டியின் 'இக்திழா' வெளியாக முடியாது.

இன்னும் எப்படி அல்லாஹ்வின் உஜூதைப் பெற்றதால் சிருஷ்டி அல்லாஹ்வாக முடியாதோ. அதே போல் அல்லாஹ்வின் 'பாஇலிய்யத்' செயல்படும் தன்மையைப் பெற்றதனால் சிருஷ்டி 'பாஇலே முத்லக்' சுய செயல்பாடுள்ளதாக ஆக முடியாது.

இன்னும் எப்படி உஜூதை ஏற்கும் தன்மை சிருஷ்டியில் இருப்பதனால் அதை 'மஃதூமே மஹஜ்' என்று நாம் சொல்வதில்லையோ அதே போல் இறைவனின் பாஇலிய்யத்தை ஏற்றுக் கொள்வதால் இதை 'மஜ்பூரே மஹஜ்' என்றும் சொல்ல முடியாது!

இன்னும் உஜூது ஒன்றாகவும் ஜாத் இரண்டாகவும் இருக்கிறது ஒன்று மவ்ஜூதே ஹகீகியான ஜாத். இன்னொன்று மவ்ஜூதே இழாபியான ஜாத்.

அதே போல ஹரகத் ஒன்றாகவும் அதனுடைய நிஸ்பத் – சம்பந்தம் இரண்டாகவும் இருக்கிறது. ஒன்று ஹகீகீ. இன்னொன்று இழாபீ. ஒன்று ஹக்குடன் உள்ள தொடர்பு இது அசலானது – சுயமானது – உண்மையானது – ஜாத்தீயானது. இன்னொன்று சிருஷ்டியுடன் உள்ள தொடர்பு இது இழாபியானது இக்திழாயே ஜாத்தீயுடைய அடிப்படையில் ஆனது! அந்த அடிப்படையில் தான்

كُلُّ نَفْسٍۭ بِمَا كَسَبَتْ رَهِينَةٌ

ஒவ்வொரு ஆத்மாவும் தான் சம்பாதித்தவைகளைக் கொண்டு பிணை வைக்கப்பட்டிருக்கின்றன (74 : 38) என்று கூறப்பட்டது.

12. உதாரணங்கள்

இதற்கு உதாரணமாக இப்படி விளங்குங்கள். அவன் தச்சு வேலை செய்கிறான். அவன் கொல்லனுடைய சம்பாத்தியம் செய்கிறான். அவன் தையல் காரனுடைய சம்பாத்தியம் செய்கிறான். அவன் கொத்தனாருடைய சம்பாத்தியம் செய்கிறான் என்று நாம் சொல்வதைப் போல.

விளக்கமாகக் கூறுவதென்றால் இப்படிக் கூறலாம். இந்த உதாரணத்தை ஒரு வகையில் 'மின் வஜ்ஹ்' எடுத்துக் கொள்ள வேண்டுமேயன்றி அப்படியே முழுமையாக அல்லாஹ்வுக்குப் பொருத்தக் கூடாது. விளங்க வைப்பதற்காக நிர்ப்பந்தமாக உதாரணம் கூறவேண்டி ஏற்படுகிறது.

தச்சு வேலை செய்பவன் உளி, அரம், ரம்பம் முதலிய கருவிகளை வைத்து தனது 'தச்சு வேலை' எனும் சம்பாத்தியத்தைச் செய்கிறான். அவனுக்கு ரம்பம் முதலிய கருவிகள் கிடைக்கவில்லை எனில் அவனுக்கு 'மஜ்பூரி–நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. அதாவது அந்த வேலை நிகழ முடியாது. உதாரணமாக ரம்பம் கைவசம் இல்லாத ஒரு தச்சனிடம் 'ஐயா இந்த பலகையை அறுத்துக் கொடுங்கள்' என்று நீங்கள் கேட்டால், அவன் என்னிடத்தில் ரம்பம் இல்லையே! என்ன செய்வது நான் மஜ்பூராக நிர்கதியாக இருக்கிறேன் என்று கூறுவான். இத்தனைக்கும் அவனுக்கு அவனது இஸ்திஃதாத்–தகுதிப்படி தச்சு வேலை செய்வதற்கு இக்தியார்–முழு இஷ்டம் இருக்கிறது. அந்தக் கலை கருவியில்லாமல் ஒருபோதும் வெளிப்படாது.

அதேபோல் தச்சுத் தொழிலையே அறிந்திராத ஒரு மனிதனிடம் உளி, ரம்பம் முதலிய கருவிகளைக் கொடுத்து 'ஐயா தாங்கள் இந்தப் பலகையைச் சற்று அறுத்துக் கொடுங்கள். ஒரு கதவு செய்து கொடுங்கள். ஒரு அலமாரி செய்து கொடுங்கள்' என்று கேட்டால் அவன் என்ன சொல்லுவான்? பெரியவரே! இந்தக் கலையே எனக்குத் தெரியாது! என்னால் இந்த வேலையைச் செய்யவும் முடியாது. கருவிகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? இந்தக் கலை என்ற இஸ்திஃதாத் தகுதியே எனக்கு இல்லை' என்பான். அதாவது 'இந்தக் கலையைப் பொருத்தவரை நான் 'மஜ்பூரே மஹஜ்' செயலற்றவன் என்கிறான்.

இதே போன்றுதான் எல்லா சம்பாத்தியங்களும், தொழில்களும் இருக்கின்றன.

இதை வைத்து நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். 'அஹ்லே கஸ்ப்' 'சம்பாத்தியம் உடையவர்கள்' ஒவ்வொருவரும் அவரவர் கலையிலும், சம்பாத்தியத்திலும் சுய இஷ்டம் உடையவர்களாக இருப்பினும் கருவி எனும் சக்தி இல்லாமல் அவர்கள் மஜ்பூர்களாக செயலற்றவர்களாக இருக்கிறார்கள். அதேபோல் அந்தக் கருவிகளின் சக்தியும் அவரவர்களின் திறமைப்படியும்

தகுதிப்படியும் தான் வெளியாகிறது. எனவே தான் ஒரு பைத்தியக்காரன் கூட அந்தக் கருவிகளை 'காசிப்' சம்பாதிக்கக் கூடியது என்று சொல்லமாட்டான். அந்தத் தொழில் செய்பவர்களைத் தான் 'சம்பாதிப்பவர்' என்று கூறுவான். கருவிகளை கருவி என்று தான் கூறுவான்.

இந்த உதாரணத்தின் மூலம் விளங்குங்கள் அடியான் காசிபே அஃமால்–அமல்களை (செயல்களை)ச் சம்பாதிப்பவன் ஆவான். அவன் அந்த சம்பாத்தியத்தை செய்வதற்கு குவ்வத்தே இலாஹிய்யா தான் (இறை சக்தி தான்) கருவியாக வழியாக இருக்கிறது. ஆனாலும் அந்த சம்பாத்தியம் இவனது தகுதி இஸ்திஃதாத்துக்கு தோதுவாகத் தான் இருக்கும். கருவியாகிய குவ்வத்தின் மீது எந்த குற்றமும் வராது. ஏனெனில் சம்பாதிக்கும் தகுதி இவனது சுய இஷ்டத்தோடு சம்பந்தப்பட்டுள்ளது. இவனது தகுதியை வெளியே கொண்டு வந்தது குவ்வத் தான். அந்த குவ்வத் இவனுக்கு இழாபியாகக் கிடைத்திருக்கிறது.

இதே உதாரணத்தை இன்னொரு முறையிலும் விளக்கலாம். அதுவும் சரியாகவே இருக்கும்.

அதாவது ஹக் தஆலாவை செய்பவனாகவும் மக்லூக்கைக் கருவியாகவும் உதாரணப்படுத்தி விளங்கலாம். இந்த முறையில் பார்த்தால் கருவியில் என்ன தன்மைகள் இருக்கின்றனவோ அது அதனுடைய 'இக்திழா' தகுதிகள், தேட்டங்கள் ஆகும். அந்தத் தகுதிகளின் அடிப்படையில் அதற்கு 'இக்தியார்' இஷ்டம் இருக்கிறது. ஆனால் செயல்படுபவன் ஒருவனின் சக்தியின்றி அதனுடைய திறமைகள் தகுதிகள் வெளிப்பட முடியாது. எனவே அதன்படி அது மஜ்பூராக செயலற்றதாக இருக்கிறது. ஆனால் மஜ்பூரே மஹஜ் அல்ல. அதனுடைய இக்திழா தகுதிப்படியான இஷ்டம் அதற்கு இருக்கிறது. உதாரணமாக ரம்பம் வீணாகி விட்டால் அதிலே சக்தி செயல்பட்டாலும் அதனுடைய தகுதிகள் வெளிப்படாது. அது அறுக்காது. அதனால் தச்சனை யாரும் குறை சொல்ல மாட்டார்கள்.

ஏனெனில் அறுக்கும் தன்மை ரம்பத்துக்குச் சொந்தமானது. அதுதான் அதனுடைய ஜாத்தீ இஸ்திஃதாத்–சுய தகுதியாகும். அறுக்கும் செயல் அதற்குள்ள சக்தி குவ்வத் தச்சனுக்குச் சொந்தமானது. இது அவனுடைய சிபத்தே ஜாத்தீ–சுய தன்மையாகும். எனவே இப்படித்தான் சொல்லுவார்கள். 'தச்சன் அறுக்கத்தான் செய்தான். ஆனால் ரம்பம் தான் வீணாகியிருந்தது. அவன் நன்றாகத்தான் இழைத்தான். ஆனால் இழைப்புளி சரியில்லை'. பார்த்தீர்கள்! பிஃலுடைய ஹகீகத்தான ஹரகத்–அசைவு ஒன்றுதான் இருந்தது. ஆனால் அதன் ஒரு நிஸ்பத் சம்பந்தம் ரம்பத்தின் பக்கம் சேர்க்கப்பட்டது. 'அது நன்றாக அறுக்கவில்லை' என்றார்கள். இன்னொரு நிஸ்பத் சம்பந்தம் தச்சன் பக்கம் சேர்க்கப்பட்டது. 'அவன் நன்றாகத்தான் அறுத்தான்' என்றார்கள்.

இதேபோல் ரம்பம் கூராக இருக்குமானால் அந்தத் தன்மையும் ரம்பத்துக்குத் தான் சொந்தமானது. 'நன்றாக அறுத்தது' என்பார்கள். ஆனால் இரண்டு

நேரத்திலும் அறுக்கக்கூடிய தச்சனோ ஒருவன் தான். தச்சனிலோ செயல் சுயமே இருந்தது. ரம்பத்திலோ சுயமாக இல்லை. வெளியில் இருந்து கிடைத்தது தச்சனின் இக்தியார் இஷ்டமோ சுயமானது. ரம்பத்தின் இஷ்டமோ அதன் தகுதியைச் சார்ந்தது.

ரம்பம் போன்ற கருவிகள் இல்லை என்றால் தச்சனின் செயல் வெளிப்படாது. அதேபோல் ரம்பம் இருந்தது. அதில் கூர்மையும் இருந்தது. ஆனால் செயலை நிகழ்த்துபவன் இல்லையென்றாலும் அந்த ரம்பத்தின் தன்மை வெளிப்படாது.

அதே சமயம் தகுதிகள்–தன்மைகள்–சிபத்தே இன்பிஆலி எதுவும் தச்சனுக்குச் சொந்தமாகாது. தச்சனின் தன்மைகள் எதுவும் ரம்பத்துக்குச் சொந்தமாகாது. தச்சனின் சக்தியை–செயலை அருளாகப் பெற்று தனக்குள் மறைந்திருந்த தனது தகுதிகளை இந்த ரம்பம் வெளிப்படுத்தியது அவ்வளவுதான்!

இந்த உதாரணங்களிலும் குறை இருக்கவே செய்கிறது. இந்த உதாரணத்தின் முதல் கண்ணோட்டத்திலே கருவிகளை குவ்வத்தே இலாஹிய்யா வுக்கு உதாரணமாகக் கூறினோம். உண்மையில் அந்த கருவிகளில் செயல்படும் ஆற்றல் சுயமே இல்லை. தச்சனில்தான் இருக்கிறது. எனவே உதாரணத்தை முற்றிலும் பொருத்திப் பார்க்கக்கூடாது.

இங்கு விளங்க வேண்டியது என்னவெனில் கருவிகளைக் கொண்டு நோக் கம் குவ்வத்தே இலாஹிய்யா–இறைவனின் சக்தியாகும். தச்சனைக் கொண்டு நோக்கம் மனிதனாவான். செயல்களின் வெளிப்பாடு அவனது இக்திழா–தேட்டமாகும். சம்பாதிக்கும் வழிமுறை அகல் எனும் அறிவாகும். அகலுடைய தேட்டம் இக்தியாரே இஸ்திஃதாதீ–இவன் தகுதிப்படியான இஷ்டம் ஆகும்.

ஆக மனிதன் தன் அறிவின்படி, தன் தகுதிப்படியான இஷ்டத்தின் மூலம் தனது இக்திழா எனும் தேட்டத்தின் அடிப்படையில் ஹக் தஆலாவின் சக்தியின் மூலமாக செயல்களை சம்பாதிக்கிறான்.

எனவே இந்த கஸ்பே பிஅலுடைய சம்பந்தம் அல்லாஹ்வின் பக்கம் சேர முடியாது. ஏனெனில் மனிதனுக்கு அவனுடைய இக்திழாபடிதான் ஹக்குடைய குவ்வத் கிடைத்திருக்கிறது. அவனுடைய ஜாத்தி இக்திழாபடி செயல்கள் வெளிப் படும்போது ஹக் தஆலா அவனுக்கு இக்தியார் எனும் இஷ்டத்தையும் கொடுத் திருக்கிறான். அந்த இஷ்டத்தை அகல்–அறிவு பயன்படுத்துகிறது. இன்னும் இந்த இக்திழா முறையிலான சம்பந்தம் ஹக் தஆலாவுடைய ஜாத்தி சிபத் அல்ல!

இந்த உதாரணத்தின் இரண்டாவது கண்ணோட்டத்திலே கருவிகளை மனிதனுக்கு ஒப்பிட்டோம். இதிலும் குறை இருக்கவே செய்கிறது. அதாவது அந்தக் கருவியிலே 'இக்தியார்' எனும் இஷ்டம் இல்லை. தச்சன் தன் விரும்பியபடி அவற்றை செய்கிறான். இன்னும் பயன்படுத்துகிறான்.

இதில் நாம் விளங்க வேண்டியது என்னவெனில் தச்சன் என்பதைக் கொண்டு நோக்கம் பிலா தஷ்பீஹ் ஹக் தஆலாவாகும். கருவிகளைக் கொண்டு

நோக்கம் மனிதனாவான். கருவியிலோ வெளிப்படையில் இக்தியார் இஷ்டம் இல்லை. அதன் இஸ்திஃதாத் தகுதியிலே இஷ்டம் இருக்கிறது. மனிதனில் அப்படியில்லை. அவனுக்கு வெளிப்படையிலேயே அவனது இக்திழாவின்படி இக்தியார் இருக்கிறது. இதை அவனது அறிவு உறுதிப்படுத்துகிறது. இன்னும் இது அல்லாஹ்வின் குத்ரத்தாக இருக்கிறது.

எப்படி மனிதனின் ஜாத் உண்மையில் இருந்தாலும் அதன் வெளிப்பாடு ஹக்குடைய உஜூது இல்லாமல் முடியாதோ. இன்னும் அல்லாஹ்வுடைய மவ்ஜூதிய்யத் இருப்பதுடனே இவனுக்கும் இழாபியான ஒரு மவ்ஜூதிய்யத் இருக்கிறதோ அதே போலவே மனிதனுக்கு அசலீ இக்தியார் இல்லாத நிலையிலும் இக்திழாயீ இக்தியார் இருக்கவே செய்கிறது. ஹக் தஆலாவிற்கு ஜாத்தியான பாஇலிய்யத் இருப்பதுடன் மனிதனுக்கு இழாபியான பாஇலிய்யத் இருக்கவே செய்கிறது. இதுதான் ஹகீகத்தே கஸ்ப்–கஸ்ப்புடைய உண்மை விளக்கமாகும். இதை நன்றாக விளங்குங்கள்.

இதன் அடிப்படையில்தான் 'ஹாபிஜ்' அவர்களின் கவிதையை விளங்க வேண்டும்.

گناه گرچه نبود اختیار ما حافظ
تو در طریق ادب کوش وگو گناه من است

(பொருள் : ஹாபிஜே! பாவம் என்பது நமது இஷ்டப்படி இல்லை. எனினும் நீ மரியாதையை கடைபிடிப்பாயாக. இன்னும் இது என்னுடைய பாவம் என்றே சொல்வாயாக)

இதில் பாவம் நமது இஷ்டப்படி இல்லை என்பதன் பொருள் என்ன ? நாம் சுய செயல்பாடு உடையவர்களாக பாஇலே ஹகீகியாக இல்லை என்பதால் நமக்கு சுயமான இஷ்டம் இல்லாதிருந்தது. அத்துடனே மரியாதை 'தரீக்கே அதப்' என்ன ? எதை எதை யார் பக்கம் சேர்க்க வேண்டுமோ அதை அதை அவர்கள் பக்கமே சேர்க்க வேண்டும். நிஸ்பத்துகளில் வித்தியாசம் இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். உன்னுடைய இக்திழாபடியான இக்தியார் உண்மையிலேயே உனக்கு இருக்கிறது. அதை ஒருபோதும் மறந்துவிடாதே. எனவே அது 'உன்னுடைய பாவம் தான்' என்று உறுதியாகக் கூறு என்று விளக்குகிறார்கள். இந்த முறையில் நமக்கு விஷயம் தெளிவாகிறது.

சிலர் கூறுகிறார்கள் : இது வலுக்கட்டாயமாக ஒரு மரியாதைக்காக நமது பாவம் என்று கூறிக் கொள்கிறோம். உண்மையில் பாவத்தில் நமக்கு எந்த இஷ்டமும் இல்லை என்று கூறுகிறார்கள். இது பெரும் தவறு ஆகும். இப்படித் தான் சிலர் தன்னை 'மஜ்பூரே மஹ்ஜ்' எந்த இஷ்டமும் இல்லாதவர்கள் என்று எண்ணிக்

கொள்கிறார்கள். அதாவது 'ஜமாதாத்' எனும் ஜடப்பொருட்கள் போன்றுதான் மனிதன் என்று எண்ணுகிறார்கள். இது உண்மைக்கு புறம்பானதாகும். ஏனெனில் ஜடப்பொருட்களுக்கும் தாவரங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மிருகங்களுக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

உண்மையிலேயே மனிதன் ஜடப் பொருட்களைப் போல் இருந்தால் அவர்கள் சொல்வது ஒருவேளை சாத்தியமாகலாம். மனிதனுக்கு அகல் எனும் அறிவே இல்லாதிருந்தால் அவ்வாறு கூறலாம். சிறிய குழந்தைகளைப்போல இருக்க வேண்டும். அவர்களுக்கு அகல் இல்லை. ஒரு அசையும் ஜடப் பொருள் போன்று அவர்கள் இருக்கிறார்கள். நன்மை–தீமைகளை அறிவதில்லை. புகழ் இகழ்களை அறிவதில்லை. தோற்றத்திலும், உள்ளத்திலும் ஒரே நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இங்கோ அப்படி இல்லை. எல்லாவற்றைப் பற்றிய அறிவும் இருக்கிறது. பிறகு தன்னை ஜடப் பொருளைப் போன்று என்று எவ்வாறு சொல்ல முடியும்?

ஆக எப்படி மனிதன் பிஃலிய்யத்தில் மஜ்பூரே மஹ்ஜ் ஆக இல்லையோ அவ்வாறே பாயிலிய்யத்தில் முக்தாரே மஹ்ஜ் ஆகவும் இல்லை. முக்தாரே மஹ்ஜ் என்று எண்ணுவது ஷிர்க் என்றால் மஜ்பூரே மஹ்ஜ் என்பது குப்ர் ஆகும். அதுமட்டுமின்றி தெளிவான அறிவும் இதையே கூறுகிறது. உதாரணமாக மனிதன் முக்தாரே மஹ்ஜ் ஆக தன்னின் மீது தானே முழு ஆதிக்கம் உடையவனாக இருந்தால் தன்னை எப்போதும் உயிருடன் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் மரணத்தை யாரும் விரும்புவதில்லை. நிர்பந்தமாகத்தான் மரணிக்கிறான். அதுதான் முடியாவிட்டாலும் தன்னை எப்போதும் இளமையுடன் வைத்திருக்க வேண்டும். முதுமையடையக் கூடாது. ஏனெனில் முதுமையை யாரும் விரும்புவதில்லை. இதுவும் முடியாவிட்டால் குறைந்தபட்சம் தன் முடியையாவது கருப்பாக வைத்திருக்க வேண்டும். ஏனெனில் முடிகள் நரைப்பதை யாரும் விரும்புவதில்லை. ஆக நிர்பந்தமாக மரணிக்கிறான். நிர்பந்தமாக முதுமையை அடைகிறான். நிர்பந்தமாக நரைத்துப் போகிறான். இதுபோல் எத்தனையோ விஷயங்கள் இவன் இஷ்டம் இல்லாமல் நடைபெறுகின்றன. பிறகு எப்படி தன்னை 'முக்தாரே மஹ்ஜ்' என்று கூறமுடியும்.

இந்த அனைத்து விஷயங்களிலும் இருந்து சுருக்கமாக நமக்குத் தெரிய வருவது, மனிதனுக்கு இஷ்டத்திலும் நிர்பந்தம் இருக்கிறது. நிர்பந்தத்திலும் இஷ்டம் (மஜ்பூரீ மே இக்தியார் – இக்தியாரீ மே மஜ்பூர்) இருக்கிறது.

இஷ்டத்திலே உண்டான நிர்பந்தம் யாதெனில் இவனது நிஸ்பத்தே பக்ர் ஆகும். அதாவது செயலை சுயமே வெளியாக்க இயலாமல் அல்லாஹ்வின் பக்கம் தேவையாவதாகும். நிர்பந்தத்திலே உள்ள இஷ்டம் என்பது அவனது பேரருளும் அவன் தன் கருணையால் இட்ட பிச்சையுமாகும். சுருக்கமாக 'இக்திழா'வுடைய அடிப்படையில் قل كل يعمل على شاكلته ஒவ்வொருவரும் தங்கள் அமைப்பின்படியே செயல்படுகிறார்கள் (17 : 84) என்பதும் உறுதியானதாக இருக்கிறது. இன்னும் அந்த

'இக்திழா' வெளிப்படும் விஷயத்தில் والله خلقكم وما تعملون அல்லாஹ்தான் உங்களையும் உங்கள் செயல்களையும் படைத்தான் (37 : 96) என்பதும் உறுதியானதாக இருக்கிறது.

இதைத் தவிர பாஇலே முத்லக்குடைய இன்னொரு இஃதிபாரும் இருக்கிறது. அது அவனுடைய பேராற்றலாகும்.

وَيَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ

அல்லாஹ் எதை நாடுகிறானோ அதை செய்வான். (14:27)

وَاللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

அவன் அனைத்து வஸ்துக்கள் மீதும் சக்தி படைத்தவன். (3 : 29)

ஆனால் இந்த இடமோ கேள்வி கேட்பதற்கும் ஆராய்வதற்கும் உரிய இடமல்ல. ஏனெனில் இங்கே 'மஃலூம்' (அறியப்பட்டது) ஆகிறது 'தாபியே இல்ம்' ஆக இருக்கிறது. ஆக இந்த இரண்டு நிஸ்பத்துகளையும் கவனிப்பதுதான் சிராதுல் முஸ்தகீமாக–நேரான பாதையாக இருக்கிறது.

இந்தக் கருத்தையே மவ்லானா ரூமி (ரஹ்) அவர்கள் இவ்வாறு விளக்குகிறார்கள்.

"ஷைத்தான் அல்லாஹ்விடம் بما اغويتنى நீ தான் என்னை வழிகேட்டில் ஆக்கினாய் (15 : 39) என்றான். அதாவது நான் ஒன்றும் செய்யவில்லை. ஆதமுக்கு சஜ்தா செய்வதற்கும் செய்யாது இருப்பதற்கும் என்னிலே என்ன குவ்வத்–சக்தியிருக்கிறது? நீ தான் என்னை செய்யாமல் ஆக்கினாய்! என்னிலே எந்த செயல்பாடும் இல்லை என்றான். அந்த வழிகேட்டுடன் இங்கே தனது பங்கை முற்றிலும் நிராகரித்து விட்டான். தன்னை மஜ்பூரே மஹழ் என்று எண்ணிக் கொண்டான். செயலில் தனக்குள்ள ஜாத்தியான வாகயீயான நிஸ்பத்தை–சம்பந்தத்தை விழச் செய்துவிட்டான். நமது தகப்பனார் ஆதம் (அலை) அவர்களிடம் தான் நாம் தவ்ஹீதே பிஃலீயுடைய பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் நிஸ்பத்தே பிஃலீயை தனது சம்பந்தத்தை மறுக்கவில்லை. தனது ஜாத்தீ இக்திழாவை மறைக்கவில்லை.

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا

"ரப்பே! நாங்கள்தான் எங்களுக்கே அநீதி செய்து கொண்டோம்" (7 : 25)

என்று தெளிவாக சொல்லிவிட்டார்கள். தடுக்கப்பட்ட அந்த மரத்தை நாங்கள் தான் நெருங்கினோம். நீ எங்களை மன்னித்து அருள் புரியாவிட்டால் நிச்சயம் நாங்கள் நஷ்டவாளிகளில் உள்ளவர்களாக ஆகிவிடுவோம் என்றார்கள். இறைவனிடம் மன்னிப்புத் தேடினார்கள். தவ்ஹீதே அப்ஆலியைக் காரணம் காட்டவோ வேறு

தந்திரங்கள் செய்யவோ இல்லை. ஆதமின் மக்களே! நீங்களும் இந்த வழியையே கடைபிடியுங்கள். இப்லீசைப் போல் தவ்ஹீதே பிஃலீயைத் தவறாக விளங்கி தன்னை மஜ்பூரே மஹஜ் என்று எண்ணாதீர்கள். தவ்ஹீதே பிஃலீயைத் தலை சாய்த்து ஏற்றுக் கொள்வதேயன்றி அதிலே எந்தத் தர்க்கமும் புரியாதீர்கள். ஷைத்தானைப் போல் வீண் தர்க்கங்களில் மாட்டிக் கொள்ளாதீர்கள். அவன் அல்லாஹ்விடமே கூறினான். 'நான் நல்லவன்தான். நீதான் என்னைக் கெடுத்தாய். உன்னால்தான் எனக்கு இந்த ஆபத்து வந்தது' என்று.

எச்சரிக்கை! இவ்வாறு தனது இக்தியாரை இஷ்டத்தை ஒதுக்கி வைத்து விட்டு ஜப்ரிலேயே நிற்பது ஷைத்தானுடைய இன்னும் அவனது வாரிசுகளுடைய வழக்கமாகும். இதற்குப்பின் மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். உனக்கு என்ன வந்தது? உனது நப்ஸ் – மன இச்சை எதையெல்லாம் விரும்புகிறதோ அங்கே இக்தியார் – இஷ்டம் இருப்பதாக விளங்குகிறாய்! அதை அடைய வேண்டும் என்ற ஆசைப்படுகிறாய்! உனது அகல்–அறிவு எதை அவசியம் என்கிறதோ அங்கெல்லாம் 'நான் மஜ்பூர் – நான் என்ன செய்ய முடியும்' என்கிறாய்! இவ்வாறு ஒருபோதும் செய்யாதே!

உன்னுடைய செயலையும் பார், "அது உன்னுடைய இக்திழா இன்னும் ஜாத்தீ இஸ்திஃதாத் உடைய சம்பந்தமாகும். அவனுடைய செயலையும் பார்! உன்னுடைய இக்திழாபடியான செயல் வெளிப்படுவதற்கான குவ்வத்தை அவன் தருகிறான். இதுதான் உண்மை! இந்த உண்மையை உன் அறிவால் விளங்கினாலும் சரி. இஷ்க் எனும் காதலால் உணர்ந்தாலும் சரி. இதைத் தவிர வேறு பாதையில் சென்றால் வழிகேட்டைத் தவிர வேறெதுவும் இல்லை.

13. இக்திழா

இங்கே இன்னொரு சிறிய சந்தேகம் பாக்கி இருக்கிறது. அதாவது நமக்கு இக்திழாயீ அல்லது இஸ்திஃதாதீ அடிப்படையிலான இஷ்டம் இருக்கிறது. எனினும் இந்த இக்திழா (தேட்டம்) இஸ்திஃதாத்–தகுதிகள் இவையும் அவனால் படைக்கப்பட்டதுதானே. அப்படியிருக்கும் நிலையில் நம்மை மஜ்பூர்–சுய இஷ்டம் இல்லாதவர்கள் என்று ஏன் சொல்லக் கூடாது ?

இந்தக் கேள்விக்கு பதில் இதுதான்! அதாவது இக்திழா–இஸ்திஃதாத் என்பதன் விளக்கமே அது யாராலும் படைக்கப்பட்டதல்ல என்பதே! முஹக்கிக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்ட விஷயம் இதுதான். இக்திழா என்பது யாராலும் உண்டாக்கப்படாமல் ஜாத்திலேயே தரிபட்டிருக்கக் கூடியதாகும்.

قَدْ يَعْلَمُ مَآ اَنْتُمْ عَلَيْهِ

நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே அல்லாஹ் அறிகிறான். **(24 : 64)**

எனவே இக்திழா என்பது (மக்லூக்) படைக்கப்பட்டதோ (மஜ்ஊல்) ஆக்கப்பட்டதோ அல்ல! ஏனெனில் இது கமாலாத்தே ஜாத்திய்யாவுடைய பைஜானாக இருக்கிறது. ஒவ்வொரு ஜாத்திலும் பொதிந்துள்ள தன்மைகளாக இருக்கிறது. இதன் சம்பந்தம் இராதா–நாட்டத்துக்கும் முந்தியதாக இருக்கிறது. இல்முடைய மர்தபாவிலேயே தரிபட்டதாக இருக்கிறது. அல்லாஹ்வுடைய இல்ம் ஞானம் எனும் சிபத் கதீமானது துவக்கமில்லாதது. எனவே அவனுடைய மஃலூமாத்துகளும் கதீமானவையாகும்.

ஹக் தஆலாவுடைய மஃலூமாத்களை கதீம் என்று கூறவில்லை எனில் அவற்றை ஹாதிஸ் – புதிதாகத் தோன்றியவை என்று கூறவேண்டும். அப்படியானால் நவூதுபில்லாஹ். ஹக் தஆலா சம்பந்தமாக இரு நக்ஸ்கள் குறைகள் அவசியமாகும். ஒன்று ஹக் தஆலா 'மஹல்லே ஹவாதிஸ்'–ஹாதிஸ்களுக்கு இடமாக ஆகுதல் ஏற்படும். இரண்டாவது ஹக் தஆலா ஒரு மர்தபாவிலே ஜாஹிலாக 'சிருஷ்டிகளை அறியாதவனாக ஆகுதல்' ஏற்படும். இந்த இரண்டுமே ஹக் தஆலாவின் தாத்துக்கு முஹாலானதாகும். சாத்தியமற்றதாகும்.

அப்படியானால் இரண்டு கதீம்களை ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியம் வருகிறதே என்று கேள்வி வரலாம். அதற்கு பதில் என்னவெனில் அந்த இரண்டு கதீம்களில் ஒன்று கதாமத்தோ ஜாத்தீ இன்னும் உஜூதியாகும். இன்னொன்றுடைய கதாமத்தோ சுபூத்தி இன்னும் இல்மீயாகும். அதாவது 'கதீம் பிஜ்ஜாத்'துடைய கதீமான இல்மிலே இது தரிபட்டிருக்கிறது. எனவே இரண்டு இருக்கிறது என்ற சந்தேகமே இங்கு வராது. இரண்டுக்கும் உஜூது இருக்கிறது என்று சொன்னால்தான் அந்த சந்தேகமே வரும்!

இன்னும் சிபாத்துகள் அதிகம் இருப்பதினால் ஜாத் அதிகம் இருப்பது அவசியம் இல்லை. அதாவது ஒரு ஜாத்திலேயே பல சிபாத்துகள் இருக்கலாம். அதே போலவே அஸ்மா சிபாத்துகளின் மஜ்ஹர்களான மஃலூமாத் பல இல்மிலே தரிபட்டிருப்பதால் ஜாத் அதிகம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதற்குஹூபஹூ நேருக்கு நேர் உதாரணம் கூறுவது முடியாது. எனினும் மின்வஜ்ஹ். ஒரு வகையில் உதாரணம் கூறலாம். இந்த உதாரணத்தில் உள்ள குறைகளையும் சுட்டிக் காட்டுவோம்.

உதாரணமாக ஒரு ஓவியனின் சிந்தனையில் ஒரு நல்ல தோற்றமும் ஒரு தீய தோற்றமும் இருக்கிறது. அந்த இரண்டுடைய நல்லவை கெட்டவை அவை அவைகளின் இக்திழாயே ஜாத்தீ அடிப்படையில் ஆனதாகும். அவை இரண்டின் தன்மைகள், திறமைகள் ஓவியனின் சிந்தனையில் சட்டென தோன்றியவையாகும். இந்தத் தன்மைகள் அந்தத் தோற்றங்களின் 'நிஸ்பத்தே ஜாத்திய்யா' எனப்படும். ஏனெனில் ஓவியன் வேண்டுமென்றே ஒரு நல்ல தோற்றத்தின் இக்திழா எனும் தன்மைகளை தீயதாகத் தானே கற்பனை செய்யவில்லை. மாறாக அந்த இரண்டு தோற்றங்களும் அவனது சிந்தனையில் (கியாலில்) அப்படி அப்படியே வந்தன. அது நல்ல தோற்றமாக இருந்தாலும், கெட்ட தோற்றமாக இருந்தாலும் அவனுடைய சிந்தனையிலேயே இருக்கும் வரையில் அவை 'ஓவியம்' என்று சொல்லப்படுவதில்லை. 'கியாலீ நக்ஷ்'–சிந்தனைத் தோற்றம் என்றுதான் சொல்லப்படும்.

இங்கே நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். இந்த இரண்டு தோற்றங்களும் அவனது இராதா–நாட்டத்தின் மூலம் சிந்தனையில் உண்டானவையல்ல. அவை சட்டென தோன்றியவையாகும். ஆம்! அந்தத் தோற்றங்களை ஓவியமாக வரைய நினைக்கும்போது 'நாட்டம்' அங்கே ஏற்படுகிறது. பின்னர் 'ஹரகத்' செயல், அசைவு மூலமாக அதை வெளிப்படுத்தப்படுகிறது. அப்போதுதான் 'ஓவியம்' உண்டாக்கப் பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

அதனால்தான் அந்த ஓவியங்களைப் பார்த்த எவரும் 'இவ்வளவு கெட்ட தோற்றத்தை வரைந்திருக்கிறானே. இந்த ஓவியன் மிகவும் கெட்டவன்' என்று கூறுவதில்லை. 'இது என்ன அழகான தோற்றமாக இருக்கிறது. இது எவ்வளவு அருவறுப்பான தோற்றமாக இருக்கிறது' என்றுதான் கூறுவார்கள். ஓவியனைப் பாராட்டத்தான் செய்வார்கள். 'இவன் எவ்வளவு திறமையான ஓவியனாக இருக்கிறான். ஒவ்வொரு தோற்றத்தையும் அப்படி அப்படியே வரைந்திருக்கிறான்' என்பார்கள்.

அந்த உருவங்கள் தானே உண்டாகவில்லை. இவன் உண்டாக்கியதால்தான்–வரைந்ததால்தான் வெளிப்பட்டது என்பது உண்மைதான். எனினும் ஒவ்வொரு தோற்றமும் அது அதன் அமைப்பு எப்படியோ, தன்மை எப்படியோ, தேட்டம் எப்படியோ அப்படியேதான் உண்டாக்கப்பட்டது. எனவேதான் ஓவியனை எந்தத் தோற்றத்தை வரைந்தாலும் புகழ்கிறோம்.

இப்போது இதை இன்னொரு உதாரணம் மூலமும் விளங்குங்கள். 'உங்கள் சிந்தனையில் ஒரு அரசனையும் ஒரு வேலைக்காரனையும் கொண்டு வாருங்கள். இத்துடனே இன்னொரு மனிதனையும் இவ்வாறு கற்பனை செய்யுங்கள். அந்த மூன்றாவது மனிதன் உங்கள் சிந்தனையில் வந்து நின்று கொண்டு 'இதோ இந்த வேலைக்காரன் தான் அரசன். இந்த அரசன்தான் வேலைக்காரன்' என்று கூறுகிறான். இப்போது இந்த மூன்றாவது மனிதனைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? 'இவன் ஒரு பைத்தியக்காரன் அறிவு இல்லாதவன்' என்று நினைப்பீர்கள் அல்லவா?

இப்போது கவனியுங்கள்! இந்த மூன்றாவது மனிதனைப் பற்றிய இந்த முடிவை நீங்களாக அவன் மீது சுமத்தினீர்களா அல்லது அவனது நிலையே அவனது தகுதியே அந்த முடிவுக்கு காரணமாக அமைந்ததா? நீங்களே சொல்லுவீர்கள் 'அந்த மூன்றாவது மனிதனுடைய தகுதியே நிலையே அவ்வாறுதான் இருந்தது.

இப்போதும் யாராவது இவ்வாறு கேட்டால் அதாவது 'அந்த மூன்றாவது மனிதனை ஏன் உங்கள் சிந்தனையில் உருவாக்கினீர்கள்' என்றால் நீங்கள் சொல்வீர்கள். 'நான் உண்டாக்கவும் இல்லை' உருவாக்கவும் இல்லை. எமது சிந்தனையில் சட்டென அவன் வந்து விட்டான். 'அதெப்படி சட்டென சிந்தனையில் வந்தான்? என்றால் அதற்கு பதில் அது சிந்தனையின் திறமையாகும். கமாலே கியால் ஆகும். அதிலே இராதா நாட்டத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை.

எப்போது அந்த சிந்தனையின் தோற்றத்தை வெளியே கொண்டு வர நாடுகிறோமோ அப்போது தான் அங்கே நாட்டமும் மற்றவைகளும் சம்பந்தப் படுகிறது. ஏனெனில் நாட்டமும் செயலும் இல்லாமல் அது வெளிப்படவே முடியாது. எனவே இப்போதுதான் உருவாக்குதல், படைக்குதல், உண்டாக்குதல் என்ற பெயரே வரும்.

இதன் மூலம் இந்த விஷயம் நமக்குத் தெளிவாகிறது. ஒவ்வொரு பொருளும் படைக்கப்படுவதற்கு முன்பே சிந்தனையில் அது தரிபட்டிருக்கிறது. ஆனால் அப்போது அதை 'படைக்கப்பட்ட தோற்றம்' என்று கூற முடியாது. 'சிந்தனைத் தோற்றம்' என்றுதான் கூறப்படும்.

எனவேதான் யாராவது 'எனது சிந்தனையில் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலான வீட்டின் மாதிரி வடிவம் இருக்கிறது. அதே மாதிரி வீடு கட்ட வேண்டும் என்று நாடுகிறேன்' என்று கூறினால், அந்த தோற்றத்தை யாரும் படைப்பு என்று கூறமாட்டார்கள். 'சிந்தனை வடிவம்' என்றுதான் கூறுவார்கள். இதனுடைய ஹகீகத் 'பிலா ஜஃலே ஜாயில்' ஆகும். அதாவது அது யாரும் உருவாக்காமல் உருவானதாகும்.

அதெப்படி இதற்கு முன் பார்க்காமல் தானாக சிந்தனையில் தோற்றம் உருவாகிறது? என்றால் அவ்வாறு உருவாகுதல் சாத்தியமே என்றுதான் கூறுவோம்.

நாம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறோம். முன்னால் பார்த்திராத அதன் தோற்றங்கள் தான் சிந்தனையில் உருவாகிறது. உதாரணமாக இந்த மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முன்னால் அந்த வாகனங்களை யாரும் பார்த்ததில்லை. முதன் முதலில் அதைக் கண்டு பிடித்தவரின் சிந்தனையில் அதன் தோற்றம் வந்தது. இந்த வடிவமைப்பில் ஒரு வாகனம் உருவாக்க வேண்டும். குதிரை இல்லாமலேயே அது செல்ல வேண்டும். அதன் வேகம் இவ்வாறு அமைய வேண்டும் என்றெல்லாம் சிந்தனையில் வருகிறது. அதற்குப்பின் அதன் மாதிரித் தோற்றம் உருவாக்கப்பட்டது. ஆக முன்னால் பாராமலேயே அதன் தோற்றம் சிந்தனையில் உண்டானது என்பது தெளிவாகிறது. இதே போல் இன்னும் எத்தனையோ கண்டுபிடிப்புகள் இருக்கின்றன.

எப்படி அந்தக் கண்டுபிடிப்புகள் சிந்தனையில் 'சட்'டென்று தோன்று கின்றனவோ அதே போலவே அதன் தன்மைகள்—லாஜிமாத்—களும் சிந்தனையில் தோன்றுகின்றன. இந்தத் தன்மைகள் யாவும் அதன் இக்திழாயே ஜாத்தீ—சொந்தத் திறமைகள்தான். அந்தக் கண்டுபிடிப்பாளன் அதற்குப் பொருத்தமற்ற தன்மைகளை அதன்மீது கட்டாயப்படுத்தி உண்டாக்கவில்லை. உதாரணமாக மோட்டாரைக் கண்டுபிடித்தவனின் சிந்தனையில் தோன்றிய மோட்டாரின் தன்மைகள் யாவும் அந்த மோட்டாருடைய சுய தன்மைகள்தான். அவற்றின் சுய தன்மைகளுக்கு மாற்றமான தன்மைகளை அவன் வலுக்கட்டாயமாக அவைகளில் உருவாக்கவில்லை.

மோட்டாருடைய எந்தெந்த பாகங்கள் எங்கெங்கு இருக்க வேண்டுமோ அதே அமைப்பில்தான் அதே தன்மைகளுடன் தான் அவன் சிந்தனையில் தோன்றியது. மோட்டார் தனது தன்மைகளை இக்திழாவை உதறிவிட்டு வரவில்லை. அதனால் தான் அதை மோட்டார் என்கிறோம். உதாரணமாக அந்த மோட்டார் வண்டி தன் அமைப்பின்படி அமைந்த பின்னால் அதைக் குதிரையைக் கொண்டு இயக்கினால் அதற்கு வேறு பெயர் தான் சொல்ல வேண்டுமே தவிர மோட்டார் வண்டி என்று கூற முடியாது! அல்லது அதைப் பறக்க வைக்கப்பட்டால் அதை விமானம் என்று தான் கூறுவார்கள். மோட்டார் என்று கூறமாட்டார்கள். ஆக ஒவ்வொரு கண்டுபிடிப்புகளும் அதனுடைய அனைத்துத் தன்மைகளுடன் சேர்த்துத்தான் அதற்குரிய பெயர்களைப் பெறுகின்றன. அந்தத் தன்மைகளையே 'இக்திழாயே ஜாத்தீ' என்கிறோம். அவைகள் சிந்தனையிலே நாட்டத்துக்கு முன்பே வந்து விடுகின்றன. எனவேதான் சிந்தனையிலேயே அவைகள் நின்றுவிடுமானால் 'மோட்டார்' என்றால் என்னவென்று யாருக்கும் தெரியாது. அதைக் கண்டுபிடித்தவனும் நான்தான் மோட்டாரைச் செய்தேன் என்று கூறிக் கொள்ளவும் முடியாது. ஏனெனில் செய்வது—உருவாக்குவது என்பது சிந்தனையில் இருந்து வெளியே வருவதற்கே சொல்லப்படும். ஆக எதுவரை சிந்தனையிலேயே இருக்குமோ அதுவரை அதன் ஹகீகத் 'பிலா ஜஃலே ஜாயில்' ஆகத்தான் இருக்கும். அதாவது யாரும் படைக்காமல் தானாகவே இருப்பது தான் அதன் நிலையாகும்.

எனவே இங்கு யாரும் எந்தக் கேள்விகளும் இப்படிக் கேட்பதற்கு உரிமையில்லை. அதாவது மோட்டார் வண்டியை ஏன் இப்படிச் செய்தீர்கள்? அதன் சக்கரம் வண்டிக்கு மேலே இருக்கவேண்டும். அல்லது அது மனிதர்களின் தலை மேலே செல்வது போல் இருந்திருக்க வேண்டும். அல்லது அது காற்றிலே பறக்கவேண்டும் என்றெல்லாம் கேட்க முடியாது. ஏனெனில் சக்கரம் வண்டிக்கு மேலே இருந்தால் அதை வண்டி என்று யார் சொல்வார்கள்? வேறு ஏதாவது சொல்வார்கள். காற்றிலே பறந்தால் விமானம் என்பார்கள். மனிதர்களின் தலை மேலே போவதாக இருந்தாலும் வேறு பெயர்தான் கூறப்படும்.

இதுவோ 'மோட்டார் வண்டி'! அது என்னென்ன தன்மைகளுடன் இருக்க வேண்டுமோ அவையெல்லாம் அதிலே இருக்கின்றன. அந்தத் தன்மைகள் அதிலே முழுமையாக இருப்பதால் தான் அந்தப் பெயரே அதற்குக் கிடைத்தது. இல்லையென்றால் அந்தப் பெயரே கிடைத்திருக்காது.

இங்கேயும் யாராவது இப்படி ஒரு கேள்வியைக் கேட்கலாம். அதாவது 'மோட்டாருடைய சிந்தனை வேறு ஏதாவது வண்டி வாகனங்களின் முன்மாதிரியை வைத்து உண்டாக்கியிருக்கலாம் அல்லவா?' என்று. இதற்கு நாம் இரண்டு பதில்களைக் கூறலாம். ஒன்று : உலகிலே முதன் முதலாகப் படைக்கப்பட்ட வாகனம் எந்த முன்மாதிரியை வைத்து படைக்கப்பட்டது? ஒரு கற்பனைக்காக அதுவும் ஏதாவது ஒன்றைப் பார்த்தே உருவாக்கப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும் நாம் இப்படி கூறலாம். இந்த உதாரணங்கள் எல்லாம் சிருஷ்டிகளின் அறிவு சம்பந்தப்பட்டது. ஆனால் நாமோ சிருஷ்டிகர்த்தாவான இறைவனின் அறிவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அவனுக்கோ எந்த வஸ்துக்களையும் உண்டாக்குவதற்கும் எந்த முன்மாதிரியும் தேவையில்லை. அவனுக்கே முன்மாதிரி தேவைப்பட்டால் அவன் எப்படி படைப்பாளனாக–காயிம் பகுத்–ஆலிமும் பிஜ்ஜாத்–சுயமே இருப்பவன், சுயமே அறிபவனாக ஆக முடியும். நவூதுபில்லாஹ்.

எனவேதான் இது போன்ற உதாரணங்களைக் கூறும்போது அவனது உதாரணமற்ற தன்மையை கவனத்தில் வைக்கவேண்டும்.

இதற்கு மேலும் யாராவது 'இதுவெல்லாம் சரியல்ல' என்று கூறிக் கொண்டிருந்தால் நாம் என்ன செய்ய முடியும்? அறிவைப் பங்கு வைக்கும் நேரத்தில் ஆள் அங்கே இருந்திருக்கமாட்டார் என்றுதான் கூற முடியும்.

ஆக இந்தக் கேள்விகளை நாம் நன்றாக விளங்க வேண்டும்.

இந்த உருவம் ஏன் இந்த அமைப்பில் சிந்தனையில் வந்தது? ஏனெனில் இதன் இக்திழாவே இப்படித்தான் இருந்தது. எனவே அப்படியே வந்தது. இது சிந்தனையின் வலிமையாகும். சரி! ஏன் அதை மாற்றவில்லை! காற்றில் பறக்கும் தன்மைகளை ஏன் மோட்டாருக்குக் கொடுக்கவில்லை? ஏனெனில் இது மோட்டார். பறக்கும் தன்மை கொடுக்கப்பட்ட பொருள் விமானம். விமானத்தின் தன்மை சிந்தனையில் அப்படியே இருந்தது. அது அப்படியே படைக்கப்பட்டது. ஏன்

இக்திழாவை மாற்றப்படவில்லை? ஏனெனில் இக்திழாவை மாற்றினால் அதற்கு லுல்ம்–அநீதி செய்ததாக ஆகிவிடும். மோட்டாரின் தன்மை வேறு விமானத்தின் தன்மை வேறு ஆகும்.

சரி! மோட்டாரோ பூமியில் ஊறிக் கொண்டிருக்க விமானமோ உல்லாசமாக வானத்தில் பறக்கிறதே இது மட்டும் அநீதியில்லையா? ஒருபோதும் இது அநீதி யில்லை. ஏனெனில் இந்தத் தன்மைகள் அதன் சொந்தத் தன்மைகள்தான். ஒன்று மோட்டாராக ஆகி தனது திறமைகளைக் காட்டுகிறது. ஒன்று விமானமாக ஆகி தன் சிறப்புகளை வெளிப்படுத்துகிறது.

இது அதற்குக் கஷ்டமாக இருந்தால் என்ன செய்வது. இது அதன் தன்மை கள்தானே? உண்டாக்கியவன் என்ன செய்வான்? அவன் மீது குற்றம் இல்லையே! ஏனெனில் மோட்டார் அதன் தன்மைகளை இக்திழாவை முன்வைத்தது. கண்டு பிடித்தவன் அதன் இக்திழா எப்படி இருந்ததோ அப்படியே அதை அறிந்தான்.

சரி! கண்டுபிடிப்பாளன் ஏன் இப்படி சிந்தனையில் கொண்டு வந்தான்? ஏனெனில் அவனது சிந்தனை காமிலாக–பூரணமாக திறமை வாய்ந்ததாக இருந்தது. எதை எப்படி சிந்தனையில் கொண்டு வரவேண்டுமோ அதை அப்படியே கொண்டு வந்தான். அதன் தன்மைகளுக்கு மாற்றமாகக் கொண்டு வந்திருந்தால் அவனை குற்றம் பிடிக்கலாம். அப்படி நடக்கவே இல்லை.

சரி! இரண்டையும் அவன் தானே வெளியில் உண்டாக்கினான்? அவன் உண்டாக்கியிருக்காவிட்டால் படைத்திருக்காவிட்டால் இது உண்டாகியே இருக்காதே!

அப்படியானால் இந்த எல்லா கஷ்டங்களும் அவனால் தான் என்று ஏன் கூறக் கூடாது? ஒருபோதும் அப்படிக் கூறக்கூடாது! ஏனெனில் நாம் மேலே பலமுறை கூறிவிட்டோம். அவன் அதைப் படைத்தது அதன் இக்திழாவுக்கு மாற்றமாக இருந்தால்தான் அது அநீதி–லுல்ம் ஆகும். அவன் படைத்திராவிட்டால் அது உண்டாகியே இருக்காது. படைத்தது என்பது அந்தப் படைப்பாளனின் ஒரு அதிகப்படியான மேல்மிச்சமான கொடையாகும். வெறும் அறிவிலே தரிபட்டிருந்த வஸ்துவை வெளியிலும் கொண்டு வந்தான். இது அவனது பெரும் அருளாகும். அவனுடைய இல்முக்கு மாற்றமாக கொண்டு வந்திருந்தால் கேள்வி கேட்கலாம். ஆனால் அப்படி ஒருபோதும் இல்லை என்பது உறுதியானது. ஏனெனில்,

وَلَوْ عَلِمَ اللّٰهُ فِيْهِمْ خَيْرًا لَّاَسْمَعَهُمْ

அவர்களிலே ஏதேனும் நன்மை இருக்கிறது என்று அல்லாஹ் அறிந்திருந் தால் அவர்களை கேட்கச் செய்திருப்பான். அதாவது அதை வெளிப்படுத்தி யிருப்பான். (8 : 23)

ஆக யாரை எப்படி படைக்கவேண்டும். அவர்கள் எப்படி அவன் இல்மிலே இருந்தார்களோ அப்படியே கொஞ்சம்கூட கூடுதல் குறைவு இல்லாமல் படைத்தான்.

சிந்தனையில் அவைகள் தரிபட்டிருப்பது அவனது இல்முடைய சுடராகும். அவனது இல்மு குறையுடையது அல்ல. அனைத்து விதத்திலும் அனைத்து கண்ணோட்டத்திலும் அது பரிபூரணமானதாகும்.

எப்படி அவனது இராதா – நாட்டம் இல்லாமல் அந்த வஸ்து உண்டாக வில்லையோ அதேபோல் அந்த வஸ்துக்களின் இக்திழா இல்லாமல் அவனது நாட்டம் அதோடு சம்பந்தப்படவில்லை. அவைகளுக்கு அநீதியாக ஆகாமல் இருக்கவே இவ்வாறு செய்தான்.

இக்திழாவுக்கு மாற்றமாக உண்டாக்கவும் அவனுக்கு சக்தியிருக்கிறது. ஆனாலும் இக்திழாவை கவனித்து அதன்படி உண்டாக்கியது அத்ல்–ஹிக்மத்–நீதம் இன்னும் நுண்ணறிவின்படியானதாகும்.

ஆக "இக்திழா என்பது மக்லூக் அல்ல. மஜ்ஊல் அல்ல" என்ற இந்த மஸ்அலா முற்றிலும் சரியானதாகும்.

பலஹீனமான சிருஷ்டிகளின் உதாரணத்திலேயே இது ஓரளவுக்கு உறுதியாகும்போது உண்மைப் படைப்பாளனான உண்மை ஆலிமான ஹக்குடைய இல்மில் உள்ள தோற்றங்களின் இக்திழா எப்படி படைக்கப்பட்டதாக இருக்க முடியும் ? அவனுடைய இல்மோ அடல் நிரந்தரமானதாகும்.

அவனுடைய இல்முடைய கமால் திறமையின் காரணமாக சிருஷ்டிகள் தங்கள் இக்திழா மற்றும் அஹ்வால்கள் நிலைமைகள் உடனே அவனது இல்மில் தரிபட்டிருந்தன. இது அவனது இல்முடைய பைஜான் அருளாகும். படைத்தல் சிருஷ்டித்தல் என்பதெல்லாம் இராதா எனும் நாட்டம் சம்பந்தப்பட்ட பின்னால் தான் உண்டானது. எனவே இஜ்ஸ்–இயலாமை இழ்திரார்–நிர்பந்தம் இவை எதுவும் ஹக்கின் அளவில் சேர்த்தப்படாது. அதேபோல் சிருஷ்டிகளை அதனதன் இக்திழாபடியே படைத்திருப்பதால் அவனை லாளிம்–அநியாயக்காரன் ஜாபிர்–நிர்பந்திப்பவன் என்றும் கூறமுடியாது. அதன் இக்திழா எப்படி இருந்ததோ அப்படியே அறிந்தான். எப்படி அறிந்தானோ அப்படியே படைத்தான்.

அதேபோல் ஹகீகத்தே சுவரே இல்மிய்யாவை அதாவது இல்மில் இருந்த தோற்றங்களின் நிலையை அவை இக்திழாவே இல்லாமல் இருந்தன என்றும் கூறமுடியாது.

أَعْطَىٰ كُلَّ شَيْءٍ خَلْقَهُ ثُمَّ هَدَىٰ

ஒவ்வொரு வஸ்துவுக்கும் அதனதன் தகுதியையே கொடுத்தான். பின்னர் அதற்கு நேர்வழி காட்டினான். **(20 : 50)**

அதேபோல் அவைகள் அவனால் படைக்கப்பட்டதால் படைப்புகளுக்கு சிறிதும் சுய இஷ்டம்–இக்தியார் இல்லை என்றும் கூற முடியாது.

قُلْ كُلٌّ يَعْمَلُ عَلَىٰ شَاكِلَتِهِ

நீங்கள் கூறி விடுங்கள் ஒவ்வொருவரும் அவரவர் அமைப்பின்படியே- இக்திழாபடியே செயல்படுகின்றனர். (17 : 84)

இந்த அடிப்படையில் அவர்களுக்கு செயல்படும் இஷ்டம் இருப்பதும் உறுதியாகிறது.

எனவே தான் அந்த இக்திழா அடிப்படையில் கூறப்பட்டது.

وَاٰتٰكُمْ مِّنْ كُلِّ مَا سَاَلْتُمُوْهُ

உங்களுக்கு நீங்கள் (இக்திழாவுடைய நாவால்) எதைக் கேட்டீர்களோ அதையே கொடுத்தோம் (14 : 34) என்று கூறுகிறான். இன்னும்

وَمَا كَانَ اللّٰهُ لِيَظْلِمَهُمْ وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ

அல்லாஹ் அவர்களுக்கு எந்த அநீதியும் செய்யவில்லை. மாறாக அவர்களே தங்கள் நப்சுக்கு அநீதி செய்து கொண்டார்கள். (29 : 40)

فَلِلّٰهِ الْحُجَّةُ الْبَالِغَةُ

அல்லாஹ்வுக்கே மிக உயர்ந்த ஆதாரம் இருக்கிறது. (6 : 149)

ஞாபகம் வையுங்கள்! இதுதான் குர்ஆன் ஹதீசுடைய சட்டங்களாக இருக்கிறது. இன்னும் எல்லா முஹக்கிகீன்களின் கொள்கையும் இதுவாகவே இருக்கிறது. ஷைகுல் அக்பர் (ரஹ்)–மௌலானா ரூமி (ரஹ்) மௌலானா ஜாமீ (ரஹ்) அனைவரும் இதையே கூறுபவர்களாக இருக்கிறார்கள். நீண்டுவிடும் என்பதற்காக அவர்களின் கூற்றுக்களை எடுத்து எழுதவில்லை.

ஜாமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :–

“சிருஷ்டிகளின் ஜாத்துகளுடைய இக்திழாவை சரி செய்ய எந்த படைப்பாளனுக்கும் சந்தர்ப்பம் இல்லை.

எனவே ‘இக்திழாவும்’ அவனுடைய படைப்புத்தானே என்று யாரும் கூறுவது முற்றிலும் உண்மையற்றதாகும். அல்லாஹுத் தஆலா இந்த குற்றச்சாட்டை விட்டும் பரிசுத்தமானவன். அது வெறும் கற்பனையான எண்ணம் தான். இது மனித அறிவின் தவறான சிந்தனையால் வருவதாகும். இதைத்தான் அரபு நாட்டு காபிர்களும் முஷ்ரிக்களும் கூறினார்கள்.

“அல்லாஹ் நாடியிருக்காவிட்டால் நாங்களும் எங்கள் முன்னோர்களும் இணை வைத்திருக்க மாட்டோமே’ என்று கூறினார்கள்.

سَيَقُوْلُ الَّذِيْنَ اَشْرَكُوْا لَوْ شَآءَ
اللّٰهُ مَآ اَشْرَكْنَا وَلَآ اٰبَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِنْ شَيْءٍ

كَذٰلِكَ كَذَّبَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ حَتّٰى ذَاقُوْا بَأْسَنَا ؕ قُلْ هَلْ عِنْدَكُمْ مِّنْ عِلْمٍ فَتُخْرِجُوْهُ لَنَا ؕ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا الظَّنَّ وَاِنْ اَنْتُمْ اِلَّا تَخْرُصُوْنَ ۝ قُلْ فَلِلّٰهِ الْحُجَّةُ الْبَالِغَةُ

“இணை வைக்கக் கூடியவர்கள் கூறுவார்கள்:- அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்கள் முன்னோர்களும் இணை வைத்திருக்க மாட்டோம். எந்த வஸ்துவையும் ஹராமாக்கியிருக்கவும் மாட்டோம். இவ்வாறுதான் இவர்களுக்கு முன் இருந்தவர்களும் பொய்யாக்கினார்கள். முடிவில் நம்முடைய வேதனையைச் சுவைத்தார்கள். நபியே நீங்கள் கூறுங்கள், உங்களிடம் இதற்கான அறிவுப்பூர்வமான ஆதாரம் இருக்கிறதா? இருந்தால் அதை எங்களுக்கு வெளியாக்கிக் காட்டுங்கள்.

சந்தேகமான எண்ணங்களைத் தவிர வேறு எதையும் நீங்கள் பின்பற்றவில்லை. இன்னும் நீங்கள் கற்பனையாக பொய்யுரைக்கிறீர்களே தவிர வேறில்லை. நீங்கள் கூறுங்கள் அல்லாஹ்வுக்கே நிறைவை அடைந்துவிட்ட ஆதாரம் இருக்கிறது. (6 : 145, 146)

அதாவது நாங்கள் மஜ்பூர்–சுய இஷ்டம் இல்லாதவர்கள்–அவன் நாடா விட்டால் நாங்கள் என்ன செய்வது ? என்று காபிர்கள் கேட்டதற்கு அல்லாஹ் பதில் கூறுகிறான் :– உங்களுக்கு இதைப் பற்றி ஏதாவது விஷயம் தெரியுமா ? வெறும் கற்பனையில் தான் நீங்கள் இருக்கிறீர்கள். அதாவது உங்களுக்கு உங்கள் இக்திழாவைப் பற்றிய விளக்கமே இல்லை. அதனால் உங்களை மஜ்பூரே மஹஜ் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அல்லது இக்திழாவை மக்லூக்– படைக்கப்பட்டது என்ற எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உண்மையோ அவ்வாறல்ல!

அவர்களின் இக்திழா எப்படி இருந்ததோ அப்படியே நாம் அவர்களைப் படைத்தோம். எனவே எந்தக் குற்றச்சாட்டுகளை விட்டும் நாம் பரிசுத்தமாகவே இருக்கிறோம். இவர்கள் தங்கள் தவறான அறிவின் காரணமாக நஷ்டத்திலும் வழிகேட்டிலும் தான் இருக்கிறார்கள். ஒரு இடத்தில் இப்படியும் அல்லாஹ் கூறுகிறான்.

فَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ اَجْمَعِيْنَ

அல்லாஹ் தன் வல்லமையின்படி நாடியிருப்பானேயானால் உங்கள் அனை வருக்கும் நேர்வழி காட்டியிருப்பான். **(6 : 149)**

அதாவது உங்கள் இக்திழாவுக்கு மாற்றமாக உங்களுக்கு நேர்வழியைக் காட்டியிருப்பான்.

பிறகு ஏன் அப்படிச் செய்யவில்லை?

நீங்கள் உங்களின் இக்திழாபடிதான் நமது பரிபூரண இல்மிலே தரிபட்டிருந்தீர்கள். அதற்கு மாற்றமாக நாம் செய்திருந்தால் அப்போதும் இப்படி கேட்பீர்கள். அதாவது எங்களை நீ எங்களின் இக்திழாப்படி படைத்திருக்க வேண்டும். எங்கள் இக்திழாவில் உள்ளதை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். நீ ஏன் அதற்கு மாற்றமாக படைத்தாய்? என்று கேட்பீர்கள். நானும் காமில்–பரிபூரண மானவன் எனது இல்மும் பரிபூரணமானது எனது பார்வையும் பரிபூரணமானது ஆரம்பமும் முடிவும் நம்மிடம் ஒரே மாதிரியாகவே இருந்தன. எனவே நாம் இக்திழாவுக்கு மாற்றம் செய்ய நாடவில்லை. இது நம்முடைய அத்ல்–நீதி இன்னும் கிருபையாகும். நாம் சக்தி பெற்றிருந்தும் அவ்வாறு செய்யவில்லை. சுப்ஹானல்லாஹி அம்மா யஸிபூன்–அவர்கள் வர்ணிப்பவைகளை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்.

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. அந்த இக்திழாவுக்கு மாற்றமாகவும் அவன் செய்ய முடியுமா முடியாதா? நிச்சயமாக முடியும். ஆனால் இது அவனது அத்ல்–நீதம் இன்னும் ஹிக்மத்துக்கு மாற்றமானதாகும். எனவே சக்தியிருந்தும் அவன் அவ்வாறு மாற்றம் செய்யவில்லை.

وَاَنَّ اللّٰهَ لَيْسَ بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ

அல்லாஹ் நிச்சயமாக அடியார்களுக்கு சிறிதும் அநீதி செய்யக்கூடியவன் அல்ல! (3 : 182)

இது அவனுடைய நிரப்பமான கிருபையும் நீதியுமாகும் – நவூதுபில்லாஹ். அல்லாஹ்வின் இல்ம் குறைவுடையதாக இருந்திருந்தால் அல்லது இல்மில் உள்ளது அவனுக்கு முஷாஹதாவாக இல்லாதிருந்தால் அதாவது இல்மில் உள்ளது வெளியில் உள்ளதைப் போன்றே தெளிவானதாக அவனுக்கு இல்லாதிருந்தால் அப்போது அதற்கு மாற்றம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். நவூதுபில்லாஹ். அப்படி ஒருபோதும் இல்லை. வெளியில் உள்ளதைப் போலவே இல்மில் உள்ளதையும் நன்றாகவே அறிகிறான். அவனுடைய இல்மும் காமில் முகம்மல் பரிபூரணமானதாகவே இருக்கிறது. அவனுடைய ஹிக்மத்–ஞானங்களும் –அடல் – மாற்ற முடியாததாகவே இருக்கிறது.

ஆகவே அவன் எதைச் செய்த போதிலும் நலவையே செய்தான். எதைச் செய்கிறானோ நலவையே செய்கிறான். இனி எதைச் செய்வானோ நலவையே செய்வான்.

وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ؕ بِيَدِكَ الْخَيْرُ ؕ

நீ நாடியவர்களை கண்ணியப்படுத்துவாய்! நாடியவர்களை இழிவு படுத்துவாய். உன் கையிலேயே அனைத்து நலவுகளும் இருக்கின்றன. (3 :26)

ஆக இக்திழா படியான இக்தியாரை இஷ்டத்தை கவனத்தில் வைத்த வண்ணம் ஹக்குடைய அப்ஆல் செயல்களின் மீது கவனம் செலுத்துவதே தவ்ஹீதே அப்ஆலி ஆகும்.

ஏனெனில் சிருஷ்டிகளின் செயல்களுடைய கஸ்ரத் அவைகளின் இக்திழாவுடைய தொடர்பினால் ஆகும். இன்னும் பிஃஃல்வுடைய வஹ்தத் அவைகளை வெளியில் கொண்டு வரும் தொடர்பினால் ஆகும்.

இந்த அடிப்படையில் தான் ஹஜ்ரத் ஷைகு சஅதீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

“வில்லில் இருந்து தான் அம்புகள் வருகின்றன. ஆனால் வெளிப்படையானவர்கள் அது வில்லில் இருந்து வருவதாகப் பார்ப்பதில்லை” என்று கூறுகிறார்கள்.

இதைப் பற்றி இன்னும் விளக்கலாம். ஆனால் அறிவாளிகளுக்கு இதுவே போதுமானதாகும்.

العاقل تكفيه الاشارة

14. ஹக்கின் விளக்கம்

ஆக வஹ்ததுல் உஜூது என்பது இதுதான். அதாவது அனைத்து சிருஷ்டிகளின் ஜாத்தும் உண்மையிலேயே தரிபட்டவையாகும். அதனுடைய ஃகைரிய்யத்தும் தரிபட்டதாகும். அதாவது அது ஹக் அல்லாத வேறொன்று என்பதும் உறுதியானதாகும். அவைகளுக்கு சொந்தமான தன்மைகள்–அஸர்கள் அனைத்தும் தரிபட்டதாகும். இவ்வாறே மறுஉலகத்தின் நிலையும் இருக்கிறது. சுவனம், நரகம், கியாமத், தண்டனை, கூலி அனைத்தும் உண்மையானதாகும். எப்படி இந்த உலகம் அவனது தஜல்லி வெளியாகுதல் இன்றி வெளி வரவில்லையோ அதேபோல் அந்த உலகமும் அவனது தஜல்லி இல்லாமல் வெளியாகாது. எப்படி இந்த உலகம் அவனது உஜூதின் பக்கம் தேவையாக இருக்கிறதோ அதேபோல் அவ்வுலகமும் அவனது உஜூதின் பக்கம் தேவையாக இருக்கிறது. இவ்வுலகம் அவனுடைய உஜூதை இழாபியாக–தற்காலிகமாக பெற்றதனால் தனது சொந்த நிலையான அதம் என்பதை விட்டும் மாறவில்லை. ஆதேபோல் அவ்வுலகமும் மாறாது. எவ்வளவு காலம் உஜூதே இழாபியைப் பெற்றாலும் உஜூது அதற்கு சொந்தமாகாது. இதற்கு மாற்றமான சிந்தனைகள் எல்லாம் வெறும் கற்பனைகளும் யூகங்களும் தான்.

قُتِلَ الْخَرّٰصُوْنَ

கற்பனை வாதிகள் நாசமடையட்டுமாக! (51 : 10)

ஞாபகம் வையுங்கள்! அனைத்து வஸ்துக்களின் ஹகீகத்துகளும் தரிபட்டவையாகும். அல்லாஹ்வின் வஃதாக்களும் வயீத்களும் நற்கூலிகளும் தண்டனைகளும் உண்மையாகும். ஹக்காகும்.

انت الحق ووعدك حق ولقاءك حق وقولك حق والجنة حق والنار
حق والنبيون حق ومحمد حق والساعة حق (بخارى مسلم)

இறைவா! நீ ஹக்கானவன் உண்மையானவன் உனது வாக்குறுதியும் ஹக்! உன்னுடைய சந்திப்பும் ஹக்! உனது சொல்லும் ஹக்! சுவனமும் ஹக்! நரகமும் ஹக்! நபிமார்களும் ஹக்! முஹம்மத் (ஸல்) அவர்களும் ஹக்! கியாமத்தும் ஹக்!

(புகாரீ, முஸ்லிம்)

ஆக இந்த அனைத்து விளக்கங்களையும் கவனத்தில் வைத்து நன்கு ஆராய்ந்து விளங்கிக் கொண்டவர்கள் சிருஷ்டிகளை ஹக்குடைய கண்ணாடியாக ஆக்கிக் கொள்வார்கள். அதாவது தாத்தே மஃலூமை மவ்ஜூதே ஹகீகியுடைய கண்ணாடியாகக் காண்பார்கள். சிருஷ்டிகளில் ஹக்குடைய தஜல்லியை 'முஷாஹதா' செய்வார்கள். ஆலம் எனும் உலகத்தின் மூலம் ஆலிம் ஆகிய ஹக்கை

அறிந்து கொள்வார்கள். லுள்மத்–இருளில் இருந்து நூரை–ஒளியை அறிந்து கொள்வார்கள். இருளை இருளாகவே அறிவார்கள். ஒளியை ஒளியாகவே அறிவார்கள். உலகை உலகாகவே அறிவார்கள். ஹக்கை ஹக்காகவே அறிவார்கள். ஒவ்வொன்றின் அந்தஸ்தும் எப்படி எப்படி இருக்கிறதோ அப்படியே வைப்பார்கள். பார்க்க வேண்டிய பொருளைப் பார்ப்பார்கள். அறிய வேண்டியதை அறிந்து கொள்வார்கள். இவை எதுவெல்லாம் செய்வார்களோ அவனுடைய சக்தியைக் கொண்டே செய்வார்கள். அவனது இல்மைக் கொண்டே அறிவார்கள். அவனது நூரைக் கொண்டே விளங்குவார்கள். அவன் காட்டுவதன் மூலமே பார்ப்பார்கள். அவன் காட்டுவதைக் கொண்டே பெற்றுக் கொள்வார்கள். அவர்களின் தேர்வு உயர்வானது. அவர்களின் ஆராய்ச்சி மேலானது. அவர்களுக்கு சாட்சி குர்ஆனாகும்.

سَنُرِيهِمْ اٰيٰتِنَا فِى الْاٰفَاقِ وَفِىٓ اَنْفُسِهِمْ حَتّٰى يَتَبَيَّنَ لَهُمْ اَنَّهُ الْحَقُّ

விரைவில் நமது அடையாளங்களை வெளியிலும் அவர்களுக்கு உள்ளேயும் நாம் காட்டுவோம். முடிவாக வெளியிலும் உள்ளிலும் 'ஹக்'தான் இருக்கிறான் என்ற விஷயம் அவர்களுக்குத் தெளிவாகிவிடும். **(41 : 53)**

சுப்ஹானல்லாஹ்! எவ்வளவு தெளிவான ஆதாரம்! முத்திரை வைத்ததைப் போல இருக்கிறது! நம்முடைய மேற்சென்ற அனைத்து விளக்கங்களின் சுருக்கம் இதுவாகவே இருக்கிறது. அதாவது நாம் இதுவரை இதைத்தான் விளக்கினோம். இதைப் பற்றித்தான் ஆராய்ந்து கொண்டிருந்தோம். நமது முழு விளக்கங்களும் இந்த ஆயத்தின் விரிவுரைதான்!

இந்த ஆயத்தில் மூன்று விஷயங்கள் இருக்கின்றன.

1. ஆபாக் (வெளியே) 2. அன்புஸ் (உள்ளே) 3. ஹக் (அல்லாஹ்). விரும்பக் கூடியவர்களுக்கு நாம் விரைவில் நமது ஆதாரங்களைக் காட்டுவோம் என்கிறான். எங்கே காட்டுவான்? கியாமத்திலே மட்டும் அல்ல! அவர்களுக்கு வெளியேயும் உள்ளேயும் காட்டுவோம் என்கிறான். எப்படிக் காட்டுவான்? முடிவில் பார்க்கக் கூடியவர்களுக்கு இந்த ரகசியம் முற்றிலும் தெளிவாகிவிடும்.

அதாவது அவர்களுக்கு வெளியிலும் உள்ளேயும் நாம்தான் வெளியாகியிருக்கிறோம். ஆபாக்கும் அன்புசும் வெளியில் இருப்பவையும் உள்ளே இருப்பவையும் ஹக் அல்ல! மாறாக ஆபாக்கிலும் அன்புசிலும் நாம் இருக்கிறோம். அதாவது அவைகள் நம்முடைய மழ்ஹர்களாக வெளியாகும் இடங்களாக இருக்கின்றன.

ஹக்குடைய ஜாத்தின் அடையாளங்கள் என்பவை ஹக்குடைய சிபாத்துகளும் அப்ஆல்களும் தான். ஹக்குடைய ஜாத் தன் தானே மவ்ஜூதாக இருக்கிறது. அவனுடைய ஜாத் முத்லக்காக வரையறையற்றதாக இருக்கிறது.

இந்த ஆயத்தின் மூலம் தெளிவான முறையில் உறுதியாகிவிட்டது. வெளியிலும் உள்ளும் சிருஷ்டிகளின் தோற்றத்தில் அவனே தான் வெளியாகியிருக்கிறான். இதற்கு விளக்கமும் அல்லாஹ்வே கூறுகிறான்.

اَوَلَمْ يَكْفِ بِرَبِّكَ اَنَّهٗ عَلٰى كُلِّ شَیْءٍ شَهِيْدٌ ○ اَلَاۤ اِنَّهُمْ فِیْ مِرْيَةٍ

مِّنْ لِّقَآءِ رَبِّهِمْ ؕ اَلَاۤ اِنَّهٗ بِكُلِّ شَیْءٍ مُّحِيْطٌ ○

அதாவது உமது இறைவன் நிச்சயமாக அனைத்துப் பொருட்களின் மீதும் பிரசன்னமாக மவ்ஜூதாக இருக்கிறான் என்பது உங்களுக்கு போதுமான தில்லையா? (இங்கே மனிதன் தன் சந்தேக புத்தியால் இது சாத்தியமற்றது என்று நினைக்கலாம் என்பதற்காக எச்சரிக்கை செய்து மீண்டும் கூறுகிறான்). அறிந்து கொள்ளுங்கள்! அவர்கள் தங்கள் ரப்பின் சந்திப்பின் விஷயத்தில் சந்தேகத்திலே இருக்கிறார்கள். அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அவன் அனைத்து வஸ்துக்களையும் சூழ்ந்தவனாக உள்ளான். (41 : 53, 54)

முபஸ்ஸிரீன்கள் விரிவுரையாளர்கள் 'ஹக்' என்பதற்கு பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அத்துடன் ஹக் என்பதற்கு 'அல்லாஹ்வின் ஜாத்' என்றும் பொருள் கொண்டிருக்கிறார்கள். சரியான சனதுகள் ஆதாரங்களுடன் ஹக் என்பது அல்லாஹ்வையே குறிக்கும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். இந்த ஆயத்தின் முன் பின் தொடரும் அதையே வலியுறுத்துகிறது. தப்ஸீர் மஆலிமுத் தன்ஜீலிலும் இந்தக் கருத்து வேறுபாடுகள் எழுதப்பட்டுள்ளது.

இந்த ஆயத்தில் அல்லாஹ்வின் சந்திப்பு என்று கூறப்படுவது இவ்வுலகத்தில் உண்டான சந்திப்புதான் தஅய்யுன்–தஷ்பீஹ் பற்றிய விளக்கங்களை அறிந்து உள்ளத்தின் அகப்பார்வை திறந்த பின்பு அந்த சந்திப்பு உண்டாகிறது. ஏனெனில் நாம் விரைவில் காட்டுவோம் என்பது அருகில் நிகழ்வதையே குறிக்கிறது. அது இவ்வுலகம் சம்பந்தப்பட்டது தான். அந்தப் பார்க்குதல் எப்படி உண்டாகும்? நாம் எப்படி பார்ப்பது? அதுவும் இந்த உலகில் எப்படிப் பார்ப்பது? என்று கேள்விகள் வரலாம். அதற்குத்தான் ஹக் தஆலா கூறுகிறான். நாமே காட்டுவோம். அன்புஸ் ஆபாக் எனும் கண்ணாடி வழியாகக் காட்டுவோம். அது நமது பொறுப்பு என்கிறான். இதற்கு மேலும் யாரும் சந்தேகத்தில் இருந்தால் இது சாத்தியம் தானா என்று அறிவு கூறினால் 'லா ஹவ்ல' ஓதிக் கொள்ளுங்கள். அல்லாஹ் தான் தெளிவைத் தரவேண்டும்.

நாமே கூட இருந்து காட்டுவோம் என்கிறான். ஹக் தஆலா கூறுகிறான் :– நாமே அனைத்திலும் மவ்ஜூதாக இருக்கிறோம். ஹுலூல்–இத்திஹாத்தும் ஏற்படாது. ஏனெனில் வஸ்துக்களின் அசல் ஹகீகத் நமது 'மஃலூம்' ஆகும். ஹுலூல் (ஒன்றில் ஒன்று இறங்குதல்) இத்திஹாத் (ஒன்றில் ஒன்று கலக்குதல்) என்பதெல்லாம் காரிஜீயான, ஹிஸ்ஸீயான இஸ்திக்லால் உடைய வஸ்துக்களில் தான் உண்டாகும். அதாவது சுயமாக இரண்டு வஸ்துக்கள் வெளியில் இருந்தால் தான் அவற்றில் ஹுலூல் இத்திஹாத் உண்டாகலாம். அப்படி வெளியில் எந்த வஸ்துவும் இல்லை. நாம் மட்டுமே இருக்கிறோம். இப்போதும் குழப்பம் உங்களை விட்டு நீங்கவில்லை என்றால் 'நாம் ஒவ்வொரு வஸ்துவையும் சூழ்ந்திருக்கிறோம்' என்பதை நம்பிக்கை கொள்ளுங்கள்.

நாம் எப்படி சூழ்ந்திருக்கிறோம் என்பதை உங்களால் அறிய முடியவில்லை எனில் 'இத்திஹாத்' ஏற்பட்டதாகக் கருதாதீர்கள். அது வெறும் கற்பனை. அதனால் நமக்கு எந்தக் குறையும் ஏற்படாது.

இதற்கு மேலும் நம்பிக்கை வரவில்லை எனில் தெரிந்தவர்களிடம் சென்று கேட்டுக் கொள்ளுங்கள். (25 : 59)

اَلرَّحْمٰنُ فَسْئَلْ بِهٖ خَبِيْرًا

ஏனெனில் இது நமது (அல்லாஹ்) சம்பந்தப்பட்ட செய்தியாகும். உங்களுக்குப் பின்னாலேயே சந்தேகம் எனும் எதிரி ஒட்டிக் கொண்டிருக்கிறான்.

ஆம்! நமது தன்ஜீஹ் எனும் பரிசுத்தத் தன்மையில் எந்த மாற்றமும் இல்லை என்பது உண்மை முற்றிலும் உண்மை! இல்லை எனில் நீங்கள் தன்ஜீஹை விட்டுவிட்டு தஷ்பீஹே மஹஜ்ஜில் மாட்டிக் கொள்வீர்கள். அதாவது நம்மையே (ஹக்கையே) ஆபாக்காகவும் அன்புசாகவும் விளங்கிக் கொள்வீர்கள். இது அழிவுக்குரிய எண்ணமும் நரகத்தின் வழியுமாகும்.

இப்போது யாரும் கேட்கலாம். இவ்வளவு ஆபத்துகள் நிறைந்த இந்தப் பாதையில் செல்லத்தான் வேண்டுமா? வெறும் அமல்கள் செய்து சொர்க்கம் போய்விட முடியாதா? ஆம்! இந்த சிரமங்களுக்கு மத்தியில் தான் அந்தப் பேரொளி இருக்கிறது. நம்மை சந்திக்க வேண்டுமென்றால் நம்மை அடைய வேண்டும் என்று ஆசை இருந்தால் இந்த சிரமங்களைத் தாங்கித் தான் ஆக வேண்டும். நம்மிடம் சேரும் விருப்பம் இல்லை என்றால் இவை தேவையில்லை. ஈமான் மற்றும் நற்காரியங்களின் கூலியை வாங்கிக் கொள்ளுங்கள். சொர்க்கம் சென்று சுற்றித் திரியுங்கள்.

இங்கே ஒரு விஷயத்தை கவனத்தில் வைக்க வேண்டும். இந்த ஆயத்தில் 'அலா' அறிந்து கொள்ளுங்கள் என்ற எச்சரிக்கை வந்துள்ளது. குர்ஆனின் மற்ற இடங்களில் வழிகெட்ட கூட்டத்தார்களுக்கு இந்த வார்த்தை கூறப்பட்டுள்ளதைப் போல் இங்கே இல்லை. இங்கே ஈமான் கொண்டவர்களைப் பார்த்துக் கூறப்படுகிறது.

இந்த விஷயத்தை முழுமையாக நம்புங்கள். சந்தேகப்படாதீர்கள் என்று வலியுறுத்துவதற்காகக் கூறப்படுகிறது. இது அவனுடைய அளவற்ற கருணையாகும். நமக்கு இங்கே ஹதீஸ்கள் மூலமும் ஆதாரங்கள் கிடைக்கின்றன. ஒரு ஹதீஸில்

ان تعبد الله كانك تراه (بخارى مسلم)

நீங்கள் அல்லாஹ்வைப் பார்ப்பதைப் போல் வணங்க வேண்டும் என்று வந்திருக்கிறது. (புகாரீ, முஸ்லிம்)

இந்த ஆயத்தின் மறைமுக விளக்கங்களுக்கு இந்த ஹதீஸ் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்.

15. இஸ்திலாஹாத்

(இங்கே சைய்யிதுனா கௌஸிஷாஹ் (ரஹ்) அவர்கள் சூபியாக்களுக்கு மத்தியில் உள்ள இஸ்திலாஹாத் புழக்க பாஷைகளை விளக்குகிறார்கள். ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் காலம் முதல் 'வஹ்ததுல் உஜூது' என்ற வார்த்தை புழக்கத்தில் உள்ளது. இமாமே ரப்பானீ முஜத்தித் அல்பஸானீ (ரஹ்) அவர்கள் வஹ்ததுஷ் ஷுஹூது என்ற வார்த்தையைப் புழங்குகிறார்கள். சிலர் தவறாக இந்த இரண்டு வார்த்தைகளையும் வேறு வேறு கொள்கைகள் என்று விளங்கிக் கொள்கிறார்கள். அது சரியல்ல! இரண்டின் கருத்தும் ஒன்றுதான் என்று ஆதாரத்துடன் இங்கே விளக்குகிறார்கள்.)

அன்பர்களே! இங்கே நாம் பழக்க பாஷையில் உள்ள கருத்து வேறுபாடு களையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் இதனால் சிலர் குழப்பங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். அதனால் சூபியாக்களில் உஜூதிய்யாக்கள், ஷுஹூதிய்யாக் கள் என்று இரு பிரிவினர் இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில் இந்த மஸ்அலாவை விளக்கும்போது தத்துவக்கலையின் சொற்கள் இதில் இணைந்து கொண்டே வந்தன. இன்னும் சூபியாக்களின் நிலைகள் சொற்கள் அப்படி அப்படியே எழுதப்பட்டும் வந்தன. அவற்றை குர்ஆன் ஹதீஸுடைய வார்த்தைகளோடு ஒப்பிட்டு விளக்குவது குறைந்து போனது. ஆகவே ஒவ்வொரு சூபியாக்களும் ஒவ்வொரு பரிபாஷையைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இவ்வாறுதான் உஜூதிய்யாக்கள், ஷுஹூதிய்யாக்கள் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. உண்மையில் இரண்டும் அறிவுப் பூர்வமானதேயாகும். இரண்டின் நோக்கமும் சரியானதேயாகும்.

ஷுஹூதிய்யாக்களின் மூலக் கருத்து என்னவெனில் "சிருஷ்டிகளின் ஜாத் இருப்பதை மறுக்கக் கூடாது. அதே நேரத்தில் சிருஷ்டிகளில் ஹக்குடைய ஜாத்தை ஷுஹூது செய்வதை காண்பதை விட்டுவிடக் கூடாது" என்பதேயாகும்.

இதுதான் சரியானது. நமது உண்மையான கொள்கையும் இதுதான் என்பதை மேலே பார்த்தோம்.

இக்காலத்தின் பெரும்பாலான மக்கள் 'வஹ்ததுல் உஜூது' என்பதை தவறாக விளங்கிக் கொண்டு சிருஷ்டிகளே இல்லை என்று நினைக்க ஆரம்பித்ததால் முஜத்தித் அல்பஸானீ (ரஹ்) அவர்கள் இஸ்திலாஹீ வார்த்தையை மாற்றி 'வஹ்ததுஷ் ஷுஹூது' என்று புழங்க ஆரம்பித்தனர். இவ்விரண்டின் கருத்தும் ஒன்றுதான் என்பதை விளக்கி இருக்க வேண்டும். எனினும் கால சூழ்நிலையைக் கருதி வார்த்தையை மட்டும் மாற்றி விட்டனர். கருத்துக்களில் எந்த வேறுபாடும் இல்லை. உஜூதிய்யாக்களும் இதையே சொல்கின்றனர். சிருஷ்டிகளின் தாத்தை மறுக்கக் கூடாது. சிருஷ்டிகளின் கண்ணாடியிலேயே தான் ஹக்கை ஷுஹூது செய்ய வேண்டும். இதுதான் அசல். இதுதான் குர்ஆன்

ஹதீஸ் காட்டும் விளக்கம். தீனுடைய பெரியோர்களின் வழியும் இதுதான். என்றாலும் இவ்விரண்டு கருத்துக்களின் ஒற்றுமையை விளக்குவதற்காக இவ்விருவர்களின் சொற்களையும் இங்கே எழுதுகிறோம்.

உஜூதிய்யாக்களின் இமாமான ஹஜ்ரத் சைய்யிதினா ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். மர்தபயே இம்கானை– மர்தபயே கல்கை–சிருஷ்டிகளின் ஜாத்தை மறுப்பது சரியல்ல.

المحقق يثبت الامكان ويعرف حضرته

முஹக்கிக்கானவர் ஆய்ந்தறிந்த ஞானியானவர் இம்கானை சிருஷ்டியைத் தரிபடுத்துவார். இன்னும் அதன் தகுதியையும் அறிந்திருப்பார்.

ولا يعلم هذا التفصيل الا العلماء بالله خاصه

இந்த விளக்கங்களை குறிப்பான இறை ஞானிகளைத் தவிர வேறு யாரும் அறியார்கள். (புசூசுல் ஹிகம்–இரண்டாவது ஃபஸ்ஸு)

இவ்விதமாகவே புதூஹாத்தே மக்கிய்யாவில் கூறுகிறார்கள். 'அவன் ஜுஹூருடைய அடிப்படையில் சிருஷ்டிகளுக்கு அய்ன் ஆகவும் ஜாத்துடைய அடிப்படையில் சிருஷ்டிக்கு ஃகைராகவும் இருக்கிறான். அவன் அவனாகவே இருக்கிறான். சிருஷ்டிகள் சிருஷ்டிகளாகவே இருக்கின்றன.

هو عين الاشياء في ظهوره لا في ذواتها بل هو هو الاشياء اشياء

பாருங்கள்! அய்னிய்யத்தை தரிபடுத்துகிற அதே நேரத்தில் ஃகைரிய்யத்தை எந்த அளவு உண்மையிலேயே உறுதிப்படுத்துகிறார்கள்.

இவ்வாறே ஷுஹூதிய்யாக்களின் இமாமான ஹஜ்ரத் முஜத்தித் அல்ஃபஸானீ அவர்களும் ஃகைரிய்யத்தை தரிபடுத்துவதுடன் உண்மையிலேயே அய்னிய்யத்தை எந்த அளவு தரிபடுத்துகிறார்கள் என்பதைப் பாருங்கள்.

மக்தூபாத் எனும் அவர்களின் நூலில் ஒரு கேள்விக்கு பதிலாக அவர்கள் கூறுவதைப் பாருங்கள் (மூலம் பார்சி மொழியில் உள்ளது. இங்கே அதன் மொழி பெயர்ப்பைத் தருகிறோம்).

"வஹ்ததுல் உஜூது"–ஒரு உஜூதுதான் உள்ளது என்பதும் உண்மையே! 'தஅத்துதுல் உஜூது'– உஜூது பல உண்டு என்பதும் உண்மையே! இரண்டின் கண்ணோட்டமும் வேறு வேறாகும். ஆகவே இங்கே "இஜ்திமாவுன் னகீழைன்" ஏற்படாது. அதாவது முரண்பட்ட இரு விஷயங்கள் சேர்வதாக ஆகாது!

இதற்குப்பின் கண்ணாடியும் அதில் காணும் தோற்றங்களும் என்ற உதாரணத்தைக் கூறுகிறார்கள். பிறகு இன்னொரு உதாரணமும் காட்டுகிறார்கள்.) இன்னொரு உதாரணமாக எரியும் சிறு நெருப்புக் கங்கைக் காட்டலாம். (ஊது

பத்தியைப் போல்) அதை வேகமாக வட்டமாகச் சுற்றும்போது ஒரு வட்டம் தெரிகிறது. நமது சிந்தனையில் தோற்றத்தில் ஒரு வட்டம் நிஜமாக இருப்பதாகவே வெளியில் தெரிகிறது. அதுவும் உண்மைதான். இங்கே அப்படி ஒரு வட்டம் வெளியில் இல்லை என்பதும் உண்மைதான். ஆனால் வட்டம் இல்லை என்பதுதான் பொதுவான–நிதர்சனமான உண்மை. வட்டம் இருப்பது என்பது நமது சிந்தனை யின் தோற்றத்தில் மட்டுமே உண்மை. முத்லக் இது முகய்யத் இந்த அடிப்படையில் வஹ்தத்துல் உஜூது என்பது முத்லக்கான தெளிவான–வெளிப்படையான உண்மையாகும். பல உஜூதுகள் இருப்பது சிந்தனைத் தோற்றத்தின் படியான முகய்யதான உண்மையாகும். ஆக வெவ்வேறு கண்ணோட்டத்தின்படி இரண்டும் உண்மையாகின்றன.

(இரண்டாம் பாகம் மக்தூப் 44)

இது தவிர இன்னும் பல இடங்களில் இதே நெருப்புக் கங்கின் வட்டத்தை உதாரணமாகக் காட்டி விளக்குகிறார்கள். தேவைப்படுவோர் மக்தூபாத் இரண்டாம் மூன்றாம் பாகங்களில் தேடிப்பார்க்கலாம்.

இன்னொரு இடத்தில் சில விளக்கங்களுக்குப்பின் இப்படிக் கூறுகிறார்கள். “இந்த விளக்கங்களால் நமக்குத் தெரிவது சிருஷ்டிகள் வெளியிலே அல்லாஹ்வுடைய உஜூதின் சுடரைக் கொண்டு உஜூதே லில்லீயைக் கொண்டு உண்டாகியிருக்கின்றன. ஹக் தஆலா தனது சொந்த உஜூதைக் கொண்டு உஜூதே அசலீயைக் கொண்டு மவ்ஜூதாக இருக்கிறான்.

(இரண்டாம் பாகம் – முதல் மக்தூப்)

ஆக இவர்களிடத்திலும் சிருஷ்டிகள் மவ்ஜூத் பிஜ்ஜாத் அல்ல! சுய உஜூது உடையது அல்ல! அதே நேரத்தில் இஃதிபாரீயும் அல்ல வாகயீயாக இருக்கிறது. அதாவது அதன் ஹகீகத் தரிபட்டிருக்கிறது. “நாம் கற்பனை செய்தால் இருக்கும், இல்லை என்றால் இருக்காது” என்பது சரியல்ல. ஏனெனில் இது சூபஸ்தாயிய்யா எனும் வழி தவறிய கூட்டத்தினரின் கொள்கையாகும். எனவே சிருஷ்டிகள் வெறும் கற்பனை (வஹ்மீ மஹஜ்) அல்ல. (வாகயீ காரிஜீ) வெளிப்படையில் தரிபட்டதுதான். ஆனால் சுய உஜூதைக் கொண்டு இல்லை. ஹக்குடைய உஜூதைக் கொண்டு இருக்கிறது.

பாருங்கள், ஷைகுல் அக்பர் (ரஹ்) அவர்களும் முஜத்தித் (ரஹ்) அவர்களும் அசல் மஸ்அலாவில் எந்த அளவு ஒத்திருக்கிறார்கள். உதாரணத்தை வைத்தே விஷயம் தெளிவாகி விடுகிறது.

16. உஜூதிய்யாக்களின் இஸ்திலாஹ்கள்

வஹ்ததுல் உஜூதை உறுதிப்படுத்துகின்ற மெஞ்ஞானிகள் காமிலீன்கள் இரண்டு வகை இஸ்திலாஹ்களைக் கூறுகிறார்கள். இரண்டையுமே பயன்படுத்துகிறார்கள். அவற்றின் விளக்கங்களையும் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

முதலாவது :- ஒரு உஜூது ஒரு ஜாத். ஐனிய்யத்தே ஹகீகீ, ஃகைரிய்யத்தே இஃதிபாரீ வாகயீ. உஜூது என்பது உள்ளமையைக் குறிக்கும். ஒரு ஜாத் என்பது சுய உஜூதைக் கொண்டு மவ்ஜூதாக இருக்கக்கூடிய ஹக்குடைய ஜாத்தைக் குறிக்கும். மற்ற சிருஷ்டிகளுடைய ஜாத்துகள் அனைத்தும் அந்த ஹக்குடைய மஜ்ஹர்களாகவே இருக்கின்றன. அவைகளை மும்கினாத் என்றும் தஅய்யுனாத் என்றும் அழைக்கப்படும். இந்த ஜாத்துகளைச் சம்பந்தப்படுத்தியே ஃகைரிய்யத்தே இஃதிபாரீ வாகயீ என்று கூறுகிறோம். (இவர்களும் சிருஷ்டிகளின் ஜாத்தை மறுக்கவில்லை. எனினும் அவைகளுக்கு சுய உஜூது இல்லாததால் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை.)

இரண்டாவது இஸ்திலாஹ் :- உஜூது ஒன்று. ஜாத் இரண்டு. உஜூது என்பது உள்ளமையாகும். ஒரு ஜாத் கிதமானது அது ஹக்குடைய ஜாத் ஆகும். இன்னொன்று அதமானது. இது கல்குடைய ஜாத் ஆகும். இதையே அதமே இழாபீ என்கிறோம்.

"அய்னிய்யத்தே ஹகீகீ இஸ்திலாஹீ உஜூதன்"

"ஃகைரிய்யத்தே ஹகீகீ இஸ்திலாஹீ ஜாத்தன்"

இந்த இரண்டு வகை இஸ்திலாஹ்களின் கருத்தும் ஒன்றுதான். புழங்கும் முறையிலும், விளக்கும் முறையிலும்தான் வித்தியாசமே தவிர அசல் ஒன்றுதான். இந்த இரண்டையுமே புழங்குகிறார்கள். ஹகாயிக்குடைய அடிப்படையில் தஃலீம் செய்யும்போது முந்திய இஸ்திலாஹையும் மஆரிபுடைய அடிப்படையில் தஃலீம் செய்யும்போது இரண்டாவது இஸ்திலாஹையும் புழங்குகிறார்கள். இரண்டின் கருத்தும் ஒன்றுதான். உஜூது என்பதைக் கொண்டு உள்ளமையை நாடுகிறார்கள். ஜாத் என்பதைக் கொண்டு சுய உஜூதைப் பெற்றிருக்கும் ஹக்குடைய ஜாத்தை நாடுகிறார்கள். அவனுடைய உஜூதும் ஜாத்தும் ஒன்றுதான். இதையே "உஜூத் ஒன்று ஜாத் ஒன்று" என்று இவர்கள் கூறுகிறார்கள். அந்த உஜூதுடைய வெளிப்பாடு தன்னல்லாத பிறவற்றில்தான் உண்டாகும். ஆகவே அஃயானே ஸாபிதாவின் ஹகீகத்தும் இன்னும் அதன் ஃகைரிய்யத்தும் வாகிஅதன் சூரத் ஆகின்றது. இந்த அஃயானே சாபிதா தான் மஜ்ஹரே ஹக்காகும். இதையே சிருஷ்டிகள் என்கிறோம். இதையே ஹக் தஆலா வெளிப்படுத்துகிறான்.

இந்த அடிப்படையில் தான் சொல்கிறோம் "ஹக் ஒருபோதும் கல்க் ஆவதில்லை". ஏனெனில் ஹகீகத்தே ஹக் உஜூதே மஹஜ் ஆகும். அதேபோல் கல்க் ஒருபோதும் ஹக் ஆவதில்லை. ஏனெனில் ஹகீகத்தே கல்க் அஃயானே

சாபிதாவாகும். இன்னும் அஃயானே சாபிதாக்கள் இல்மில் இருந்த தோற்றங்களேயன்றி வேறில்லை. அவை ஹக்குக்கு ஃகைராக (வேறானதாகவே) இருக்கின்றன. ஏனெனில் ஹக் தஆலா தன்னுடைய ஹகீகீயான அஜலீயான இல்மிலேயே அவற்றை தனது ஃகைராகவே (தான் அல்லாத வேறொன்றாகவே) அறிந்தான். இதுதான் கைரிய்யத்தே இஃதிபாரீ வாகயீ அல்லது ஹகீகீ இஸ்திலாஹீ என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஹக் அல்லாதவைகள் அவனால் இஃதிபார் செய்யப்பட்டவை–அறியப்பட்டவைதான். இன்னும் அவனுடைய இல்மிலே வாகயீயாக இருப்பவைதான்–தரிபட்டவைதான்.

எனவே ஹகீகத்துகள் மாறுபடுவது முஹால் ஆகும்–சாத்தியமற்றதாகும். இதன் மூலம் ஹக் கல்காக முடியாது. கல்க் ஹக்காக முடியாது என்பது முற்றிலும் சரியானது. வெறும் கற்பனை அல்ல என்பதும் தெளிவாகிறது.

எச்சரிக்கை! வெறும் கிதாபுகளை மட்டும் படித்து விட்டு தாங்களும் ஒரு ஆய்வாளர்கள் என்று வாதம் செய்யும் முகல்லிதீன்கள் இங்குதான் சருகிப் போனார்கள். காரணம் பெரியோர்களின் வார்த்தைகளில் பயன்படுத்தும் இஃதிபாரீ என்ற வார்த்தைக்கு சரியாக இவர்கள் பொருள் விளங்கவில்லை. அந்த 'இஃதிபாரீ' என்பதற்கு இவர்களாகவே இரண்டு விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டனர்.

முதலாவது :- இஃதிபாரீ என்றால் நமது இஃதிபார் என்று விளங்கிக் கொண்டார்கள். அதாவது நாம் கவனித்தால் அது ஹக்குக்கு ஃகைராகும். இல்லையெனில் இல்லை என்று கருதிக் கொண்டார்கள். உண்மையில் நாம் எங்கே? நமது இஃதிபார் எங்கே? நமக்கு என்ன தகுதி இருக்கிறது இஃதிபார் செய்வதற்கு. இதுவோ ஹக் தஆலாவுடைய இஃதிபாரைப் பேசக்கூடியதாக இருக்கிறது. அது வாகயீயாக நப்சுல் அம்ரீயாக உண்மையில் தரிபட்டதாக இருக்கிறது.

இரண்டாவது :- ஹக்குடைய இல்மிலே முன்தரிஜாக இருக்கக்கூடிய அஃயானே சாபிதாவை மாஹியத்தென் ஹக்குடைய அய்னாகக் கருதிக் கொண்டார்கள். இதன் அடிப்படையில் ஃகைரிய்யத்தே இஃதிபாரீ என்று எண்ணிக் கொண்டார்கள். இதனால்தான் இல்ஹாத் எனும் வழிகேட்டின் கதவு திறந்து கொண்டது. உண்மை ஞானிகள் யாரும் இந்தக் கருத்தைக் கூறவில்லை. எந்த முஹக்கிகீன்களின் யாஃப்தும் முஷாஹதாவும் இப்படி இருக்கவில்லை. முஹக்கிகீன்களின் தலைவர் ஷைகுல் அக்பர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

اَلعَبْدُ عَبْدٌ وَاِنْ ترقى   والرّبُّ ربٌّ وان تنزل

அடியான் எவ்வளவு உயர்ந்தாலும் அவன் அடியான்தான்!

ரப்பு எவ்வளவு தனஜ்ஜுலில் வந்தாலும் அவன் ரப்புதான்!

இந்த உதாரணத்தை கவனியுங்கள்! இது மிகவும் தெளிவான உதாரணம். பாருங்கள்! நமது சிந்தனையில் நாய், குரங்கு, சிங்கம், பூனை, நரி ஆக

எத்தனையோ வஸ்துக்கள் இருக்கின்றன. அப்படியானால் நாம் என்ன அந்த வஸ்துக்களுக்கு ஐனாக ஆகி நாமும் நாயாக, குரங்காக, சிங்கமாக, பூனையாக, நரியாக ஆகியாவிட்டோம்? அல்லாஹ் பாதுகாப்பானாக.

அவனனுடைய சிறிய மஜ்ஹராக இருக்கும் நாமே இப்படிப்பட்ட வஸ்துக்களாக ஆவதை ஏற்றுக் கொள்வதில்லை எனும்போது அவன் எப்படி இதை ஏற்றுக் கொள்வான். ولله المثل الاعلى "மிக உயர்ந்த உதாரணம் அல்லாஹ்வுக்கே இருக்கிறது" (16 : 60) என்ற அந்தஸ்த்தை உடைய அவனது ஜாத் எப்படி இதை ஏற்றுக் கொள்ளும்? அவர்கள் வர்ணிப்பதை விட்டும் سبحان الله عما يصفون அல்லாஹ் பரிசுத்தமானவன்.

இப்போது இன்னொரு இஸ்திலாஹைப் பார்ப்போம். அதற்கும் இதே பொருள் தான். எனினும் மஆரிப் அடிப்படையில் ஞான விளக்க முறையில் தஃலீம் செய்யும் போது இன்னும் அதன் தகாயிக் நுட்பங்களை விளக்கும்போது 'உஜூத் ஏக் ஜாத் தோ' உஜூது ஒன்று ஜாத் இரண்டு என்ற முறையில் விளக்குகிறார்கள். உஜூது என்பது உள்ளமையைக் குறிக்கிறது. 'ஜாத்' என்பது மர்ஜயே அஸ்மா வ சிபாத்– பெயரும் தன்மைகளும் மீளும் இடத்தைக் குறிக்கிறது. ஜாத்துடைய வித்தியாசம் பெயர்கள் இன்னும் தன்மைகளால் தான் உண்டாகிறது என்பது வெளிப்படையான விஷயம். ஒரு ஜாத் மவ்ஜூதே உஜூதியான ஜாத் ஆகும். அதை 'ஜாத்தே கிதம்' என்று சொல்கிறோம். அதன் சிபாத்துகள் ஜாத்திய்யா சுபூத்திய்யாவாகும். அவை ஹயாத் (ஜீவியம்)–இல்ம் (ஞானம்)–இராதா (நாட்டம்)–குத்ரத் (வல்லமை) சமாஅத் (கேட்கும் தன்மை) பசாரத் (பார்வை) கலாம் (பேச்சு).

இரண்டாவது ஜாத்தே அதம் ஆகும். அதை அதமே இழாபி என்று சொல்கிறோம். அதன் இன்னொரு பெயர் 'அஃயானே ஸாபிதா'வாகும். இதன் தன்மைகள் சிபாத்துகள் சுபூத்திய்யா சல்பிய்யாவாகும். அவையாவன : மௌத் (மரணம்) ஜஹ்ல் (அறிவின்மை) இள்திரார் (நாட்டமின்மை) இஜ்ஸ் (வல்லமையின்மை) சும்மத் (கேட்குதல் இன்மை) உம்யத் (பார்வையின்மை) புக்மத் (பேச்சு இன்மை) ஆகியனவாகும். இன்னும் இவ்வாறே ஒவ்வொரு சிபத்துகளின் அடிப்படையில் ஒவ்வொரு பெயர்கள் இருக்கின்றன.

உஜூதுடைய நிஸ்பத் சம்பந்தம் இரண்டாகும். ஒன்று ஜாத்தே கிதமுடன் உள்ள சம்பந்தம். உஜூது அதற்கு ஐனாக இருக்கிறது. உஜூதுக்கு அது ஐனாக இருக்கிறது. உஜூது ஐனே ஜாத். ஜாத் ஐனே உஜூது. அதாவது உஜூது தான் ஜாத்தாகும். உஜூதுடைய இன்னொரு நிஸ்பத் ஜாத்தே அதமுடன் இருக்கிறது. அதற்கு உஜூது ஜாயித்பர் தாத். தாத்துக்கு வேறாக இருக்கிறது. அதாவது இழாபியாக இருக்கிறது. மாஹியத்தன் அதற்கு ஐன் அல்ல. இந்த முறையில் தான் ஃகைரிய்யத்தே ஹகீகி ஜாத்தீ இஸ்திலாஹி என்று கூறுகிறோம். உண்மையும் இதுதான். அவ்வாறின்றி அதமே இழாபீயான ஜாத்தே அதமுக்கு உஜூது ஐனாக இருக்குமானால் அதுவும் ஜாத்தே கிதமாக ஆக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். அப்போது அதமே இழாபீ என்று எவ்வாறு சொல்ல முடியும்? இன்னும்

சிபாத்தே நாகிஸாக்களின் மீளுமிடமாக எதைச் சொல்ல முடியும்? கடைசியில் குப்ரும் இல்ஹாதும் தவிர வேறு எதுவும் மிச்சமிராது. (அல்லாஹ் பாதுகாப்பானாக).

ஞாபகமிருக்கட்டும்! ஷரீஅத்படி இந்த ஜாத்தே அதமைத்தான் கல்க் என்று சொல்கிறோம். இன்னும் ஜாத்தே கிதமை ஹக் என்று சொல்லுகிறோம். ஜாத்தே அதம் பைஜே உஜூதைப் பெறாமல் மவ்ஜூதே இழாபியாக ஆக முடியாது. எனவே ஜுஹூருடைய அடிப்படையில் உஜூதன் ஐனியத்தே ஹகீகி இஸ்திலாஹி என்று கூறுகிறோம்.

இதனால் நமக்குத் தெளிவாகிறது. இரண்டு இஸ்திலாஹ்களும் ஒரே பொருளையே குறிக்கின்றன. எனினும் இந்த இரண்டாவது இஸ்திலாஹான உஜூத் ஏக் ஜாத்தோ, ஐனிய்யதே ஹகீகீ இஸ்திலாஹி கைரிய்யத்தே ஹகீகீ இஸ்திலாஹி என்பது மிகவும் தெளிவாகவும், விளக்குவதற்கு லேசாகவும் தகாயிக் அடிப்படையில் மிகவும் உயர்வாகவும், ஜாமிஃ மானிஃ ஆகவும் இருக்கிறது. (அனைத்துக் கருத்துகளையும் உள்ளடக்கியதாகவும், மாற்றுக் கருத்துக்கு இடம் தராததாகவும் இருக்கிறது.)

17. ஷுஹூதிய்யாக்களின் இஸ்திலாஹ்

இவர்களும் ஒரு உஜூது இரண்டு ஜாத்துகள் என்று கூறுகிறார்கள். ஆனால் உஜூது என்பதற்கு வெளிப்படையில் அவர்கள் அதை ஒரு சிபத் என்கிறார்கள். முஜத்தித் அல்பஸானீ ரஹ்) அவர்கள் முதகல்லிமீன்களின் முறைப்படி பேசக்கூடிய வர்களாக இருந்தார்கள். எனவே உஜூது என்பதை மஜ்தரீ பொருளில் பயன்படுத்தினர். ஜாத்துக்கு மர்ஜயே அஸ்மா வசிபாத் (பெயரும் தன்மையும் மீளுமிடம்) என்ற பொருளே கொண்டார்கள். இன்னும் ஜாத்தே கிதமுக்கு உஜூது என்பது 'சிபத்தே ஜாத்திய்யா' என்றார்கள். எனவே ஹயாத், இல்ம், இராதா, குத்ரத், சமாஅத், பஸாரத், கலாம் என்ற ஏழு சிபத்துகளுடன் உஜூது என்பதையும் எட்டாவது சிபத்தாகக் கூறினார்கள். எனவே தனது உரைகளில் மிகுதமாக 'சிபாத்தே ஸமானிய்யா' எட்டு சிபத்துகள் என்றே குறிப்பிட்டார்கள்.

சிபத்தே அதமிய்யாவான மௌத், இஜ்ஸ், இழ்திரார், இஜ்ஸ், சும்மத், புக்மத், உம்யத்தைக் கொண்டு நிரம்பிய இன்னொரு ஜாத்தை 'ஜாத்தே அதம்' என்றார்கள்.

இப்போது இந்த ஜாத்தே அதம் எப்படி மவ்ஜூதானது என்பது பற்றிக் கூறும்போது கூறுகிறார்கள்.

"ஜாத்தே கிதமுடைய சிபத்தான உஜூதுடைய பைஜானே லில்லீ சுடரைக் கொண்டு இது மவ்ஜூதாகி விட்டது.

ஆக கருத்து, அதே கருத்துதான். மேலும் அவர்கள் நெருப்புக் கங்கின் வட்டத்தை உதாரணமாகக் காட்டியதில் இன்னும் தெளிவாக விளங்குகிறது. அதாவது ஒரு கருத்தை வேறொரு வார்த்தை மூலம் விளக்கியிருப்பதாகக் கொள்ளலாம். ஆனால் ஒரு சின்ன வித்தியாசம் உஜூதை சிபத் என்று கூறுகிறார்கள். அதை நாம் இப்படி விளங்க வேண்டும். ஒன்று தங்கள் கால சூழ்நிலையை கவனித்து இஸ்திலாஹன் அவ்வாறு சொல்லிக் கொண்டனர். அல்லது அது சஹ்வே லப்ளீ எனும் வார்த்தைச் சருகுதல் என்று வைக்கலாம். ஏனெனில் கருத்து கொஞ்சம் கூட மாறவில்லை. எனினும் இந்த பகீருடைய கருத்து என்னவென்றால் அது வார்த்தைச் சருகுதல் கூட அல்ல. 'தஜாஹுலே ஆரிபானா'வாகும். அதாவது தெரிந்து கொண்டே சில காரணங்களுக்காக மறைத்தல் ஆகும். உண்மையும் அதுதான். ஏனெனில் உஜூது என்பது 'ஹஸ்த்' 'உள்ளமை' என்று முஜத்தித் அல்பஸானீ அவர்களே கூறுகிறார்கள். இன்னும் இந்த பொருளே கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்கள். மக்தூபாத்தில் கூறுகிறார்கள் :–

ஆக மும்கினான சிருஷ்டிகள் எதையெல்லாம் வைத்திருக்கின்றனவோ அவையெல்லாம் பரிசுத்த உஜூதிடமிருந்து அருளாகப் பெற்றதுதான். தன் அப்பன் வீட்டிலிருந்து எதையும் கொண்டு வரவில்லை. உஜூதுடைய சுடர் இன்றி தானே இது மவ்ஜூதாகிவிட்டது என்று கூறுவது முடியாத விஷயமாகும். இன்னும் ஹக்

தஆலாவின் சொந்தத் தன்மைக்கு இணை வைப்பதும் ஆகும். இவை அனைத்தையும் விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன். இந்த பகீர் தன்னுடைய சில ஏடுகளில் உலகத்தை மவ்ஜூதே காரிஜீ என்று கூறியிருக்கிறேன். அதுவும் இந்தப் பொருளில்தான். ஹக்குடைய உஜூதுடைய சுடரைக் கொண்டு 'லிள்ளீ' எனும் முறையில் வெளியில் சிருஷ்டிகள் மவ்ஜூதாக இருப்பதாகக் கூறவேண்டும்.

முதகல்லிமீன்கள் உஜூதை சுபூத் (தரிபடுதல்) தஹக்குக் (இருத்தல்) என்ற வார்த்தைகளுக்கு இணையான பொருளுடையதாகக் கருதுகிறார்கள். அது அகராதிப் பொருள்படியாகும். இல்லையெனில் உண்மையில் உஜூது வேறு சுபூத் வேறு ஆகும். ஏனெனில் கஷ்பும் ஷுஹூதும் பெற்ற மெய்ஞ்ஞானிகள் மிகுதமானோர் உஜூது என்பது ஹக் தஆலாவுடைய ஹகீகத்துக்கு அய்ன் என்று கூறியுள்ளார்கள். (அதாவது உஜூதுதான் ஹக்) சுபூத் என்பது மஃகூலாத்தே ஸானவிய்யாவில் உள்ளதாகும். அதாவது அறிவால் விளங்கப்படக் கூடியது வெளியில் இல்லாததாகும். இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

(மக்தூபாத்–இரண்டாம் பாகம்–மக்தூப் 98)

அன்பர்களே! இதன் மூலம் நமக்கு நன்கு தெரிய வருகிறது. முஜத்தித் அல்பஸானீ (ரஹ்) அவர்கள் ஷுஹூதியாகவும் இருந்தார்கள். உஜூதியாகவும் இருந்தார்கள்.

அசல் வித்தியாசம் என்னவெனில் ஹஜ்ரத் அவர்கள் முதகல்லிமீன்களின் (தீனுடைய கொள்கைகளை தத்துவ வாத முறையில் விளக்கும் அறிஞர்களின்) பாணியில் பேசக் கூடியவர்களாக இருந்தார்கள். அஹ்லே ளாஹிர்களான வெளி உலமாக்களின் எதிர்ப்பு வராமல் இருப்பதற்காக இந்த பாணியைக் கையாண்டார்கள். இந்த விஷயத்தைத் தன்னுடைய மக்தூபாத்களிலும் கூறியுள்ளார்கள். எனவே ஷுஹூத் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். வெளிப்படையில் அஹ்லே ளாஹிர்களுக்கு மாற்றம் செய்யாத முறையிலும் உண்மையில் வஹ்ததுல் உஜூதை நிலை நாட்டும் முறையிலும் இவ்வாறு செய்தார்கள். இதே அடிப்படையில் தான் உஜூதுடைய மஸ்அலாவை 'இல்முல் யகீன்' என்றும் 'வஹ்ததுஷ் ஷுஹூதை அய்னுல் யகீன்' என்றும் கூறுகிறார்கள். இவை வெறும் வார்த்தை வித்தியாசங்களேயன்றி வேறு இல்லை. அதுவும் சில காரணங்களுக்காகத் தான் இவ்வாறு செய்தார்கள்.

ஆனால் கைசேதம் என்னவென்றால் பிற்காலத்தில் வந்த பெரும்பாலான வர்கள் இதையும் விளங்கவில்லை, அதையும் விளங்கவில்லை. தாங்களாகவே சில தவறான விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டு 'வஹ்ததுல் உஜூது' கருத்துடையவர்களை வழி தவறியவர்கள் என்று கூற ஆரம்பித்தனர். வெறும் தங்கள் கற்பனைகளைப் பின்பற்றியதால் ஷிர்க்கே கபீ, ஷிர்க்கே அக்பாவில் மூழ்கி தங்கள் வழியையும் கெடுத்துக் கொண்டு பிறரையும் குறை சொன்னார்கள். இவையெல்லாம் இஸ்திலாஹ்களை புழக்க பாஷைகளை விளங்காததால் ஏற்பட்டதாகும்.

இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், இங்கே நாம் மேற்கூறிய உஜூத், ஷுஹூத் போன்ற இஸ்திலாஹீ புழக்க பாஷையின் வார்த்தைகள் எல்லாம் அதை உருவாக்கியவர்கள் தங்கள் காலசூழ்நிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொண்ட வார்த்தைகள்தான். தவ்ஹீதுடைய மஸ்அலாவை எளிதாக விளக்குவதற்காக புழக்கத்தில் உள்ள அந்த வார்த்தைகளைக் கொண்டு விளக்கினார்கள். மற்றபடி வேறு எந்த அவசியமும் இல்லை. அசல் மஸ்அலாவோ குர்ஆன் ஹதீஸில் தெளிவாக உறுதியான செய்தியாகும். தேட்டம் உடையவர்களுக்கு மிக எளிதாக விளக்குவதற்காக இந்த வார்த்தைகள் பயன்பட்டன.

அறிந்து கொள்ளுங்கள்! வஹ்ததுல் உஜூதுடைய மஸ்அலாவை இஸ்திலாஹீ வார்த்தைகளைக் கொண்டு விளக்கம் அளித்து அவற்றை முறைப்படுத்தி முதல் முதலில் தொகுத்தவர்கள் இமாமுல் ஆரிபீன் சைய்யிதுனா ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் ஆவார்கள். ஞான விளக்கங்களில் அவர்கள் எழுதிய நூல்களில் புதூஹாத்தே மக்கிய்யா, புசூசுல் ஹிகம் இவை இரண்டும் மிக முக்கியமான இன்னும் பிரபலமான நூற்களாகும். அனைத்து ஆரிபீன்களாலும், மெஞ்ஞானிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டவைகளாகும்.

இப்னு அரபி (ரஹ்) அவர்களின் சிறப்பைப் பற்றி இமாமே ரப்பானீ முஜத்தித் அல்பஸானீ, ஹஜ்ரத் ஷைக் அஹ்மத் ஸர்ஹந்தீ (ரஹ்) அவர்கள் கூறிய கருத்துக்களை தங்கள் முன் வைக்கிறோம்.

இதனால் தங்களுக்கு இன்னொரு தெளிவும் கிடைக்கும். ஹஜ்ரத் முஜத்தித் (ரஹ்) அவர்களின் மஸ்லக்–வழி ஷுஹூத் என்பதாக இருந்தாலும் சில இஸ்திலாஹி வேறுபாடுகள் சில வார்த்தை வித்தியாசங்கள் இருந்தாலும் இவர்கள் ஹஜ்ரத் இப்னு அரபி (ரஹ்) அவர்களை எந்த அளவு மரியாதை செய்கிறார்கள். அவர்களின் உயர்வை எந்த அளவு வெளிப்படுத்துகிறார்கள் என்பதைப் பாருங்கள். சுப்ஹானல்லாஹ்! நாம் என்ன சொல்வது பெரியோர்களின் பேச்சுக்களும் பெரியதாகவே இருக்கின்றன.

தங்கள் மக்தூபாத்தில் சில விஷயங்களுக்குப் பின் எழுதுகிறார்கள். “இறைவா! என்ன செய்வது, இந்த மைதானத்திலே ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் இருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்களுடன் வேறுபடுகிறோம். சில நேரங்களில் அவர்களுடன் ஒன்றுபடுகிறோம். இவர்களல்லவா மஃரிபத் இர்பான் எனும் ஞான வழிக்கு அடித்தளம் அமைத்தவர்கள். அதை விரிவாக விளக்கியவர்களும் இவர்கள்தான். இன்னும் இவர்கள் தானே தவ்ஹீத்–இத்திஹாத் ஒன்றுபடுத்தலைப் பற்றி விரிவாகப் பேசியவர்கள். இன்னும் இவர்கள்தான் தஅத்துத்–தகஸ்ஸுர் பலவாகுதலின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியவர்கள். உஜூது என்பது ஹக் தஆலாவுக்கு மட்டுமே சொந்தம்.

சிருஷ்டிகள் எல்லாம் மஃஹூம் முதகய்யில்–சிந்தனைத் தோற்றங்கள் தான் என்பதை உறுதிப்படுத்தியவர்களும் இவர்கள்தானே. தனஜ்ஜுலாத்தை உஜூதுக்கு மட்டுமே சொந்தப்படுத்தி ஒவ்வொரு மர்தபாவின் அஹ்காம்களையும் தனித்தனியே விளக்கியவர்களும் இவர்கள்தானே. சிருஷ்டிகள் அனைத்துக்கும் ஹக் தஆலா அய்னாக இருக்கிறான். எல்லாம் அவனாகவே ‘ஹமா ஒஸ்த்’ ஆகவே இருக்கிறான். ஆனால் அத்துடனே தன்ஜீஹ் உடைய மர்தபாவில் சிருஷ்டிகளை விட்டும் முனஜ்ஜஹ் பரிசுத்தமாக இருக்கிறான். அந்த மர்தபாவில் அவனைப் பார்ப்பது அவனை அறிவது இவற்றை விட்டும் அவன் பரிசுத்தமாக இருக்கிறான் என்பதை விளக்கியவர்களும் இவர்கள்தானே. இவர்களுக்கு முன் உள்ள ஷைகுமார்களும் இந்தக் கருத்துக்களை கூறியிருந்தாலும் மறைமுகமாகவும் மூடலாகவுமே கூறியிருந்தார்கள். தெளிவாகவும் விளக்கமாகவும் கூறவில்லை. இவர்கள் தான் முதலில் மஸ்அலாக்களை விவரித்தார்கள்! இவர்களுக்குப்பின் வந்த ஷைகுமார்களில் பெரும்பாலானவர்களும் இவர்களையே பின்பற்றினர். இவர்களின் இஸ்திலாஹ்படியே பேசினார்கள். கடைநிலையில் உள்ள நாமும் இவர்களின் பரகத்தைக் கொண்டுதான் அருள் பெறுகிறோம். இவர்களின் கல்வி ஞானங்கள்ளக் கொண்டுதான் பலன்பெறுகிறோம். அல்லாஹ் அவர்களுக்கு மிகச் சிறந்த கூலியை நம் புறமிருந்தும் வழங்குவானாக! ஆமீன்.

(மக்தூபாத் பாகம் 3 மக்தூப் 79)

அன்பர்களே! இந்த மக்தூபில் இருந்து இமாம் ஹஜ்ரத் ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் மஸ்லக் கொள்கை நன்கு விளங்க வருகிறது. மர்தபயே கல்கை மறுக்காமல் உஜூதுடைய மஸ்அலாவை தெளிவாக்கியுள்ளார்கள். முஜத்தித் (ரஹ்) அவர்கள் ஷுஹூதி கருத்துடையவர்கள் எனினும் உஜூதி கருத்துக்களை ஒத்துதான் இருக்கிறார்கள் என்பதும் விளங்குகிறது. ஆக சில வார்த்தை வேறுபாடுகள் இருந்தாலும் கருத்தின் அடிப்படையில் மஸ்லகே ஷுஹூத் என்பதும் மஸ்லகே உஜூத் தான் என்பது தெளிவாகிறது.

18. மெஞ்ஞானிகளின் கருத்துக்கள்

இன்னும் நன்கு மனத் தெளிவும் உறுதியும் ஏற்படுவதற்காக 'வஹ்ததுல் உஜூது' பற்றி விளக்கமளித்த சில மெஞ்ஞானிகளின் கருத்துக்களை அவர்களின் வார்த்தைகளிலேயே எழுதுகிறோம்.

ஹழ்ரத் ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

"ஆக கல்கும் ஹக்கும் ஜாத்துடைய அடிப்படையில் எந்த முறையிலாவது ஒன்று சேர முடியும் என்பது ஒருபோதும் சரியாகாது".

(புதூஹாத்தே மக்கிய்யா பாகம் 1, முன்னுரை).

மேலும் கூறுகிறார்கள் :–

"அல்லாஹுத் தஆலா பிஜாத்திஹி லிஜாத்திஹி மவ்ஜூதே முத்லக்காகவும், ஃகைரே முகய்யதான உஜூதாகவும் இருக்கிறான்".

மேலும் கூறுகிறார்கள் :–

"உலகம் பிநஃப்ஸிஹியும் இல்லை லிநஃப்ஸிஹியும் இல்லை. (தானாகவும் இல்லை தனக்காகவும் இல்லை.) மாறாக அது ஹக் தஆலாவுடைய ஜாத்துடன் தன் ஜாத்துடைய அடிப்படையில் முகய்யதுல் உஜூதாக இருக்கிறது! ஆக உலகத்தின் உஜூது ஹக்குடைய உஜூது கொண்டே தவிர நிலை பெறாது".

(புதூஹாத்தே மக்கிய்யா பாகம் 1, பாடம்–2)

மேலும் கூறுகிறார்கள் :–

அவனுடைய இல்மிலே நம்முடன் தரிபட்டிருந்த தோற்றத்தில் தான் அவன் நம்மை படைத்தான். நாமோ நமது ஜாத்திலே மஃதூமாக (உஜூது இல்லாமல்) இருந்தோம். (புதூஹாத்தே மக்கிய்யா)

பிறகு கூறுகிறார்கள் :–

فالعالم متوهم ما له وجود حقيقى

சிருஷ்டிகள் சிந்தனையில் தரிபட்டிருந்த வஹ்மீ தோற்றங்கள் தான் அவைகளுக்கு சுய உஜூது இல்லை.

பிறகு சிருஷ்டிகளைப் படைத்தலைப் பற்றிய பாடத்திலே கூறுகிறார்கள் :–

فقابل ثلاثة بثلاثة ذاته الثابتة في حال عدمها

في موازنة ذات موجودها

ஆக சிருஷ்டிகளின் மூன்று வஸ்துக்கள் சிருஷ்டிகர்த்தாவின் மூன்று வஸ்துக்களோடு நேர்பட்டன. ஒன்று சிருஷ்டிகள் அதமாக இருக்கும் நிலையிலும்

அதற்கு தரிபட்டு இருக்கும் அதன் 'ஜாத்'தாகிறது படைத்தவனின் ஜாத்துக்கு நேர்பட்டது. (புசூசுல் ஹிகம்–ஹிக்மதே புதூஹிய்யா பீ கலிமத்தி ஸாலிஹிய்யா)

இதைத் தவிர இன்னும் பல இடங்களிலே "புதூஹாத்தே மக்கிய்யா", "புசூசுல் ஹிகம்" கிதாபுகளிலே சுய உஜூதுடைய ஹக்குடைய ஜாத்தைப் பற்றிக் கூறும்போதும் மும்கின் அல்லது மஃலூம் என்று அழைக்கப்படும் சிருஷ்டிகளுக்கும் 'ஜாத்' என்ற வார்த்தையைக் கூறுகிறார்கள். நீளமாகிவிடும் என்பதற்காக அவற்றை எழுதவில்லை. (இன்ஷா அல்லாஹ் தனி நூலாக எழுதலாம்.)

இவர்கள் வஹ்தத்துல் உஜூதுடைய பெரியோர்களின் முன்னோடியாகவும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஞானியாகவும் இருக்கிறார்கள். இவர்களின் ஆதாரத்துக்குப் பின் வேறு எந்த ஆதாரமும் தேவையில்லை. எனினும் மன அமைதிக்காக வேறு சில முக்கிய பெரியோர்களின் கருத்துக்களையும் முன் வைக்கிறோம்.

ஹஜ்ரத் ஷைகு அப்துல் கரீம் ஜீலீ (ரஹ்) அவர்கள்,

இவர்கள் வஹ்தத்துல் உஜூதுடைய பெரியோர்களில் தமது காலத்தின் தலைவராக இருந்தார்கள். இவர்களின் நூலான 'இன்சானே காமில்' மிகவும் பிரபலமானதாகும். இறைஞான விளக்கங்களில் மிகவும் ஆய்வுப் பூர்வமான முறையில் எழுதப்பட்டதாகும். அதில் கூறுகிறார்கள் :–

اعلم ان المطلق الذات هو الامر الذى تستند اليه الاسماء والصفات في عينها لا في وجودها، فكل اسم وصفة استند الى شيء فذلك الشيء هو الذات سواء كان معلوما كالعنقاء او موجودا. الموجود نوعان نوع موجود محض وهو ذات البارى سبحانه تعالى ونوع موجود ملحق بالعدم وهو ذات المخلوقات.

(انسان كامل جلد اول صفحه ١٣)

அறிந்து கொள்ளுங்கள்! எதன் பக்கம் அஸ்மாக்களும் சிபாத்துகளும் இணைக்கப்படுகிறதோ அதுவே 'ஜாத்' ஆகும். இதில் உஜூதை இஃதிபார் செய்வதில்லை. (அதாவது பெயர்களும் தன்மைகளும் மீளுமிடமே தாத் ஆகும். அதற்கு உஜூது இருப்பினும் இல்லாவிடினும் சரியே!) ஆக இஸ்மும் சிபாத்தும் இணைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவையும் 'ஜாத்' என்று கூறலாம். அது மஃதூமாகவோ மவ்ஜூதாகவோ எப்படி இருந்தாலும் சரியே. மஃதூமுக்கு உதாரணம் 'அன்கா' (இது யானை இறாஞ்சிப் பறவை என்ற ஒரு பறவையின் பெயர். இது தற்போது இல்லை) மவ்ஜூதும் இரண்டு வகை ஆகும். ஒன்று மவ்ஜூதே

மஹ்ஜ் (அதமில்லாத மவ்ஜூது) இது ஹக்குடைய ஜாத்தாகும். இன்னொன்று அதமுடன் சேர்ந்த மவ்ஜூது. இது சிருஷ்டியின் ஜாத் ஆகும்.

(இன்சானே காமில் பாகம்–1. பக்கம் 13)

ஹஜ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள்

இவர்களும் வஹ்ததுல் உஜூதுடைய பெரியோர்களில் தனிச் சிறப்புடைய இமாமாக இருந்தார்கள். மேலும் அனைத்து பிரிவினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வர்களாகவும் இருந்தார்கள். இவர்களின் 'மஸ்னவீ ஷரீப்' எனும் நூல் உலகறிந்த பிரபலமான நூலாகும். அதில் கூறுகிறார்கள் :–

ما عدمهائیم و هستی های ما — تو وجود مطلقی فانی نما

ما چو نائیم و نوا در ما ز تست — ما چو چنگیم و صدا در ما ز تست

جز و یک رو نیست پیوسته بکل — ورنه خود باطل شدی بعث رسل

چون رسولان از پی پیوستن اند — پس چه پیوندند چون شان یک تنند

அதாவது,

1. நாமும் எமது ஜாத்தும் அதமாக இருக்கிறோம். நீயோ உஜூதே முத்லக் (ஹஸ்தே மஹஜ்) ஆனவன். இன்னும் ஃபானீயைக் காட்டக்கூடியவனாக இருக்கிறாய்.

2. நாம் (எமது ஜாத்) ஒரு புல்லாங்குழல் போன்றுதான் இருக்கிறோம். அதன் ஓசையோ உன்னுடையது. நாம் ஒரு சங்கைப் போலத்தான் இருக்கிறோம். அதன் சத்தமோ உன்னுடையது.

3. ஒரு இஃதிபாரில் நாம் ஹக்குக்கு அய்னாக இருக்கிறோமே அன்றி முற்றிலும் அவனுக்கு அய்ன் அல்ல. (அதாவது நாமே அவன்–அவனே நாம் அல்ல) இல்லை எனில் நபிமார்களை அனுப்பியதே வீண் என்று ஆகிவிடும்.

4. ஏனெனில் நபிமார்கள் ரசூல்மார்கள் அடியார்களை அல்லாஹ்வுடன் இணைத்து வைக்க வந்தார்கள். அய்னிய்யத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டால் இணைப்பு என்பதே அர்த்தமற்றதாகிவிடும்! இது சரியல்ல. –மஸ்னவீ ஷரீப்

மவ்லானா ஜாமீ (ரஹ்) அவர்கள்

இவர்களும் பிற்காலத்தில் வாழ்ந்த பிரபலமான அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஞானியாவார்கள்! இவர்களும் வஹ்ததுல் உஜூது கருத்தை உறுதிப்படுத்தினார்கள். நாம் மேலே கூறியது போல, 'உஜூது ஏக் ஜாத் ஏக்', 'உஜூது ஏக் ஜாத் தோ' என்ற இரண்டு இஸ்திலாஹ்களையும் குறிப்பிடுகிறார்கள்.

ذات همه جز وجود قائم بوجود
ذات تو وجود ساذج و هستی بحت

எல்லோருடைய தாத்தும் உஜூதுக்கு அய்ன் அல்ல. ஆனால் உஜூதைக் கொண்டுதான் அது தரிபட்டிருக்கின்றது.

(யா அல்லாஹ்) உன்னுடைய தாத்தோ – உஜூதே காலிஸ் ஆகவும் – ஹஸ்தியே மஹஜ் ஆகவும் இருக்கிறது.

பிறகு 'சில்சிலதுத் தஹப்'பில் கூறுகிறார்கள் :-

هو کنایت ز غیب ذات شناس　　مکنش بر دگر ذوات قیاس

'ஹூ' என்பது ஹக்குடைய ஜாத்தைக் குறிப்பதாகும். அந்த 'ஜாத்'தை மற்ற ஜாத்துகளோடு கியாஸ் செய்யாதே (ஒப்பிட்டுப் பார்க்காதே!)

هیچ ذات بذات او نرسد
عقل کل در صفات او نرسد

சிருஷ்டிகளின் எந்த ஜாத்தும் ஹக்குடைய ஜாத்துடைய நிலையை அடைய முடியாது. 'அகலேகுல்'லாகிய முஹம்மத் (ஸல்) அவர்களும் சிபாத்தே ஜாத்திய்யாவுடைய நிலையை அடைய முடியாது.

இந்த (ருபாயீ) நாலடிக் கவிதையும் விஷயத்தை நன்கு தெளிவாக்குகிறது.

ای برده گمان که صاحب تحقیقی　　واندر صفت صدق و صفا صدیقی
هر مرتبه از وجود حکمی دارد　　گر حفظ مراتب نکنی زندیقی

தன்னை முஹக்கிக் (ஆய்ந்தறிந்த ஞானி) என்று எண்ணுபவரே! உண்மை, தூய்மை எனும் தன்மைகளில் சித்தீக்குகளின் அந்தஸ்தை அடைந்து விட்டதாக நினைப்பவரே! ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! உஜூதுடைய ஒவ்வொரு அந்தஸ்துக்கும் ஒவ்வொரு சட்டம் இருக்கிறது. அந்தஸ்துகளின் வித்தியாசத்தை கவனிக்காவிட்டால் அது ஜிந்தீக்கீ வழிகேடு ஆகும்.

ஆக இந்த எடுத்துக் காட்டுகளில் இருந்து நமது கருத்து நன்கு வெளிச்சமாகிறது. மேலும் வஹ்ததுல் உஜூதுடைய பெரிய பெரிய அறிஞர்கள் மெஞ்ஞானிகள் எல்லாம் 'உஜூது ஏக் ஜாத் ஏக்' என்ற இஸ்திலாஹுடன் 'உஜூது

ஏக் ஜாத் தோ' என்ற இஸ்திலாஹ்வையும் புழங்கியுள்ளார்கள் என்றும் தெரிகிறது. தகுந்த இடங்களில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் இருக்கிறார்கள். நாம் மேலேயே சுட்டிக் காட்டினோம். 'மஆரிப்' அடிப்படையில் பேசும்போது 'உஜூது ஏக் ஜாத் தோ' எனும் இஸ்திலாஹ் பயன்படுத்தப்படுகிறது.

இக்கருத்துக்களை இன்னும் நன்றாக விளக்கலாம். எனினும் நமது நோக்கம் குர்ஆன் அடிப்படையில் இந்த மஸ்அலாவை பொருத்திப் பார்ப்பதுதான்! இன்னும் சரியாக கவனிக்காததால் ஏற்பட்ட தவறான விளக்கங்களை நீக்குவதுதான் நமது நோக்கம். ஏனெனில் தனது தவறான விளக்கங்களால் அடிப்படைக் கருத்தையே சிலர் மறுத்து விடுகின்றனர்! இன்னும் மேல்மிச்சமான சில விஷயங்களில் சச்சரவு செய்து கொண்டு எதிர்க்கிறார்கள். இந்தப் பக்கமும் நிற்பதில்லை. அந்தப் பக்கமும் நிற்பதில்லை. தனிப்பட்ட நபர்களின் சிற்சில மேல்மிச்சமான சொல் செயல்களை நாம் பொருட்படுத்தவே தேவையில்லை. ஏனெனில் ஒவ்வொருவரின் நிலைகளும், உள்ள உதிப்புகளும் வேறு வேறாகத்தான் இருக்கும். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

அடிப்படை விஷயங்களைத் தான் நாம் பார்க்க வேண்டும். அதுவும் கிதாபு சுன்னத்துடைய அளவுகோலில்தான் நிறுத்துப் பார்க்க வேண்டும். உண்மையில் அதை ஆராயும் தகுதி கூட நமக்கு இல்லை என்றாலும் தன்னுடைய தனிப்பட்ட சந்தேகங்கள், கற்பனைகள், சொந்த அறிவு, சுய சிந்தனைகள் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு ஹக்கை அறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டு உண்மை ஞானத்தை விளங்க வேண்டும் என்ற தூய்மையான எண்ணத்துடன் அவனிடமே கோரிக்கை வைத்து, அவனது அறிவைக் கொண்டே அவன் பக்கமே முன்னோக்கி அவன் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தால் நிச்சயம் அவனது அருள் நமக்குக் கிடைக்கும். அதன் மூலம் அனைத்தும் நமக்குக் கிடைக்கும். ஏனெனில் அவனே வாக்குறுதி அளிக்கிறான்.

وَاتَّقُوا اللّٰهَ ۖ وَيُعَلِّمُكُمُ اللّٰهُ

"நீங்கள் அல்லாஹ்வை தக்வா செய்யுங்கள். இன்னும் அவனே உங்களுக்குக் கற்றுக் கொடுப்பான்". (2 : 282)

அதைவிட மேலாக,

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

"யார் நம் அளவில் முயற்சி செய்தார்களோ நமது பாதைகளை அவர்களுக்கு வழிகாட்டுவோம்" என்றும் கூறுகிறான். (29 : 69)

அன்பர்களே! இந்த மஸ்அலாவில் அடிப்படை விஷயங்கள் மூன்றாகும்.

1. ஹக் தஆலா 2. ஹகீகத்தே ஆலம் (சிருஷ்டிகளின் உண்மை நிலை) 3. ஜுஹூரே ஆலம் (சிருஷ்டிகளின் வெளிப்பாடு).

19. சிருஷ்டிகள் ஒருபோதும் ஹக்காக ஆக முடியாது

குர்ஆனைக் கொண்டோ, ஹதீஸைக் கொண்டோ இஜ்மாஃ கியாசைக் கொண்டோ கஷ்ஃப் இன்னும் முஷாஹதாவைக் கொண்டோ ஒருபோதும் இது சாத்தியமாகாது. அதே போல் ஹக் தஆலா ஒருபோதும் சிருஷ்டியாக ஆக முடியாது. அதே நேரத்தில் சிருஷ்டிகளுக்கு உஜூதே காரிஜியும் இல்லை! அப்படியிருந்திருக்குமானால் அது 'சிருஷ்டி' என்று கூறப்படாது.

அடுத்து எழுவது இந்த சிருஷ்டிகள் வெளியானது எவ்வாறு? என்ற கேள்வி. இதற்கு எப்படி விடை காணவேண்டும் என்றால் சிருஷ்டிகள் வெளியாகவும் வேண்டும். அதே நேரத்தில் சிருஷ்டியை ஹக்காகவோ ஹக்கை சிருஷ்டியாகவோ ஆக்கவும் கூடாது. ஹக் சிருஷ்டியுடன் இருக்க வேண்டும். சிருஷ்டி ஹக்கைக் கொண்டு வெளிப்பட வேண்டும் அவன் அவனாகவே இருக்க வேண்டும். இவைகள் இவைகளாகவே இருக்கவேண்டும். இவ்வாறாக விளக்கம் இருக்கு மானால் இதில் யாரும் சந்தேகம் கொள்ளவும் முடியாது; மறுக்கவும் முடியாது. ஷரீஅத்துடையவர்களும் எதிர்க்கமாட்டார்கள். தரீகத்துடையவர்களும் மறுக்க மாட்டார்கள். ஹகீகத்துடையவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். மஃரிபத்துடைய வர்களும் மகிழ்ச்சியடைவார்கள். ஏன் மகிழ்ச்சி வரக்கூடாது? அல்லாஹ் ரசூலுடைய ஞானமே இதுதானே? உண்மை நிலையும் இதுதானே? அல்லாஹ்வும் உண்மையே உரைத்தான். அவனது திருத்தூதரும் உண்மையே உரைத்தார்கள்.

இந்தக் கருத்தைத் தான் நாம் விளங்கவும் வேண்டும்' ஆராய்ந்து அறியவும் வேண்டும். இதுவே நமது நிலையாகவும் இருக்க வேண்டும். இதன்படியே ஷுஹூது ம் செய்யவேண்டும். (இந்த விளக்கத்தின்படியே சிருஷ்டிகளைக் காணவும் வேண்டும்) இதுவே நமது கொள்கையாக, நிலையாக இல்லாமல் வெறும் ஷுஹூது மட்டும் செய்தால் அது உண்மைக்குப் புறம்பானதாக ஆகிவிடும். இதுவே நமது நிலை யாக இருந்து ஷுஹூது செய்யாவிட்டால் அதுவும் பரிபூரணத் தன்மை அல்ல.

எனவே எது உண்மையோ அதுவே நிலைக்க வேண்டும். அதுதான் நிலைத்தும் இருக்கிறது. ஆனால் அதை நாம் அறிந்து கொள்ளவில்லை. அறிந்து கொண்டால் அறிந்தபடி பார்க்கவும் ஆரம்பித்து விடுவோம். விஷயம் முடிந்து விட்டது. இதற்குப் பின் நீங்கள் உஜூதியாக ஆனாலும் சரி. ஷுஹூதியாக ஆனாலும் சரி. வேறு எதுவாக ஆனாலும் சரி. இதுதான் ஹக்குடைய இல்ம், இதுதான் ரசூலுடைய போதனை. இதுதான் இஸ்லாத்துடைய ஹகீகத். இதுதான் எல்லா அவ்லியாக்களின் (சுலூக்) வழிமுறை.

ஹஜ்ரத் மவ்லானா ரூமி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :-

گر بگوید جملہ حق است احمقی است ور بگوید جملہ باطل آن شقی است
ما عدمہاییم و ہستی ہائے ما تو وجود مطلقی فانی نما

அனைத்தும் ஹக்தான் என்று யாரும் கூறினால் அவன் முட்டாள். அனைத்தும் ஹக்கை விட்டும் அப்பாற்பட்ட பாதில் என்ற கூறினால் அவன் துர்பாக்கியவான். நாமும் நமது உஜூதும் அதம் தான். நீயோ உஜூதே முத்லக்காகவும், ஃபானீயான சிருஷ்டிகளைக் காட்டுபவனாகவும் இருக்கிறாய்.

என்றால்–

گر ہمی خواہی کہ یابی این نشاں   سر بنہ بر خاک پای کاملاں

இந்த அகமிய ஞானங்களை விளங்க வேண்டும் என்று நீ ஆசைப்பட்டால் காமிலீன்களின் காலடி மண்ணில் உன் தலையை வைத்துவிடு.

எச்சரிக்கை! மெய்ஞானிகள் சிலரது கவிதைகள் மற்றும் உதாரணங்களை சிலர் தங்கள் சுய விளக்கப்படி விளங்கிக் கொண்டு வழி தவறிவிட்டார்கள். இந்த விஷயத்தில் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையெனில் மிகப் பெரும் ஆபத்து மட்டுமின்றி ஈமான் காற்றிலே பறந்துவிடும் அபாயமும் இருக்கிறது.

உதாரணமாக மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் ஒரு கவிதையில் கூறுகிறார்கள் :–

خود کوزه و خود کوزه گر و خود گل کوزه خود رند سبو کش

خود بر سر آن کوزه خریدار بر آمد بشکست و روان شد

தானே கோப்பையாகவும் தானே கோப்பையைச் செய்யும் குயவனாகவும் தானே கோப்பை செய்யும் மண்ணாகவும் தானே அந்த கோப்பையின் பானத்தை அருந்துபவனாகவும் இருக்கிறான்! அந்தக் கோப்பையை விலை பேசி வாங்குபவனாகவும் தானே வந்தான் – தானே அதை உடைத்தான் – பின்னர் சென்று விட்டான்.

இது போன்ற கவிதைகளை இறை ஞானம் அறியாத ஒருவன் கேட்கும்போது அவனது சிந்தனையில் "முற்றிலுமாக அனைத்தும் அவனாகவே இருக்கிறான் அவனைத் தவிர வேறு எதுவும் இல்லை" என்று விளங்கிக் கொள்கிறான்.

இதே போங்கிலே வேறு ஒரு பெரியாரின் கவிதையைக் கேள்விப்பட்டால் அவனது எண்ணம் உறுதியாகி விடுகிறது. சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும் ஒன்றுதான் என்று முடிவு செய்து கொள்கிறான். (நவூதுபில்லாஹ்–அல்லாஹ் பாதுகாப்பானாக).

உண்மையில் மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் நோக்கமோ, வேறு எந்தப் பெரியவர்களின் நோக்கமோ அறவே இதுவல்ல. ஏனெனில் மௌலானா அவர்களே தங்கள் வேறொரு கவிதையில் குறிப்பிடுகிறார்கள்.

اصطلاحاتیست مر ابدال را — زان نمی باشد خبر عقال را
نکته‌ها چون تیغ الماس است تیز — چون نداری تو سپر واپس گریز

என்னுடைய பரிபாஷைகள் இறைக் காதலர்களுக்காகச் சொல்லப்பட்டவை. சொந்த அறிவைக் கொண்டு சிந்திப்பவர்களுக்கு அல்ல. இந்த நுட்பங்கள் வாளின் முனையைவிடக் கூரானவை உனக்கு விளங்காவிட்டால் நீ திரும்பிச் சென்றுவிடு.

சிலரோ தவறாக விளங்கிக் கொள்வது மட்டுமின்றி அதிலேயே சந்தோஷமும் அடைந்து கொள்கிறார்கள்.

நன்றாக கவனியுங்கள்! கவிதை என்பதே ஓர் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக உள்ளதே ஆகும். மேலும் கவிஞர் தனது உணர்ச்சிகளைத்தான் கவிதையாக வடிக்கிறார். ஞானிகளோ தங்கள் நிலைகளை கவிதையில் வெளிப்படுத்துகிறார்கள். அது அடுத்தவர்களுக்கு ஹுஜ்ஜத்–ஆதாரமாகாது. ஒவ்வொரு ஆரிப்–ஞானிக்கும் அவரது ஞான விளக்கத்தின் வரையறைகள் வேறு வேறாக இருக்கும். அவரவரின் பரிபாஷைகளும், நோக்கங்களும், (ஷுஃகல்) ஈடுபாடுகளும் வேறு வேறாக இருக்கும். அதாவது ஒவ்வொருவரின் உலகமே ஓர் தனி உலகம் என்பது போல் இருக்கும். சாமானியனுக்கு அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. தனது அறியாமையால் அவர்களது வெறும் வார்த்தைகளைக் கேட்டு தனது கொள்கையை முடிவு செய்து கொள்கிறான். அதனால் இவன் தெளிவான வழிகேட்டில் மாட்டிக் கொள்கிறான். அதனால் அந்தப் பெரியோர்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. ஏனெனில் அவர்கள் தான் 'விளங்காவிட்டால் திரும்பிச் சென்று விடு' என்று கூறிவிட்டார்களே!

இதே போல் சில இறை ஞான தஸவ்வுஃப் கிதாபுகளில் வரக்கூடிய உதாரணங்களையும் மக்கள் தவறாக விளங்கிக் கொள்கிறார்கள். எடுத்துக் காட்டாக சில நூல்களில் ஹக்குக்கும் கல்குக்கும் உதாரணம் கூறும்போது கடலும் அலையும் போல என்றும், தண்ணீரும் பனிக் கட்டியும் போல என்றும், உயிரும் உடலும் போல என்றும் சில விஷயங்களை விளக்குவதற்காகக் கூறியுள்ளார்கள். வெறும் புத்தகங்களைப் படித்தே ஞானத்தை விளங்கிக் கொள்ள விரும்பும் சில முகல்லிதுகள் அந்த பெரியவர்கள் மீது உள்ள நல்ல நம்பிக்கையின் காரணமாக அவர்களின் உதாரணங்களை அப்படி அப்படியே நம்பிக் கொண்டு வழி தவறி விடுகிறார்கள்.

இறை ஞானத்தைப் பற்றிய அடிப்படை அறிவே அவர்களுக்கு இல்லாததால் மேலே கூறிய கவிதைகளையும் உதாரணங்களையும் தலைகீழாக விளங்கிப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். சிலரோ 'எல்லாம் அவன்தான்! அவனல்லாதது என்று எதுவும் இல்லை!" என்று கூறுகிறார்கள். சிலரோ "ஆலமே அஜ்ஸாம் எனும் ஜட உலகம் தான் சிருஷ்டி–ரூஹ் எனும் உயிர்தான் இறைவன்" என்று கூறுகிறார்கள். இன்னும் சிலரோ 'தன்ஜீஹில் தான் அவன் முனஜ்ஜஹ் பரிசுத்தமானவனாக

இருக்கிறான். தஷ்பீஹில் அவன் முதஅஸ்ஸிர் (விளைவுகள் மாற்றங்களை ஏற்றுக் கொள்பவனாக இருக்கிறான்) என்று கூறுகிறார்கள். வேறு சிலரோ "அவனல்லாது மற்றவை எங்கே இருக்கிறது? சொர்க்கமும் இல்லை, நரகமும் இல்லை. இவையெல்லாம் வெறும் கற்பனைகள் தான்" என்று கூறுகிறார்கள்.

ஆக இவையெல்லாம் வழிகெட்ட–இல்ஹாதான பாதைகளாக இருக்கின்றன. அதிலும் வேடிக்கை என்னவென்றால் தன்னுடைய இந்த கருத்துக்களுக்கு ஆதாரமாக பெரியோர்களின் கிதாபுகளையும் அவர்களின் உதாரணங்களையும் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். اللهم احفظنا (அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக).

வாருங்கள்! இப்போது அந்த உதாரணங்களை நாம் சற்று கவனிப்போம். இன்னும் அதை எப்படி இவர்கள் தவறாக விளங்கியிருக்கிறார்கள் என்பதையும் கவனிப்போம்! உண்மை என்ன? இவர்கள் விளங்கியது என்ன? உண்மைக்கும் இவர்கள் விளக்கத்துக்கும் எவ்வளவு தூரம் வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

இவர்கள் விளக்கப்படி தண்ணீரை ஹக்குக்கும் பனிக்கட்டியை சிருஷ்டிக்கும் ஒப்பிட்டால், பனிக்கட்டி உருகிவிட்டால் வெறும் தண்ணீர் மட்டும்தான் இருக்கும். அதேபோல் சிருஷ்டி வெறும் கற்பனை. அதை நாம் கவனிக்காமல் இருந்து விட்டால் வெறும் ஹக் மட்டுமே இருக்கும். சிருஷ்டியே இருக்காது என்று இவர்கள் விளங்குகிறார்கள். அதே போலத்தான் கடலும் அலையும் போல, உடலும் உயிரும் போல உதாரணங்களையும் விளங்குகிறார்கள். அதாவது அலை கடலில் கலக்கும்போது வெறும் கடல்தான் இருக்கிறது. அலை என்பது ஒன்றும் இல்லை. உடல் அழிந்து விட்டால் வெறும் உயிர் மட்டும்தான் இருக்கிறது. இவ்வாறே சிருஷ்டியின் கவனிப்பை நாம் நீக்கிவிட்டால் வெறும் ஹக் தான் இருக்கும் என்று விளங்குகிறார்கள். ஜாத்தே கல்கை மறுத்து விடுகிறார்கள். உண்மையில் சிருஷ்டியின் ஜாத்தோ அபதீ–நிரந்தரமானது எந்த நிலையிலும் சிருஷ்டி ஹக் ஆவதில்லை.

இன்னும் சிலரோ இப்படி விளங்கிக் கொண்டார்கள். அதாவது தண்ணீர் தான் பனிக்கட்டியாக இருக்கிறது. தண்ணீரும் பனிக்கட்டியும் ஒன்றுதான். அதேபோல் கடலும் அலையும் ஒன்றுதான். அவ்வாறாக சிருஷ்டியும் அவனே. சிருஷ்டி கர்த்தாவும் அவனே. எஜமானனும் அவனே. அடிமையும் அவனே என்று கூறுகிறார்கள்.

أَصْحٰبُ الْجَنَّةِ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

சுவனவாசிகள் சுவனத்தில் நிரந்தரமாக இருப்பார்கள். (10 : 26)

أَصْحٰبُ النَّارِ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

நரகவாசிகள் நரகில் நிரந்தரமாக இருப்பார்கள். (10 : 27)

என்று குர்ஆன் கூறுகிறது.

எல்லாம் அவன் தான் என்றால் நரகவாசி யார்? சொர்க்கவாசி யார்? எல்லாம் அவன் தான். அவனைத் தவிர வேறு எதுவும் இல்லை எனில் குர்ஆன் யாருக்கு யார் இறக்கியது? யார் யாரை ஈமான் கொள்வது? யார் யாரை குப்ர் செய்கிறார்கள்? ரசூல் யார்? உம்மத் யார்? எல்லாமே பாதில் வீண் என்றல்லவா ஆகிவிடும். (நவூதுபில்லாஹ்–அல்லாஹ் பாதுகாப்பானாக) அப்படி இருக்குமானால் தவ்ஹீது பாதில் ஆவது மட்டுமின்றி அனைத்து சிருஷ்டிகளுமே வீண் என்றாகி விடுமே.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَٰكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ

"நாம் உங்களை வீணாகப் படைத்தோம் என்று எண்ணிக் கொண்டீர் களா? இன்னும் நீங்கள் நம் பக்கம் திரும்பமாட்டோம் என்று எண்ணிக் கொண்டீர்களா?" என்று அல்லாஹ் கேட்கிறான். (23 : 115)

ஆக அவ்வாறான விளக்கங்கள் எல்லாம் முற்றிலும் தவறான விளக்கங்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால் இது போன்ற உதாரணங்களை பெரியோர்கள் ஏன் கூறுகிறார்கள்? என்ற கேள்வி எழலாம்.

பொதுவாக உதாரணங்கள் என்பதே ஒரு குறிப்பிட்ட விஷயத்தை விளக்குவதற்காகத் கூறப்படுபவை தான்! அதாவது ஏதோ ஒரு வகையில் தான். ஒரு குறிப்பிட்ட முறையில் மட்டுமே பொருத்தம். உவமை இருப்பதாகக் கூறப்படும் அப்படிக்கு அப்படியே. முற்றிலும் பொருந்தும் படியாக இதுவரை உலகில் யாரும் எதற்கும் உதாரணம் கூறமுடியாது. கூறவும் இல்லை. அப்படியிருக்க சிருஷ்டிகர்த்தாவான இறைவனுக்கு யார் உதாரணம் கூறமுடியும்.

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ

"அவனைப் போல எந்த வஸ்துவும் இல்லை. அவன் மட்டுமே சுயமாக பித்தாத் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான்". (42 : 11)

அந்த மகான்களுக்கு நன்றாகவே தெரியும். அதாவது இந்த உதாரணங்கள் இந்தக் கலையுடன் தொடர்புடைய மக்களுக்குத்தான் விளங்கும்! அல்லது அவர்களிடம் போய் கேட்டு விளங்கிக் கொள்பவர்களுக்கே இவைகள் விளங்கும். தன் சுய அறிவுப்படி இவற்றை விளங்குபவர்கள் தவறாகத்தான் விளங்குவார்கள்.

ஒரு வீரனைப் பார்த்து 'இவன் சிங்கத்தைப் போன்றவன்' என்று கூறினால் அவனை யாரும் காட்டில் வாழும் சிங்கம் என்று நினைப்பதில்லை. அதேபோல் ஒரு நல்ல மனிதரைப் பார்த்து 'இவர் ஒரு மலக்கு மாதிரி. வானவர் மாதிரி' என்று கூறினால் அவரை யாரும் உண்மையான மலக்கு என்று கருதுவதில்லை. 'உவமை' 'தஷ்பீஹ்' என்பது ஏதோ ஒரு தன்மையில் தான் கூறப்படுகிறது. எனவே வீரத்தில்

சிங்கத்தோடும், நல்ல குணங்களில் வானவரோடும் ஒப்பிடப்பட்டுள்ளது என்றே விளங்க வேண்டும்.

ஆகவே அந்தப் பெரியோர்கள் கூறிய உதாரணங்களையும் ஓர் விஷயத்தை விளக்குவதற்காகக் கூறப்பட்டது என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதன்படி பார்த்தால் சிர்ரே ஜுஹூரை விளக்குவதற்காகத் தான் இதுபோன்ற உதாரணங்களை பயன்படுத்தியதை அறியலாம்!

தண்ணீராகிறது பனிக்கட்டியின் தோற்றத்தில் தன்னை வெளிப்படுத்துகிறது. கடல்தான் அலையாக நுரையாக அலைகளின் தோற்றத்தில் வெளியாகிறது. உடலின் தன்மைகளை உயிர் தான் வெளிப்படுத்துகிறது. அதாவது பனிக்கட்டிக்கு ஹஸ்த்தியே ஜாத்தீ–ஜாத்தீ உஜூது இல்லை. பனிக்கட்டியின் உஜூது அதன் தாத்துக்குச் சொந்தமானதல்ல. தண்ணீர் தன் தானே இருந்து கொண்டு பனிக்கட்டியையும் காட்டிக் கொண்டிருக்கிறது. என்றாலும் தண்ணீர் என்பது வேறு பனிக்கட்டி என்பது வேறுதான் இரண்டின் ஜாத்தும் ஒன்றல்ல. இதன் மாஹியத் வேறு. அதன் மாஹிய்யத் வேறு.

இதே போல் தான் அலை என்பது வேறு, கடல் என்பது வேறு. ஆனால் கடல் தான் அலையைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறே ரூஹ் வேறு, உடல் வேறு என்றாலும் ரூஹ்தான் உடல் இருப்பதற்கு காரணமாக இருக்கிறது.

இந்த முறையில் தான் நாம் ரூமி (ரஹ்) அவர்களின் ‘கூஜாவும் நீயே, அதைச் செய்தவனும் நீயே என்ற கவிதையை விளங்கவேண்டும். அதாவது கூஜாவின் தோற்றத்தில் உஜூது தான் வெளியாகி இருக்கிறது. அதைச் செய்தவனின் தோற்றத்திலும் அதைச் சுமந்துள்ள துறவியின் தோற்றத்திலும், அதிலுள்ள பூவின் தோற்றத்திலும், அதை வாங்குபவனின் தோற்றத்திலும் அந்த ஒரு உஜூது தான் வெளியாகி உள்ளது. இவையெல்லாம் அந்த ஒருவனின் வெளிப்பாடுகள்தான். முழ்ஹிர்–வெளியாக்குபவன் அவன் ஒருவன் தான். இந்த உலகம் அனைத்தும் அவனது மழ்ஹர்களாக வெளியாகும் ஸ்தானங்களாக உள்ளன. கூஜாவையும், குயவனையும் வெளிப்படுத்திக் காட்டுபவனாக அவன் ஒருவனே இருக்கிறான்.

ஆக இதுதான் விஷயம். இதில் எந்த சிரமும் இல்லை. இதைத் தவறாக விளங்கியது மட்டுமின்றி தங்கள் விளக்கத்தையே சரியென்று அவர்கள் நினைத்துக் கொண்டதால் இல்ஹாதிலும், வழிகேட்டிலும் விழுந்து விட்டார்கள். சிருஷ்டிகளின் ஜாத்தையே மறுத்துவிட்டார்கள். அதனால் ‘இன்கிலாபே ஹகீகத்’ அசல் தன்மையான ஹகீகத்தே மாறுபடுவது ஏற்படுகிறது. அதாவது ஹக்குதான் ‘கல்கு’ ஆக ஆகியிருக்கிறது என்று ஏற்படுகிறது. அப்படியிருக்குமானால் சிருஷ்டிகளின் நக்ஸ் – குறைவுடைய ஜவால் – நீங்கக்கூடிய தன்மைகள் அனைத் துக்கும் சொந்தக்காரன் ஹக்குதான் என்று ஆகிவிடும். பிறகு எப்படி அவன் ‘ஹக்’காக இருக்க முடியும். அவனை ‘ஹக்’ என்று எப்படி சொல்ல முடியும்?

'சுப்ஹானல்லாஹி அம்மா யசிபூன்' அவர்கள் வர்ணிக்கும் அனைத்துக் குறைகளை விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன். இவ்வாறான தவறான விளக்கங்களால் சிருஷ்டியை மறுத்தால் சிருஷ்டிகர்த்தாவையே மறுத்ததாகிவிம். கல்கை மறுப்பது காலிக்கை மறுப்பதாகும். இதுவோ ஒருபோதும் முடியாததாகும். முஹால் ஆகும்.

தண்ணீர் பனிக்கட்டியாக ஆனவுடன் தண்ணீரின் சுய தன்மைகளான இலகிய தன்மை, ஓடும் தன்மை போன்றவை இல்லாமல் போய் விட்டன. சிறிது நேரத்திற்குத்தான் என்று சொன்னாலும் அவ்வளவு நேரம் அதன் சுய தன்மைகளை இழந்துவிட்டது. முஅத்தல் ஆகிவிட்டது. அதன் தன்மைகள் மாறி பனிக்கட்டியின் தன்மைகளான கெட்டித்தன்மை. திடத் தன்மை வந்துவிட்டது. அதாவது தண்ணீரின் சிபாத்துகள் 'முன்கலப்' ஆகிவிட்டன—மாறிவிட்டன. ஹக் தஆலாவின் சிபாத்துகள் ஒருபோதும் முஅத்தலும் ஆகாது. முன்கலபும் ஆகாது. நீங்கியும் விடாது மாறியும் விடாது. அப்படி மாறினால் நீங்கினால் அது சிபாத்தே ஹக்காக் இருக்கவும் முடியாது. ஏனெனில் நீங்குதலும் மாறுதலும் சிருஷ்டிகளுக்கும் அவற்றின் தன்மைகளுக்கும் சொந்தமானதாகும். பிறகு ஹக் கல்காகி விட்டான் என்று எப்படிச் சொல்ல முடியும் ?

சிலர் விளங்கியது போல் "உடல் சிருஷ்டி—உயிர் ஹக்" என்றால் உடல் அழிந்த பின் அதாப் யாருக்கு ? ஸவாப் யாருக்கு ? சிருஷ்டியே இல்லை எல்லாமே ஹக் தான் என்றால் யாரை யார் அதாப் செய்வது. யாருக்கு யார் தண்டனை கொடுப்பது ? கூலி கொடுப்பது ? அல்லாஹ் தனக்குத் தானே மறுமையில் தண்டனை கொடுத்துக் கொள்கிறானா ? நவூதுபில்லாஹ்! அதாபும் இல்லை. ஸவாபும் இல்லை. ஆகிரத்தும் இல்லை என்று கூறினால் இது தெள்ளத் தெளிவான குப்ரும், வழிகேடும், இல்ஹாதும், வீண் பேச்சுமாயிருக்கும். அல்லாஹ் எல்லா விதமான வழிகேடுகளை விட்டும் நம்மை பாதுகாப்பானாக.

20. ஷதஹிய்யாத் – شطحيات

கவிதைகளையும் உதாரணங்களையும் தவறாக விளங்கியது போலவே ஷதஹிய்யாத்களையும் தவறாக சிலர் விளங்கிக் கொள்கிறார்கள்.

ஞானிகளும் பெரியோர்களும் இறைக் காதலில் மூழ்கி தன்னை மறந்த நிலையில் கூறும் வார்த்தைகளுக்கு புழக்க பாஷையில் 'ஷதஹிய்யாத்' என்று கூறுவார்கள். வெளிப்படையில் பார்த்தால் அந்த வார்த்தைகள் ஷரீஅத்துக்கு முரணாகத் தோன்றும்! உதாரணமாக ஹஜ்ரத் மன்சூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் நாவில் இருந்து 'அனல் ஹக்' நான்தான் ஹக் என்று வெளியானதைப் போல! இன்னும் ஹஜ்ரத் சைய்யிதுத் தாயிபா ஜுனைதுல் பக்தாதி (ரலி) அவர்கள் "எனது ஜுப்பாவிலே அல்லாஹ்வைத் தவிர வேறில்லை" என்று கூறியதைப் போல. இன்னும் ஹஜ்ரத் பாயஜீது புஸ்தாமீ (ரஹ்) அவர்கள் "சுப்ஹானீ மா அஃளம ஷஃனீ" நான் தூயவன் என் அந்தஸ்து மகத்துவமானது" என்ற கூறியதைப் போல.

இவ்வார்த்தைகள் வெளிப்பார்வையில் ஷரீஅத்துக்கு மாற்றமாகத் தோன்றினாலும் இவைகள் அவர்கள் 'நப்ஸ்'யில் இருந்து வெளியானவை அல்ல. ஃபனா–மஹ்வு எனப்படும் தன்னை மறந்த நிலையில் வெளியானவையாகும். இதனால் அவர்களை நாம் குற்றம் பிடிக்க முடியாது. ஏனெனில் எந்த காமிலான பெரியோர்களும் அவர்களைக் குறை கூறவில்லை.

இறை ஞானம் அறியாத சிலர் தங்கள் அறிவின்மையாலும் தவறான விளக்கத்தாலும் இந்த ஷதஹிய்யாத்களையே தன்னுடைய கொள்கையாக எடுத்துக் கொண்டனர். உண்மையில் அதைக் கூறிய பெரியோர்கள் கூட அதைத் தன்னுடைய கொள்கையாக எடுத்துக் கொள்ளவில்லை. அது ஒரு வகை மயக்கத்தில் இறை ஞான போதையில் வெளியானது. அது எப்படி மஸ்லக்– கொள்கையாகும்?

குறைமதி கொண்டவர்கள் இவற்றையே தன் வழி முறையாக ஆக்கிக் கொண்டு ஆதாரம் கேட்டால் இந்த ஷதஹிய்யாத்களையே காட்டுகின்றார்கள். இதற்கு அந்த சங்கைமிகு பெரியோர்கள் ஒருபோதும் பொறுப்பல்ல. தவறு இவர்கள் மீதுதான்.

குர்ஆனுக்கும், சுன்னத்துக்கும், அஹ்லே ஹக்குகளின் நடைமுறைக்கும் மாற்றமான ஒன்றை எப்படி கொள்கையாகக் கொள்ள முடியும்? கொள்கைகளுக்கு அகாயித்களுக்கு ஆதாரமாக சிலரது உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்களை எவ்வாறு ஆதாரமாகக் கொள்ள முடியும்? சிருஷ்டியின் ஜாத்தை மறுத்து சிருஷ்டியின் ஜாத்தையே ஹக் என்று கூறுவது குப்ர் என்று குர்ஆன் கூறுகிறதே!

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوٓا إِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ

"மர்யமின் மைந்தர் ஈஸாவை அல்லாஹ் என்று கூறியவர்கள் நிச்சயமாக காபிராகி விட்டார்கள்" என்று குர்ஆன் அறிவிக்கிறதே! (5 : 17, 72)

ஆகவே அன்பர்களே! தீனுடைய பெரியோர்களின் உண்மையான இறை ஞானங்களை–அஸ்ரார்களை–இஸ்திலாஹ்களை முழுமையாக தெளிவாகக் கற்காத வரை அவர்களின் உதாரணங்களையும் ஷதஹிய்யாத்களையும் பார்த்து நீங்களாக உங்கள் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாம். அதிலும் குறிப்பாக கஹ்துர் ரிஜால் எனும் மெய்ஞ்ஞானிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ள இந்த காலத்தில், உண்மை ஞானத்தை அறிந்தவர்கள் குறைந்துவிட்ட இந்தக் காலத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். இந்நிலையில் அதிகமாகக் குர்ஆன் ஹதீஸுடைய அடிப்படையிலேயே விளங்குவதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லையெனில் பெரும் நஷ்டமும் கைசேதமும்தான் ஏற்படும்.

எனவேதான் பெரியோர்களும் கிதாபு சுன்னத் அடிப்படையிலேயே அதன் அளவுகோல்படியே விஷயங்களை விளக்குகிறார்கள். ஒரு கற்பனைக்காக அவர்களில் யாரேனும் குர்ஆன் ஹதீசுக்கு மாற்றமாக எதையேனும் கூறுவதாகத் தெரிந்தால் அதை எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடுவது தான் நமக்கு ஏற்றமானது. இல்லையெனில் தவறாக விளங்கி வழிகேட்டில்தான் மாட்டிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் பாதுகாப்பானாக.

21. அவசியம் என்ன?

இங்கே யாராவது இப்படிக் கேட்கலாம். இவ்வளவு ஆபத்துகள் நிறைந்த நுணுக்கமான இந்த மஸ்அலாவை அறிய வேண்டிய அவசியம் என்ன ? ஒரு திறக்க முடியாத பூட்டைப் போல் அல்லவா இது இருக்கிறது? இதனால் கராமத் உண்டாகுமா ? அல்லது மறைவான செய்திகளை அறியும் கஷ்ஃப் உண்டாகுமா ? என்றெல்லாம் கேட்கலாம்.

இந்த இல்மின் மூலம்தான் இவையெல்லாம் கிடைக்கும் என்றாலும் உடனடியாகக் கிடைப்பது என்னவென்றால் மிக உயர்ந்த ஈமானை அடைந்தவர்களாக நாம் ஆகிறோம். நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் :–

ان افضل الايمان ان تعلم ان الله معك حيثما كنت

(نعيم ابن حماد عن عبادة ابن الصامت (رضى) ابن كثير، درمنثور)

"ஈமானில் மிக உயர்ந்த நிலை என்னவெனில் நீ எங்கிருந்தாலும் உன்னுடன் அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்வதுதான்".

(இப்னு கஸீர், துர்ருல் மன்சூர்)

உலூஹிய்யத்தையும், ரிசாலத்தையும் ஏற்றுக் கொண்டு தஸ்தீக் செய்வது– உண்மைப்படுத்துவதன் மூலம் ஈமானே தக்லீதீ கிடைக்கிறது. உலூஹிய்யத்தையும், ரிசாலத்தையும் ஆய்ந்து அறிந்து தஹ்கீக் செய்வதன் மூலம் ஈமானே தஹ்கீகி கிடைக்கிறது. அதற்கு கூலி நஜாத்–ஈடேற்றம் ஆகும். இதற்குக் கூலி ஷுஹூத்–இறை தரிசனம் ஆகும். அதன் சம்பந்தம் இஸ்ம்–பெயருடன் இருக்கிறது. இதன் சம்பந்தம் முஸம்மா–பெயரை உடையவனுடன் இருக்கிறது. அதனால் தரஜாத்–அந்தஸ்துகள் கிடைக்கிறது. இதனால் நூர் கிடைக்கிறது. ஆபாக்கில் முஷாஹதாவும் அன்புசில் யாஃப்தும் கிடைக்கிறது.

அங்கே முஸம்மா–பெயருக்குச் சொந்தக்காரன் அடையாளம் இன்றி இருக்கிறான். இங்கே ஒவ்வொரு வஸ்துவும் அவனைக் காட்டும் கண்ணாடியாக இருக்கிறது. அங்கே கொஞ்சம் வஹ்ம்–சந்தேகம் இருந்தது. இங்கே யகீன்– உறுதியிருக்கிறது. அங்கே இல்ம்–அறிதல் இருந்தது. இங்கே முஆயனா–காணுதல் இருக்கிறது. அங்கே கொஞ்சம் 'தூரம்' இருந்தது. இங்கே 'நெருக்கம்' கிடைக்கிறது. முன்பு ஹக் மறைந்திருந்தது. கல்க் வெளியாகியிருந்தது. இப்போது கல்க் மறைந்துவிட்டது. ஹக் வெளியாகியிருக்கிறது. உண்மையும் இதுவாகத்தான் இருக்கிறது. முன்பு கல்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஹக் வெறும் சிந்தனையில் தான் இருந்தது. இப்போது ஹக்கைப் பார்க்கிறோம். கல்க் அதன் கண்ணாடியாக இருக்கிறது. முன்பு யாஃப்த் என்பது வஹ்மில் இருந்தது. இப்போது இல்மில் இருக்கிறது. (அதாவது முன்பு கற்பனையாக ஹக்கைப் பெற்றுக்

கொண்டோம். இப்போது தெள்ளத் தெளிவாகப் பெற்றுக் கொள்கிறோம். முன்பு ஹக்கை நமக்கு வெளியிலே விளங்கிக் கொண்டிருந்தோம். இப்போது நமக்குள்ளேயே விளங்குகிறோம்.

وَفِيٓ أَنفُسِكُمۡۚ أَفَلَا تُبۡصِرُونَ

உங்களுக்குள்ளேயே நீங்கள் பார்க்க வேண்டாமா? (51 : 21)

முன்பு நம்மிலே நாம் தான் இருந்தோம். இப்போது நம்மிலே அவன் இருக்கிறான். வேறு என்ன சொல்வது ? நாம் அவனுடையவர்களாக இருக்கிறோம். அவன் நம்மவனாக இருக்கிறான். நாம் அவனில் இருக்கிறோம். அவன் நம்மில் இருக்கிறான். (ஹுலூல்—இத்திஹாத் இல்லாமல்)

அவனைக் கொண்டே ஜீவித்திருக்கிறோம். அவனைக் கொண்டே நிலை பெற்றிருக்கிறோம், அவனைக் கொண்டே வெளியாகியிருக்கிறோம். அவனைக் கொண்டே பார்க்கிறோம். அவனது நூரைக் கொண்டே அவனைக் காண்கிறோம். அவனது இல்மைக் கொண்டே அவனைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

நாம் இருக்கிறோம். ஆனாலும் அவன் இருப்பதால் நாம் இல்லாதிருக்கிறோம். அல்லது இப்படிச் சொல்லலாம். நாம் இல்லை. ஆனால் அவனுடைய இருத்தல் நமது இருத்தலையும் காட்டிவிட்டது. இப்போது நாம் நம்மையும் பார்க்கிறோம். என்றாலும் அங்கே அவனையே பெற்றுக் கொள்கிறோம். ஆனாலும் ஒருபோதும் நாம் அவனல்ல. அவனை நாம் பார்க்கிறோம் என்றாலும் அவனைக் கொண்டே பார்க்கிறோம்.

"சந்தேகம் நீங்கிவிட்டது. யகீன் அதிகமாகி விட்டது. இருள் விலகிவிட்டது. ஒளி—நூர் வந்துவிட்டது".

اللهم انت نور السموات والارض ومن فيهن ولك الحمد

யா அல்லாஹ்! நீதான் வானங்கள், பூமி, அவற்றில் உள்ள அனைத்து வஸ்துக்களின் நூராக இருக்கிறாய். உனக்கே அனைத்து புகழும் சொந்தமாயிருக்கிறது.

இந்த நூர் எனும் கடலில் அவன் நம்மை மூழ்க்ச் செய்துவிட்டான்.

اللهم اجعل في قلبى نورا وفي سمعى نورا وفي بصرى نـــورا
وعن يمينى نورا وعن شمالى نورا وامامى نورا وخلفى نـــورا
وفوقى نورا وتحتى نورا واجعلنى نورا

(بخارى عن عبد الله ابن عباس رضى)

இறைவா! என் உள்ளத்திலே நீ நூரை ஆக்குவாயாக! இன்னும் என் செவியிலும், பார்வையிலும், என் வலமும், இடமும், முன்னும், பின்னும், மேலும், கீழும் நூரை ஆக்குவாயாக! என்னையே முற்றிலும் நூராக ஆக்கிவிடுவாயாக!

(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), புகாரீ)

இந்த நூரைக் கொண்டு நம்மை அவன் ஒளிமயமாக்கி விட்டான். உள்ளத்திலும், செவியிலும், பார்வையிலும், வலமும், இடமும், முன்னும், பின்னும், மேலும், கீழும் நூராகவே ஆக்கி, நம்மையும் நூராக ஆக்கிவிட்டான்.

இந்த நூர் எனும் கடலில் மூழ்கித்தான் சிலர் 'நான் அவனே' என்று கூறிவிட்டார்கள். போதையில் இருப்பவனின் சொற்கள் அந்த மதுவின் மயக்கத்தால் வந்ததேயன்றி வேறில்லை. போதை தெளிந்த பின் நாம் நாமாகத்தான் இருக்கிறோம். அவன் அவனாகத்தான் இருக்கிறான். இவன் எப்படி அவனாக முடியும்? அவன் எப்படி இவனாக முடியும்?

போதை சிந்தனையை மறைத்தது! இவனது எண்ணங்கள் நகர்ந்தது. அவனது எண்ணங்கள் மிகைத்தது. அவனது வார்த்தைகள் இவனது நாவில் வெளியானது. மயக்கம் தெளிந்தபோது அவை அவை அப்படி அப்படியே இருந்தன.

நாம் அவனாக ஆகாவிட்டாலும் அவனைக் காட்டக் கூடியவர்களாகவேனும் ஆனோமே! இது என்ன சாதாரண விஷயமா? நமது வஸ்துக்களை இழந்தால் என்ன? அவனது வஸ்துக்களால் அலங்கரிக்கப்பட்டு விட்டோமே! நம்மை இழந்து அவனை அல்லவா பெற்றுக் கொண்டோம். நமது மதிப்பும் கூடிவிட்டது. எப்படி இருந்தோம்? எப்படி ஆகி விட்டோம்? நாமாக எதுவும் ஆவதற்கு நம்மிலே என்ன இருந்தது? அவனல்லவா இவ்வாறு ஆக்கிவிட்டான்! உர்துவில் ஒரு பழமொழி சொல்வார்கள்.

ایاز قدرِ خود را بشناس

அயாஜே! உன் சுய மதிப்பை நீ உணர்ந்து கொள். ஆம்! இனி வேறென்ன கிடைக்க வேண்டும்? அப்திய்யத்தே ஹகீகி—உண்மையான அடிமைத்தனம் கிடைத்துவிட்டதே! லட்சத்தில் ஒருவருக்கு கிடைக்கும் இந்த பொக்கிஷமல்லவா கிடைத்து விட்டது! கிலாபத்தே இலாஹிய்யா—அவனது பிரதிநிதி என்ற அந்தஸ்து அல்லவா கிடைத்துவிட்டது! முழு உலகையும் பெற்றுக் கொண்ட அடிமையாக அல்லவா நாம் ஆகிவிட்டோம்! அவனும் நம்மீது திருப்தியாக நாமும் திருப்தியாக இருக்கும் நிலை—இரு புறமும் பொருத்தம் கொண்ட நிலை கிடைத்து விட்டதே!

رَاضِيَةً مَّرْضِيَّةً فَادْخُلِي فِي عِبَادِي وَادْخُلِي جَنَّتِي

நிம்மதி பெற்ற ஆத்மாவே! நீ பொருந்திய நிலையில் பொருத்தம் கொள்ளப்பட்ட நிலையில் உனது ரப்பின் பக்கம் மீளுவாயாக! என் அடியார்களிலே நுழைந்து கொள்வாயாக. இன்னும் எனது சுவனத்தில் நுழைந்து கொள்வாயாக! (80 : 30)

இப்போது நாம் இருக்கிறோம். நம்மோடு நமது நேசன் இருக்கிறான். அவன் நம்மை விட்டு பிரிவதில்லை. நாம் அவனை விட்டும் பிரிவதில்லை. இது அவனது அன்பு! இது அவனது பரிசு! தன்னிடமிருந்து நம்மை விலக விடுவதில்லை. நழுவிச் செல்வதற்கு வழியும் இல்லை. வேறு இடமும் இல்லை. அவனே நமது கண்களில் நிறைந்திருக்கிறான். உள்ளத்தில் குடியிருக்கிறான். நாமும் அவன் உள்ளத்தில் இருக்கிறோம். அவனது பார்வையில் இருக்கிறோம். எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது! எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! எவ்வளவு சுவையாக இருக்கிறது. விஸால் அவனுடன் சேர்ந்து விட்ட நிலை கிடைத்திருக் கிறது.

வேற்று சிந்தனை ஏதும் வந்தால் அவன் அதற்குள் கூறுகிறான்:-

اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ

என்ன அடியானே உனக்கு அல்லாஹ்வாகிய நான் இருப்பது போதவில்லையா? (39 : 36)

ஏதோ மறதியாக அவன் நம்மை விட்டு விலகியிருப்பானோ என்ற எண்ணம் ஏற்பட்டால் அதற்குள் அவன்

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

"நாம் உன் உயிர் நரம்பைவிட உனக்கு நெருக்கமாக இருக்கிறோம்" என்று கூறுகிறான். (50 : 16)

ஆச்சரியமான நிகழ்ச்சியாக இருக்கிறதே! வேறென்ன நான் சொல்வது? இது சொல்லும்படியான உணர்ச்சியல்லவே!

இன்று அரசர்களுக்கெல்லாம் அரசன் என்னுடைய விருந்தாளியாக வந்திருக்கிறானே! ஜிப்ரயீல் அவர்கள் மற்ற வானவர்களோடு வந்தல்லவா என்வீட்டு வாயிற் காவலர்களாக இருக்கின்றனர்.

(ஹஜ்ரத் கிபுலா அவர்கள் தாங்கள் இறைவனோடு சேர்ந்து இருக்கும் உணர்ச்சிகளை இவ்வாறு பலவகையாக வெளிப்படுத்துகின்றனர்.)

22. ஞான முத்துக்கள்

இப்போது நாம் இந்த முஷாஹதா எனும் இறை தரிசனத்தின் விளக்கங்களுக்கு ஆதாரமாக மேலும் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் புனிதர் இறை ஞானியின் வார்த்தைகளை தங்களுக்கு முன் சமர்ப்பிக்கிறேன். மெஞ்ஞானக்கடல் ஹஜ்ரத் சைய்யுதுனா ஷைகு இப்னு அதாவுல்லாஹ் இஸ்கந்தரி அவர்கள் தங்களின் 'ஹிகம்' எனும் நூலில் எழுதுகிறார்கள். இந்நூல் சங்கைமிகு உலமாக்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட நூலாகும். இதற்கு ஆதாரமாக நாம் அதன் உர்து ஷரஹ் விளக்கவுரையின் முன்னுரையை இங்கே முதலில் எடுத்து எழுதுகிறோம்.

"இக்மாலுஷ் ஷியம் اكمال الشيم என்ற பெயருடைய இந்த உர்து ஷரஹை மௌலவி அப்துல் மஜீது சாஹிப் பிச்ரானவி அவர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். அதன் முன்னுரையில் அவர்கள் எழுதுகிறார்கள் :–

"இந்நூல் 'கிதாபுல் ஹிகம்' உடைய விளக்க உரையாகும். கிதாபுல் ஹிகம் என்ற நூலின் ஆசிரியர் சைய்யிதுனா ஷைகு இப்னு அதாவுல்லாஹ் சிக்கந்தரீ அவர்கள் ஆவார்கள். அவர்களின் உயர்வும் மகத்துவமும் கண்ணியமும் அனைத்து சூபியாக்களும் ஏகோபித்து ஒப்புக் கொண்ட விஷயமாகும். இதன் மூல நூல் அரபி மொழியில் உள்ளது. அதனை ஷைகு அலீ முத்தகீ என்பவர்கள் (துப்வீப் செய்து) வரிசைப்படுத்தியுள்ளார்கள். இந்த ஷைகு அலி முத்தகீ என்பவர்கள் கன்ஜுல் உம்மால் என்னும் பிரபலமான ஒரு பெரும் பிக்ஹ் கிதாபின் ஆசிரியர் ஆவார்கள்.

இந்த கிதாபை "அஃலா ஹஜ்ரத் ஷைகுல் அரபி வல் அஜம் குத்புல் ஆலம் ஹஜ்ரத் ஹாஜி ஷாஹ் இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கி குத்திஸ சிர்ருஹு" அவர்களின் வழி காட்டுதல்படி "ஹஜ்ரத் குத்புல் ஆரிபீன் ரயீசுஸ் ஸாலிகீன் மௌலானா, அல்ஹாபிழ் கலீல் அஹ்மத் சஹாரன்பூரி முஹாஜிர் மதனி குத்திஸ சிர்ருஹு" அவர்கள் உர்து பாஷையில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

பிறகு மௌலானா அல்ஹாபிழ் அப்துல்லாஹ் சாஹிப் கங்கோஹி அவர்கள் அதற்கு விளக்கவுரை எழுதியுள்ளார்கள். இதை ஹஜ்ரத் ஹகீமுல் உம்மத் மௌலானா அஷ்ஷைகு முஹம்மத் அஷ்ரப் அலி தானவி தாமத் பரகாதுஹு அவர்கள் மிகவும் விரும்பி கான்காஹே இம்தாதிய்யாவில் சுலூக் பாடத்திட்டங்களில் இணைத்துள்ளார்கள். இன்னும் சாலிகீன்கள் இதை அதிகமாக முதாலஆ செய்ய படித்து வர உத்தரவிட்டுள்ளார்கள்.

இது மட்டுமின்றி எத்தனையோ பெரிய பெரிய உலமாக்கள் இதற்கு பல அரபி விளக்கவுரைகளும் எழுதியுள்ளார்கள். ஆக இதிலுள்ள ஒவ்வொரு கருத்துக்களும் மிகவும் மதிப்பு வாய்ந்த ஆதாரப் பூர்வமான கருத்துக்களாகும். எனவே இதை ஆழ்ந்து கவனத்துடன் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஹிகமில் எழுதுகிறார்கள் :–

"உலகம் எனும் சிருஷ்டிப் பொருள்களனைத்தும் இல்லாமை எனும் இருளேயாகும். அதை உள்ளமை எனும் பிரகாசத்திற்குக் கொண்டு வரச் செய்தது அல்லாஹுத் தஆலாவின் வெளிப்படுதலேயாகும்

ஆகவே ஒருவன் சிருஷ்டிகளைப் பார்த்து அதிலே ஹக்கை தரிசிக்கா விட்டால் அல்லது சிருஷ்டிகளை பார்க்கும் போதே அவனையும் தரிசிக்காவிட்டால் அல்லது சிருஷ்டிகளைப் பார்க்கும் முன் அல்லது பார்த்த பின்னராவது ஹக்கை தரிசிக்காவிட்டால் அவனது அகப் பார்வையில் பிரகாசம் எனும் 'ஹக்' தவறிவிட்டது. உலக வஸ்துக்கள் எனும் மேகங்கள் மஃரிபா எனும் சூரியனை அவனை விட்டும் மறைத்து விட்டன.

அல்லாஹுத் தஆலாவோடு மற்றொன்று இல்லாதிருக்க அவனை விட்டு உன்னை மறைத்துக் கொண்டது அவனுக்கு 'கஹ்ர்' அடக்கி ஆளுதல் எனும் தன்மை உண்டென்பதற்கு ஆதாரமாகும்.

எல்லா வஸ்துக்களையும் 'இல்லாமை' எனும் இருளில் இருந்து அவனே வெளியாக்கியிருக்க அவனை அந்த வஸ்துக்கள் எப்படி மறைக்கும் ?

எல்லா வஸ்துக்களிலும் அவனே வெளியாகியிருக்க அவனை எப்படி அந்த வஸ்துக்கள் மறைக்க முடியும் ?

எல்லா வஸ்துக்களிலும் அவனது காட்சியே வெளியாகியிருக்க அது எப்படி அவனை மறைப்பதை நினைத்துப் பார்க்க முடியும் ?

எல்லா வஸ்துகளுக்காகவும் வெளியாகி நிற்பவனை அது எப்படி மறைக்கும் ?

எல்லா வஸ்துகளும் உண்டாவதற்கு முன்னாலேயே வெளியானவனை அந்த வஸ்துக்கள் எப்படி மறைக்கும் ?

எல்லா வஸ்துக்களையும் விட அதிகமாக அவனே வெளியாகியிருக்க அவனை எப்படி அவைகள் மறைக்கும் ?

அவனுடனே எந்த வஸ்துவும் மவ்ஜூதாக இல்லாது தனித்தவனாக அவன் இருக்க அவனை எப்படி அவைகள் மறைக்கும் ?

எல்லா வஸ்துக்களை விட அவனே உனக்கு மிக நெருங்கியவனாக இருக்க அவனை எப்படி ஒரு வஸ்து மறைக்கும் ?

அவனில்லாவிட்டால் எந்த வஸ்துவும் உண்டாகி இருக்காது. அப்படிப் பட்டவனை ஒரு வஸ்து எப்படி மறைக்கும் ?

மக்களே! என்ன ஆச்சரியம்! அதம் எனும் இல்லாமையிலே உஜூது இருக்குதலை எப்படிப் பார்க்க முடியும் ? அதமான சிருஷ்டிகளில் எப்படி உஜூதும் ஜுஹூரும் இருக்கும் ? அதம் எப்போதும் அதம்தான். அது மவ்ஜூதாகவும் முடியாது. ஜாஹிர் ஆகவும் முடியாது. எது மவ்ஜூதோ அதுதான் ஜாஹிராக–

வெளியாக முடியும். (கதீம்) பூர்வீகமானவனுடன் (ஹாதிஸ்) புதிய வஸ்துக்கள் எவ்விதம் நிலைக்கும்? (அவன் மட்டுமே ஜாஹிர்–அவனுடன் இன்னொன்று ஜாஹிராக முடியாது.)

ஹக் தஆலாவுடன் வேறொரு வஸ்து இருந்து அந்த வஸ்து அல்லாஹுத் தஆலாவை விட்டும் உன்னை மறைக்கவில்லை. அப்படி ஒரு வஸ்து உண்மையில் இல்லவும் இல்லை. உன்னை விட்டும் அவனை மறைத்ததெல்லாம் அவனுடன் ஒரு வஸ்து உண்டென்ற உனது சந்தேகம்தான்.

"ஏதாவது ஒரு வஸ்து அவனை மறைக்க வேண்டும் எனில் அந்த வஸ்து அவனது உஜூதை முழுமையாக சூழ்ந்திருக்க வேண்டும். சூழப்பட்டதை விட சூழ்ந்தது தான் மிகைத்து இருக்கும். ஆனால் எதுவும் அப்படி இல்லை. அல்லாஹ்தான் (முஹீத் – அனைத்தையும் சூழ்ந்தவனாக), ஃகாலிப்–அனைத்தையும் மிகைத்தவனாக இருக்கிறான்.

"நூரே அகல் (அகலின் சுடர்) எனும் இல்முல் யகீன் உன்னோடு அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிவிக்கும்–காட்டும்".

"நூருல் இல்ம் (அறிவின் சுடர்) எனும் அய்னுல் யகீன் அல்லாஹ் தான் உண்மையில் உள்ளவன். மற்றவைகள் அனைத்தும் தோற்றமே. உண்மையில் அவைகளுக்கென தனி உள்ளமை இல்லை என்பதைக் காட்டும். அவனது உஜூதுக்கு முன்னிலையில் உன்னை அதமாகக் காட்டும்".

நூருல் ஹக் எனும் ஹக்குல் யகீன் அல்லாஹுத் தஆலாவின் உஜூதை உள்ளமையைக் காட்டும் மற்றவைகளின் உள்ளமையையோ அல்லது இல்லாமையையோ காட்டாது. (அதாவது அவனைத் தவிர வேறு பக்கம் சிந்தனை செல்லாது.)

"அல்லாஹுத் தஆலா எப்போதும் இருந்தான் எந்த வஸ்துவும் அவனோடு இருக்கவில்லை. அவன் முன்பு எப்படி இருந்தானோ அப்படித்தான் இப்போதும் இருக்கிறான்".

"இது என்ன ஆச்சரியம்! எவன் உன்னை விட்டு எப்போதும் பிரிந்திருப்பதில்லையோ அவனை விட்டும் ஓடுகிறாய்! எது உன்னோடு ஒருபோதும் தரிபட்டு இருக்காதோ அந்த துன்யாவைத் தேடி அலைகிறாய்! இப்படிப்பட்டவனின் வெளிக்கண்கள் குருடாயிருப்பதில்லை என்றாலும் அவன் நெஞ்சில் இருக்கும் மனக்கண்தான் குருடாயிருக்கிறது".

"மஃரிபா இல்லாத வெறும் வணக்கசாலிகள் துறவிகளுக்கு ஒவ்வொரு வஸ்துவும் அல்லாஹுத் தஆலாவை மறைக்கும் திரையாகவே இருக்கின்றன. எனவே அவர்கள் வஸ்துக்களை வெறுக்கிறார்கள். அதை விட்டும் வெருண்டோடுகிறார்கள். ஒவ்வொரு வஸ்துவிலும் அவனது தரிசனத்தை அவர்கள் கண்டிருந்தால் எந்த வஸ்துவையும் வெறுக்கவும் மாட்டார்கள், ஓடவும் மாட்டார்கள்".

"சிருஷ்டிகளில் அவனுடைய உஜூதுடைய வெளிப்பாடு இல்லையெனில் சிருஷ்டிகளில் பார்வை விழாது. சிருஷ்டிகள் தெரியாது. அவனது சிபத்தே கமாலிய்யா–பூரணமான தன்மைகள் வெளிப்படவில்லை எனில் அனைத்து சிருஷ்டிகளும் இல்லாது அழிந்து போகும்".

"அல்லாஹுத் தஆலாவுக்கு 'பாதினுன்' மறைந்தவன் 'ளாஹிருன்' வெளியானவன் என்ற இரண்டு திருநாமங்கள் உள்ளன. அவ்விரண்டு திருநாமங்களில் 'மறைந்தவன்' என்பதை கவனிக்கும்போது சிருஷ்டிகள் வெளியானதாகவும், 'வெளியானவன்' என்பதை கவனிக்கும்போது சிருஷ்டிகள் அவனில் மறைந்ததாகவும் விளங்குகிறது".

"இவ்வுலகில் அல்லாஹுத் தஆலா தன் சிருஷ்டிகளைப் பார்க்கச் சொல்லி ஏவுகிறான். அப்படிப் பார்த்தால் உனது நுண்ணறிவில் அவன் வெளியாகி இருப்பதாகக் கண்டு கொள்வாய். மறு உலகில் அவன் தாத்தின் சம்பூரணத்தை உன் கண் பார்வையில் வெளியாக்கப்படும். (ஆகவே இவ்வுலகில் அகக் கண்ணின் பிரகாசத்துக்குத் தக்கவாறும் மறு உலகில் ஆண்டவன் வெளியாவதற்குத் தக்கவாறும் அவனைக் காண முடியும்.)"

"நீ அல்லாஹுத் தஆலாவைக் காணாதிருக்கப் பொறுமை கொள்ள மாட்டாய் என்று அவன் அறிந்ததினால், தன்னில் நின்றும் வெளியாகும் சிருஷ்டிகளில் உனது அகக் கண்ணால் உனக்குத் தன்னை காண்பித்தான்".

"எதுவரை நீ சிருஷ்டிகளில் சிருஷ்டித்தவனைக் காணவில்லையோ நீ அவைகளுக்குக் கட்டுப்பட்டவனாகவே இருப்பாய். எப்போது நீ அவைகளில் அவனைக் காண்பாயோ அவைகள் உனக்குக் கட்டுப்பட்டதாக ஆகிவிடும்".

"அல்லாஹுத் தஆலா உனக்கு சிருஷ்டிப் பொருட்களில் அவனது ஜமாலை அழகை கவனிக்கும்படி உன்னை ஏவுகிறான். சிருஷ்டிகளின் வெளிப்படையைப் பார்த்து அத்தோடு நின்றுவிட அனுமதிக்கவில்லை. அதாவது வானத்தில் என்ன இருக்கிறது பாருங்கள் என்று குர்ஆனில் கூறுகிறானேயல்லாது, வானத்தைப் பாருங்கள் என்று சொல்லவில்லை. அவ்விதம் சொன்னால் வெறும் வானத்தின் ஜடலத்தை–தாத்தை பார்த்து வேற்றுமைபட்டு அல்லாஹுத் தஆலாவை விட்டும் தூரப்பட்டு விடுவான். அதன் அந்தரங்கத்தை கவனித்தால் விளக்கமென்ற வாயில் திறக்கப்பட்டு தன் நோக்கத்தளவில் சேர்ந்து கொள்வான்".

"உலக சிருஷ்டிகள் அனைத்தும் அல்லாஹுத் தஆலாவின் உள்ளமையைக் கொண்டு தரிபாடு உடையவை ஆகும். அவனது 'அஹதிய்யத்தே ஜாத்'தின் முன்னிலையில் (அவன் ஏகன் என்பதை கவனிக்கும் இடத்தில்) எல்லாம் அவனில் அழிந்து இல்லாமல் ஆகிவிடுகின்றன".

"யார் ஹக் தஆலாவுடைய மஃரிபாவைப் பெற்றுக் கொண்டார்களோ அவர்கள் ஒவ்வொரு பொருளிலும் அவனையே காண்பார்கள். இன்னும் யார் ஃபனாவுடைய அந்தஸ்த்தை அடைந்தார்களோ அவர்கள் எல்லா வஸ்துக்களை விட்டும் மறைந்து விடுவார்கள். (அவர்கள் பார்வையில் அவனையன்றி இன்னொன்று இருக்காது)".

"அல்லாஹுத் தஆலா உன்னுடன் முற்றிலும் நெருங்கியிருப்பது தான் அவனை விட்டும் உன்னை மறைத்துக் கொண்டது. அவன் முற்றிலும் வெளியானது தான் உனக்குத் திரையாக ஆனது. அவனது வெளிப்பாடு எனும் நூர்–பிரகாசம் மிகவும் வலுப்பமானதாக இருக்கிறதால் உன் கண்களால் காண முடியவில்லை".

"ஹக் தஆலாவை ஒரு வஸ்து எப்படி மறைக்கும். எது அவனை மறைக்கும் திரையாக இருக்குமோ அதிலும் அவன்தான் ளாஹிராக மவ்ஜூதாக வெளிப்பட்டிருக்கிறான்".

"அவனல்லாதவற்றின் பக்கம் உன் பார்வையைத் திருப்புவதும், அவனல்லாத ஒன்று தவறிவிட்டதால் உனக்கு கவலை உண்டாவதும் நீ இன்னும் அவனளவில் சேரவில்லை என்பதற்கு அடையாளமாகும்".

"நிஃமத்துகள், சந்தோஷங்கள் அனைத்தும் பலவாறாக இருப்பினும் அவைகள் நிஃமத்தாக இருப்பது உண்மையில் அவைகளுடன் அல்லாஹுத் தஆலாவின் தரிசனமும் சேர்ந்ததால்தான்".

அதாப் என்ற நோவினை அடங்கலும் பலவாறாயிருந்தாலும் அவற்றில் உண்மையான அதாப் அவனை விட்டும் மறைக்கப்பட்டிருத்தல்தான்.

"கவலை, துக்கம் அனைத்தும் அகக் கண்ணால் அல்லாஹுத் தஆலாவை தரிசிக்காததினால் தான்".

"மனிதர்கள் உன்னைப் புறக்கணிக்குதல் உன்னை நேசிக்காமல் இருக்குதல் அல்லது அவர்கள் உன்னைப் பழிக்குதல் உனக்குக் கஷ்டமாக இருந்தால் அல்லாஹுத் தஆலா உன்னைப் பற்றி அறிந்திருப்பது உனக்குப்போதும் என்று திருப்தி கொள்".

அல்லாஹுத் தஆலா உன்னை அறிந்திருப்பது போதும் என்று நீ திருப்தி படாமல் இருந்தால் அதனால் ஏற்படும் முஸீபத்து மனிதர்களால் ஏற்படும் முஸீபத்தை விட கடுமையானதாகும்.

யார் உலகில் வாழ்கிறார்களோ இன்னும் மஃரிபாவுடைய இல்மும் மறைவான ஞானங்களும் அவர்களுக்குத் திறக்கப்படவில்லையோ அவர்கள் தனது

இச்சைகள் இன்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுவதிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். தன் உடல் என்ற வட்டத்துக்குள்ளேயே சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இத்துடன் நாம் இந்த நூலை உலகம் படைக்கப்படுவதற்கு காரணமான இருலோக ரட்சகர் முஹம்மத் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்லிய வண்ணம் நிறைவு படுத்துகிறோம்.

اللهم صل على سيدنا محمد ن الذى قرنت البركة بذاته
ومحياه وتعطرت العوالم بطيب ذكره ورياه
وآخر دعوانا ان الحمد لله رب العالمين